இறக்கை: 14 இறகு: 3

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

மார்ச் 2025 | விலை ₹ 50

காக்கை கரவா கரைந்துண்ணும்



**தேவதாசி மரபும் தமிழ்க் கலாச்சாரமும்**
- பொ.வேல்சாமி

**பேராசிரியர் தொ. ப. பன்மைத்துவப் புலக் கண்ணோட்ட ஆவணக்களஞ்சியம்**
- ஆ. தனஞ்செயன்

**குடிப்பெயர்ச்சியும் சாதிய நெகிழ்வுகளும்**
- ஞா. ஸ்டீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொரிசியசில் நடைபெறும் பன்னிரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு குறித்த செய்திக் குறிப்பு




உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமும், ஆசியவியல் நிறுவனமும், மொரிசியசு நாட்டுத் தமிழ் அமைப்புக்களும் இணைந்து நடத்தும் பன்னிரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை 2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06ஆம் தேதி முதல் 10ஆம் தேதிவரை மொரிசியசு நாட்டில் நடத்துவது என்று உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இந்த மாநாடு தொடர்பான முதல் இரு கலந்தாய்வுக் கூட்டங்கள் முனைவர் ஜான் சாமுவேல் தலைமையில் சென்னை, செம்மஞ்சேரியில் உள்ள ஆசியவியல் நிறுவனத்தில் 05.10.2025 அன்றும் நடைபெற்றன. உலகத் தமிழ்ஆராய்ச்சி மன்றத்தின் உறுப்பினர்களும் மொரிசியசு நாட்டின் அறிஞர்களும் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் அயலகத் தமிழர் வரலாறு (External History of the Tamils) என்னும் தலைப்பில் பன்னிரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டினை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மொரிசியசு நாட்டின் அனைத்துத் தமிழ் அமைப்புக்களும் தமிழ் லீக் என்னும் கூட்டமைப்போடு இணைந்து இம்மாநாட்டிற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் மொரிசியசில் மேற்கொண்டு வருகின்றன. இம்மாநாட்டினையொட்டி சுற்றுலா, கலைநிகழ்ச்சகிள் போன்ற பல்வேறு நிகழ்வுகளை மொரிசியசு வாழ் தமிழர்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

உலக நாடுகளில் தமிழர், பூர்வீகத் தமிழர்களாகவும் குடியேறியவர்களாகவும் வாழ்கிறார்கள். அவர்களில் சங்க காலத்திலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் வணிகத் தொடர்பின் மூலம் பரவினர். அங்கேயே தங்கிய தமிழர், தாங்கள் வாழும் நாட்டுப் பண்பாட்டினைப் பின்பற்றி வாழ்ந்தாலும் தங்கள் வேரான தமிழை மறக்கவில்லை. தொடர்ந்து அவர்கள் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களையும் பாதுகாத்து வருகிறார்கள். போதிதர்மர் உள்ளிட்ட பௌத்தத் துறவிகள் ஆசியநாடுகளில் தமிழ்ப்பண்பாட்டைப் பரப்பினர். வணிகர்கள் வாயிலாகவும், துறவிகள் மூலமாகவும் உலகெங்கும் பரவிய தமிழ்ப்பண்பாட்டு வரலாறு முதற்கட்டமாக மாநட்டின் முதல் நாள் ஆராயப்படும்.

இரண்டாவது கட்டமாகப் பிற்காலச் சோழர் காலத்தில் இராஜராஜ சோழனும் இராஜேந்திர சோழனும் பெற்றிருந்த கடற்கரையின் மூலம் இலங்கை, ஜாவா, சுமத்திரா, கடாரம், பர்மா முதலான பல நாடுகளைக் கைப்பற்றிய வரலாறு ஆராயப்படும். இந்தப் படையெடுப்பு நாடு பிடிக்கும் நோக்கத்தில் நடைபெற்றது அல்ல. கடல்வழி வணிகத்தில் ஈடுபட்ட தமிழ்நாட்டு வணிகர்களின் பாதுகாப்புக்கு இடையூறாக இருந்த கடற்கொள்ளையர் போன்றோரை அடக்குவதற்காக இந்தப் படையெடுப்புகள் பெரும்பாலும் நடைபெற்றன. இந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்கள், ஜாவா, சுமத்திரா, பர்மா, கடாரம் முதலான நாடுகளில் பெருமளவில் பரவி வாழ்ந்தனர். ஐரோப்பியர்களின் வருகைக்குப் பிறகு மலேசியா, சிங்கப்பூர், ஃபிஜி, மொரிசியசு, ரீ யூனியன், தென்னாப்பிரிக்கா முதலான நாடுகளுக்குப் பணியளர்களாகத் தமிழர் சென்றனர். அவர்கள் அங்கிருந்து திரும்பாமல் அங்கேயே வாழ்ந்து வருகின்றனர். இப்படி மூன்று வகையில் உலக நாடுகளில் பரவி வாழும் தமிழரின் வரலாற்றை ஆய்வு செய்யும் நோக்கில் இந்தப் பன்னிரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த மாநாட்டில் உலக நாடுகளிலிருந்தும், தமிழ்நாட்டிலிருந்தும், இந்திய நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும், ஆயிரக் கணக்கான தமிழ் மக்களும் பிறநாட்டுத் தமிழறிஞர்களும் பங்கேற்பார்கள்.

11ஆம் உலகத் தமிழ் மாநாட்டினை ஆசியவியல் நிறுவனம் கடந்த ஆண்டு மிகச் சிறப்பாக இந்நிறுவன வளாகத்தில் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

தொடர்புக்கு:
**செம்மஞ்சேரி, சோழிங்கநல்லூர் அஞ்சல்,**
**சென்னை - 600119,**
**தொலைபேசி : 2450 0831, 24501851**
**கைபேசி : 98405 26834**
மின்னஞ்சல் : info@instituteofasianstudies.com

**முனைவர் ஜான்சாமுவேல்**
**இயக்குநர், ஆசியவியல் நிறுவனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

இறக்கை: 14
இறகு: 3

திருவள்ளுவராண்டு 2055

மாசி - பங்குனி
மார்ச் 2025

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

ஆசிரியர் குழு
முகிலன்
இரா.எட்வின்

தொடக்க கால நெறியாளர்கள்
காலஞ்சென்ற
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

உலகளாவியத் தொடர்பாளர்:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail. com

முகப்பு ஓவியம்:
தமிழ்பித்தன்

உள் ஓவியங்கள்:
லெசி

தொடர்பு முகவரி:
காக்கை, 22, MJB தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை- 600 005.
செல்பேசி: 98414 57503

மின்னஞ்சல்:
**kaakkaicirakinile@gmail.com**

இணைய முகவரி: kaakkai.in
www.facebook.com/kaakkai.cirakinile


## எங்கெங்கு காணினும்

மக்கள் தொகைக்கணக்கெடுப்புடன் சாதிவாரிக்கணக்கெடுப்பினையும் தேசிய அளவில் நடத்திட மக்களவைத்தேர்தலுக்கு முன்பிருந்தே சமூக நீதியில் அக்கறைகொண்ட எதிர்கட்சிகள் பலவும் ஒன்றிய அரசினை கோரிவருகின்றன. 2021ஆம் ஆண்டிலிருந்து ஒன்றிய அரசும் எதுவும் அசைந்துகொடுப்பதாக இல்லை. இந்த வருடமும் நடப்பதற்கு வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது. மக்கள் தொகைக்கணக்கெடுப்பு நடத்தாதின் காரணமாக, இதுவரை 14 கோடிக்கும் மேலானவர்களால் தேசிய இலவச உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தங்களை இணைத்துக்கொள்ள முடியாத நிலை. சாதிவாரிக்கணக்கெடுப்பு நடத்த முன்வராததின் காரணமாக பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் தலித், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டவர், சிறுபான்மையினர்களுக்கு எந்த அளவுக்கு பலனளித்திருக்கிறது என்பதனைக் கூட கண்டறிய முடியாத நிலை.

சமீபத்தில் சென்னையில் சமூகநீதி பார்வை கொண்ட, இரண்டு முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் பத்திரிகையாளர் சந்திப்பில் கூறும்போது, நீதித்துறையில், அதாவது உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளின் பணியிடங்கள் அரசியல் அமைப்பின்படி நிரப்பப்படுவதில்லை எனவும், எஸ்.சி/எஸ்.டி/ஓ.பி.சி பிரதிநிதித்துவம் குறைந்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்குச்சான்றாக, 07.08.23 அன்றைய தேதியில் வெளியிடப்பட்ட நாடாளுமன்றக் குழு அறிக்கையின் சில முக்கிய அம்சங்களைச் சுட்டிக்காட்டுகின்றனர். அதன்படி, 2018-23 காலகட்டத்தில் நீதித்துறையில் உயர்நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்ட 601 பேர்களில் 457 பேர் ஓ.பி.சி அல்லாத உயர்வகுப்பினராக இருந்துள்ளனர் எனச்சுட்டிக்காட்டியதுடன், நீதிபதிகளின் நியமனமானது அனைத்துத்தரப்பு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்கவேண்டும் என இவ்வறிக்கை பரிந்துரைத்ததையும் கோடிட்டுக் காட்டுகின்றனர். இவர்கள் தங்களது கோரிக்கையாக, நீதிபதிகளின் நியமனத்தில் பன்முகத்தன்மை கடைபிடிக்கவேண்டும்; ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடாது; நீதிபதிகளின் நியமனத்தில் சமூக நீதி கடைபிடிக்கவேண்டும் என முன்வைக்கின்றனர். ஆதரிப்போம்.

ஜனநாயகத்தூண்களில் ஒன்றான நீதித்துறையின் நிலையே இப்படியென்றால், அதிகார வர்க்கத்தினரைப்பற்றிச்சொல்லவே வேண்டாம். கடந்த 11 வருடங்களில் சட்டசபை மற்றும் மக்களவை, ஜனநாயக நிறுவனங்களான தேர்தல் ஆணையம், சி.பி.ஐ, இ.டி, பொதுத்துறைகள், கவர்னர், உயர்கல்வி நிறுவனங்கள், வங்கிகளில் உயர் வகுப்பினரே அதிகமாக ஆக்கிரமித்து வருகின்றனர். தலித், பழங்குடியினர், ஓ.பி.சி, சிறுபான்மையினர், பெண்கள் ஆகியோர் சமூகத்தில் பெரும்பான்மையினராக இருப்பினும் உயர் பதவிகளில், மக்கள் பிரதிநிதிகளாக குறைந்த அளவே இருக்கின்றனர். நாட்டின் சிறுபான்மையினராக இருக்கும் உயர்வகுப்பினர் நாட்டின் உயர்பதவிகளில் அதிகளவில் அங்கம் வகிக்கின்றனர். இத்தகைய போக்கு நாட்டின் அரசியலமைப்பிற்கும், சமூக நீதிக்கும் எதிரானதாகும். நாட்டில் அனைவருக்கும் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவத்தை நல்கக்கூடிய அரசியலமைப்பின்படி செயல்படும்போது மட்டுமே அனைத்து மக்களுக்கும் நீதியை வழங்குவது மட்டுமல்லாது, ஜனநாயகத்தின் கூறுகளாக உள்ள வெளிப்படைத்தன்மையையும், பொறுப்புக்கூறலையும் காத்திட முடியும்.. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும்
1 ஆம் தேதி உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே' இதழ்
அஞ்சல் செய்யப்படுகிறது.
அடுத்து வருகிற 5ஆம் தேதிக்குள் இதழ்
கிடைக்கப் பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: 98414 57503

தனிஇதழ் விலைரூ. 50.00
ஆண்டு சந்தாரூ. 500.00
இரண்டாண்டு சந்தாரூ. 750.00
ஐந்தாண்டு சந்தாரூ. 2000.00

வெளிநாடு
ஆண்டு சந்தா$ 50.00

வங்கி விவரம்
A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
IFSC: CNRB0000914

Google Pay மூலம் செலுத்த:
செல்பேசி எண்: 98414 57503

வெளிநாட்டு வாசகர்கள் சந்தா செலுத்த:
A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
SWIFT CODE : CNRBINBBBFD

விளம்பரக் கட்டணம்
பின் அட்டை வண்ணம் ரூ.15000
உள் அட்டை வண்ணம் ரூ.10000
உள்பக்கம் கருப்பு – வெள்ளை ரூ.5000



காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், எழுத்தாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.


## சிறகுக்குள்ளே...


புதிய தலைமை தேர்தல் கமிஷனர் அமித்ஷா?
தி. சிகாமணி.................... 05

சங்பரிவார - சனாதனக் கும்பலின் கலவரத் திட்டம்
குமரன் .................... 09

ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை
இரா.மோகன்ராஜன்.................... 14

மாநிலப் பொதுப் பல்கலைக்கழகங்கள்
தன்னாட்சி அதிகாரத்தை இழக்கின்றனவா?
வெ. மதியரசன் .................... 19

கி. பி. 2047: வலதுசாரிகளின் வளர்ந்த நாடு கனவு
நிகழ் அய்க்கண்.................... 23

தேவதாசி மரபும் தமிழ்க் கலாச்சாரமும்
பொ.வேல்சாமி .................... 28

குடிப்பெயர்ச்சியும் சாதிய நெகிழ்வுகளும்
ஞா. ஸ்டீபன் .................... 32

நொபொரு கராஷிமாவின்
வரலாற்றுப்போக்கில் தென்னகச் சமூகம்
கி.இரா.சங்கரன் .................... 41

பேராசிரியர் தொ. ப.
பன்மைத்துவப் புலக் கண்ணோட்ட ஆவணக்களஞ்சியம்
ஆ. தனஞ்செயன்.................... 45

உலகைக் கலக்கி வரும் சீனாவின் டீப்சீக்
துருவன்.................... 49

குடியேற்றவாசிகள் மீதான அமெரிக்காவின் ஒடுக்குமுறை!
ரூபன் சிவராஜா .................... 53

மாறுகின்ற உலக அரசியல் பொருளாதார அரங்கம்
பா.பாவேந்தன்-இரா.விஜயன் .................... 60

65/66
இரா.எட்வின்.................... 65

99 வயது காந்திய ஊழியர்
க. பழனித்துரை .................... 67

சுதேசியப் படையின் தளபதி குருநாத ஐயர்
குருசாமி மயில்வாகனன்.................... 71

தோவாளை அரசுப் பள்ளி நூற்றாண்டு விழா
சு.இராமசுப்பிரமணியன் .................... 74

போர்ப் பகைமையை வளர்க்கும் உக்ரேன்!
ஐங்கரன் விக்கினேஸ்வரா .................... 77

பாலையும் சோலையும்
அம்ஷன் குமார்.................... 79



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | தி. சிகாமணி

# புதிய தலைமை தேர்தல் கமிஷனர் அமித்ஷா?

தலைமை தேர்தல் கமிஷனராக ஞானேஷ் குமார் தேர்வு செய்யப்பட்ட விதம் தேர்தல் கமிஷனின் நம்பகத்தன்மையில் விழுந்த சம்மட்டி அடி. தலைமை தேர்தல் கமிஷனரைத் தேர்வு செய்யும் முறை குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. உச்ச நீதிமன்ற நீதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூவரின் பரிந்துரையின் பேரில் தலைமை தேர்தல் கமிஷனர் நியமிக்கப்பட வேண்டும் என்ற உத்தரவை உச்சநீதிமன்றம் தந்திருந்தது. ஆனால் இதை மதிக்காமல் உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு பதிலாக ஒன்றிய அமைச்சர் ஒருவரை இந்த மூவர் குழுவில் நியமித்து தேர்வு செய்ய வழிவகுக்கும் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றியது. இதனை ஆட்சேபித்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த வழக்கு விசாரணை பிப்ரவரி 19-ம் தேதி வருவதற்கு முன்பாக 17-ம் தேதியே தலைமை தேர்தல் கமிஷனர் தேர்வை நடத்தி முடித்துள்ளார்கள். இந்தத் தேர்வுக் குழுவில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தனது ஆட்சேப அறிக்கையை *(dissent note)* சமர்ப்பித்தார். தேர்தல் கமிஷனின் சுதந்திர செயல்பாட்டுக்கு நிர்வாகத் தலையீடு இல்லாமல் இருப்பது அடிப்படை அம்சமாகும். உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு வர 48 மணி நேரமே இருக்கும் போது அதற்காக காத்திருக்க வேண்டும் என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டு இருந்தார். எனினும் ஞானேஷ் குமார் தலைமை தேர்தல் ஆணையராக தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவிப்பு நள்ளிரவில் வெளியிடப்பட்டது. இந்த தேர்வு நடந்திருப்பது திட்டமிட்ட சதிச் செயல். அதுவும் நள்ளிரவு நேரத்தில் திருட்டுத்தனமாக இந்த முடிவை எடுத்துள்ளார்கள். குழுவிலிருந்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கிய செயல் என்பது அப்பட்டமாக உள்நோக்கம் கொண்டது என்ற விமர்சனம் அப்போதே எழுந்தது. பிரதமரும் மத்திய அமைச்சரும் ஓரணியில் நின்று முடிவை எடுக்கும் போது எதிர்க்கட்சித் தலைவருடைய தனி முடிவு எந்த வகையில் அவர்களைக் கட்டுப்படுத்தும்? ஒன்றிய அரசின் செயல் அவமரியாதையானது. பண்பாடற்றது என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

பிப்ரவரி 19-ம் தேதி நடக்க வேண்டிய அந்த வழக்கு அன்றைய தினம் எடுத்துக் கொள்ளப்படாமல் மார்ச் மாதத்திற்கு ஒத்திவைத்துள்ளார்கள். உலகத்தின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொள்ளும் நிலையில் அந்த ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கான நடைமுறை தேர்தல்தான். அந்தத் தேர்தல் நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடக்க வேண்டும். ஆனால் தேர்தல் கமிஷன் மீதே தற்போது மிக அதிகமாக புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன.

சமீபத்தில் ஓய்வு பெற்ற தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ் குமார் மீதோ ஏராளமான புகார்கள். டெல்லி தேர்தலை அவர் அறிவித்த போதே விமர்சனங்கள் வந்தன. ஒன்றிய பட்ஜெட்டில் டெல்லி தொடர்பான அறிவிப்புகள் எதுவும் இருக்காது என்று ராஜீவ் குமார் தெரிவித்தார் ஆனால் வருமான வரி விலக்கு சலுகை குறித்து அறிவிப்பு வெளியானது. அது மத்திய தர வர்க்கத்தினரை பாஜக பக்கம் திருப்பி விட உதவியுள்ளது. பட்ஜெட் அறிவிப்பு வந்தபோது பா.ஜ.க வெளியிட்ட முதல் பக்க விளம்பரம் "மோடி அரசின் டெல்லிக்கான பரிசு" என்றே அந்த சலுகையை வர்ணித்தது. அமலாக்கத்துறை சிபிஐ போல் இந்திய தேர்தல் கமிஷன் ஆம் ஆத்மியைச் சேர்ந்த பஞ்சாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதுகெலும்பெற்ற ஊடகங்கள் மோடி அரசின் எந்த அத்துமீறலையும் அநியாயத்தையும் வெளிப்படுத்த தயாராக இல்லை. 144 வருடங்களுக்கு ஒரு முறை வருகிறது மகா கும்பமேளா என்று கூறி நடத்தப்பட்ட நிகழ்வில் மக்கள் பட்ட துயரங்களை ஊடகங்கள் சரியாக வெளிப்படுத்தவில்லை . கூட்ட நெரிசல் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை உத்தரப்பிரதேச அரசு குறைத்துக் காட்டியது.**

முதல்வரின் வீட்டை சோதனையிட்டது மோசமான முன்னுதாரணம். தேர்தல் கமிஷன் நடுநிலையாளராக செயல்படுவதை விட்டு ஓர் ஆட்டக்காரராக.. பங்கேற்பாளராக ஆகிவிட்டது. பிரதமர் உள்ளிட்ட பலர் வெறுப்பு பேச்சுகளை பேசிய போதும் அதை ராஜீவ் குமார் கண்டு கொள்ளவில்லை. ஆனால் யமுனை நதியை பாஜகவின் ஹரியானா அரசு விஷமாக்குகிறது என்று கெஜ்ரிவால் தப்பாக பேசியதற்கு மட்டும் நடவடிக்கை எடுத்தார். பாஜகவினர் நன்னடத்தை விதிகளை மீறுகிறார்கள் என்று புகார் செய்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் தில்லுமுல்லுகள் நடக்கின்றன என்ற புகாரையும் ராகுல் காந்தி முன்வைத்துள்ளார். மேலும் மகாராஷ்ட்ரத்தில் திடீரென்று பல லட்சம் வாக்காளர்கள் உயர்வு போன்ற முறைகேடுகளை காங்கிரஸ் சுட்டிக்காட்டுகிறது. இது மட்டும் இல்லை. தேர்தல் தேதிகள், தேர்தல் நடைபெறும் கட்டங்கள் அறிவிப்பு போன்றவற்றில் ஆளும் கட்சிக்கு சாதகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்ற புகாரும் உள்ளது. ஒருதலைப் பட்சமான போக்கை தேர்தல் கமிஷன் வெட்கமின்றி பின்பற்றுகிறது. அதனால் தேர்தல் கமிஷனின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்படக்கூடிய காலகட்டத்தில் இருக்கிறோம். இந்தச் சூழலிலும் தலைமை தேர்தல் கமிஷனரை துணிந்து நியமித்துள்ளார்கள்.

உச்ச நீதிமன்றத்தை கிள்ளுக்கீரையாக ஒன்றிய அரசு பாவிக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. தலைமை தேர்தல் கமிஷனரை நியமித்த விஷயத்தில் எந்த கருத்தையும் தெரிவிக்காமல் விசாரணையை தள்ளி வைத்திருப்பது சரியா?

### மதிப்பீடுகளை மிதிக்கும் மோடி

பக்தி, புனிதம், நேர்மை என்று பேசிக்கொண்டே சமூகத்தின் அனைத்து மதிப்பீடுகளையும் பிரதமர் மோடி இப்படித்தான் காலில் போட்டு மிதித்து வருகிறார். பாஜகவை ஆட்டுவிக்கும் ஆர்.எஸ். எஸ் அமைப்பு பாரதம், பண்பாடு என்று பேசிக்கொண்டு கூச்சமின்றி மோடியின் அநீதிகளை நியாயப்படுத்தும் வேலையைச் செய்கிறது. அமித்ஷாவின் அமைச்சரவையில் உத்தரவுகளை நிறைவேற்றி வந்தவர் ஞானேஷ் குமார். ஜம்மு காஷ்மீர் 370 நீக்க நடவடிக்கையில் உள்துறை பிரிவில் தலைவராக முக்கியப் பங்காற்றியவர். ராம ஜென்ம பூமி வழக்கில் சட்ட ரீதியாக உதவிகளை செய்தவர். ராமர் கோயிலுக்கான தீர்த்த சேத்ரா அறக்கட்டளை நிறுவும் பணியையும் முன்னின்று நடத்தினார். அமித்ஷா அமைச்சராக இருந்த கூட்டுறவுத் துறையிலும் அமைச்சராக அதிகாரியாக பணியாற்றியவர். ஐ.ஏ.எஸ் அதிகாரி ஞானேஷ் குமார் ஓய்வு பெற்ற இரண்டு மாதங்களிலேயே 2024-ல் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டு விட்டார். தற்போது தலைமை தேர்தல் கமிஷனர் ஆகவும் உயர்ந்துவிட்டார். தமிழ்நாடு, கேரளம், பீகார் உள்ளிட்ட சட்டசபை தேர்தல் கள் அடுத்த மக்களவைத் தேர்தல் 2029 வரை அவர் பதவியில் நீடிப்பார். ஒரே நாடு ஒரே தேர்தல் போன்ற நாசகரமான திட்டங்களை நிறைவேற்றும் நோக்கத்தோடு செயல்படும் ஒன்றிய அரசுக்கு 'ஆமாம் சாமி' தலைமை தேர்தல் கமிஷனர் தேவைப்படுகிறது போலும். அவர்தான் அமித்ஷாவின் கள்ளக் கூட்டாளி. இந்த நிலையில் தான் திரிணமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பியான சகேத் கோகலே புதிய தேர்தல் கமிஷனராக பொறுப்பேற்க உள்ள அமித்ஷாவுக்கு வாழ்த்துகள். "உங்களின் சீரிய தலைமையில் தேர்தல் கமிஷனை பாஜகவின் ஒரு கிளையாக மாற்றும் இலக்கு வெற்றிகரமாக நிறைவேறும் என்று இந்த தேசம் நம்புகிறது. ஆனால் ஒரு எச்சரிக்கை. மேற்கு வங்கத்தில் 2026 தேர்தலில் உங்கள் முயற்சி வெற்றி பெறாது" என்றும் தெரிவித்துள்ளார்.

சாதாரண மக்களின் கடைசி நம்பிக்கை என்று சொல்லப்படும் உச்ச நீதிமன்றமே இப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையில் செயலற்று நிற்கிறது. ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகங்கள் சிதிலமடைந்து வருகின்றன. அம்பானி எல்லா ஊடகங்களையும் விலைக்கு வாங்கி வளைத்து போட்டு வருகிறார். டிஸ்னி ஹாட் ஸ்டார் ஜியோ இணைப்பு நாட்டின் 50 சதவீத பார்வையாளர்களை வளைத்து விடும். இது ஊடக சுதந்திரத்திற்கு கேடானது.

இதற்கிடையே ஒன்றிய அரசுக்கு ஜால்ரா அடித்து வந்த விகடன் போன்ற நிறுவனம் தப்பித் தவறி, ஆர்வக் கோளாறால் ஒரு கேலிச்சித்திரத்தை வெளியிட்டது. அதன் காரணமாக இப்போது மாட்டிக் கொண்டது. கை கால்களில் விலங்கிடப்பட்டு கூண்டுக்குள் அடைக்கப்பட்ட மிருகங்கள் போல் இந்தியர்கள் அமெரிக்காவில் இருந்து அழைத்து வரப்படும் போது இந்த தேச பக்தர்களின் தன்மானத்துக்கு பாதிப்பு ஏதும் வரவில்லை. ஆனால் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முன்பு கை விலங்கிடப்பட்ட நிலையில் மோடி

வெளிப்படுத்தவில்லை . கூட்ட நெரிசல் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை உத்தரப்பிரதேச அரசு குறைத்துக் காட்டியது. இந்த ஆண்டு ஜனவரி 13-ம் தேதியிலிருந்து பிப்ரவரி 26ஆம் தேதி வரை கும்பமேளா நடந்தது. கும்பமேளாவுக்கு விரிவான ஏற்பாடுகளை செய்கிறோம் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கூறி கோடிக்கணக்கான மக்களை வரவழைத்தார்கள். அந்த சாதாரண ஏழை மக்களுக்கு உரிய சுகாதார அடிப்படை வசதிகளை செய்யாமல் கைவிட்டனர். அலைக்கழிக்கப்பட்ட அந்த பக்தர்கள் எல்லாம் இந்துக்கள்தானே? முஸ்லிம்கள் அல்லவே? அவர்களை ஏன் இப்படி துச்சமாக நடத்த வேண்டும். அமைச்சர்கள் அதிகாரிகள், கவர்னர்கள் விஐபிகள், மடங்களின் சாமியார்கள் குளிப்பதற்கு தனி இடங்களை ஏற்படுத்தித் தந்தனர். ஒரு லட்சம் ரூபாய் வாடகையில் தனி கூடாரங்களை ஏற்படுத்தித தந்தனர். விஐபி பகுதிகளில் சாதாரண மக்களை

**மூன்று நதிகளின் சங்கமம் என்று சொல்லப்படும் மகா கும்பமேளாவில் உள்ள தண்ணீர் அசுத்தமானது . அதில் மனிதக் கழிவுகளின் கிருமிகள் (faecal caliform) இருக்கின்றன என்று தேசிய பசுமைத் தீர்ப்பாயம் கருத்து கூறியது. இதற்காக உத்தரப்பிரதேச மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு கண்டனத்தையும் தெரிவித்தது. ஆனால் இதை மறுத்து உபி முதல்வர் யோகி ஆதித்யநாத் இந்த நீர் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் உகந்தது தான் என்று பதில் கூறினார்.**

காட்சிப்படுத்தப்பட்ட கேலிச்சித்திரம் மட்டும் அண்ணாமலை போன்றவர்களுக்குகோபத்தை ஏற்படுத்துகிறது. எந்த நடைமுறையும் பின்பற்றாமல் விகடனின் இணையதளத்தை முடக்கி உள்ளனர். அண்ணாமலை தன்னை புத்திசாலியாக நினைத்து விகடன் இணையதளத்தை முடக்கப் பார்த்தார் ஆனால் அந்த கார்ட்டூன் இந்தியா முழுவதும் பரவி மக்களை கவர்ந்து விட்டது.

### ஊடகங்களின் படுதோல்வி

முதுகெலும்பெற்ற ஊடகங்கள் மோடி அரசின் எந்த அத்துமீறலையும் அநியாயத்தையும் வெளிப்படுத்த தயாராக இல்லை. 144 வருடங்களுக்கு ஒரு முறை வருகிறது மகா கும்பமேளா என்று கூறி நடத்தப்பட்ட நிகழ்வில் மக்கள் பட்ட துயரங்களை ஊடகங்கள் சரியாக

நுழைய விடாமல் அடித்து விரட்டியதால் நெரிசலில் சிக்கி 30க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். டெல்லி ரயில்வே நிலையத்தில் மட்டும் 18 பேர் உயிரிழந்தனர். இந்த கும்பமேளா குளறுபடிகளால் மொத்தத்தில் 150க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். பிரயாக்ராஜ் ரயில் நிலையத்தை மூடிவிட்டனர். ரயிலை பிடிப்பதற்காக மக்களை அங்கும் இங்கும் அலைய விட்டுள்ளனர். டெல்லி ரயில் நிலையத்தில் உயிரிழந்தவர்கள் உடல்களை உடனுக்குடன் இரண்டு மூன்று மணி நேரத்துக்குள் அப்புறப்படுத்தியுள்ளனர். ரயில்வே துறை சார்பில் 10 லட்சம் நஷ்ட ஈடு கொடுத்த போதிலும் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த கூட நேரம் தரப்படவில்லை. டெல்லி ரயில்வே நிலைய நெரிசல் சாவு குறித்த வீடியோ பதிவை நீக்க வேண்டும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1956ஆம் ஆண்டின்**
**பத்திரிகைப் பதிவு விதிகளின் எட்டாவது விதி**
**படிவம் 4**

| | |
|---|---|
| வெளியிடும் இடம் | : சென்னை |
| இதழ் வெளியிடும் காலம் | : மாத வெளியீடு |
| அச்சிடுபவர் | : த.வசந்த்குமார் |
| இனம் | : இந்தியன் |
| முகவரி | : சேகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், 50,(ப.எண். 168) பெரிய தெரு, சேப்பாக்கம், சென்னை-600005 |
| வெளியிடுபவர் | : வி.முத்தையா |
| இனம் | : இந்தியன் |
| முகவரி | : 22,MJB தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005 |
| ஆசிரியர் | : வி.முத்தையா |
| இனம் | : இந்தியன் |
| முகவரி | : 22,MJB தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005 |
| பத்திரிகையின் பங்குதாரர் மற்றும் சொந்தக்காரரின் பெயரும் முகவரியும் | : வி.முத்தையா, 22,MJB தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005 |

வி.முத்தையா என்கிற நான், மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் எனக்குத் தெரிந்தவரை முற்றிலும் உண்மையானவை என்று இதன் மூலம் உறுதி அளிக்கிறேன்.

நாள்: 22.02.2025

(ஒப்பம்)
வி.முத்தையா
வெளியீட்டாளர்

ரயில்வே நிர்வாகம் எக்ஸ் தளத்துக்கு நோட்டீஸ் கொடுத்தது. ஆதாரம் இருந்தாலும் அதை வெளியிடக்கூடாது என்பது தான் அவர்களின் அணுகுமுறை. ஏழைகள் உயிருக்கு மதிப்பே கிடையாது நிலையில்தான் மம்தா பானர்ஜி இந்த கும்பமேளாவை கொலை மேளா என்று அழைத்தார். ஆனால் கும்பமேளாவை எதிர்ப்பவர்கள் பாரத கலாச்சாரத்தை தெரியாதவர்கள். அடிமை மனப்பான்மை உள்ளவர்கள் என்று மோடி கூறியுள்ளார்

அம்பானி இல்லத் திருமண விழா நடந்த போது ஜாம் நகரில் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையம் பத்து நாட்களுக்கு செயல்படும் என்று அறிவித்தார்கள். அதுபோன்ற அக்கறை கும்பமேளாவுக்கு இல்லையே ஏன்?

மூன்று நதிகளின் சங்கமம் என்று சொல்லப்படும் மகா கும்பமேளாவில் உள்ள தண்ணீர் அசுத்தமானது . அதில் மனிதக் கழிவுகளின் கிருமிகள் (*faecal caliform*) இருக்கின்றன என்று தேசிய பசுமைத் தீர்ப்பாயம் கருத்து கூறியது. இதற்காக உத்தரப்பிரதேச மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு கண்டனத்தையும் தெரிவித்தது. ஆனால் இதை மறுத்து உபி முதல்வர் யோகி ஆதித்யநாத் இந்த நீர் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் உகந்தது தான் என்று பதில் கூறினார். அது உண்மை என்றால் யோகி ஆதித்யநாத் தும் மந்திரிகளும் ஆளுக்கு ஒரு டம்ளர் கும்பமேளா தண்ணீரை பொதுவெளியில் குடித்துக் காட்டுங்கள் என்று பிரசாந்த் பூசன் சவால் விட்டார்.

உச்சபட்சமாக கும்பமேளாவில் குளிக்க வந்த பெண்களை புகைப்படம் எடுத்து இணையதளங்களில் வெளியிட்டு அதிலும் சம்பாதிக்கும் வேலை நடந்தது. பல வழக்குகளை தேசிய மகளிர் ஆணையம் தானே முன்வந்து தலையிட்டு விசாரணை நடத்தி உள்ளது. ஆனால் பெரிய அளவில் நடந்த இந்த பிரச்சனையை அது கண்டு கொள்ளவில்லை. இதுதான் இந்த ஆட்சியின் அவலமான நிலை. 50 முதல் 60 கோடி பேர் வரை கும்பமேளாவுக்கு வருகிறார்கள் என்றால் இந்தியாவின் பாதி பகுதியினர் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு இடம் பெயர்வதாக அர்த்தம் அவ்வளவு பெரிய தொகையினரை.. நம்பிக்கையாளர்களை சிரமப்படுத்திய உத்திரபிரதேச பாஜக ஆட்சியாளர்கள் எந்த உறுத்தலும் இன்றி பக்தி என்ற பெயரில் பகல் வேஷம் போட்டுக் கொண்டுள்ளனர். மோட்சத்திற்கு செல்ல வேண்டும் என்பதற்காக கும்பமேளாவில் குளிக்கச் செல்லும் பக்தர்கள் இந்த அரசாங்கங்களின் மெத்தனத்தை கண்டு கொள்ளாமல் இருப்பது வேதனையிலும் வேதனை. பாவப்பட்ட பக்தர்களை ஓட்டுகளாக மட்டும் நினைக்கும் பாஜக ஆட்சியாளர்களின் கபட வேடத்தை மக்கள் புரிந்து கொள்ளாமல் உள்ளனர். இந்த நிகழ்வில் உண்மையான சம்பவங்களை வெளிப்படுத்த முயன்ற ஒரு சில ஊடகத்தினர் தாக்கப்பட்டுள்ளனர். வெளியேற்றப்பட்டுள்ளனர். சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் அத்து மீறுவது அதைக் கேள்வி கேட்பவர்களை ஒடுக்குவது.. உதாசீனப்படுத்துவது என்பதுதான் இந்த ஆட்சியாளர்களின் அன்றாட நடவடிக்கையாக உள்ளது. நமக்கு விழிப்புணர்வு இல்லை. எல்லா அவலங்களையும் சகித்துக் கொண்டு வாழ்கிறோம்.

●

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | குமரன்

# திருப்பரங்குன்றம்: சங்பரிவார - சனாதனக் கும்பலின் கலவரத் திட்டம்



சங்க இலக்கிய காலத்தில் இருந்து அறியப்பட்ட தொன்மை சான்ற இடம் திருப்பரங்குன்றம். புதிய கற்கால வேட்டை வாழ்க்கைமுறையின் தெய்வமாக கொற்றவை தமிழ்ப்பண்பாட்டில் உருவானது. புதிய கற்காலத்தின் தொடர்ச்சியாய் உருவான இரும்புக் காலத்தில் எழுச்சியுற்ற வேல் வழிபாடும், அதன் தொடர்ச்சியாய் உருவான கொற்றவை மகனாய் உருப்பெற்ற முருக வழிபாடும் தமிழ்ப்பண்பாட்டின் தனித்துவம் வாய்ந்தது. முருகன், வேலன் வழிபாடு பற்றிய குறிப்புகள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகிய பழந்தமிழ் இலக்கியங்களில் நிறையக் காணப்படுகிறது.

குறிஞ்சி நிலத்தின் தலைவனாக அறியப்படும் முருகனின் திணை வாழ்க்கையாக வேட்டைப் பொருளாதாரமே இருந்தது. போர்த் தெய்வமாக அறியப்படும் தாய்த் தெய்வமான கொற்றவையின் மகனாக முருகன் 'கொற்றவை சிறுவன்' எனவும் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகிறான். காதல் நோயுற்ற தனது மகளை குணப்படுத்த முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டை நிகழ்த்துவது என்பதாக அகநானூறு, திருமுருகாற்றுப்படை ஆகியவைக் குறிப்பிடுகின்றன. வேலன் வழிபாடு என்பது முதன்மையாக ஆட்டை அறுத்து பலியிடும் வழிபாட்டுச் சடங்கை அடிப்படையாகக் கொண்டது என்பதை திருமுருகாற்றுப்படையின் கீழ்க்காணும் பாடலும் உணர்த்துகிறது.

"சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து" (திரு. 218)

"வாரணக்கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்" (திரு. 220)

"ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும் ..."
(திரு. 226)

இப்பாடலின் தெளிவுரையாவது, "சிறிய தினை அரிசியைப் பூக்களுடன் கலந்து பல பாத்திரங்களில் பரப்பி 'பிரப்பு அரிசி'யாய் வைத்து, ஆட்டுக் கிடாயை அறுத்து, கோழிக் கொடியை அதற்குரிய இடத்தில் நிறுத்தி ஊர்தோறும் கொண்டாடப்படும் பெருமையுடைய விழாவிலும், அன்புடைய பக்தர்கள் திருமுருகப்பெருமானை வழிபட்டு போற்றும் பொருத்தமான இடத்திலும் வேலன் மிக்க மகிழ்ச்சியுடன் ஆடும் 'வெறியாடு' களத்திலும், காட்டிலும், சோலையிலும், அழகான [தீவு போன்ற] ஆற்றிடைக்குறையிலும், ஆறு, குளம் ஆகியவற்றின் கரைகளிலும், வேறு பல இடங்களிலும், நான்கு தெருக்கள் சந்திக்கும் சதுக்கத்திலும், மூன்று தெருக்கள் சந்திக்கும் முச்சந்தியிலும், புதுமலர்களை உடைய கடம்பு மரத்தினடியிலும், ஊரின் நடுவில் உள்ள மரத்தினடியிலும், அம்பலத்திலும், கந்து நடப்பட்டுள்ள இடத்திலும் ..." இவ்வாறு தமிழ் மரபில் தோன்றிய முருகன், வேலன் வழிபாடு தமிழ்நாட்டிற்கே சொந்தமான தனித்துவமான திராவிட வழிபாட்டுத் தெய்வம் என்பதை கமில் சுவலபில்லும் உறுதிப்படுத்துகிறார்.

வட மரபில் வேத காலத்திற்குப் பிந்தையாதாகக் கூறப்படும் கந்தன் கதைக்கும் தமிழ்ப்பண்பாட்டின் முருகன், வேலன் வழிபாட்டிற்கும் தொடர்பே இல்லை. வைதீக சமயக் கருத்து தமிழ்நாட்டிற்குள் ஊடுருவிய பின் முருகன், கந்தன் இணைப்பு ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஆதிச்சநல்லூர், சிவகளை ஆய்வுகளும் தமிழ்நாட்டின் இரும்புக் காலம் பற்றிய ஆய்வுகளும் (தமிழ்நாட்டின் இரும்புக் காலம் 5000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையவை) தமிழ் முருகனை, சம்ஸ்கிருத கந்தன் வழிபாட்டில் இருந்து தனித்துக் காட்டுகின்றன. இத்தகைய வரலாற்றை மறைத்துத் தமிழ்ப் பண்பாட்டில் பார்ப்பன மேலாதிக்கமும். சம்ஸ்கிருத தாக்கமும் கலந்த வட மரபு ஸ்கந்தன் என்ற கந்தனாக முருகனை மாற்றிய கையோடு முருகனை தூய சைவ வழிபாட்டுக்குச் சொந்தமாக்கி நாடகமாடி வருகிறது வைதீக பார்ப்பனியம். இதன் தொடர்ச்சியே கொற்றவை மகன் என்பதை பார்வதி மகன் என்றும், கார்த்திகைப் பெண்கள் பெற்ற கார்த்திகேயன் என்றும் புராணங்களை இணைத்து ஓர் கதையைக் கட்டமைத்து, தமிழ் பண்பாட்டில் முகிழ்த்த வேலனை, முருகனை ஆரியமயமாக்கி உள்ளனர். தமிழ் பண்பாட்டில் குறிஞ்சி என்கிற மலையும் மலைசார்ந்த திணையின் கடவுளான (குன்றிருக்கும் இடம் எல்லாம் குமரன் இருப்பான் என்பது இதிலிருந்து உருவான வழக்கு மொழியே) முருகனின் முதல்படைவீடாக குறிக்கப்படும் திருப்பரங்குன்றத்தில் இன்றைய சநாதனப் பார்ப்பனியம் ஒரு மதவெறிக் கலவரத்தை திட்டமிட்டு உருவாக்க முனைகிறது.

திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலையாக மாற்றிவிட்டதாகவும் மலையில் ஆட்டை அறுத்துப் பலியிட்டு இழிவுபடுத்திவிட்டதாகவும் இசுலாமியர்களுக்கு எதிரான கருத்தை இந்து முன்னணி உள்ளிட்ட சங்பரிவார இயக்கங்கள் பரப்பி வருகின்றன. திருப்பரங்குன்றம் மலையை இசுலாமியர்கள் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப் போவதாக புதுக் கட்டுக்கதைகளை இந்துமுன்னணி, அனுமன் சேனா உள்ளிட்ட சங்பரிவார - சநாதன இயக்கங்கள் பரப்பி வருகின்றன. இது உண்மைதானா?

மதுரையில் திருப்பரங்குன்றம் போல எண் பெருங்குன்றங்கள் உள்ளன. இந்தக் குன்றுகள் அனைத்தும் நாட்டார் வழிபாடு, சமண, புத்த சமயங்கள், வைணவ, சைவ மதங்கள், இசுலாமிய, கிறித்தவ சமயங்கள் என அனைத்து வழிபாட்டு தலங்களும் எந்தவித இடர்களும் சிக்கல்களும் இன்றி மக்களால் அமைதியான முறையில் வழிபட்டு வரப்படுகின்றன. திருப்பரங்குன்றம் மலையில் அமைந்துள்ள சிக்கந்தர் பாதுஷா தர்கா வழிபாட்டு தலமும் தென் கிழக்காக அமைந்துள்ள காசி விசுவநாதர் கோவிலும் அருகருகே அமைந்துள்ளன. அதேபோல மலையடிவாரத்தில் குடைவரை முருகன் கோவிலும் அமைந்துள்ளது. இவ்வாறுதான் இசுலாமிய இறையடியார்களின் வழிபாட்டு இடங்களில் ஒன்றான அவுலியா சிக்கந்தர்பாதூஷா அடக்கம் செய்யப்பட்ட தர்கா வழிபாட்டு இடம் திருப்பரங்குன்றம் மலை மீது இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. இதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

1. மதுரா கன்ட்ரி மேனுவல் (*The Madura Country Manual*) எனும் நூலில் நெல்சன் அவர்கள் திருப்பரங்குன்றம் மலை மீது இருந்த இசுலாமியர்களின் தர்கா வழிபாட்டை குறிப்பிட்டுள்ளார். திருப்பரங்குன்றத்திலுள்ள சிக்கந்தர் பாதுஷா தர்காவில் கந்தூரி வழிபாடு எனும் ஆடு அறுத்துப் பலியிடும் வழிபாட்டு முறையும் தமிழ்நாட்டின் தென் பகுதிகளில் வாழும் இசுலாமியர்களால் வழக்காக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இது புது நடைமுறையன்று காலங்காலமாக இருந்து வரும் பழக்கவழக்கத்தின் தொடர்ச்சியேயாகும்.

2. பிரிட்டீஷ் வருகைக்குப் பிறகு திருப்பரங்குன்றம் சிக்கந்தர் தர்கா அமைந்துள்ள பகுதியை நில அளவை செய்து அதனை இனாம்தாரி நில வகையினமாக அடையாளப்படுத்தி இனாம் நிலங்களுக்கான 1863 பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளது. திருப்பரங்குன்றம் அருகே தனக்கன்குளம் கிராம நிலங்கள் தர்காவுக்காக இனாமாக வழங்கப்பட்டுள்ளன என்பதை பிரிட்டீசு ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

3. 1920ல் அப்போதைய முருகன் கோவில் தேவசம் போர்டுக்கும் தர்கா பொறுப்பு நிர்வாகிகளுக்கும் இடையே நடந்த சிவில் வழக்கில் 1923 ஆகஸ்ட் 25 ஆம் தேதி தர்கா அமைந்துள்ள பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள நெல்லித் தோப்பு இசுலாமிய அடக்கத் தலங்கள் ஆகியவை தர்கா நிர்வாகக் குழுவிற்குச் சொந்தம் எனத் தீர்ப்புரைத்தது. இது தொடர்பான மேல்முறையீடு இலண்டன் பிரைவி கவுன்சில் தீர்ப்பிலும் தர்கா அமைந்துள்ள பகுதி தர்காவின் நிர்வாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பரங்குன்றம் மலையை பார்த்திராத பலருக்கும் முருகன் கோயில் இருக்குமிடத்தில் எப்படி இசுலாமியர் வழிபாட்டு தளம் இருக்கலாம் என கேட்கின்றனர். திருப்பரங்குன்றம் மலையில் ஒவ்வொரு வழிபாட்டுத் தளமும் வெவ்வேறு திசையில் இருக்கிறது என்பதை இப்படத்தை பார்த்தால் ஓரளவுக்கு புரியும். மத நல்லிணக்கத்திற்கு சான்றாக சபரிமலையில் வாவர் மசூதி இருப்பது போல, பிரான்மலையில் சேக் அப்துல்லா தர்கா இருப்பது போல முருகன், சமண, சைவ, வைணவ, நாட்டார் மரபுகள் என பல்வேறு சமயத் தளங்களோடு திருப்பரங்குன்றம் மலையில் சிக்கந்தர் தர்காவும் அமைந்துள்ளது.

1. சுப்ரமணியர் கோயில் (சிவனுக்காக எடுக்கப்பட்ட குடைவரை கோயில் இதுவென கல்வெட்டுகள் கூறுகின்றன.)

2. பழனியாண்டவர் கோயில் (இக்கோயிலில் பின்னுள்ள பாறையில் மகாவீரர், பார்சுவநாதர் சிற்பங்களும் வட்டெழுத்துக் கல்வெட்டும் காணப்படுகிறது)

3. காசிவிஸ்வநாதர் கோயில் (இக்கோயில் முன்னுள்ள பாறையில் பார்சுவநாதர் சிற்பங்கள் உள்ளது)

4. சிக்கந்தர் தர்கா (தர்காவிற்கு பின்பக்கம் கற்படுக்கைகள் கொண்ட குகைத்தளம் உள்ளது)

5. நெல்லித்தோப்பு

6. தமிழிக் கல்வெட்டுகளுடனும், சமணர் கற்படுக்கைகளுடனும் காணப்படும் குகைத்தளம் (இந்திய தொல்லியல் துறையின் (ASI) கட்டுப்பாட்டில் உள்ளது)

7. உமையாண்டவர் குடைவரைக் கோயில் (இக்கோயில் மலையின் தென்புறம், மலையின் அடிவாரத்தில் உள்ளது. இப்படம் வடக்கு முகமாக உள்ளதால், உமையாண்டவர் கோயில் குறிக்க முடியவில்லை. இக்குடைவரைக் கோயில் இந்திய தொல்லியல் துறையின் (ASI) கட்டுப்பாட்டில் உள்ளது)

நெல்லித்தோப்பு, நெல்லித்தோப்பில் இருந்து சிக்கந்தர் தர்கா செல்லும் படிக்கட்டுகள், மலையுச்சியில் உள்ள தர்கா மற்றும் பள்ளிவாசல், கொடிக்கம்பம், இவைகள் அமைந்துள்ள மலையுச்சி ஆகியவை இசுலாமியர்களுக்கு (தர்கா நிர்வாகம்) பாத்தியப்பட்டது. மலையாடிவார பழனியாண்டவர் கோயில் முதல் நெல்லித்தோப்பு வரையுள்ள மலைப் பாதை இருத்தரப்புக்கும் பாத்தியப்பட்ட பொது பாதையாகும். இவை போக மீதமுள்ள மலையின் பகுதிகள் திருப்பரங்குன்றம் கோயில் (தேவஸ்தானம்) நிர்வாகத்திற்கு பாத்தியப்பட்டது என 300க்கும் மேற்பட்ட ஆவணங்களை சரிபார்த்து, 21சாட்சிகளை விசாரித்து மாண்புமிகு நீதிபதி P.G இராம ஐயர் அவர்கள் வழங்கிய தீர்ப்பு (O.S No. 4/1920) உறுதி செய்கிறது. இந்திய திருநாட்டின் விடுதலைக்கு முன்பும் பின்பும் நடந்த பல்வேறு வழக்குகளில் இத்தீர்ப்பு உறுதி செய்யப்படுகிறது.

மலையின் வடக்குப்புறத்தில் பழனியாண்டவர் கோயில் இருந்து நெல்லித்தோப்பு வரை மலைப்பாதையில் சென்று அங்கிருந்து காசிவிஸ்வநாதர் கோயிலுக்கு செல்ல ஒரு பாதையும், சிக்கந்தர் தர்காவிற்கு செல்ல தனியாக ஒரு பாதையும் என இரு பாதைகள் பிரிகின்றன. அண்மையில் மலையின் தென்புறத்தில் காசிவிஸ்வநாதர் கோயிலுக்கு செல்ல தனி மலைப்பாதை அமைக்கப்பட்டது.

மேற்சொன்ன விஷயங்களை புரிந்து கொள்ள இந்த பதிவோடு இணைக்கப்பட்டிருக்கும் திருப்பரங்குன்றம் மலையின் வரைபடம் உதவும் என்று எண்ணுகிறேன்.

*- தமிழ்தாசன் (முகநூல் பதிவு)*

குழுவிற்குச் சொந்தம் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

4. நாட்டு விடுதலைக்குப் பின் இந்து அமைப்புகள் எனும் பெயரில் சநாதன சக்திகள் தொடர்ந்த 1978, 1996, 1998, 2011 என தொடர்ந்து வழக்குகள் தொடுத்து வருகின்றனர். அனைத்து வழக்குகளிலும் தர்கா அமைந்துள்ள இடம் தர்கா நிர்வாகக் குழுவிற்கு சொந்தம் எனத் தீர்ப்புரைத்துள்ளன.

ஆனாலும், அதை ஏற்காமல் வழக்கை தொடரும் ஒரு உத்தியைப் பயன்படுத்தி தங்களுக்கு சாதகமான ஒரு நிலை வந்தால், அயோத்தி தீர்ப்புபோல ஒரு சாதகத் தீர்ப்பை பெற்றுவிடலாம் என்பதே சங் பரிவார்களின் உத்தி. நீதிமன்றமோ இத்தகைய தொடர் வழக்குகளை நீதிமன்ற அவமதிப்பு வழக்காகக் கூடக் கருதாமல் வாதாடி தீர்ப்புகளை வழங்கி வருகிறது. இத்தகைய தீர்ப்புகளையோ, மத நல்லிணக்கத்தையோ ஏற்றுக் கொள்ளாத இந்துத்துவ அமைப்புகள் பாபர் மசூதி இடிப்பிற்குப் பிறகு இசுலாமிய வழிபாட்டு இடங்களைக் குறிவைத்து பொய்களைப் பரப்பி அவர்களின் வழிபாட்டு உரிமையைப் பறிக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றன. 1991 வழிபாட்டு இடங்கள் சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டும் அதனை சங்பரிவாரங்களும் மதிப்பதில்லை, ஒரு சில நீதி அரசர்களும் அதில் ஒரு ஓட்டையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு இத்தகைய அமைப்புகளுக்கு சாதகமான வழிகளை திறந்து வைக்கிறார்கள்.

**பிரச்சினையின் துவக்கம்**

நீண்ட நாட்களாக இப்பிரச்சனையை முன்கொண்டு வர முயலும் சங் பரிவார் அமைப்புகள் கடந்த திசம்பர் 25 அன்று கந்தூரி கொடுப்பதற்காக வந்த குடும்பத்தைக் காவல்துறை தடுத்து நிறுத்தியதை ஒரு பெரிய பிரச்சினையாக்கி இந்த சிக்கலை எழுப்பி உள்ளனர். காலங்காலமாக நடந்த தர்கா வழிபாடு திடீரென தடுத்து நிறுத்தப்பட்டது தான் இன்றைய சிக்கலின் மூல வேர். இதன் பின்னணியில், அதே வேளையில் இந்துத்துவ அமைப்புகள் பல்வேறு பொய்த் தகவல்களை சமூக வலைதளங்களில் பரப்பியும் சட்ட ஒழுங்குச் சிக்கலைக் காரணமாக்கியும் இசுலாமிய வழிபாட்டு உரிமையை முழுமையாகப் பறிக்க முயற்சித்து வருகின்றன.

கடந்த 4.12.2024 அன்றே எந்தக் கரணமும் இன்றி கந்தூரி வழங்கப்படும் செய்தி தாங்கிய அவுலியா சிக்கந்தர் பாதுஷா தர்காவின் பெயரோடு கூடிய அறிவிப்புப் பலகை பல ஆண்டுகள் இருந்து வந்த போதிலும் அதனைப் பழுது பார்த்து மீண்டும் வைத்ததை திருப்பரங்குன்றம் இந்து அறநிலையத்துறை காவல்துறையிடம் புகாரளித்து மறைக்கச் சொல்லியிருக்கிறது. அதுமட்டுமல்ல ஆடு அறுத்து வழங்கப்படும் கந்தூரி வழிபாட்டிற்குப் போதுமான ஆவணங்களை கோட்டாட்சியர் தலைமையிலான அமைதிக் கூட்டத்தில் (31.12.24) இசுலாமிய தரப்பு வழங்கிய போதும் முறையாக விசாரிக்காமல் பெரும்பான்மை மக்களின் உணர்வுகளுக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர். இந் நடவடிக்கை இசுலாமியர்களின் பாரம்பரிய வழிபாட்டு முறைக்கு எதிரானதுமாகும். மேலும் தர்காவில் ஆடு அறுக்க அனுமதியில்லை என்ற மாவட்ட ஆட்சியரின் அறிவிப்பும் குழப்பத்தை ஏற்படுத்தியதோடு சங்பரிவார அமைப்புகள் பொய்களைப் பரப்ப வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்துள்ளன.

**இந்து முன்னணி உள்ளிட்ட சநாதன இயக்கங்களின் கலவரத் திட்டம்**

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள இசுலாமியர்களுக்குச் சொந்தமான இடத்தில் தீபம் ஏற்றுவோம் என பல கட்டப் பரப்புரையை இந்து முன்னணி 1990களில் இருந்தே மேற்கொண்டு வருகிறது. ஆனால் அவை எதுவும் மக்களிடம் எடுபடவில்லை. தற்போது ஒன்றியத்தில் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ள பாஜக ஆட்சியைப் பயன்படுத்திக் கொண்டு காசி, ஜெய்ப்பூர், மதுரா உள்ளிட்டு நாடு முழுவதும் உள்ள இசுலாமிய வழிபாட்டுத் தலங்களில் ஆய்வு என்ற பெயரில் நீதிமன்றங்களின் மூலம் தலையீடு செய்து வருகின்றன. பாபர் மசூதி இடிப்பும் அதனைத் தொடர்ந்து நீதிபதி சந்திரசூட் உள்ளிட்ட நீதிபதிகள் அடங்கிய அமர்வின் உச்சநீதிமன்றத் தீர்ப்பும் சங்பரிவாரங்களுக்கு வலிமையைக் கூட்டியுள்ளன. பாபர் மசூதி தீர்ப்பும் பற்றி ஒரு வெளிநிகழ்வில் கருத்துரைத்த முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி சந்திரசூட் "பாபர் மசூதி தீர்ப்புக்கு முன் கடவுள் ராமனை வணங்கி அவரின் ஆணைக்கிணங்க தீர்ப்பு வழங்கினேன்" எனத் தனது ஒரு சார்ப்புத் தன்மையை வெளிப்படுத்தினார். மேலும் ஞானவாபி மசூதி தீர்ப்பிலும் அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஏற்று இசுலாமியர்கள் கட்டுப்பாட்டிலுள்ள ஞானவாபி மசூதியை அகழாய்வு செய்வதற்கு ஆணையிட்டார்.

இந்தத் தீர்ப்பு சட்ட வல்லுநர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இது நடைமுறையிலுள்ள 1991 வழிபாட்டுத் தலங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தை (*Places of Worship (Special Provisions) Act, 1991*) நீர்த்து போகச் செய்வதோடு குழப்பங்களுக்கும் வன்முறைக்கும் வழிவகுக்கும் எனக் கூறப்பட்டது. ஞானவாபியைத் தொடர்ந்து சம்பலில்மாபெரும்கலவரத்தைசங்பரிவாரங்கள் தூண்டினர். கலவரத்தில் விலை மதிப்புள்ள உயிர்களும் போயின. இவ்வாறு நீதித்துறை சங்பரிவார அமைப்புகளின் துணை அமைப்புகளாக மாறி அரசியல் சட்டத்தின் உள்ளுயிராய் அமைந்துள்ள மதச்சார்பின்மை, சமத்துவம் ஆகிய கோட்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்கி இருக்கின்றன. இவ்வாறு 1991 இல் இயற்றப்பட்ட வழிபாட்டுத் தலங்கள் சிறப்புச் சட்டம் நடைமுறையில் இருக்கும் போதே அதிகாரத்தைப் பயன்படுத்தி இசுலாமிய வழிபாட்டுத் தலங்களில் இந்து அடையாளங்கள் உள்ளன என பொய்க் கருத்தை நிறுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சித்து வருகின்றன. அதன் ஒரு பகுதியாகத் திருப்பரங்குன்றம் மலையில் அமைந்துள்ள சிக்கந்தர் தர்காவை இலக்காக வைத்து மதக் கலவரத்தைத் தாண்டி அமைதியின்மையை உருவாக்கிட வெறுப்புப் பரப்புரையை மேற்கொண்டு வருகின்றன.

### தமிழர்களின் நலனுக்கானவையா இந்துத்துவ அமைப்புகள்?

நீதிக்கட்சியின் பெரும் முயற்சியால் கொள்ளைபோன கோவில் சொத்துகளைப் பராமரிக்க இந்து சமய அறநிலையத் துறை முதன்முதலில் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் தமிழர்களால் கட்டப்பட்ட கோவில்களில் தமிழர்கள் அர்ச்சகர்கள் ஆவதற்கும் தமிழில் அர்ச்சனை செய்வதைத் தடுக்கும் வகையிலும் இந்துத்துவ அமைப்புகள் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுத்து தமிழ்நாடு அரசின் சட்டங்களுக்குத் தொடர்ந்து தடை ஏற்படுத்தி வருகின்றன. இந்து அறநிலையத்துறை தனியார் ஆக்கிரமிப்பில் இருந்த பல ஆயிரம் ஏக்கர் நிலங்களை மீட்டு நல்ல முறையில் நிர்வாகம் செய்து வருகிறது. இந்த நிர்வாகத்தைக் கெடுக்கவும் கோயில்களை பார்ப்பன மேலாதிக்க சக்திகளின் கைப்பிடிக்குள் வைத்துக் கொள்ளவும் இந்து அறநிலையத் துறையைக் கலைக்க பல முனைகளில் இந்துத்துவ அமைப்புகள் தொடர்ந்து பரப்புரை செய்து வருகின்றன. பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் கோவிலில் நுழையவும் வழிபாட்டில் சமத்துவத்தை நிலைநாட்டவும் சவார்க்கர், மதன்மோகன் மாளவியா போன்ற இந்துத் தலைவர்கள் தடையாக இருந்தனர் என்பது வரலாறு. ஆனால் இவர்கள் இந்துக்கள் என்பவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பது போல நாடகம் ஆடி வருகின்றனர்.

### மதுரையைக் குறிவைக்கும் சங்பரிவார்

வரலாற்றிக் காலந்தொட்டு மதுரை மத நல்லிணக்கத்தை உயர்த்திப் பிடிக்கும் மண். பல சமயங்கள் மதுரைக்கு வந்த போதிலும் அவற்றிற்கு இடமளித்துத் தனது தனித்தன்மையை நிலைநாட்டியிருக்கிறது. சமண, புத்த சமயங்களாயினும் சரி, வைணவ, சைவ சமயங்களாயினும் சரி, இசுலாமிய கிறத்தவ சமயங்களாயினும் சரி இவை அனைத்திற்கும் மதுரையில் இடமுண்டு என்பதை மெய்பித்து வந்திருக்கிறது. வைணவத் தலமாக அறியப்படுகிற அழகர் கோவிலின் வாசலில் அமைந்துள்ள பதினெட்டாம் படி கருப்பணசாமிக்கு இன்று வரை மதுரையைச் சுற்றியுள்ள மக்கள் ஆடு, கோழி அறுத்து படையலிட்டு வருகின்றனர். மதுரையின் தனி அடையாளமாக விளங்கும் மதுரை பாண்டி முனி கோவில் ஆடு அறுத்து பலியிட்டு வழிபடும் தலமாக இன்று வரை இயங்கி வருகிறது. பாண்டிய மன்னர்கள் கோரிப்பாளையம் தர்காவிற்கு இடமளித்து தங்கள் சமயச் சார்பின்மையை நிலைநாட்டியுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு சாதி, சமய மக்கள் கூடும் ஆற்றில் அழகர் இறங்கும் திருவிழா இன்று வரை எவ்வித சமயச் சண்டைகளுக்கும் இடமளிக்கவில்லை. அதேபோல தெற்குவாசலில் உள்ள செயின்ட் மேரீஸ் சர்ச்சும் மதுரையின் சமய நல்லிணக்கத்திற்கு அடையாளமாக விளங்கி வருகின்றன. கோரிப்பாளையம் தர்கா, தெற்குவாசல் பள்ளிவாசல் ஆகியவை பல்வேறு சமயத்தவர் வழிபடும் இடமாக இருந்து வருகின்றன. இவ்வாறு அமைதியும், சமய நல்லிணக்கத்தையும் கடைபிடித்து வரும் மதுரை மக்களைப் பிளவுபடுத்தி வட இந்தியாவைப் போல மதக் கலவரத்தைத் தூண்டி இரத்தம் குடிக்க சங்பரிவார அமைப்புகள் முயற்சித்து வருகின்றன.

அடிப்படையில் இது மதுரைக்கான அல்லது திருப்பரங்குன்றத்திற்கான பிரச்சினை அல்ல. ஒட்டுமொத்த தமிழகத்தின், மதநல்லிணக்கப் பண்பாட்டின், மதச்சார்பற்ற மரபுகளின் பிரச்சனை. அமைதிப் பூங்கா என்ற அழைக்கப்படும் தமிழகத்தை வன்முறைக் காடாக்கி வடஇந்தியாவைப் போல வளர்ச்சியற்ற "பரதேசி"களாக மாற்றும் முயற்சி.

தமிழக மக்கள் எச்சரிக்கயைாக ஒன்றாக இதற்கு ஒருமித்த குரல் கொடுத்து இதனை முளையில் கிள்ளி எறியாவிட்டால், மற்றொரு வளர்ச்சியற்ற வட இந்திய கலவர நிலமாக தமிழ்நாடு மாறும் தூரம் தொலைவில் இல்லை.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.மோகன்ராஜன்

## ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை-

# மொழி ஆயுதம்!

மொழி என்பது சமூகத்தை, அறிவை, மனதை, பண்பாட்டை, வாழ்க்கையை மட்டுமே கொண்டதல்ல. ஒரு இனக் குழுவை, அல்லது ஒரு குறிப்பிட்டத் தன்னிலைகளைக் கொண்ட தனி மனிதர்களை கட்டமைத்திருப்பது, அல்லது எண்ணற்ற தனி மனிதர்களின் ஒருங்கிணைப்பில் ஒரு நாட்டை உருவாக்கியிருப்பது (நினைவுகளின் எல்லைகளை வரைந்திருப்பது.) என்பதே முக்கியம். (மொழி என்பதுடன் தவிர்க்க இயலாமல் அதற்கான நிலப்படங்கள் நினைவுகளுக்குள் வரையப்பட்டுள்ளன) இங்கு மொழித் திணிப்பு என்பதை வெறுமனே ஒரு மொழி இன்னொரு நாட்டிற்குள் நுழையும் செயலாக மட்டுமே பார்க்க முடியாது. அது ஒரு தனித்த இனத்தைக் கொண்ட நாட்டினை அழிக்கும் ஒரு அடிப்படை செயலாகும். அல்லது ஒரு மொழிக் கூட்டம் உருவாக்கிய தனி மனிதர்களை, அவர்களது உணர்வுகளை, சிந்தனையை மாற்றி அமைப்பதன் வழி அந்த இனத்தினது ஆற்றலை அழிக்கும் செயலாகும். ஒரு மொழிக் கூட்டம் உருவாகி வந்துள்ள அல்லது உருவாக்கிக் கொண்டுள்ள வரலாற்று நினைவுகளை, கதைகளை, புனைவுகளை, நம்பிக்கைகளை, கனவுகளை, அவை தரும் வேட்கை, துயரம், மகிழ்வு, ஆசை.. ஆகிய அனைத்து உணர்வுகளையும் அழித்து, திணிக்கப்படும் மொழிக்கேற்ப மாற்றியமைக்கும் செயலாகும்.

**-ஜமாலன் (உடலரசியல் நூலிலிருந்து)**

---

ஒரு வலிமையான பொருள் பொதிந்த நான்கு பக்கக் கட்டுரை சொல்லாததை, ஒரு கேலி சித்திரம் சொல்லிவிடும் என்பார்கள். ரவி பேலட் இன் என்.ஈ.பி. என்ற தேசிய கல்வி கொள்கை குறித்த கார்ட்டூனை, கேலி சித்திரத்தைப் பார்க்கும் போது அப்படித்தான் தோன்றியது. ஒரு வெள்ளை நிற காகிதத்தின் மேற்புறத்தில் படிய வாரப்பட்டத் தலை. நாசிக்கு கீழே கத்தரிக்கப்பட்ட மீசை. தொலைவில் வைத்துப் பார்க்கும் போது அது ஜெர்மனியின் ஹிட்லரை நினைவுபடுத்துகிறது. அருகில் கொண்டு வந்து ஹிட்லருக்கேயுரிய மீசையை நோக்கினால் அது என்.ஈ.பி. என்ற ஆங்கில எழுத்து வெண்மையும், கறுப்பும் கலந்து வெளிப்படுகிறது. இதைவிட தேசிய கல்வி கொள்கையை, ஒன்றிய அரசின் கல்வி என்கிற பெயரிலான மொழித் திணிப்பை, மொழி பாசிசத்தை விளக்கிச் சொல்லிவிட முடியாது.

ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கையானது மும் மொழிகளை கற்பதற்கு வகை செய்கிறது. வகை செய்தல் என்பது மாநிலங்களில் தாய் மொழியுடன் சேர்த்து பிறிதொரு மொழியைக் கற்பதற்கான ஏற்பாடு. இது முற்றிலும் மாநில அரசின் விருப்பத்திற்கு எதிராக மட்டுமல்ல மாணவர்களின் தெரிவு சுதந்திரத்திற்கும் அப்பால் கட்டாயப்படுத்தலாக மாறிக் கொண்டுள்ளது. மாநில கல்விக் கொள்கைகளுக்கு இசைவாக அன்றி நேர் எதிராக ஒன்றிய அரசு கொண்டுவரும் மும்மொழிக் கொள்கையானது மாநில அரசுகளையோ, மாணவர்களையோ, கருத்தில் கொள்ளாமல் முற்றிலும் ஒன்றிய அரசின் அதிகாரத்தினையும், ஒற்றை இந்தியா என்ற பாஜக ஆர்.எஸ்.எஸ் இன் வல்லாதிக்கக் கனவின் பகுதியாகவும் இருக்கிறது. மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் ஒருங்கிணைந்த கல்வி திட்டங்களுக்கான நிதி விடுவிக்கப்படும் என்ற ஒன்றிய அரசின் அமைச்சர் தர்மேந்திரபிரதானின் மிரட்டலானது மொழி உரிமை, கற்றல், கற்பித்தல் என்ற மாநிலங்களின், அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகளை, பணயமாக வைத்துக் கொண்டு மொழியை ஆயுதமாக்குவதன்றி வேறில்லை.

உத்திரப்பிரதேசம் வாரணாசியில் காசி-தமிழ்சங்கமம் நிகழ்வில் பேசிய ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திரபிரதான், தேசியக் கொள்கையை தமிழ்நாட்டரசு ஏற்றுக் கொண்டால்தான் சமக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படும். மும்மொழி கொள்கையை ஏற்காவிட்டால் நிதி ஒதுக்கீடு செய்ய அரசமைப்புச் சட்டத்தில் இடம் இல்லை. அரசியல் காரணங்களுக்காகவே தமிழ்நாட்டரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கையானது மும்மொழிகளை கற்பதற்கு வகை செய்கிறது. வகை செய்தல் என்பது மாநிலங்களில் தாய் மொழியுடன் சேர்த்து பிறிதொரு மொழியைக் கற்பதற்கான ஏற்பாடு. இது முற்றிலும் மாநில அரசின் விருப்பத்திற்கு எதிராக மட்டுமல்ல மாணவர்களின் தெரிவு சுதந்திரத்திற்கும் அப்பால் கட்டாயப்படுத்தலாக மாறிக் கொண்டுள்ளது.**

---

மும்மொழிக் கொள்கையை எதிர்க்கிறது என்று குற்றம் சாட்டுகிறார். மறுதலையாக ஒன்றிய அரசு அரசியல் காரணங்களுக்காகவே தமிழ்நாட்டுக்கான நிதியை மறுக்கிறது என்று திருப்பிச் சொல்லிவிட முடியும். கடந்த காலங்களில் மாநில அரசின் பட்டியலில் இருந்த கல்வியானது பொதுபட்டியலுக்கு மாற்றப்பட்டது. பொது பட்டியலில் உள்ள கல்வியின் மீது ஒன்றிய அரசு உரிமை கொண்டாட முடியாது. கல்வி ஒன்றிய அரசின் பட்டியலில் இருந்தால் மட்டுமே அதனை அது செய்ய முடியும். அதைத்தான் தமிழக முதல்வரும் சுட்டிக் காட்டியிருக்கிறார். மாநிலங்களால் ஆனது இந்திய ஒன்றியம் ஒத்திசைவுப் பட்டியலில் உள்ள ஒன்றை ஒன்றிய அரசு வலியுறுத்த முடியாது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் எந்த பிரிவு மும்மொழியை கட்டாயமாக்குகிறது என்பதை அவர் விளக்க வேண்டும் என்கிறார்.

பிற எல்லா மாநிலங்களும் மும்மொழி கொள்கையை ஏற்றிருக்கும் போது தமிழ்நாடு அரசு மட்டும் மும்மொழிக் கொள்கையை ஏற்கவில்லை என்பதே ஒன்றிய அரசின் குற்றசாட்டு. பிற மாநிலங்கள் ஏற்பதால் தமிழ்நாடு அரசும் ஏற்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பது ஒருபுறமிருக்க, கடந்த காலங்களில் இப்படியான நேரடி மற்றும் மறைமுகமான மொழி திணிப்பின் மீது தமிழ்நாடு எப்படியான எதிர்வினையாற்றி இருக்கிறது என்பது நினைவை விட்டு நீங்காதக் குருதி படிந்த வரலாறு. மொழியை அதிகாரத் திணிப்பிற்கான ஆயுதமாக ஒன்றிய அரசுகள் மாற்றிய போது தமிழ்நாடு அதனை எதிர் கொள்ள உயிரை கேடமாக்கி எதிர்த்து நின்று களமாடியிருக்கிறது. சும்மா வரவில்லை சுதந்திரம் என்பது போல தாய் மொழிக்கான பேச்சு மொழிக்கான, கற்றல், கற்பித்தல், தாய் மொழிக்கான சுதந்திரம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சும்மா வந்துவிடவில்லை.

மூன்றாவது மொழி ஒன்றை ஏற்க வேண்டும் என்பது வேறு இந்தியை மட்டுமே ஏற்க வேண்டும் என்பது வேறு. ஒன்றிய அரசு மூன்றாவது மொழி என்கிற இடத்தில் பிற மாநில மொழி என்று சொல்லாமல் அந்த இடத்தில் இந்தியை கற்க, கற்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் அரசியல், மிரட்டல் இதுவரையிலும் இல்லாதது. மேலும் தமிழகத்திற்கு வழங்கப்படும் கல்வி சார்ந்த நிதியையும் மும்மொழி கற்பித்தலைக் காரணம் காட்டி நிறுத்தி வைப்பது மாணவர்களின் எதிர்காலத்தைப் பணயம் வைப்பதுடன் இந்தியாவின் பன்முகத்தன்மை, ஒற்றுமை, அரசியல் சாசனம், மனித உரிமை இவை எல்லாவற்றுக்குமான சவாலாக மாற்றியிருக்கிறது.

எந்த மொழியில் தமிழ்நாட்டுக் குழந்தைகள் கற்ற வேண்டும், கற்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்து மாநில அரசின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது. ஏற்கனவே அதற்கான அனுபவ வரலாறு இருக்கிறது. 1961 இல் மும்மொழி கொள்கை குறித்த மாநில முதல்வர்களின் ஒப்புதல் இருந்தாலும் 1968 இல் அதற்கு எதிராகத் தமிழக சட்டமன்றம் பெருந்துணிச்லுடன் சட்டமியற்றியது. மாநிலத்திற்குள் தமிழ் அதற்கு வெளியில் வேலை வாய்ப்பு மற்றும் உலகுடனான உரையாடலுக்கு ஆங்கிலம் என இரு மொழிகள் போதும் என்பதே அதன் நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டின் முகிழ்த்த வடிவமே பெருங்கனவின் பலிதமே இன்றைய கல்வியில் முன்னேறிய தமிழ்நாடு. போலவே பிற அனைத்துத் துறைகளிலும் முன்னேறிய காட்டியிருக்கிறது தமிழ்நாடு. இந்தி அலுவல் மொழியாக நீடிக்கும் என்ற காங்கிரஸ் அரசின் சட்டத்தை எதிர்த்து தமிழ்நாட்டு மக்கள் தமது உடலையும், உயிரையும் துப்பாக்கிச் சூட்டிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலியாக்கியதை அடுத்து முன்னய இந்தியப் பிரதமர் நேரு, பின்னவர் அவரது புதல்வி இந்திராகாந்தி போன்றோர் இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை இந்தி திணிப்பு இருக்காது என்ற உறுதி மொழியை நம்பி அரை நூற்றாண்டில் இந்த சாதனைகளை தமிழ்நாடு எட்டியிருக்கிறது. இன்னும் எட்டும்.

தமிழகத்தின் நிதி வருவாயை பகல் கொள்ளையிட்டுச் செல்லும் ஒன்றிய அரசு அதற்குத் தர வேண்டிய சகல நிதிகளையும் நிறுத்தி வைத்தக் கொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாட்டு மாணவர்கள் எதிர்காலம் கருதி கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒதுக்கப்படாத 2,158 கோடி சமாக்ரா சிக்ஷா திட்டத்திற்கான நிதியையாவது விடுவிக்குமாறு தமிழக பள்ளிக்கல்வி துறை அமைச்சர் ஒன்றிய அரசின் அமைச்சரை நேரில் சென்று கேட்டுக் கொண்டார். ஆனால் அவரோ பி.எம்.சிறி. திட்டத்திற்கு முதலில் ஒப்புதல் கொடுங்கள் பிறகு நிதி பற்றி பேசலாம் என்கிறார். பதிலுக்கு தமிழ்நாட்டுக் கல்வியமைச்சர் மும்மொழி கொள்கையை காலங்காலமாக தமிழ்நாடு எதித்து வருகிறது. ஒன்றிய அரசு தேசியக் கல்விக் கொள்கையில் மும்மொழியை வலியுறுத்துவதால் அதனை ஏற்க இயலாது மேலும், தமிழகத்தில் கடந்த 75 ஆண்டுகளாக இரு மொழிக் கொள்கையே இருந்து வருகிறது என்பதையும் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டரசு கேட்பது சமக்ரா சிக்ஷா திட்டம் தொடர்பான நிதியைத்தானே தவிர பி.எம்.ஶ்ரீ-க்கான நிதியை அல்ல என்பது வெளிப்படை. அந்த கல்வித் திட்டத்திற்கும் இந்த கல்வித் திட்டத்திற்கான நிதியை ஒதுக்குவதற்கும் தொடர்பும் இல்லை. காரணமும் இல்லை. ஆனால் பாஜக அரசு ஒன்றை வைத்து ஒன்றில் பணியவைக்க முயற்சிக்கிறது. மொழி திணிப்பை ஆயுதமாக்குகிறது. இது பாஜக பாசிச அரசுக்குப் புதிதல்ல. சமக்ரா சிக்ஷா திட்டமானது 2018-19 காலக்கட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இதற்கும் தற்போதய தேசியக் கல்விக் கொள்கைக்கும் தொடர்பில்லை. காங்கிரஸ் அரசு காலத்தில் கொண்டுவரப்பட்ட அனைவருக்கும் கல்வி (எஸ்.எஸ்.ஐ.) இடைநிலைக் கல்வித் திட்டம் (ஆர்.எம்.எஸ்.ஏ.) ஆசிரியர் பயிற்சி (டி.ஈ.டி) ஆகியவற்றின் ஒருங்கிணைவே சமக்ரா சிக்ஷா ஆகும். மேலும், அனைவருக்கும் கல்வியை உறுதி செய்வது, மேம்படுத்துவது, செயல்திறனை ஊக்குவிப்பது மற்றும் பள்ளிக் கல்வியில் சமவாய்ப்புகள் வழங்குவது, சமமான கற்றல் முடிவுகளை உறுதி செய்வது என இத்திட்டங்கள் தொடர்பில் ஒன்றிய அரசு கூறிக் கொண்டது. இந்த திட்டத்திற்கு 2024-25 நிதிநிலை அறிக்கையில் 37010 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு 41250 கோடியாக அது மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் பி.எம்.சிறி என்பது தற்போது இருக்கும் பள்ளிகளை சிறப்புப் பள்ளிகளாக உருவாக்குவதை இலக்காக கொண்டதாகும். அதற்காக அது புதிய பள்ளிகள் எதனையும் உருவாக்கிவிடவில்லை. கேந்திரிய வித்தியாலயா, நவோதயா போன்ற பள்ளிகளையே பெயர் மாற்றி வெள்ளையடித்துக் கொண்டுள்ளது. நவோதயா பள்ளிகள் தமிழ்நாட்டில் செயல்படவில்லை. செயல்படுத்தக் கூடாது என்ற போராட்டம் நடத்தி வெற்றிக் கண்டது அன்றைய தமிழ்நாடு. அதே சமயம் மும்மொழியை கொண்டுவரும், இந்தியை கட்டாயமாக்கும் பி.எம்.சிறி பள்ளி யையும் ஏற்கவில்லை. எனவே அதற்கான நிதி எதனையும் தமிழ்நாட்டரசுக் கோரவில்லை. ஒன்றிய அரசின் ஏற்கனவே உள்ள கல்வித்திட்டத்திற்கான நிதியையே அது விடுகிக்கக் கோருகிறது.

ஒன்றிய அரசானது கடந்த காலத்தில் இந்தியை அலுவல் மொழியாக கொண்டு வந்து திணிக்கப் பார்த்தது. பின்னர் மாநிலப் பள்ளிக் கல்வியில் தமிழ்நாடு முழுவதும் 86 அரசு பள்ளிகளைத் தெரிவு செய்து இந்தியைத் திணிக்க முயன்றது. அதுவும் தடுக்கப்படவே. இனி எந்த வகையிலும் மொழி திணிப்பு இருக்காது என்ற உறுதி மொழியை ஒன்றிய அரசு தமிழ்நாட்டரசுக்கு பணிந்து அளிக்க வேண்டி வந்தது. காங்கிரஸ் அரசும் சரி இன்றைக்கு பாஜக அரசும் சரி இந்தியை தமிழ் மக்கள் நாவில் சூடு போட்டு பேச வைக்க வேண்டும் என்றே முடிவுகட்டி செயல்பட்டது. செயற்படுகிறது. இதில் தற்போதய பாசிச பாஜக அரசு தனது எல்லா அதிகார பலத்தையும் காட்டுகிறது. அமெரிக்காவின் அதிபர் ட்ரம்ப் உலக நாடுகளுக்குச் செய்வதை அவரது நண்பர் மோடி, இந்திய மாநிலங்களுக்கு செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம், உலக மொழியாக இருக்கிறது. உலகின் மொழியாக இருக்கிறது. ஆங்கிலத்தைக் கொண்டு மாநிலங்களுக்கிடையில் உரையாட எதுவிதத் தடையும் இருக்கவில்லை. இந்தியோ, காஷ்மீரியோ அவ்வம் மாநில மொழியை நாட்டின் எந்த பகுதியிலும் தனிப்பட்ட விருப்பத்தில் கற்றுக்கொள்ள முடியும். கற்றுக் கொள்வது என்பது வேறு திணிப்பது என்பது வேறு. சென்னை இந்தி பிரசார சபா நூற்றாண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதன் தலைவராக காந்தியார் இருந்தார். ஆண்டுக்குப் பல ஆயிரம் மாணவர்கள் தன் முற்சியாக, விருப்பமாக இந்தியை கற்று வெளியேறிக் கொண்டிருக்கின்றர். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முதன்மை மொழி தமிழ், இரண்டாம் மொழி ஆங்கிலம் இருந்து வருகிறது. ஒன்றிய அரசு மாநில அரசுகளின் குறிப்பிட்டத் துறைகளை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து தனது அதிகாரத்தின் வழி ஒற்றை இந்தியாவை உருவாக்கும், அகண்டபாரதத்தை உருவாக்கும் நோக்கில் செயல்படுகிறது.

இந்தி மொழி, பிறகு அந்த இடத்தில் சம்ஸ்கிருதம், வட இந்திய கலாசாரம், மதம், சாதி, என எல்லாவற்றையும் அதற்குயுரிய பண்புகளுடன் பிற இன, மொழி, மத கலாசரங்களுக்குள் தனது அதிகாரத்தினைப் பயன்படுத்தி திணிக்க முயற்சிக்கிறது. மும்மொழி என்றும் இந்திய அரசின் அரசியல் சாசன சட்டபடி செயல்படுவதாக கூறிக் கொண்டும் ஒன்றிய பாஜக அரசு செய்வதெல்லாம் ஒரு தேசிய இனத்தின் மீதான பிறிதொரு தேசிய இனத்தின் அப்பட்டமான படையெடுப்பே ஆகும். இது குறித்து சொந்த தாய் மொழியை பாலக அருந்தி, தின்று, செரித்து இந்த மண்ணில் உயிர்வாழும் ஈன பிறவிகள் மொழி குறித்த எதுவித அறிவும், நாணயமும் அற்று ஒன்றிய அரசு கொண்டுவரும் மும்மொழியை ஒரு பிழைப்பாக வைத்து ஆதரிக்கத் துடிக்கின்றன. மொழியில் கற்பது என்பது வேறு மொழியைக் கற்பது என்பது வேறு. இந்த இரண்டிற்குமான வேறுபாடும் தெரியவில்லை. மொழியில் கற்பதற்கு இங்கு தாய் மொழி தமிழும், ஆங்கிலமும் இருக்கின்றன. பிறிதொரு மொழியை கற்பதற்கான வெளியும் விருப்பத் தெரிவும் பள்ளிக் கல்விக்கு அப்பால் இருக்கின்றன.

கவிதை | பாக்யபாரதி



## சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்

நீ பலகோடி
சொத்துகளுக்கு
அதிபதியாக இருக்கலாம்!

வானில் செல்லும் விமானங்களுக்குக் கூட
சொந்தக்காரராக இருக்கலாம்!

அதற்காக எல்லோரும்
உனக்குக் கீழ்தானென்று
உதாசீனப்படுத்தாதே...

உயர்வதற்கு பயன்பட்ட
ஆறாவது அறிவு
உதவுவதற்கு
தடைபோடுகிறதா?

பணக்கட்டின் மேல்
கால் விரித்து
கனவு காண்பவனுக்கும்
வெறுந்தரையில்
கால் சுருக்கி
படுத்திருப்பவனுக்கும்
வயிறென்பது ஒன்றுதான்
பசியென்பது ஒன்றுதான்
அதைப் போக்குவது சோறொன்றுதான்!

எப்போதுமிதை
நினைவில் வைத்துக்கொள்...
இவ்வுலகம்
எவ்வளவு பெரிய
வளர்ச்சியை அடைந்தாலும்
ஏர்த்தொழிலின்
பின்னால்தான்
சுழல முடியுமென்பதை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மொழிக் கொள்கையை நீண்டகாலமாக செயற்படுத்தி வரும் தென்னகத்தின் கேராளா, கர்நாடாக, ஆந்திரா போன்றவை தாய்மொழியை, மண்ணின் மரபை அதன் தொடர்ச்சியை, கலசாராத்தை, தமது வேர்களை இழந்துவிட்டனர். ஆரிய மாயையில் முற்றாக சிக்கித் தம்மை முற்றாக இழந்துவிட்டனர். வட மாநிலங்களிலும் பல தமது தாய்மொழியை இந்திக்குப் பலிகொடுத்து மொழியுரிமை, தன்னுரிமை, மண்ணுரிமை இழந்து நிற்கின்றனர். இந்தியை ஏற்று தாய்மொழியை இழந்து சொந்த மண்ணில் ஏதிலிகளாகிவிட்டனர். மாநில தன்னுரிமை, ஒன்றியங்களின் கூட்டரசு என்பன போன்ற அரசியல் சொல்லாடல்களின் அரசியல் வாழ்வின் பெருள் அவர்களுக்கு இன்று வரை உரைப்பதாக இல்லை.

இந்திய ஒன்றியம் என்பது பல்லின, பல்மொழி, பல்கலாசார, பல் மத, இனங்களின் தொகுப்பு என்பதை இந்திய அரசியல் சாசனம் ஒப்புக் கொண்டிருக்கிறது. அந்த சாசனத்தின் இருப்பையும், தேசிய இனங்களின் இருப்பையும் கேள்விக்குள்ளாகும் ஒன்றிய பாசிச பாஜக அரசின் நீண்டகால இலக்கில் மொழி ஒரு முக்கியமான ஆயுதமாக இருந்து வருகிறது. தேசிய இனங்களை அந்த ஆயுத முனையில் வைத்து தாய்மொழியின் நாக்கை அறுத்தெடுக்கிறது. பிறிதொரு வகையில் சொல்லப்போனால் இந்திய ஒன்றியம் என்பது ஆரிய-திராவிட ஒத்திசைவின் கூட்டாட்சியே ஆகும்.

தமிழ்நாட்டு அரசின் எதிர்வினையும், எதிர்ப்பையும் பிரிவினை வாதமாக, தேச விரோதமாக சித்தரிக்கும் அரசியல்தாம் தேச விரோதமானது. ஒற்றிய கூட்டாட்சிக் கொள்கைக்கு எதிரானது. மொழி, தேசிய இனங்களின் ஒத்திசைவு அடிப்படையிலான வாழுரிமைக்கு எதிரானது. இதை வடதிசை மாநிலங்கள் புரிந்து கொள்வது நல்லது. தமிழுக்கு இலக்கணமெழுதியத் தொல்காப்பியருக்கே வடமொழி அகத்தியர் தமிழ் கற்பித்ததாகப் பிதற்றும் அறிவு நாணயமற்ற, ஏமாற்று புராணப் புரட்டுக்களை வரலாறு என பேசும் கூட்டம் தமிழை அகற்றிவிட்டு ஏன் இந்தியையும், சம்ஸ்கிருதத்தையும் முன் வைக்க வேண்டும்?

உலகின் இரும்பு காலம் தமிழ் நிலத்தில் தொடங்கிற்று என தொல்லியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். 3000 ஆம் ஆண்டு என்பது இரும்புடன் மட்டுமல்ல தமிழ் நிலத்தின், பண்பாட்டின், மொழியின் செரிவான, செழிப்பான, நாகரிகத்துடன் தொடர்புபட்டக் காலமுமாகும். கல் தோன்றி மண் தோன்றா காலத்தின் மூத்த குடி இரும்பின் காலத்தில் தொடங்குகிறது. இரும்பின் காலம் அதை சொல்கிறது. இரும்பின் காலத்தில் உலகின் பல இனங்கள் அந்த நாகரிகத்தை தொடங்கவே இல்லை. எட்டியிருக்கவேயில்லை. நிலைமை அப்படி இருக்க நமக்கென்றொரு மரபு, வரலாறு, அறிவு, அறம் சார் வாழ்வின் தொடர்ச்சி இந்த நிலத்துடன் செம்புலப் பெயல் நீர் போல கலந்திருக்கிறது. ஒன்றிய அரசு கொண்டுவரத் துடிக்கும் மும்மொழிக் கொள்கையானது மொழி திணிப்பல்ல என்று வாதிடுவோர், இந்த நிலத்தில் நின்று அதன் எல்லா நலன்களையும் பெற்றுக்கொள்ளும், அனுபவிக்கும் உயிர் பிழைக்கும் காட்டிக் கொடுக்கும் இந்தி, சம்ஸ்கிருத மொழித் திணிப்பை ஆதரிப்போர் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களது வாழ்வும், பிழைப்பும் இந்த நிலத்தோடுதான் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எதிராளியின் ஆயுதத்தை அதே எதிராளியின் ஆயுதத்தால் எதிர்கொள்வதே தமிழ் நிலத்திற்கான போராட்டமாக இனி இருக்க முடியும்.

இந்தி எதிர்ப்புப் போர் உச்சத்திலிருந்த போது 1965 இல் அன்றைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி, "மக்கள் எவ்வளவு காலம் வேண்டுமோ அவ்வளவு காலத்திற்கு ஆங்கிலத்தை ஒரு மாற்று மொழியாக வைத்திருக்க விரும்புகிறேன் ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக வைத்திருக்கும் முடிவை நான் இந்தி பேசும் மக்களிடம் விடாமல், இந்தி பேசாத மக்களிடம் விடப்போகிறேன் என்றார்." இதையேதான் இன்றும் ஒன்றிய அரசிடம் தமிழ்நாட்டு மக்கள் மீண்டும் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. "செத்துக் கொண்டிருந்தேன் யாரோ என் தாய் மொழியில் பேசினார்கள் எழுந்து கொண்டேன்!" என்கிறார் கவிஞர் ரசூல் கம்சதேவ் தமிழ்நாடு கல்லறை உறக்கத்திலிருந்து எழுந்து கொள்ளத்தான் வேண்டும்.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூ.ஜி.சி. புதிய வரைவு விதி 2025 - (UGC New Rule 2025)

# மாநிலப் பொதுப் பல்கலைக்கழகங்கள் தன்னாட்சி அதிகாரத்தை இழக்கின்றனவா?

பல்கலைக்கழக மானியக் குழு இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு 1956 - இல் நிறுவப்பட்டது. இதன் தலையாயப் பணி, பொதுக்கல்வியான கலை அறிவியல் படிப்புகளுக்கு நெறிமுறை வழங்கல், இந்தியாவில் உள்ள அனைத்துப் பொதுப் பல்கலைக்கழகங்களின் *(State Public University)* நிர்வாக முறையைக் கண்காணித்தல், மாநில அரசு பல்கலைக்கழகங்களுக்கு நிதிஒதுக்கீடு, மானுட அறிவியல் துறைக்கான பாடத்திட்ட வடிவமைப்பு, உதவிப் பேராசிரியர், இணைப் பேராசிரியர், பேராசிரியர், துணைவேந்தர் பணிக்கான அளவீடுகளைத் தீர்மானித்தல், அதற்கான ஊதியத்தை வரையறை செய்தல், உதவிப் பேராசிரியர் பணிக்கான *UGC/NET/JRF* தேர்வுகளை நடத்துதல், மாநில அரசுகளுக்கும் ஏதேனும் பல்கலைக்கழகத்தின் கீழ் *UGC /NET* என்னும் பெயரில் நடத்துவது போல் *SET (State Eligibility Test)* எனும் பெயரில் தகுதித் தேர்வினை நடத்திக் கொள்ள அனுமதி வழங்கல், முனைவர் பட்ட ஆய்வுகளை ஆய்வடங்கலாக உருவாக்கி வைத்தல், ஆய்வு வளர்ச்சிக்கான நிதி நல்கை வழங்கல் முதலான செயல்திட்டங்கள் பல்கலைக்கழக மானியக் குழுவின் பணிகளாக இருந்து வருகின்றன.

பல்கலைக்கழக மானியக் குழு ஒப்புதல் மற்றும் வழிகாட்டுதல் படி மாநில அரசுகள் தங்களுடைய அரசியல் மற்றும் கலை இலக்கியப் பண்பாட்டை அடையாளப் படுத்தும் விதமாகப் பல பல்கலைக்கழகங்களைக் கட்டமைத்தன. தமிழகத்தில் ஆங்கிலேய காலனியாதிக்க காலத்தில் தொடங்கப்பெற்ற சென்னைப் பல்கலைக்கழகம் மட்டுல்லாது பல பல்கலைக்கழகங்கள் உதயமாயின. திராவிட இயக்கத்தைத் தோற்றுவித்த தந்தை பெரியார் பெயரில் சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம், திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த சி.என். அண்ணாதுரைபெயரில்சென்னையில்அண்ணா பல்கலைக்கழகம், தமிழ் மொழியின் மகாகவி பெயரில் கோவையில் பாரதியார் பல்கலைக்கழகம், கவிதைகளில் சமூகச் சீர்திருத்தம் மற்றும் தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்த பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகம், தமிழ்மொழியின் தொன்மைக்குச் சான்றாகத் தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம், வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் என மறைந்த கல்வியாளர்கள் மற்றும் தலைவர்களை நினைவுப் படுத்தும் விதத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த தி.மு.க மற்றும் அதிமுக அரசால் உருவாக்கப்பட்டன. இதற்கான நிலம், வரி உள்ளிட்டவை தமிழக மக்களால் வழங்கப்பட்டவை. இத்தகு பல்கலைக் கழகங்களில் கலை இலக்கிய அரசியல் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தும் பொருட்டு மாநில அரசின் வழிகாட்டுதல் படி இருக்கைகள் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வாறு சுயாட்சி தன்மையுடன் இயங்கி வந்த பல்கலைக்கழகங்கள், தற்போதைய பல்கலைக கழக மானியக் குழுவின் புதிய வரைவு நெறிமுறையால் கல்விப் புலத்தின் மாநில உரிமை அதிகாரம் கேள்விக்குறியாக மாறி இருக்கிறது.

மாநில அரசு தயவில் மத்தியில் கூட்டாட்சி நிகழ்ந்தவரை கூடுமானவரை மாநில உரிமை பாதுகாக்கப்பட்டது. கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் இன்றி கொடுக்கப்பட்டது. 1990 - க்கு பிறகான புதிய பொருளாதார கொள்கை உயர்கல்வியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கினை முற்றிலும் மாற்றியது. அதன் நீட்சியாக 2006 - ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைமையிலான நடுவண் அரசு கொண்டு வந்த உயர்கல்வியில் அந்நிய முதலீட்டுக் கொள்கை உயர்கல்வித்துறையின் நிர்வாகப் பண்பாட்டினை (Organisation culture) மாற்றியது. உயர்கல்வித்துறையில் சுய நிதிப் பல்கலைக்கழகங்கள் மிகப் பெரிய அளவில் கால்பதித்தன. இது சமூக பொருளாதார காரணியில் ஏற்றத்தாழ்வுக்கு வித்திட்டது. நிரந்தரப் பேராசிரியர் பணி வழங்கமுடியாத சூழலில் தற்காலிகப் பேராசிரியர் பணியினை அரசே ஏற்படுத்தியது. அதன் நீட்சியாக 2014 - பிறகு ஆட்சி அமைத்த பா.ஜ.க. தலைமையிலான பெரும்பான்மைவாத அரசு, யூ.ஜி.சி உள்ளிட்ட தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் மாநிலப் பொதுப் பல்கலைக்கழகங்களின் (State Public University) அதிகாரங்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் விதமாகத் திட்டங்களை வடிவமைத்தது. இந்தியாவின் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் வழங்கப்படும் பொதுக்கல்வி முறை பாடத்திட்டம் இன்றைய கூட்டாண்மை நிறுவனங்களுக்கு சேவை செய்யும் பாடத்திட்டம் அல்ல. இதற்கு மிகையான நிதி நல்குவது அரசுக்கான விரய செலவு. எனவே, இப் படிப்புகளுக்கான நிதியினை அந்த மாநிலங்களுக்கு உட்பட்ட பல்கலைக்கழகங்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நடுவண் அரசின் கல்வி அமைச்சகம் வழக்கத்திற்கு மாறான கருத்தியலை உற்பத்தி செய்கிறது. ஆகையால்தான் நிதிநிலை அறிக்கையில் திறன் சார் கல்விக்கு அதிக நிதியும், பொதுக் கல்வியை உள்ளடக்கிய மானுட அறிவியல் படிப்புகளுக்கு (Humanity Science ) குறைவான நிதியும் ஒதுக்கப்பட்டு வருவதை அரசியல் சார்ந்து பொருத்திப் பார்க்க வேண்டியதாகிறது. தனியார் நிறுவனங்கள் கூட்டுறவுடன் அரசு இணைந்து மாணவச் சமுதாயத்திற்குக் கல்வியை வழங்கமுடியும் என்பதை மத்திய அமைச்சர்கள் தொடர்ந்து பரப்புரை செய்து வருகின்றனர். அதன் அடிப்படையில் கல்வி சார் கொள்கையைத் தனியார் மயத்திற்கு ஏற்றவாறு பல்கலைக்கழக மானியக் குழு குறிப்பிட்ட கால இடைவெளியில் விதிகளை மாற்றிக் கொண்டே வருகிறது.

பல்கலைக்கழக மானியக் குழுவின் 2025-இன் புதிய வரைவு விதி மாநில அரசின் பொதுப் பல்கலைக்கழகங்களின் தன்னாட்சியைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. அதிகாரத்தின் அதிகப் பெரும்பான்மையை நடுவண் அரசு எடுத்துக் கொள்கிறது. ஆளுநர், தனியார் கூட்டாண்மை நிறுவனங்களின் தலைவர் (Corporate leadership) மற்றும் செயல் அதிகாரிகளுக்கு அதிகார உரிமை வழங்குகிறது. கல்வியாளர்களின் முக்கியத்துவம் குறைக்கப்படுகிது. துணைவேந்தர் பதவிகளில் தனியார் துறையில் பணியாற்றுபவர்களையும் நியமிக்கலாம் என்கிறது. முறைப்படி உயர் கல்வியில் உச்சம் தொட்டவர்கள் பேராசிரியர் பணி நியமிக்கப்படுவது ஒரு புறம் தொடர்ந்து வருகிறது. இருப்பினும் தற்போதைய புதிய வரைவுக்குழு 'அனுபவம் சார் பேராசிரியர்' (Practice of professor ) எனும் பதவி உருவாக்கப்பட்டு, பட்டம் பெற்ற கல்வியாளர் இல்லாத துறைசார் அனுபவம் கொண்ட திறமைசாலிகளை இந்த 'அனுபவம் சார் பேராசிரியர்' பதவிக்கு நியமிக்கலாம் என்கிறது. முன்னைய வரைவுக்குழு விதியின் படி உதவிப் பேராசிரியர் பணி நியமனங்களில் 90 % நிரந்தரப் பேராசிரியர்களாக இருக்க வேண்டும். மீதம் இருக்கிற 10 % ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக் கொள்ளலாம். தற்போதைய விதியின் படி எத்தனை சதவீதம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கலாம் என்பதை சுட்டிக்காட்ட வில்லை. அப்படியானல் 100 % கூட ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளலாம் என்று பொருள் தருகிறது. 6 மாதத்திற்கு ஒரு முறை இந்தப் ஒப்பந்த பணியினை நீட்டித்துக் கொள்ளலாம் என்கிறது. இத்தகைய திருத்தம் முனைவர் பட்டம் பெற்றவர்களை மேலும் அத்துக் கூலி ஆசிரியர்களாக மாற்றுவதற்கு வழிவகுக்கும். ஏற்கனவே உதவிப் பேராசிரியர் பணிக்கு 50 வயதினைக் கடந்து பின்னரும் குறைந்த ஊதியத்தில் தனியார் கல்லூரிகள், மற்றும் கௌரவ விரிவுரையாளர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக மாறியுள்ளது.

துணைவேந்தர் பதவிக்கு ஒருவர் வரவேண்டும் என்றால் கல்விப் புல முறைப்படி வர வேண்டும். தற்போதைய வரையறை கல்வித்துறையில் தனியார் துறையில் பங்களிப்பு செய்தவர்களையும் துணைவேந்தர் பதவிக்கு அமர்த்தலாம் என்கிறது. மாநிலப் பொதுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்லை புத்தகக் கண்காட்சியில் 7ஆம் நாள் விழாவில் 'காக்கைச் சிறகினிலே' பிப்ரவரி இலக்கிய மாத இதழை, தொழிலதிபர் VM என்கிற வெ. முத்துசாமி அவர்கள் வெளியிட, கள்ளக்குறிச்சி மாவட்ட முத்தமிழ் சங்கத் தலைவர் முருகு. குமார் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு தமிழ்ச் சங்கத்தினர் பெற்றுக்கொண்டனர்.

– தியாகதுருகம் இரா. துரைமுருகன்

---

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் பதவிக்கான தேடுதல் குழுவில் ஆளுநர் மற்றும் மத்திய அரசின் பிரதிநிதி இருக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டுகிறது.அப்படியானல் மாநிலப் பல்கலைக்கழகங்களை வழிநடத்தும் தலைமைத்துவம் ஆளுநருக்குச் செல்கிறது. இத்தகு நெறிமுறை மாநிலப் பொதுப் பல்கலைக்கழகங்களின் அதிகாரத்தை முற்றிலும் வலுவிழக்கச் செய்யும் என்கின்றனர் கல்வியாளர்கள். துணைவேந்தர் பதவி என்பது மற்ற நிறுவனங்களில் உள்ள தலைமை செயல் அதிகாரி (*CEO*) போன்ற பதவி அல்ல. அரசுசார் உயர் கல்வித்துறையில் உதவிப் பேராசிரியர், இணைப் பேராசிரியர், பேராசிரியர், ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூலாக்கம் மற்றும் கல்வி சார் நிர்வாகத் திறன் ஆகியவற்றில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். துணை வேந்தர் பதவியில் உள்ளவர் கல்விப் புல ஆசிரியர்களுக்கு அறிவு வளத்திற்குரிய வாய்ப்புகளை வழங்க வேண்டும். அதுதான் கல்வி சார் தலைமைப் பண்பு ((*Academic Leadership*) என்கிறார் மூத்த கல்வியாளர் ஜவகர் நேசன். இவையாவையும் புதிய வரைவு நெறிமுறையில் (*UGC Regulation 2025*) முக்கியத்துவம் பெறவில்லை என்கிறார்.. கற்றல் மற்றும் கற்பித்தல் பணிக்கு அப்பாற்பட்டு தனியார் துறையில் முதன்மை அதிகாரிகளை துணைவேந்தராக நியமிக்க முற்படுவதும், மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுநருக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் உயர்கல்வித்துறையில் பல சிக்கல்கள் எழும். நடுவண் அரசு பின்புலத்தில் இயங்கும் ஆளுநர்கள் மாநில அரசின் நிர்வாகத்தோடு மோதல் போக்கினைக் கடைப்பிடிக்கின்றனர். மாநில அரசின் உயர்கல்வி சார்ந்த முடிவுகளில் தலையிடுகின்றனர். ஆளுநரின் செயல்பாட்டுக்கு எதிராகத் தமிழகம், கேராள ஆகிய மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளன. கர்நாடகர் மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களும் எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளன. மாநிலப் பொதுப் பல்கலைக்கழகங்களில் மைய அரசின் பிரதிநியாக இருக்கும் ஆளுநருக்கு முக்கியத்துவம் தருவதை பா.ஜ.க கூட்டணியில் உள்ள ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவர் நிதிஷ்குமாரும் தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது என்றும் கூறியுள்ளார். யூ.ஜி.சி.யின் புதிய வரைவு நெறிக்கு எதிராக இந்தியா கூட்டணியில்(*INDIA Block*) உள்ள கட்சிகள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளன. இதனால் இப்பிரச்சினை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக மாறிவருகிறது. எனவே பல்கலைக்கழக மானியக் குழு புதிய வரைவு நெறி தொடர்பாக கருத்துக் கேட்பு காலத்தை பிப்ரவரி 28-2025 வரை நீட்டித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் கூறியது போல் பல்கலைக்கழக மானியக்குழு என்பது உயர்கல்வியை ஒழுங்குப் படுத்தும் அமைப்பு. தற்போதைய நடுவண் அரசு அதற்கான நிதி அதிகாரத்தை நீக்கம் செய்துள்ளது. மாற்றாக இந்திய உயர்கல்வி ஆணையத்தை *(Higher Education Commission)* ஏற்படுத்தி அதன் ஊடாக மாநில மைய மற்றும் மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு நிதி வழங்கப் படுகிறது. இதில் *NIRF, NAAC* உள்ளிட்ட தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்து முதன்மை *(Top tier institution)* நிலையில் இருக்கும் பல்கலைக்கழகங்களுக்கு அதிக நிதி நல்கப்படுகிறது. இத்தகைய தரவரிசை பட்டியலில் பெரும்பாலும் தனியார் சுயநிதிப் பல்கலைக்கழகங்கள் இடம் பிடிக்கின்றன. ஆகையால் இத்தகு நிதி நல்கையைத் தனியார் பல்கலைக்கழகங்கள் பெறுவதற்குதான் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. மாநிலப் பொதுப் பல்கலைக்கழகங்களுக்கு உரிய நிதி கிடைக்காமல் திவால் நிலைக்குத் தள்ளப் படுகின்றன. பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் புதிய கல்விக் கொள்கையை மாநிலம் எங்கும் நடைமுறைப்படுத்தும் நோக்கில் அதிரடியாகப் பல முடிவுகளை அறிவிக்கிறது. மாநிலப் பொதுப் பல்கலைக்கழகங்கள் தங்களுடைய தரவுகளை *AIHSE (All India Higher Education survey)* மற்றும் *NAAC* இணையத் தளங்களில் பதிவேற்ற முற்படும்போது உங்கள் கல்வி நிறுவனத்தில் புதிய கல்விக் கொள்கை அமல்படுத்தப்பட்டுள்ளதா? இல்லையா? எனக் கேள்விக் கேட்கிறது. புதிய கல்விக் கொள்கையை ஏற்காகத மாநிலப் பொதுப் பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டங்கள் செல்லாது எனவும் கூறுகிறது. கல்வி என்பது மையப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் எனப் பல்கலைக்கழக மானியக்குழு கூறுவது ஜனநாயகப் பண்புக்குப் புறம்பானது.

பல்கலைக்கழக பரிந்துரைகளை ஏற்பதும், பரிசீலனைக்கு உட்படுத்துவதும் மாநில அரசின் சுயாட்சிக்கு உட்பட்டது என உச்ச நீதி மன்றம் ஏற்கெனவே கூறியுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழு என்பது, கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்கும் அமைப்பு. மத்திய மாநில அரசுகள் கொண்டு வந்த சட்டங்களில் ஏதேனும் முரண் இருந்தால் ஒன்றிய அரசு பரிந்துரைத்த சட்டம்தான் ஏற்கதக்கது. இது நாடாளுமன்றத்தில் கொண்டு வரப் பட்ட சட்டத்திற்கு மட்டும்தான் பொருந்தும். நெறிமுறைகளை வகுக்க முற்படும்போது மாநில அரசுகளை கலந்து ஆலோசித்த பின்புதான் முடிவுக்கு வர வேண்டும். தமிழகத்தில் உயர்கல்வி சார்ந்து நடைமுறைப்படுத்தப் படும் சட்டங்கள் அனைத்தும் மாநில சட்டப் பேரவையில் இயற்றப்படுபவை. ஆனால் நடுவண் அரசு கொண்டு வரும் வரைவு நெறிமுறைகள் மாநில அரசின் அதிகாரத்தை விலக்கி வைக்கிறது. இத்தகு நடவடிக்கை மாநில தன்னாட்சி அமைப்பை சீர் குலைக்க வழி வகுக்கும். மாநிலப் பொதுப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கத்திற்கு உரிய கட்டமைப்புகள் அனைத்தும் மாநில வரி வருவாய் கொண்டு உருவாக்கப்படுகிறது. அதற்கான நிதிப் பலன் மாநில அரசுகளுக்குக் கிடைப்பதில்லை என்கின்றனர் முதலமைச்சர்கள். கடந்த ஆண்டு தமிழக பட்ஜெட்டில் உயர் கல்விக்கு ரூ. 8212 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஒட்டு மொத்த நாட்டிற்கும் மத்திய அரசின் ஒதுக்கீட்டில் ரூ. 17 கோடி என தமிழக உயர் கல்வி அமைச்சகம் கூறுகிறது. நிதி ஒதுக்கீட்டில் காணப்படும் பாரபட்சம் கூட்டாட்சி முறைக்கு எதிராக இருப்பதைப் பார்க்க முடிகிறது.

பல்கலைக்கழக மானியக் குழுவின் புதிய வரைவு அறிக்கை தனியார்மயத்தை ஊக்கப் படுத்துகிறது. ஸ்டார் குறியீட்டு அந்தஸ்திற்கு கூட்டாண்மை நிறுவனங்கள் முனைவது போல் பல்கலைக்கழகங்களுக்கு இடையே சந்தை போட்டியை ஏற்படுத்துகிறது. மாநிலப் பொதுப் பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் நடுவண் அரசு தன் கட்டுப்பாட்டில் வைக்க முயல்கிறது. கல்வி வளர்ச்சி என்பது சமூகத்தில் பலவீனமானவர்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். எளிய மனிதர்களுக்கும் வாய்ப்பு பரவலாக்கப் படவேண்டும். சமூக நடைமுறையில் அதற்கு சாத்தியம் இல்லாமல் இருக்கிறது. தரமான உயர்கல்வியைப் பெற முடியாத விளிம்பு நிலை மாணவர்கள் எதிர்காலத்தில் சிந்தனைத் திறன் அற்ற உதிரித் தொழிலாளர்களாக மாறுவார்கள். அதைத்தான் மக்களாட்சி விரும்புகிறதா?

●

---

**எழுத்தாளர்: கல்வியாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | நிகழ் அய்க்கண்

## கி. பி. 2047 :

# வலதுசாரிகளின் வளர்ந்த நாடு கனவு

இந்தியாவில் கடந்த பத்து வருடங்களாக, ஒவ்வொருமுறையும் நாடாளுமன்ற கூட்டத்தொடர் மற்றும் மக்களவை, சட்டமன்றத் தேர்தல் நடக்கும் சமயத்தில், நாடாளுமன்ற அவைகளுக்குள்ளேயும், பொதுவெளிகளிலும் வலதுசாரி ஆட்சியாளர்கள் இரண்டு அறிவிப்புகளைத் திரும்பத்திரும்ப கூறிவருவதைக் கவனித்திருக்கலாம். அவை யாதெனில், 1. இந்தியா 2047 ல் வளர்ந்துவரும் நாடு என்பதிலிருந்து, வளர்ந்த நாடாகிவிடும் 2. 2025 ஆம் ஆண்டு 5 ட்ரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி இலக்கினை எட்டிவிடுவோம் என்பதிலிருந்து பின்வாங்கி, தற்போது 2028 ல் எட்டிவிடுவோம் என்பதுதான்.

வலதுசாரி ஆட்சியாளர்கள் நடைமுறையில் ஒருபக்கம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வித்திடும்; பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கு வழிவகுக்கும் சந்தைமயக்கொள்கைகளான தனியார் மயம், கட்டுப்பாடற்ற வணிகம், நிதிமயமாக்கலினை தீவிரமாக அமல்படுத்தி கார்ப்பரேட்டுகளின் நலன் காப்பவர்களாகவும் இருக்கின்றனர். இன்னொருபக்கம் கடந்த 11 ஆண்டுகால ஆட்சியில் மக்களிடம் மதவெறியூட்டி மக்களைப்பிளவு படுத்தும் அரசியலில் தீவிரங்காட்டி வருபவர்களாகவும்; சிறுபான்மைமையின கிறித்துவ - இஸ்லாமியமியர்களைக் குறிவைத்து அரசியலமைப்பிற்கு விரோதமாகச் சட்டங்களை இயற்றி அம்மக்களை ஒடுக்குபவர்களாகவும் இருக்கின்றனர். இதன் காரணமாக சந்தைமயக் கொள்கையும், வலதுசாரி அடையாளமும் சேர்ந்து சமூகம்-பொருளியல்- அரசியல் மட்டத்தில் (குடும்பம், கல்வி, மருத்துவம், மதம், அரசு நிர்வாகம், ஊடகம், பொருளாதார சூழல்) ஆதிக்கம் செலுத்தி வருவதினால் சமூக-பொருளாதார மட்டத்தில் ஆழமான பாதிப்புக்களை செலுத்தி வருகிறது.

நாடு சுதந்திரம் பெற்ற 100 வது ஆண்டில்(2047) (அதாவது இன்னும் 23 ஆண்டில்) வளர்ந்த நாடாக ஆக்கப்போவதாகக் கூறி வலதுசாரி ஆட்சியாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். இதனுடன் ஒரே நாடு ஒரே கலாச்சாரம் ; ஒரே நாடு ஒரே தேர்தல் எனவும் கூறிக்கொண்டு நாட்டின் பன்முகத்தன்மையினையும் சிதைத்துவருகின்றனர். இவ்வேளையில், இத்தேசத்தின் மூல வளங்கள், விவசாயம், தொழிற்சாலைகள், சேவை, கல்வி, மருத்துவம், திறன் பயிற்சி, வேலைவாய்ப்பு உள்ளிட்டவைகள் எவ்வாறாகக் கையாளப்படுகின்றன என ஆய்வதன்மூலம் வலதுசாரிகளின் வளர்ந்த நாடு கனவினை ஓரளவுக்காவது உறுதிசெய்துகொள்ளமுடியும்.

### பன்முகத்தன்மையும் கலாச்சாரமும்

வளர்ச்சியடைந்த தேசமாகுவதற்கு முதலில், நாட்டின் அரசியமைப்புச் சட்டத்திற்கிணங்க அனைத்து குடிமக்களையும் உள்ளடக்கி, பன்முகத்தன்மையுடனும், நல்லிணக்கத்துடனும் இருப்பது அவசியம். ஆனால் யதார்த்த நிலை அவ்வாறில்லை என்றே உணர முடிகிறது. உலகின் மத அளவில் கட்டுப்பாடுகள் அதிகம் நிறைந்த 25 நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் ஒன்றாக இருக்கிறது. இதற்கடுத்து, அமெரிக்காவை மையமாகக் கொண்டுள்ள தற்சார்பு நிறுவனமான 'இந்தியா வெறுப்பு ஆய்வகம்' (INDIA HATE LAB) 2023 -24 காலகட்டத்தில் மேற்கொண்ட ஆய்வின்படி, முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப்பேச்சு இந்தியாவில் அதிகரித்திருக்கிறது என்கிறது. மற்றுமொரு ஆய்வின்படி, 2024 ஆம் ஆண்டு மதக்கலவரங்களும், இந்துமதப் பண்டிகைகளும், விழாக்களும் முந்தைய ஆண்டைவிட 84 சதவீதம் அதிகரித்திருக்கின்றது என்கிறது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### பொருளாதார நிலை

செப்டம்பர் 2024 வரையில், வலதுசாரி ஒன்றிய அரசு பெற்ற கடனானது உள்நாட்டளவில் 3720.18 பில்லியன் டாலராகவும், வெளிநாட்டளவில் 711.8 பில்லியன் டாலராகவும் இருந்திருக்கின்றது. மக்களின் நலனை முன்னிருத்தி ஆட்சியாளர்கள் ஒருபக்கம் கடன் வாங்குகின்றனர். இன்னொரு பக்கம் நாட்டின் தொழிலதிபர்கள் பலரும் மக்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதாகக் கூறி வங்கிகளில் கடன்பெற்று அதனைத் திருப்பிச் செலுத்தாமல், பலரும் வெளிநாட்டிற்கு தப்பியோடி விடுவது இங்கே வாடிக்கையாக இருக்கின்றது. வங்கிகளும் தன் பங்கிற்கு வாராக்கடனைத் தள்ளுபடி செய்து தொழிலதிபர்களுக்கு சாதகம் செய்கின்றன. 2024 ஆம் ஆண்டில் மட்டும் ஒன்றிய அரசானது 1.7 ட்ரில்லியன் அளவு வாராக்கடனைத் தள்ளுபடி செய்திருக்கின்றது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். இப்படியாக, மக்களின் சேமிப்பானது தனியாருக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் பலனிப்பதாக மாறியுள்ளது

பொதுத்துறை வங்கிகள் ஒருபக்கம் வாடிக்கையாளர்கள் தங்களது சேமிப்புக் கணக்கில் நிர்ணயிக்கப்பட்ட தொகையை இருப்பில் வைத்துக்கொள்ளவில்லை எனக்கூறி அபராதம் விதிக்கிறது. இன்னொருபக்கம் டிஜிட்டல் மயத்தினால் வாடிக்கையாளர்களின் சேமிப்பானது சைபர் குற்றவாளிகளிடம் பறிபோவதை தடுக்காமல் மந்தமாகச் செயல்படுகிறது. பணக்காரர்களுக்கு மட்டும் இங்கே வரித்தள்ளுபடியும் கடன் தள்ளுபடியும் இலவசம். ஆனால், ஏழை வாடிக்கையாளர்களுக்கோ அபராதமும் தண்டனையும் இலவசம்..

#### தனியார் மயமும்– கட்டுப்பாடற்ற வணிகமும்

இயற்கை வளங்களையும் – மனித வளங்களையும் கொள்ளையடிக்க ஏதுவாக, தனியார் மயம் மற்றும் கட்டுப்பாடற்ற வணிகத்தினை கார்ப்பரேட்டுகளுக்கு கதவைத்திறந்துவிட்ட ஆட்சியாளர்கள் தற்போது வளர்ந்த நாடாக ஆக்குவதாகக்கூறி மக்களைத் திசைதிருப்புகின்றனர். தனியார் மயமும்- கட்டுப்பாடற்ற வணிகத்தின் வீச்சும் அதிகரிக்க அதிகரிக்க செல்வம் – வருமானம் – நுகர்வு ஆகியவற்றில் சமத்துவமின்மை என்பது அதிகரிக்குமே ஒழிய, எந்நாளும் குறையப் போவதில்லை.

**பொதுத்துறை வங்கிகள் ஒருபக்கம் வாடிக்கையாளர்கள் தங்களது சேமிப்புக் கணக்கில் நிர்ணயிக்கப்பட்ட தொகையை இருப்பில் வைத்துக்கொள்ளவில்லை எனக்கூறி அபராதம் விதிக்கிறது. இன்னொருபக்கம் டிஜிட்டல் மயத்தினால் வாடிக்கையாளர்களின் சேமிப்பானது சைபர் குற்றவாளிகளிடம் பறிபோவதை தடுக்காமல் மந்தமாகச் செயல்படுகிறது. பணக்காரர்களுக்கு மட்டும் இங்கே வரித்தள்ளுபடியும் கடன் தள்ளுபடியும் இலவசம். ஆனால், ஏழை வாடிக்கையாளர்களுக்கோ அபராதமும் தண்டனையும் இலவசம்.**

#### தொழில்நுட்பம்

இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை மற்றும் சமத்துவமின்மை அதிகரிப்பதற்கு தொழில் நுட்பமும் ஒரு காரணமாக இருக்கின்றது. தொழில் நுட்பமானது ஒருபக்கம் இயந்திரமயமாக்கல், ரோபோடிக், தானியங்கி போன்றவற்றிற்கு வழிவகுப்பது மட்டுமின்றி, இன்னொருபக்கம் செயற்கை நுண்ணறிவு அதிகரித்துவருகிறது. இதன் காரணமாக விவசாயத்துறை, தொழில்துறை, சேவைத்துறை யாவுமே அதிநவீனமயமாகி வருவதினால் தொழிலாளர்கள் வேலையிழப்புக்கும், இடம்பெயர்வுக்கும் வித்திட்டிருக்கின்றன.

#### வெளிநாட்டு நிறுவனங்கள் தொழில் தொடங்குவது குறைவு

கடந்த ஐந்து வருடங்களைப் பார்த்தோமேயானால், பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்குவது என்பது குறைந்து வருவதைக்காணமுடியும். அதாவது, 2020ல் – 90; 2021ல் – 75; 2022ல் – 64; 2023ல் – 57; 2024ல் – 53. ஆக இருக்கின்றது. இதுமட்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னிய நேரடி நிதி முதலீடும் பங்குச்சந்தையிலிருந்து வெளியேறிக் கொண்டிருப்பதை ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. கடந்த அக்டோபர் 2024 முதல் 17.2.2025 முடிய மட்டும் ரூ. 2, 18, 340 கோடி நிதி முதலீடு வெளியேறியுள்ளது. இப்படியே, தொழில் நிறுவனங்களும், நிதி முதலீடும் இப்படியே குறைந்துகொண்டே போனால் 2047ல்என்ன மிச்சமிருக்கும்எனத்தெரியவில்லை.

### வேலைவாய்ப்பின்மை

தொழில் நுட்பத்தின் தாக்கத்தினாலும், தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கைக் குறைவினாலும், பொதுத்துறையின் வீழ்ச்சியினாலும், அரசுத்துறைகள் நவீனமயமாக்கலினாலும் வேலைவாய்ப்பின்மை என்பது இந்திய இளைஞர்களிடையே தொடர்ந்து அதிகரித்து வருகிறது. புள்ளிவிபரங்களின்படி, 2023 -24 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பின்மையானது 15-29 வயதினரிடையே 10.2 சதவீதமாகவும்; பட்டதாரிகளிடையே 13 சதவீதம் இருப்பதாகச்சுட்டிக்காட்டுகிறது. இந்தியாவில் வேலைவாய்ப்பின்மையும், உண்மை ஊதியமும் குறைந்துவருவதை பன்னாட்டு தொழிலாளர் நிறுவனமும் எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டுகிறது. மற்றுமொரு புள்ளி விபரங்களின்படி, 2023 ல், ஜி-20 நாடுகளில் பணவீக்கம் அதிகரித்து வருவதினாலும், உண்மை ஊதியம் குறைந்து வருவதினாலும் லட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டிருப்பதாகக் கூறுகிறது. இன்னும் சொல்லப்போனால், பணவீக்கம், விலைவாசி உயர்வு, ஊதியக்குறைவு போன்ற காரணங்களினால், வாழ்வாதார நெருக்கடிகளை ஈடுசெய்ய 2017 ஆம் ஆண்டு 15 - 29 வயதினர்களில் 36.9 சதவீதம் பேர் வேலை வாய்ப்பினைப் பெற்றிருந்தவர்கள் 2023 - 24 ஆம் ஆண்டில் 60.1 சதவீதத்தினராக உயர்ந்திருக்கின்றனர். இதேகாலகட்டத்தில், உண்மை ஊதியமானது சுயவேலை வாய்ப்பில் சராசரியாக ரூ 324 லிருந்து 317 ஆகவும்; மாதச்சம்பளம் பெறுபவர்களிடையே ரூ 497லிருந்து 492 ஆகவும் குறைந்திருக்கின்றது. சராசரியாக தினக்கூலி பெறுபவர்களின் ஊதியம் மட்டும் ரூ 250 லிருந்து 297 ஆக அதிகரித்திருக்கிறது.

### திறன் மேம்பாடு

இந்தியாவில் திறன் இடைவெளியைக் குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கென நிதிநிலை அறிக்கையில் 2024-25 ஆம் ஆண்டு 21, 608 கோடியும்; 2025 -26 ஆம் ஆண்டு 38, 746.3 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக நிதி ஒதுக்கீடு அதிகரித்துவந்த போதிலும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதைவிட, பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் மட்டும் ஆட்சியாளர்கள் அதிக கவனம் செலுத்துவதாக இருப்பதை அறிய முடிகிறது. இதனால், திறனற்றவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வேலைவாய்ப்பின்மை அதிகரிக்க வழிவகுக்குமே ஒழிய, வேலை வாய்ப்பிற்கு எவ்வகையிலும் உதவாது போய்விடுகிறது.

### பள்ளியில் சேர்வது, இடை நிற்றல், கணினி வசதி

பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பது என்பது 2019-2020 லிருந்து 2022-23 காலகட்டத்தில் சராசரியாக 26 கோடியாக இருந்திருக்கின்றது. அதுவே 2023 -24 காலகட்டத்தில் ஒரு கோடி அளவுக்கு குறைந்து 24.8 கோடியாக ஆகியுள்ளது. தேசிய அளவில் பள்ளிகளிலிருந்து இடை நிற்றல் என்பது பிகார், அசாம், ராஜஸ்தான், ஹிமாசல், ஹரியானா, கர்நாடகா சிக்கிம் போன்ற மாநிலங்களில் 2019 ஆம் ஆண்டைக்காட்டிலும் 2024 ஆம் ஆண்டு கணிசமாகக் குறைந்துள்ளது என்கிறது புள்ளிவிபரம். மேலும், நாட்டின் 57.2 சதவீத பள்ளிகளில் மட்டுமே மாணவர்களுக்கு கணினி வசதியும், 53.9 சதவீத பள்ளிகளில் இணைய வசதியும் ஏற்படுத்தித்தரப்பட்டுள்ளது.

### மாணவர்கள் கல்வியறிவின் நிலை

2024 ஆம் ஆண்டின் 'அஸர்'(ASER) அறிக்கையானது நாடு முழுக்க உள்ள பள்ளிக்கல்வியில் நிலவும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளது. அதன்படி, அரசுப்பள்ளிகளில் 3 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள், 2 ஆம் வகுப்புப்பாடங்களை சரளமாகப் படிக்கமுடியும் என்பவர்களின் எண்ணிக்கை 23.4 சதவீதமாக இருக்கின்றது. 3 ஆம் வகுப்பைச்சேர்ந்த 76.6 சதவீத மாணவர்களால் 2 ஆம் வகுப்புப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களைப்படிக்க முடியவில்லை. 5 ஆம் வகுப்பு மாணவர்களில் 44.8 சதவீதத்தினரால் 2 ஆம் பாடங்களைப்படிக்க முடிகிறது. 8 ஆம் வகுப்பு மாணவர்களில் 32.5 சதவீதத்தினரால் 2 வகுப்பு பாடங்களைக்கூடப் படிக்க முடியவில்லை என்கிறது அந்த ஆய்வறிக்கை. இப்படியான சூழலிருந்து வெளிவரும் மாணவர்கள்தான் எதிர்கால வளர்ந்த இந்தியாவிற்கான நாயகர்களாக இருக்கப் போகிறார்கள்.

### மருத்துவம்

கல்வியில் மாணவர்களின் நிலை இப்படியிருக்கிறதெனில், மருத்துவத்தினை எடுத்துக்கொண்டால், இந்தியாவில் 5 வயதிற்கும் குறைவான குழந்தைகளில் 50 சதவீதத்திற்கும் மேலானோர் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2023 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஓர் ஆய்வின்படி, 38 சதவீதமான குழந்தைகள் வளர்ச்சிக்குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கிறது. போதிய சத்தான உணவில்லாதபோது, அம்மாணவர்களின் உடல்திறன் மற்றும் மூளைத்திறன் எனச் சொல்லத் தேவையில்லை.

### வறுமைக்கோடு

உலகளவில் 70 கோடிக்கும் மேலானோர் இன்னும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என உலக வங்கி கூறுகிறது. இந்தியாவில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் 25 கோடிப்பேர் வறுமையிலிருந்து மீண்டுவிட்டதாகவும். இன்னும் 5 சதவீதத்தினர் வறுமைக்கோட்டிற்கும் கீழ் உள்ளதாக நிதி ஆயோக்கின் தலைவர் கூறியிருக்கிறார். ஆனால் எதிர் கட்சிகளோ, நிதி ஆயோக்கின் தலைவர் கூறியிருப்பது டெண்டுல்கர் கமிட்டி அறிக்கை வரையறுத்துள்ளபடி எனவும், ரெங்கராஜன் கமிட்டி அறிக்கையின்படி பார்த்தால் இன்னும் 26 கோடிக்கும் மேலானவர்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழாக இருப்பதாகக் கூறுகின்றனர். இங்கே இயல்பாக எழும் கேள்வி என்னவென்றால், வறுமைக்கோட்டிற்கும் கீழே வெறும் 5 சதவீத மக்கள்தான் வாழ்கின்றனர் எனில் ஒன்றிய அரசானது நாட்டில் வாழும் 80 சதவீதமானவர்களுக்கு ஏன் இலவசமாக இன்னும் தேசிய உணவுப்பாதுகாப்புத்திட்டத்தின்கீழ் பொருட்களை வழங்கவேண்டும் என்பதுதான். இன்னும் சொல்லப்போனால், 2011 க்குப்பிறகு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தாததின் காரணமாக தேசிய உணவுப்பாதுகாப்புத்திட்டத்தில் கூடுதலாக 14 கோடிப்பேரை இணைக்க முடியாத நிலை நிலவுகிறது. இந்த உரையாடல் ஒருபுறமிருக்க, இன்னொருபக்கம் கடந்த ஏப்ரல் 24 முதல் செப்டம்பர் 2024 வரையிலான காலகட்டத்தில், வாழ்வாதாரத்திற்கு ஆதாரமாக விளங்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் பணி செய்த 84 லட்சம் பேர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர். வறுமைக்கோட்டிற்கும் கீழ் வாழும் ஏழைமக்கள் கல்விக்காகவும், மருத்துவத்திற்காகவும் தங்களது சேமிப்பிலிருந்து பெரும்பகுதியைச் செலவிடும் நிலையில் என்ன செய்வார்கள்?

சந்தையின் விளைவால் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வு-பணவீக்கம்- குறைந்த ஊதியம்- வேலைவாய்ப்பின்மை- சமூகப் பாதுகாப்பின்மை போன்ற காரனங்களினால், ஒருபக்கம் ஏழை மக்களின் சேமிப்பு என்பது வெகுவாகக்குறைந்து போயுள்ளது. இன்னொருபக்கம் ஆகஸ்ட் 2023 முதல் ஜூலை 2024 வரையிலான காலகட்டத்தில் குடும்பச் செலவு சராசரியாக 3.5 சதவீதம் அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இப்படியாகத்தான் சேமிப்பினை இழந்தும், கூடுதல் செலவு செய்தும்தான் குடிமக்களில் பெரும்பாலானோர் வாழ்நாளைக் கழிக்கின்றனர்.

### வாழ்வாதாரச் சுமைகளை ஈடுசெய்ய கடன்

கடந்த மூன்று வருடங்களில் பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகளில் தனிநபர் கடன் பெறுவது 22 சதவீதமும், கடன் அட்டை மூலம் கடன் பெறுவது 25 சதவீதமும் அதிகரித்திருக்கிறது. இப்படியாக கடன் வாங்கியவர்களில் 25 சதவீதமானோர், நெருக்கடியின் காரணமாக, 2025-26 காலகட்டத்தில் கடனை திருப்பிச்செலுத்த முடியாத நிலை உருவாகலாம் என்கிறது ஓர் ஆய்வு. இதுமட்டுமின்றி, வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் தங்க நகைக்கடன் பெறுவது என்பதும் 30 சதவீதம் அதிகரித்திருக்கிறது. இதுதவிர, சுய உதவிக்குழுக்கள் மூலமாக 2016 ஆம் ஆண்டில் 95 ஆயிரம் கோடி கடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டிருக்கின்றது. அதே சுய உதவிக்குழுக்கள் மூலம் 2024 ஆம் ஆண்டில் நான்கு லட்சம் கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு கடன் பெற்றவர்களில் பலரும் தாங்கள் பெற்ற கடனை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.

இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான மக்களின் யதார்த்தநிலை இவ்வாறு இருக்கையில்தான் 2024 -25 ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையும் அதனை தொடர்ந்து 2025- 26 ஆண்டுக்கான நிதிநிலையறிக்கையும் 2047 இலக்கை நோக்கி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

### பொருளாதார ஆய்வறிக்கை 2024-25

2024-25 ஆண்டுக்கான ஆய்வறிக்கையானது, இந்தியாவில் கடந்த வருடம் வேலை வாய்ப்பானது 1.5 சதவீதம் மட்டுமே வளர்ச்சி கண்டதாகவும், அதே சமயம் கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபமானது 22 சதவீதம் உயர்ந்துள்ளதையும் சுட்டிக்காட்டுகிறது. அதுமட்டுமின்றி, கடந்த 15 வருடங்களில் கார்ப்பரேட்டுகளின் லாபவிகிதம் மட்டும் அதிகரித்தவண்ணமிருப்பதையும், அதேவேளை தொழிலாளர்களின் ஊதிய விகிதத்தில் மாற்றமேதுமின்றி அப்படியே தொடர்வதாகவும் கூறியுள்ளது. பொருளாதார வளர்ச்சியானது 2024-25 நிதியாண்டில் 6.4 சதவீதம் இருக்குமெனவும், இதுவே 2025-26 நிதியாண்டில் 6.3 - 6.8 சதவீதமாக இருக்கலாம் எனவும் கணிக்கிறது. சந்தைமயப் பொருளாதாரமானது வளர்ச்சியில் பின்னடைவைச் சந்தித்துவரும் இந்த வேளையில் உள்நாட்டளவில் வளர்ச்சிக்கான காரணிகளைக் கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்யும்போதுதான் போட்டி மிகுந்த சந்தையினை எதிர்கொள்ளமுடியும் எனவும் கூறுகிறது.

### நிதிநிலையறிக்கை 2025-26

நிதிநிலையறிக்கையானது கடந்த ஆண்டைப்போலவே, இந்த ஆண்டும் கார்ப்பரேட்டுகளுக்கு நலன்பயக்கும் வகையில், தனியார் மயம் மற்றும் கட்டுப்பாடுகள் தளர்வுக்கு முக்கியத்துவம்; சமூகநலம், கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி, மிகக்குறைவாக நிதி ஒதுக்கீடு; காப்பீடு துறையில் 100 சதவீத தனியார் அனுமதி; கார்ப்பரேட்டுகளுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஏழை மக்களை வெகுவாகப் பாதிக்கும் ஜி.எஸ்.டி. வரி மற்றும் பெட்ரோல், டீசல் விலை இந்த முறையும் குறைக்கப்படவில்லை.

இறுதியாக, ஒருபக்கம், பங்குச்சந்தை ஏற்ற இறக்கங்களைச் சந்திக்கிறது. டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சரிகிறது. அன்னியச்செலவானி கையிருப்பு குறைந்து வருகிறது. தங்கத்தின் விலை நாளுக்குநாள் அதிகரிக்கிறது. அன்னிய நேரடி முதலீடு குறைகிறது. இன்னொருபக்கம் மாற்றியமைக்கப்படாத ஊதியம், விலைவாசி உயர்வு, பணவீக்கம், வேலை வாய்ப்பின்மை போன்ற காரணங்களினால் அடித்தளத்தில் இருக்கும் ஏழை மக்கள் வாழ்வாதாரத்திற்காக திண்டாடுகின்றநிலை.

ஆண்டுக்கு 8 சதவீதத்திற்கு மேல் பொருளாதார வளர்ச்சி இருந்தால்தான் 2047 ல் வளர்ந்த நாடு கனவு சாத்தியமாகும் என பொருளாதார வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அப்படியே ஆண்டுக்கு 8 சதவீத வளர்ச்சியை எட்டினாலும், அதனால் பலனடையப்போவது கார்ப்பரேட்டுகளும், வலதுசாரிகளுமே. ஏழை மக்கள் இன்னும் மோசமான நிலைக்கே தள்ளப்படுவர்.

இச்சமயத்தில் வேண்டுவது என்னவெனில், சட்டத்தின் ஆட்சிமூலம் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவது; பொதுச்செலவீனங்களை அதிகப்படுத்துவது; வேலைவாய்ப்புக்களை உருவாக்குவது; குறைந்தபட்ச ஊதியத்தினை உயர்த்துவது; சமூகப்பதுகாப்புத்திட்டங்களை ஏழை மக்களுக்கு உறுதிப்படுத்துவது தேவையாகிறது.

**இக்கட்டுரை எழுத உதவியவை நன்றி.**

Economic Survey 2024-25 calls for De regulation, predicts 6.3%-6.8% Growth in Fy 26 - The Wire, Dated 31.01.2025 by the wire staff.

Govt"s Push Towards Skilling.Big Funding. Poor Outcomes -The Wire, Dated 07.02.2025 by Santhosh Mehotra and Dr.Harsil Sharma

The Hindu, Times of India, தினமணி, தமிழ் ஹிந்து, -Various Dated.

•

---

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவதாசி மரபும் தமிழ்க் கலாச்சாரமும்

தேவதாசி மரபின் வரலாற்றை ஆராய்ந்த ஆய்வாளர்களில் பெரும்பான்மையோர் அந்த மரபின் தோற்றம் என்பது உலகளாவிய பண்பைக் கொண்டதாகவும், மத நிறுவனங்களினூடே தோன்றி வளர்ந்து வந்ததாகவும் கூறுகின்றனர். அவர்கள் அதற்கான ஆதாரங்களாக பல செய்திகளைத் தருகின்றனர். இத்தகைய ஆய்வாளர்கள் குறிப்பிடும் செய்திகளிலிருந்து அங்கு பணியாற்றிய மகளிர், கோவில் வேலைகளைப் பொதுவாகச் செய்து வந்த பணியாட்களா? அல்லது அக்கோவில்களின் தெய்வங்களுக்கு அடிமைகளாகி சேவை புரிந்தவர்களா? என்பது அவர்களால் தெளிவுபடுத்தப்படவில்லை. தமிழ்நாட்டில் இப்பொருள் பற்றி ஆராய்ந்தவர்கள் பரத்தையர்கள், காமகிழத்தியர், கொண்டிமகளிர், பாடினியர் போன்றவர்களிடமிருந்து இம்மரபு தோன்றியிருக்கக்கூடும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த இடத்தில் ஒரு கேள்வி எழுகின்றது. அக்காலத்து மக்களால் புனிதம் நிறைந்ததாகக் கருதப்பட்ட கோவில்களில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பரத்தையர்கள் போன்று மக்களாலும் புலவர்களாலும் இழிவாகப் பேசப்பட்டவர்களை புனிதத் திருத்தொண்டர்களாக நியமித்திருப்பார்களா?

மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, மணிமேகலை, சிலப்பதிகாரம், பெருங்கதை, சீவகசிந்தாமணி போன்ற நூல்களில் குறிப்பிடப்படுகின்ற ஆடல் மகளிர், சமண மதம் சார்ந்த பெண்பாற் துறவிகள் போன்றவர்களிடம் இருந்து தேவதாசி மரபு தோன்றியதாகக் கருத்துரைத்துள்ளனர். "பெருங்கதை" போன்ற இலக்கியங்களில் "கோவில் மகளிர்" என்று குறிப்பிடப்படுகின்ற பெண்களைத் தேவதாசி மரபு மகளிருடன் இணைப்பது பொருந்தாது. ஏனென்றால் பெருங்கதையில் இந்தத் தொடர் வருகின்ற இடங்களில் எல்லாம் அப்பெண்கள் அரசனுடைய அரண்மனைப் பணிப்பெண்களாகவே குறிப்பிடப்படுகின்றனர். அப்படியானால் தேவதாசிகளின் தோற்றம் எங்கிருந்து தொடங்கியது என்ற கேள்வி நமக்குள் எழுவதைத் தவிர்க்க முடியாது.

இதற்கான சில குறிப்புகளைச் சங்க நூலாகிய புறநானூறு நமக்குக் கொடுக்கின்றது. புறநானூற்றுப் பாடல்களில் காஞ்சித் திணையில் மகட்பாற் காஞ்சி என்று துறை குறிக்கப்பட்டுள்ள 21 பாடல்கள் உள்ளன. இந்தப் பாடல்களில் சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்களைப் பற்றியும் தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளை ஆட்சி செய்த குறுநில மன்னர்கள் சீறுர் மன்னர்கள் தொல்குடித் (புற.353 வரி 11) தலைவர்களைப் பற்றியும் பாடப்பட்டுள்ளன.

மூவேந்தர்கள் தமிழ்நாட்டில் பிற பகுதிகளில் ஆட்சி செய்த தலைவர்களின் பெண்களைத் தங்களுக்கு மணமுடித்துத் தரும்படிக் கேட்கின்றனர். குறுநில மன்னர்களும் சீறுர்த் தலைவர்களும் தொல்குடித் தலைவர்களும் வேந்தர்களுக்குத் தங்கள் பெண்களை மணமுடித்துத் தர மறுக்கின்றனர். இதனால் அவர்களுக்கிடையே பெரும் போர் நடக்கின்றது. அந்தப் போர்கள் சிலவற்றில் வேந்தர்கள் வென்று மற்றவர்கள் அழிக்கப்படுவதாகவும் அவர்கள் ஆட்சிபுரிந்த ஊர்களும் அழிவுக்குட்படுவதாகவும் புலவர்கள் பாடுகின்றனர். சில பாடல்களில் வேந்தர்கள் தோல்வியுற்று ஓடுவதாகவும் பாடப்பட்டுள்ளது.

இதே மூவேந்தர்கள் மண்ணாசையால் மேற்குறிப்பிட்ட தலைவர்களுடன் போரிடுவதாகவும் பாடல்கள் உள்ளன. அதாவது புறநானூற்றுப் பாடல்களின் வழியாக மூவேந்தர்கள் (அந்தப் பாடல்களில் மூவேந்தர்களை வம்பவேந்தர்1 என்றும் (புற.345



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுவான தமிழ்நாட்டுப் பழங்குடி மரபிலிருந்து பேரரசர்களாக உருவான சேர சோழ பாண்டியர்கள் பிற தொல்குடி தலைவர்களைத் தங்களுக்கு அடங்கியவர்களாக மாற்றுவதற்கும் அத்தகைய தலைவர்களின் செருக்கை அடக்குவதற்கும் அவர்களுடைய பெண்களைத் தங்களுக்கு உரிமையானவர்களாக மாற்றுவதற்கு முயற்சித்தனர். இதனால் இந்தப் போர்கள் நிகழ்ந்துள்ளன.**

வரி 7) மாமுது வேந்தன் (புற.353 வரி 12) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது) மண்ணுக்காகவும் பெண்ணுக்காகவும்தான் இத்தகைய போர்களை நடத்தினார்கள் என்பதை நாம் அறிகின்றோம்.

மண்ணுக்காகப் போர் நடத்தும் போது இந்த உலகத்தை அதாவது தமிழ்நாட்டை "பொதுநீக்கி" ஆளப்போவதாக வேந்தர்கள் கூறுவதாகச் சில புறநானூற்றுப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பொதுநீக்கி என்ற சொல் பின்னர் வந்த பல இலக்கியங்களில் காணப்படவில்லை. சுமார் 400 அல்லது 500 ஆண்டுகள் கடந்து அதாவது சங்ககாலத்திற்கு மிகவும் பிற்பட்ட செப்பேடுகளில் மீண்டும் இதே "பொதுநீக்கி" என்ற சொல் இதே பொருளில் கையாளப்பட்டுள்ளது (பாண்டியர் செப்பேடுகள் 10, பல்லவர் செப்பேடுகள் 30). இச்செப்பேடுகள் வெளிவந்த காலங்களில்தான் தமிழ்நாட்டில் "தேவதாசி மரபும்" உருவாகியிருக்கின்றது என்பதை இரண்டாம் நந்திவர்ம பல்லவன் காலத்தில் காஞ்சிபுரத்தில் உள்ள கல்வெட்டுச் செய்தி புலப்படுத்துகின்றது.

பொதுவான தமிழ்நாட்டுப் பழங்குடி மரபிலிருந்து பேரரசர்களாக உருவான சேர சோழ பாண்டியர்கள் பிற தொல்குடி தலைவர்களைத் தங்களுக்கு அடங்கியவர்களாக மாற்றுவதற்கும் அத்தகைய தலைவர்களின் செருக்கை அடக்குவதற்கும் அவர்களுடைய பெண்களைத் தங்களுக்கு உரிமையானவர்களாக மாற்றுவதற்கு முயற்சித்தனர். இதனால் இந்தப் போர்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் மூவேந்தர்கள் இதில் தொடர்ந்து வெற்றிபெறவில்லை என்பதை இக்காலத்தை அடுத்து வரலாற்றில் நாம் காண்கின்ற களப்பிரர் காலம் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது. களப்பிரர் காலத்தில் (சுமார் 300 லிருந்து 500 வருடங்கள்) இத்தகைய நிகழ்வுகள் நடைபெற்றதற்கான தகவல்களைக் கூறும் கல்வெட்டுகளோ பட்டயங்களோ இல்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் பேரரசர்கள் தங்களுடைய மண்ணாசையையும் பெண்ணாசையையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான தக்க காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர் என்பதைப் "பக்தி இயக்கம்" நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது. இக்காலத்தில் தமிழ்நாட்டின் வளமிகுந்த பல்லாயிரம் ஏக்கர் நிலங்களை எத்தகைய போருமின்றி கோவில்களுக்கு உடைமை ஆக்கியதும் உயர்சாதிகளைச் சேர்ந்தவர்களுடைய பெண்களும் தமிழ்நாட்டின் பல பகுதிகளை ஆண்ட பல தலைவர்களுடைய பெண்களும் கோவில்களுக்குத் தேவதாசிகளாக ஆக்கப்பட்ட குறிப்புகளை நாம் பார்க்கின்றோம். அதாவது வன்முறையான படையெடுப்புக்களால் சென்ற காலங்களில் சாதிக்க முடியாததைக் கருத்தியலான மதத்தைக் கொண்டு வெற்றிகரமாகச் சாதித்து முடித்த வரலாறுதான் புனிதக் கோவில்கள் நிலவுடைமையாளர்களாக மாறியதும், புனித தேவதாசி மரபு உருவானதும் ஆகும். சுமார் கி.பி.7ஆம் நூற்றாண்டில் நிறுவப்பெற்ற இந்த அமைப்பை 20ம் நூற்றாண்டுவரை கடவுளின் பெயரால் வெற்றிகரமாகஇவர்களால்நடைமுறைப்படுத்தப் பட்டது. அதே நேரத்தில் இம்மரபு பின் வந்த காலங்களில் தெய்வீகம் சார்ந்து மட்டுமில்லாமல் வேறு வடிவங்கள் எடுத்ததையும் குறிப்பிட வேண்டும். "தமிழகத்தில் தேவதாசிகள்" என்ற நூலில் முனைவர் கே.சதாசிவன் பக்.220 இல் பிரிஜேஷ் பானர்ஜி என்ற அறிஞரின் கூற்றைப் பதிவு செய்கிறார்.. "தேவதாசி முறையின் வரலாற்றில் மூன்று நிலைகளை இனம் காண்கிறார். முதல்நிலை என்பது, இறைத் திருமேனிக்கு அவர்களின் சுய அர்ப்பணிப்பு, இரண்டாவது நிலை, அரசர்கள் பூசாரிகளின் இன்பத் துய்ப்பிற்கு அவர்கள் ஆளாக நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது நிலை, பொது மனிதர்களுக்கு என்று அவர்கள் ஆனது, அவர்களின் சீர்குலைவு நிலையை இரண்டாவது கட்டமே சுட்டிக்காட்டுவதாக இவர் கருதுகிறார்"

இந்த மரபின் இரண்டாவது கட்டத்தை இராசராச சோழனுடன் இணைக்கின்றனர். இராசராச சோழன் தான் கட்டிய தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பெண்களையும் மற்ற கலைஞர்களையும் நிரந்தரமாக நியமித்து அவர்களுக்கான வாழ்வாதாரங்களையும் வழிகாட்டு நெறிமுறைகளையும் உருவாக்கிக் கொடுத்த கல்வெட்டுச் செய்திகளைப் பலரும் குறிப்பிடுவர். அதே நேரத்தில் "முதலாம் இராசராசனும், முதலாம் இராஜேந்திரனும்

**புனித பெண்களாகக் கட்டமைக்கப்பட்ட இவர்களுடைய வாழ்வு உண்மையில் அரசர்களுக்கும் கோவில்களையும் உள்ளூர் நிர்வாகத்தையும் செய்த "சபை" "நாட்டார்" "நகரத்தார்" போன்ற அதிகாரம் மிக்கவர்களுக்கும் காமகிழத்தியர்களாகவும் வைப்பாட்டிகளாகவும் மாறிவிட்டதை நாம் காண்கின்றோம். இதனுடைய மற்றொரு விளைவு தமிழ்நாட்டு அரசியலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்ட காலங்களில் எல்லாம் இவர்களுடைய வாழ்வு சிதைக்கப்பட்டதையும் நாம் காண்கின்றோம்.**

தேவதாசிகளில் சிலரைத் தங்களின் காமக்கிழத்தியராக்கிக் கொண்டனர்" (தமிழகத்தில் தேவதாசிகள். பக்.98). பின்வந்த காலங்களில் ஏழிசை வல்லபி என்ற தேவதாசியும் தியாகவல்லி என்ற தேவதாசியும் முதலாம் குலோத்துங்கனின் துணைவியராயினர். திருவாணைக்காவல் கோவிலின் கணிகையான சொக்கத்தாண்டாள், ஜடாவர்மன் சுந்தர பாண்டியனின் மனைவியும்பட்டதரசியுமானாள் (தமிழகத்தில் தேவதாசிகள். பக்.98).

தமிழின் முதல் உலா நூலான "திருக்கைலாயஞான உலா"வில் "சேரமான் பெருமாள் நாயனார்" சிவபெருமானான இறைவனுடைய வீதி உலாவில் நடனமாடும் பெண்களைக் குறிப்பிடுவதை ஒட்டக்கூத்தர், 1. விக்கரசோழனுலா 2. குலோத்துங்கசோழனுலா 3. இராசராசசோழனுலா போன்ற உலாக்களில் ஏழு பருவங்களைச் சேர்ந்த பெண்களை அரசர்களின் உலாவில் நடனமாடி வருவதாகக் கவிதைப் புனைந்துள்ளார்.

புனித பெண்களாகக் கட்டமைக்கப்பட்ட இவர்களுடைய வாழ்வு உண்மையில் அரசர்களுக்கும் கோவில்களையும் உள்ளூர் நிர்வாகத்தையும் செய்த "சபை" "நாட்டார்" "நகரத்தார்" போன்ற அதிகாரம் மிக்கவர்களுக்கும் காமகிழத்தியர்களாகவும் வைப்பாட்டிகளாகவும் மாறிவிட்டதை நாம் காண்கின்றோம். இதனுடைய மற்றொரு விளைவு தமிழ்நாட்டு அரசியலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்ட காலங்களில் எல்லாம் இவர்களுடைய வாழ்வு சிதைக்கப்பட்டதையும் நாம் காண்கின்றோம். கி.பி.1310 லிருந்து கி.பி.1386 காலக்கட்டங்களில் இஸ்லாமியப் படையெடுப்புகளால் தமிழ்நாட்டு அரசர்கள் நிலைகுலைந்ததாலும் கோவில் நிர்வாகம் சிதைக்கப்பட்டதாலும் கோவில்களையும் இத்தகைய தலைவர்களையும் அண்டி வாழ்ந்த தேவதாசிகளின் வாழ்க்கை நிலைகுலைந்தது. இந்த நிலையிலிருந்து இவர்களுடைய வாழ்வு மாற்றமடைந்ததை அடுத்து வந்த நாயக்கர்கால ஆட்சியில் காண்கின்றோம். அதே நேரத்தில் தேவதாசிகள், தேவரடியார் என்று அழைக்கப்பட்ட புனிதப் பெயர்கள் "தேவடியாள்" என்று மாற்றம் பெற்றதையும் நாம் காண்கின்றோம்.

இந்தப் பெண்களைப் பற்றி பேசும்போது பொதுவாக எல்லோர் மனதிலும் பருவப் பெண்கள்தான் நினைவுக்கு வருவர். உண்மையில் பச்சிளம் குழந்தைகளையே தேவதாசிகளாக்குவதற்கு விற்பனை செய்யப்பட்ட வரலாற்றுப் பதிவுகளை நாம் மராட்டியர்கால ஆவணங்களில் காண்கின்றோம். 3 வயது குழந்தையிலிருந்து 12 வயது சிறுமிகள் வரை விற்பனை செய்யப்பட்ட பதிவுகளை மோடி ஆவணங்கள் குறிப்பிடுகின்றன2. இந்தக் குழந்தைகளை கோவிலுக்கு நேர்ந்துவிடும்போது செய்யும் சடங்குகளைப் பற்றிய குறிப்புகள் நம்முடைய இரத்தத்தை உறைய வைப்பனவாக உள்ளன3. இதனைப் பற்றி "மேயோ" என்ற அமெரிக்கப் பெண் எழுத்தாளர் படிப்பவர் மனம் பதறும்படி எழுதிய நூல் தான் "கடவுளின் அடிமைகள்".

தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகளின் வரலாற்றில் இவர்களுடைய பங்கு பெருமையானதாக இருந்தாலும் இவர்களுடைய வாழ்க்கைத் துயரங்களின் தொகுப்பாகவே இருந்துள்ளது. இதன் விளைவாக பெண்கள் விழிப்புணர்வு பெறத் தொடங்கிய இருபதாம் நூற்றாண்டில் இந்த அமைப்பை எதிர்த்து பல கிளர்ச்சிகள் டாக்டர் முத்துசாமி ரெட்டி போன்றவர்களால் நிகழ்த்தப்பட்டன. இதனால் அரசு தேவதாசி ஒழிப்புச் சட்டம் கொண்டுவருவதற்கு நிர்பந்தப்படுத்தப்பட்டது. அதனால் தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றவும்பட்டது4

**அடிக்குறிப்புகள்**

- வம்பவேந்தர் என்றால் புதிதாக வேந்தர்கள் ஆனவர்கள் என்று பொருள். அதாவது புது பணக்காரன் என்பது போல.
- ATTACHMENT (தஞ்சை மராட்டிய அரசியலும் வாழ்க்கையும் பக்.322)
- பெண்களைத் தேவதாசிகளாக்கும் நடைமுறையில் ஒன்று, அந்தப் பெண் கல்துளையுள் செருகப்பட்டிருந்த கூர்முனையுள்ள குச்சியைக் கொண்டு தனது கன்னித்திரையைத் தானே கிழித்துக் கொள்வாள்; கசியும் குருதியை அந்தக் கற்களின் மேல் சிறிய துளிகளாகத் தெளித்து விடுவாள்; அதோடு அவர்களின் அந்த விக்கிரக ஆராதனை நிறைவடையும். மேற்கண்ட அவரது கூற்று முழுவதையும் நுணுகி ஆராய்ந்தால் கடவுளான சிவனின் பிரதிநிதிக்கு, பூப்பெய்துவதற்கு முன்னரே அப்பெண் திருமணம் செய்து வைக்கப்பட்டிருக்கிறாள் என்று நமக்குச் சொல்லப்படுகிறது. இது வெளிப்படையாகவே லிங்க (ஆண்குறி) வழிபாட்டுடன் தொடர்புடையதாக இருந்திருக்கிறது. கடவுளான சிவனுக்கு இத்தகைய பெண்களைத் திருமணம் செய்து வைப்பதற்குச் சமமான ஒரு சடங்காக இது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கக் கூடும். (தமிழகத்தில் தேவதாசிகள். பக்.230, 231)
- மைசூரு அரசாங்கம் தேவதாசிகளின் அமைப்பை ஒழிக்க முதன்முதலில் ஆணையை வெளியிட்டது. அதன்படி, கோவில்பணி செய்வதற்காக வரிவிலக்கி, தேவதாசிகளுக்குத் தானமாக அளிக்கப்பட்டு வந்த, தேவதாசிகளின் இனாம் என்ற வகை நிலங்கள் ஒழிக்கப்பட்டு அந்நிலங்கள், தேவதாசிகளுடைய, நிரந்தர சொந்த சொத்தாக மாற்றப்பட்டு, கோவில்களில் பணிசெய்யவும் தடைவிதிக்கப்பட்டது............ 1910 முதல் 1920 வரையில் சட்டமன்றத்தில் விவாதங்கள் நடைபெற்றன (சுருக்கமான தென் இந்திய வரலாறு – நொபோரு கராஷிமா, பக்.387).

●

*கட்டுரையாளர்: எழுத்தாளர்*

கவிதை | வெ.தமிழ்க்கனல்

# மதுவும் மது சார்ந்த இடமும்

மூன்று பக்கம் மது நீராலும்
ஒரு பக்கம் காலி மதுபாட்டில்களாலும்
சூழப்பட்ட போதைத் தீபகற்பத்தின்
இரண்டாவது டேபிளில்
இறப்பிற்குப் பின்
லட்சத்தை வரவழைத்துத் தருவது
நாட்டின் நல்ல சாராயமா
காட்டின் கள்ளச் சாராயமா
என்ற தொடர் விவாதம் நீள்கிறது

குவாட்டரையும் வாட்டரையும்
சரிசமமாகக் கலந்து
மீண்டும் கலப்புப் பொருளாதாரத்தை
செழிக்கச் செய்கின்றன
மாநாட்டிற்குச் செல்லும் ஒரு
கரைவேட்டிக் கும்பல்

பதினென் சித்தர்களுக்கு
எளிதில் கைவரப்பெறாத ஆசனத்தை
சில மில்லி போதையில்
சுலபமாக வரவழைத்து
அற்புதம் நிகழ்த்துகிறார்
ஒரு மதுப் பிரியர்



காதலியால் நிராகரிக்கப்பட்ட
இளைஞனொருவன்
மெத்தபோதையில் எடுத்த
வாந்தியின்மேல் தங்களது
பசியைப் போக்கிக்கொள்கின்றன
மதுக்கடை ஈக்கள்

பாட்டிலுக்கு கூடுதலாய்
வசூலிக்கப்பட்ட
ரூபாய் நோட்டுக்களை
எண்ணும் காசாளரின்
முகத்தில் தீபச் சுடரொளி

அதீத போதையில் நடக்க வழியற்று
மதுக்கடை வாசலில் சரிந்து கிடக்கும்
முதியவரொருவரின்
நிலைகுத்திய விழிகளில்
தலைகீழ் பிம்பமாய் இன்றைய
போதையில்லாத் தமிழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ஞா. ஸ்டீபன்

# குடிப்பெயர்ச்சியும் சாதிய நெகிழ்வுகளும்

மனிதன் நிலைக்குடியாகப் படிநிலை வளர்ச்சியடையும் முன்பு வரையிலும் உணவு, பாதுகாப்பு ஆகியவற்றின் காரணமாக தனது வாழிடத்தை நிரந்தரமாகக் கொண்டிருக்கவில்லை. வாழ்வதற்குத் தகுதியான இடத்தைத் தேடிக் குடிபெயர்ந்து செல்வது மனிதனின் இயல்பாக இருந்தது. இடமாற்று வேளாண்மை, கால்நடைச் சமூகம், வேட்டைச் சமூகம் போன்றவை இதற்குச் சான்றுகளாய் அமைகின்றன. இனக்குழுச் சமுதாயம், பழங்குடிச் சமுதாய அமைப்புகளில் குடிப்பெயர்ச்சி என்பது இயல்பான நடைமுறையாகவே அமைந்தது. இடமாற்று வேளாண்மை நிலைத்த வேளாண்மையாகப் படிநிலை வளர்ச்சியடைந்ததும் குடிப்பெயர்ச்சி மந்த நிலைக்கு வந்தது. சமுதாயமுறைகளின் படிநிலைவளர்ச்சியில் அதிகார அமைப்புகள் வளர்ச்சியடையத் தொடங்கியதும் வாழிட எல்கைள், அதிகார எல்லைகள் போன்றவை படிப்படியாக நிலத்தை மையமாகக் கொண்டு வரையறுக்கப்பட்டன. ஊர், குடி, நாடு போன்ற நிலம் சார்ந்த கருத்தாக்கங்கள் நிலைத்த வாழிடங்களைக் குறிக்கும் அடையாளங்களாயின. நிலைத்த வாழிடம் என்பது குடிப்பெயர்ச்சியின் தேவையை முற்றிலும் இல்லாமல் ஆக்கிவிட்டது என்று கூறிவிட முடியாது. அடிப்படைத் தேவைகள், பாதுகாப்பு, ஆக்கிரமிப்பு ஆகியவற்றின் காரணமாக நிலைத்த வாழிடத்தைத் துறந்து குடிபெயர்ந்து செல்லும் வழக்கம் தற்காலத்திலும் வழக்கிலுள்ளது. ஒரு குழு அல்லது ஒரு குழுவின் ஒரு பகுதியினர் தங்களது நிலைத்த வாழிடத்தை முற்றிலுமாகத் துறந்து புதியதொரு வாழிடத்தில் குடியமர்வதே குடிப்பெயர்ச்சி என அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்தியச் சூழலில் குறிப்பாகத் தமிழகச் சூழலில் சுதந்திரத்துக்கு முன்பு வரையிலும் குடிப்பெயர்ச்சி அடிக்கடி நிகழ்வதாக இருந்துள்ளது. நிலைத்த வாழிடத்தைத் துறந்து புதிய வாழிடத்திற்குச் செல்லும் போது அந்தக்குழுவின் சமூக வாழ்க்கையில் மாற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்புகள் ஏராளம் உண்டு. குடிப்பெயர்ச்சியின் காரணமாக அகமணக்குழுக்கள் புறமணக்குழுக்களாக மாறுவதற்குச் சமூகச் சூழல்கள் எவ்வாறு கட்டாயப்படுத்துகின்றன? புறமணக் குழுக்களாக மாறியபோதும் சாதி என்ற அமைப்பு எவ்வாறு காக்கப்படுகின்றது? என்பதைச் சில சான்றுகளின் வழி விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழகத்திலுள்ள பல சாதிக்குழுக்களும் பழங்குடிகளும் பல்வேறு காரணங்களால் குடிப்பெயர்ச்சி செய்துள்ளன என்பதை எட்கர் தர்ஸ்டனின் குலங்களும் குடிகளும் என்னும் நூல் பதிவு செய்துள்ளது. இதனைப் போன்ற பதிவுகள் ஆங்கிலேய அதிகாரிகளால் தயாரிக்கப்பெற்ற அரசு கையேடுகளிலும் பதிவாகியுள்ளன. தாதுவருடப் பஞ்சம் போன்ற கொடிய பஞ்சங்களினாலும் கொள்ளைநோய் காரணமாகவும் குடிப்பெயர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன என்பதை மேற்கண்ட ஆவணங்களின் வழி அறியலாம். காணிக்காரர்கள், இருளர், முதுவன், மலையாளி போன்ற பழங்குடிகள் நிலப்பகுதிகளிலிருந்து மலைப்பகுதிகளுக்குக் குடிப்பெயர்ச்சி செய்தவர்கள் என்ற கருத்தையும் இவ்வாவணங்கள் முன்வைக்கின்றன. இவ்வாறு நிகழ்ந்திருக்குமா என்பதை நிறுவதற்கு நம்மிடம் போதுமான இனவரைவியல் ஆவணங்களோ ஆய்வுகளோ இல்லை. குடிப்பெயர்ச்சி குறித்த வாய்மொழிக்கதைகள் நிலப்பகுதி சாதியக் குழுக்களிடமும் பழங்குடிகளிடமும் வழக்கிலுள்ளன. இக்கதைகளை வரலாறாக ஏற்றுக் கொள்வதிலும் சிக்கல்கள் உள்ளன (செல்லபெருமாள் 2004:34). குடிப்பெயர்ச்சியின் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமாக அமைந்தாலும் பெரும்பான்மையான ஆய்வுகள் குடிப்பெயர்ச்சியை மறுக்கவில்லை. "பல நூற்றாண்டுகளாகச் சமவெளியில் வாழ்ந்த குடியானவச் சமூகங்கள் தங்களது வேளாண்மையைத் தொலை தூரங்களிலும் விரிவாக்க முனைந்த போது அங்கிருந்த திணைக்குடிகள் காடு, மலைப் பகுதிகளுக்குத் துரத்தப்பட்டிருக்கக் கூடும். இது போன்ற இடப்பெயர்வுகள் ஒரிஸ்ஸாவில் நிகழ்ந்துள்ளதாக ஃப்ஜி, பெய்லி என்பாரும் தென்னிந்தியாவில் நிகழ்ந்துள்ளதாகப் பர்ட்டன் ஸ்டெயின் போன்றோரும் நிறுவியுள்ளனர்"(மேலது:3.5). தர்ஸ்டன் மற்றும் ஆங்கிலேய அதிகாரிகள் குடிப்பெயர்ச்சி குறித்து முன்வைத்த கருத்துக்கள் ஏற்கத்தக்கன என்பதையே இவ்வாய்வுகள் சுட்டுகின்றன. மலைப் பகுதிகளில் காடுகளை அழித்து தேயிலை, ரப்பர், வாசனைப் பயிர்களுக்காக உருவாக்கப்பட்ட எஸ்டேட்டுகள், அணைக்கட்டுகள் அமைத்தல் போன்றவற்றிற்காகவும் திணைக்குடிகள் அப்புறப்படுத்தப்பட்டன. குடிப்பெயர்ச்சிகள் இயல்பாகவும் கட்டாயத்தின் பேரிலும் நிகழும் என்பதையே இக்குறிப்புகள் உணர்த்துகின்றன.

சங்ககாலத்திலிருந்து ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு முன்னர் வரையிலும் ஏராளமான குடிபெயர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன என்பதைக் கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இந்தியச் சாதியக் குழுக்கள் வடக்கிலிருந்து தெற்கிற்கும் தெற்கிலிருந்து வடக்கிற்கும் அண்டை நாடுகளான இலங்கை, பர்மா, மொரிசியஸ், மலேசியா, சிங்கப்பூர், பிஜித் தீவுகளுக்கும் பல்வேறு காரணங்களால் குடிபெயர்ந்துள்ளனர். வாய்மொழிக்கதைகள், கதைப்பாடல்கள் போன்ற வழக்காற்று வடிவங்களில் குடிப்பெயர்ச்சி குறித்து ஏராளமானச் செய்திகள் பதிவாகியுள்ளன. அண்மைக்கால எழுத்திலக்கியத்திலும் குடிப்பெயர்ச்சி குறிப்பிடத்தக்க கதைக்கருவாக அமைந்துள்ளது. கி.ராஜநாராயணனின் கோபல்ல கிராமம், சு.வேணுகோபாலின் நுண்வெளிக் கிரணங்கள், நீல.பத்மநாபனின் தலைமுறைகள், மதனின் வந்தார்கள் வென்றார்கள் போன்ற புதினங்கள் குடிப்பெயர்சியைக் கதைக் கருவாகக் கொண்டு புனையப்பட்டவை என்பது நம் கவனத்திற்குரியது. வரலாறு, இலக்கியங்கள், வழக்காறுகள் ஆகியவற்றில் பதிவாகியுள்ள குடிப்பெயர்ச்சிகளைத் தொகுத்து நோக்கும் போது சில குறிப்பிட்ட காரணங்களின் விளைவுகளாகவே குடிப்பெயர்சிகள் நிகழ்ந்திருப்பதை உணரலாம். இயற்கைச்சீற்றம், குடும்பச் சண்டை, மகட்கொடை மறுத்தல், போர், வரிக்கொடுமை, சாதி அல்லது சமய முரண்பாடுகள், பொருளீட்டல் போன்ற காரணங்களின் விளைவுகளே குடிப்பெயர்ச்சியாக அமைந்துள்ளன. மன்னர்களின் காலங்களில் கைவினைக் கலைஞர்கள் வெவ்வேறு பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப்பட்டுள்ளனர். கொல்லர், கல் தச்சர், கன்னான், நெசவாளர், சாயம் பூசுவோர், தோல் பதனிடுவோர் போன்றோர் இவ்வகையில் அடங்குவர்.

கைவினைக்கலைஞர்கள் மீது சுமத்தப்பட்ட வரிக் கொடுமை காரணமாகக் குடிபெயர்ந்த வரலாறுகளும் உள்ளன. "நாயக்க மன்னர்கள் இடங்கைப் பிரிவினர் மீது காணிக்கை வரி என்ற ஓர் வரியை விதித்தனர். இந்த வரியானது அவர்கள் வசூலித்த பல்வேறு துணை வரிகளில் முதன்மை வரியாகக் கொள்ளப்பட்டது. கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் சாதியினருக்கு, மேற்கண்ட வரியானது நிலையான பெரும் சுமையாக இருந்தது. கல்வெட்டுக்களில் காணிக்கை வரிக்கு எதிராகப் பல கண்டனங்கள் பதியப்பட்டுள்ளன. ஏனெனில் பலவேளைகளில் கைவினைஞர்கள் தங்கள் சொத்துக்களை விற்று இந்த வரியைச் செலுத்த வேண்டியிருந்தது. கட்டாயம் என்ற மற்றொரு வரியும் பெரும் சுமையாக இருந்தது. கைவினைஞர்களும் கைத்தொழில் செய்வோரும் கட்டாய வரியை எதிர்த்து இடம்பெயர்ந்தனர்" (எஸ்.ஜெயசீல ஸ்டீபன் 2018: 72-73). கிராமப்புறக் கைவினைக் கலைஞர்களின் குடிப்பெயர்ச்சி உடனடியாகச் சமூக வாழ்வியலைப் பாதிப்படையச் செய்யும் என்பதால் இவர்களது குடிப்பெயரச்சிக்குத் தடை விதித்த நிகழ்வுகளும் உள்ளன. "கி.பி.1070 முதல்1118 வரை ஆண்ட குலோத்துங்கச் சோழன் கி.பி.1113 இல் வெளியட்ட ஆணை ஒன்று புதுச்சேரிக்கு அருகில் திருபுவனை என்னுமிடத்தில் கிடைக்கின்றது. அதன்படி ஊர்ச்சபையானது, நகர்ப்புறக் கைவினைஞர்களுக்காகப் பாதுகாக்கப்பட்ட வாழ்விடங்களைக் கொல்லர்கள் ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஆணையிடுகிறது. மேலும் கொல்லர்கள் தாம் வாழும் சிற்றூர்களை விட்டு வேறு ஊர்களுக்கோ நகரங்களுக்கோ செல்லுதல் கூடாது. அவ்வாறு சென்றால் அது ஓர் குற்றமாகக் கருதப்படும். இச்சட்டத்தை மீறுபவர்கள் எதிரிகளாகக்; கருதப்படுவர். ஏனெனில் அவர்கள் கிராமப்புறங்களில் செய்ய வேண்டிய வேலைகளைத் தவிர்ப்பவர்களாகிறார்கள். அவர்கள் தாம் ஆற்றும் பணிகளுக்காக ஊர்ச்சபையிலிருந்து ஆண்டுதோறும் இறையிலி என்னும் மானியத்தைப் பெறுகிறார்கள். அதே வேளையில் தம் கடமையிலிருந்து விலகி அவ்வப்போது கிராமத்தை விட்டு வெளியேறி தினக் கூலிகளாக வேறு ஊர்களில் வேலை செய்கிறார்கள். இச்செயலானது உள்ளூர் வேலைகள் முடிக்கப்படாமல் பாதிப்பை ஏற்படுத்துகின்றது" (எஸ்.ஜெயசீல ஸ்டீபன் 2018:81-82). கைவினைக் கலைஞர்களின் குடிபெயர்ச்சி அரசுக்கு வரி இழப்பையும் உற்பத்தியில் மந்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே இவர்களது குடிபெயர்ச்சி தடை செய்யப்பட்டுள்ளது.

வரிக் கொடுமை, சாதிய அடக்குமுறை, தீண்டாமை, வறுமை போன்றவற்றின் காரணமாக இசுலாம், கிறித்தவத்துக்கு அடித்தட்டு மக்கள் மதம்மாறிய நிகழ்வுகளை வரலாற்றின் நெடுகே காணமுடியும். இவ்வாறு மதம் மாறியதால் ஏற்படும் பதற்றத்தின் காரணமாகவும் குடிப்பெயர்ச்சிகள் நிகழ்வதுண்டு. "தரங்கம்பாடிப் பகுதியல் பெரும்பாலான பள்ளர்கள் வேளாண் தொழிலே செய்து வந்தனர். 1787 இல் தரங்கம்பாடியைச் சுற்றியுள்ள அமைந்த பள்ளர் கிராமங்களில் சமூகப் பதற்றம் நிலவியது. அதன் விளைவாகக் கிறித்தவப் பள்ளர்கள், ஆகஸ்ட் முதல் டிசம்பர் மாதக் காலக்கட்டத்தில், அமைதியான வாழ்வை வேண்டி தங்களது கிராமங்களை விட்டு வெளியேறி, தஞ்சாவூர் மன்னரின் ஆளுகைக்குட்பட்டப் பகுதிகளுக்குக் குடியேறினர் (எஸ்.ஜெயசீல ஸ்டீபன் 2018:49). கிராமம் முழுமையும் அல்லது ஒரு பகுதியினர் மதம் மாறும் போது அவர்களது சமூக வாழ்வியல் உறவுகளில் முரண்பாடுகள் தோன்றுகின்றன. அவர்களைப் பெரும்பான்மையினர் துன்புறுத்துவது இயல்பு. இதன் காரணமாகக் குடிப்பெயர்ச்சிகள் நிகழ்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் கிறித்தவத்தை; தழுவியவியவர்களுக்குத் தங்களது சொந்த கிராமங்களில் இவை போன்ற நெருக்கடிகள் தோன்றிய போது மதம்மாறியக் கிறத்தவர்களுக்காக புதிய கிராமங்கள் உருவாக்கப்பட்டன.

பங்காளிச் சண்டையின் காரணமாகக் குடிபெயர்ந்தது தொடர்பான மூன்று கதைகளைப் பா.சிங்காரவேலன் பதிவு செய்துள்ளார். "திருச்சிக்கு அருகில் வாழ்ந்த குலாலர்கள் காவிரி ஆற்றில் வந்த பெட்டியில் கருப்பணசாமியின் உருவமும், உடையும் ஆயுதமும் இருந்தன. அதனை எடுத்து வைத்து வழிபாடு நடத்திய போது முதல் மரியாதையை யாருக்கு அளிப்பது என்ற பிரச்சனை எழுந்தது. அவ்வவேளையில் தம்பி சாமியின் கரகத்தைத் தூக்கிக் கொண்டு திண்டுக்கல் வழியாக தேனி மாவட்டம் தெ.கள்ளிப்பெட்டியில் குடியேறினர்.

ராஜபாளையத்தில் வாழ்ந்த பறையர் இனமக்கள் நாரை பறக்காத 48 மடையின் வழி பெட்டியில் வந்த பட்டாளம்மனை வழிபட்டு வந்தனர். காலப்போக்கில் பஞ்சம் ஏற்பட, சகோதரர்கள் தெய்வத்தினைத் தூக்கிக் கொண்டு வந்தனர். கருத்து வேறுபாடு ஏற்பட, தெய்வத்தின் பொருட்களை இரண்டாகப் பிரித்துக் கொண்டு ஒருவர் வேறு திசைக்குச் சென்று விட்;டதாகவும், தம்பி பெரியகுளத்தில் குடியேறியதாகவும் கதை கூறுகின்றனர்.

பழனிக்கு அருகில் நெய்க்காரப்பட்டியில் வாழ்ந்த போது, ஆற்றில் பெட்டியில் வந்த இராசாத்தியம்மன் என்ற பெண் தெய்வத்தை எடுத்து வைத்து வழிபட்டனர். பங்காளிகளுக்குள் மனக்கசப்பு ஏற்பட, அதில் ஒருவர் கோயில் பிடிமண்ணை எடுத்துக் கொண்டு தேனி மாவட்டம் குள்ளப்புரத்தில் குடியேறினர்" (2006: 24). பங்காளிச் சண்டையின் காரணமாக் குடிபெயர்தலில் ஒரு குடும்ப உறவினர்களின் ஒரு பகுதியினர் தம் குடும்பங்களோடு வேறுபகுதிக்குக் குடிபெயர்ந்து செல்கின்றனர். சில நேரங்களில் ஒரு குடும்பம் மட்டும் குடிபெயர்வதும் உண்டு. தாம் குடியமரும் பகுதிகளிலும் தம் சாதியினர் வாழ்வதை அடையாளங்கண்டே பெரும்பாலும் இக்குடிப்பெயர்வுகள் நிகழ்கின்றன. மண உறவு, பிழைப்புக்கான வாழ்வாதாரம் போன்றவற்றைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தில் கொண்டே இக்குடிப்பெயர்வுகள் அமைவதைக் காணலாம்.

புயல், பஞ்சம், நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர்களின் காரணமாக இந்தியாவில் வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் குடிபெயர்ச்சிகள் நீண்டகாலமாகவே நிகழ்ந்துள்ளன என்பதை அரசு ஆவணங்களின் வழி அறியலாம். தமிழகத்தில் வாழும் தெலுங்கர், கன்னடர், சௌராஷ்டிரர், மராத்தியர், துளுவர் போன்றோர் வெவ்வேறு காலக்கட்டங்களில் இவ்வாறு குடிபெயர்ந்தவராவர். பெரும்பாலும் இவர்களது குடிபெயர்வுகள் பெருந்திரளாகவே இருந்தன. "ஆந்திராவில் வாழ்ந்த கவுரா நாயுடு சமூகத்தைச் சார்ந்தவர்கள் மழையின்மையால் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக மதுரையில் ஆட்சி செய்த திருமலை நாயக்கரைத் தஞ்சமடைந்தனர். அவ்வேளையில் திருமலை மன்னருக்குக் கட்டுப்படாத மன்னரைப் பிடிப்பவர்களுக்குச் சன்மானம் வழங்கப்படும் என்ற செய்தியைக் கேள்வியுற்று சகோரர்கள் இருவர் முயன்று மன்னனைப் பிடித்து நாயக்கரிடம் ஒப்படைக்கின்றனர். இவர்களுடையத் திறனைப் பாராட்டி மன்னர் வைரச் சங்கிலியைப் பரிசாகத் தருகின்றார். அதனைச் சகோதரர் இருவரும் நிராகரித்து விவசாயம் செய்து வாழ்க்கை நடத்த நிலத்தினைக் கேட்கின்றனர். உடனே மன்னர் மானியமாக பெரியகுளம் பகுதியை வழங்குகின்றார். இவர்கள் குடியேறி திருமலை நாயக்கருக்குக் கட்டுப்பட்ட பெரியகுளம் ஜமீனை உருவாக்கினர். இப்படி தெலுங்கு, கன்னடம் மொழி பேசுவோர் தஞ்சமடைந்து திருமலை மன்னர் உள்ளிட்டோர் வழங்கிய பகுதியில் வாழ்ந்தனர். அவ்வேளையில் பிற மாநிலங்களிலிருந்து வருவோர் தம் மொழி பேசுவோர் வாழும் பகுதியில் குடியேறினர் என்பதை கதைகளின் வழி அறியமுடிகிறது" (பா.சிங்காரவேலன் 2006: 46-47).

குமரிமாவட்டத்தில் வாழும் கிருக்ஷணவகைக்காரர் என்னும் சாதியக் குழுவினர் கிருக்ஷ்ணன் பிறந்த ஊராகிய ஆய்பாடியிலிருந்து காஞ்சிபுரத்திற்கும் பின்னர் திருவிதாங்கூருக்கும் குடிபெயர்ந்தவர்கள் என்று நாகமையா (1960: 370) குறிப்பிடுகின்றார். இவர்களுள் ஒரு பிரிவினர் நாயர்களைப் போன்று மருமக்கவழித்தாய முறையைப் பின்பற்றி நாயர்களோடு மணஉறவு வைத்துக் கொண்டதாகச் சொல்லப்படுகின்றது. அவ்வாறாயின் இவர்களது குடிப்பெயர்ச்சியிலும் மணஉறவு வட்டம் குறுகியதாகவே இருந்திருக்கலாம் எனக் கருதமுடியும். இது தொடர்பான சில வாய்மொழிக் கதைகளும் வழக்கில் உள்ளன (ஞா.ஸ்டிபன் 2019: 74-75). இதனைப் போன்ற பல சான்றுகளை பக்தவத்சல பாரதி (2005), தே.லூர்து (2004), ஆ. செல்லபெருமாள் (2004), ஆ.சிவசுப்பிரமணியன் (1995) ஆகியவர்கள் தந்துள்ளனர்.

தமிழகம் மற்றும் கேரளத்தின் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் வாழும் காணிக்காரர்கள் நிலப்பகுதிகளிலிருந்து மலைப்பகுதிகளுக்குத் துரத்தப்பட்டவர்கள் என்பது தர்ஸ்டனின் கருத்து. ஆனால் காணிக்காரர்கள் தங்களை மலைப்பகுதிக்குச் சொந்தமானவர்கள் என்றும் தங்களது பூர்வீகம் களக்காடு என்றும் கூறுகின்றனர். மலைப்பகுதிகளிலும் இவர்கள் பல்வேறு பகுதிகளுக்குக் குடிபெயர்ந்துள்ளனர். ஆங்கிலேயர்கள் அமைத்த எஸ்டேட்டுகள், ரப்பர் தோட்டங்கள், அரசின் வனக்கொள்கை அகியவற்றின் காரணமாக இவர்கள் தங்களது குடியிருப்புகளைப் பலமுறை வேறு இடங்களுக்கு மாற்றியுள்ளனர். பாபநாசம் பகுதியிலுள்ள இஞ்சிக்குழி, வாழைத்தோட்டம், பாலாறு போன்ற தொன்மையான குடியிருப்புப் பகுதிகளில் வாழ்ந்த காணிக்காரர்கள் மேற்கண்ட காரணங்களால் இடம்பெயர்ந்தனர். (ஞா.ஸ்டிபன் 1997: 8-12). இவர்களிடம் நிகழ்ந்த குடிப்பெயர்ச்சி பழங்குடிச் சமுதாய அமைப்பில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. குடிப்பெயர்ச்சி தங்களது புழங்குவெளிக்குள்ளேயே நிகழ்ந்தமையாலும் குடிப்பெயர்ச்சியால் மணஉறவு வட்டம் பாதிப்படையாமையாலும் பழங்குடிச் சமுதாய அமைப்பு சிதைவடையாமல் காக்கப்பட்டது எனலாம். ஆனால் நிலப்பகுதி சாதிகளிடம் நிகழ்ந்த குடிப்பெயர்ச்சி இவ்வாறாக இயல்பாக அமையவில்லை என்பதற்கு ஏராளமானச் சான்றுகள் உள்ளன.

நிலப்பகுதிச் சாதிகளிடம் மகட்கொடை மறுத்தல் காரணமாக நிகழ்ந்த குடிப்பெயர்ச்சிகள் பல்வேறு சிக்கல்களை உருவாக்கியுள்ளன எனக் கதைகள் குறிப்பிடுகின்றன. மகட்கொடை மறுத்தலின் காரணமாக ஒரு குடும்பம் மட்டும் குடிபெயரும் போது பாதிப்பு அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தோடு நின்று விடுகின்றது. மணமுடிப்பதற்காக கேட்கப்பட்ட பெண்ணைக் கொன்றுவிட்டு அக்குடும்பம் குடிபெயர்வது தொடர்பானப் பல கதைகள் வழக்கில் உள்ளன. வெங்கல ராஜன் கதை இதற்குத் தக்கச் சான்று. பெரும்பாலும் அவ்வாறு கொல்லப்படும் பெண் குலதெய்வமாக வழிபடப்படுவதுண்டு. ஜமீன் அல்லது மன்னர்கள் தங்கள் குலப் பெண்ணை மணமுடிக்கக் கேட்டதாகவும் சாதித் தூய்மையைக் காத்தல் வேண்டி அதற்கு மறுத்து குடிபெயர்ந்ததாக பல சாதியினரிடம் கதைகள் வழக்கில் உள்ளன. அவ்வாறு அவர்கள் செல்லும் போது எதிரிகள் துரத்த ஆறு ஒன்று குறுக்கிட அதீத நிகழ்வு ஒன்றின் மூலம் அவர்கள் தப்பிப் பிழைத்ததாக அக்கதைகள் அமையும். சில கதைகளில் அவர்கள் இரவு தூங்கிக் கொண்டிருக்கும் போது எதிரிகள் பின்தொடர்வதை ஏதேனும் ஒரு விலங்கின் அல்லது பறவையின் அலறல் மூலம் அறிந்து தப்பிப்பர். தாங்கள் தப்பிப்பதற்குக் காரணமாக இருந்த பறவை அல்லது அந்த விலங்கை அவர்கள் உண்பதில்லை. புனிதமாகக் கருதுவர். அதுவே அவர்களது குலக்குறிச் சின்னமாகவும் அமைவதுண்டு. இவ்வாறு குடிபெயரும் போது பெண்கள் கொல்லப்படுவதும் வழிப் பயணத்தில் இறந்து போவதும் உண்டு. மிகுதியான ஆண்களோடு குடிபெயரும் இத்தகையக் குழுக்கள் மணஉறவுகளை ஏற்படுத்துவதில் பெரும் சவால்களைச் சந்தித்துள்ளனர். தமிழகத்தில் பரவலாகக் காணப்படும் செட்டியார்கள் இதற்குத் தக்க சான்றாக அமைவர்.

செட்டியார் என்னும் பெயர் தனித்த சாதிப் பெயராக மட்டுமல்லாமல் பட்டப் பெயராகவும் தமிழகத்தில் வழங்கப்படுகின்றது. செட்டியார் என்னும் சாதிப்பெயர் பல உட்சாதிக்குழுக்களின் பெயர்களை உள்ளடக்கியப் பொதுப்பெயராகவும் வழங்கப்படுகின்றது. குமரி மாவட்டத்தில் செட்டி, வாணியன் என அழைக்கப்படும் இரு உட்சாதிகள் உள்ளனர். இவர்கள் குமரிமாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு தொழில்களைச் செய்பவர்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் செட்டியார் என்னும் பொதுப் பெயரில் அழைக்கப்பெற்றாலும், இவர்களுக்குள் கொண்டு கொடுத்தல் மணவுறவு இல்லாத அகமணக் குழுவினராக உள்ளனர். இவர்கள் தங்களது தாயகம் காவிரிப்பூம்பட்டினம் என்றும், ஒரே குலவழித் தோன்றல்கள் என்றும் புராணக்கதைகள், வாய்மொழிக் கதைகளின் மூலம் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்விரு குழுவினரும் ஒரு பொதுவான மூதாதையரிடமிருந்து வந்தவர்கள் எனக் கூறுகின்றனர். காவிரிப்பூம்பட்டினத்தைத் தாயமாகக் கொண்ட நாட்டுக்கோட்டைச் செட்டி, வாணியன், செட்டியார் ஆகிய மூன்று உட்சாதிகளும் ஒரே மாதிரியான தோற்றக் கதைகளைக் கொண்டுள்ளனர். இவர்கள் தொழில் வேறுபாடுகளின் காரணமாகவும், வெவ்வேறு இடங்களில் குடிபெயர்ந்தமையாலும் வேறுபட்ட சமூக மதிப்புடைய தனித்தனி அகமண உட்சாதிகளாக அடையாளப்படுத்தப் பெற்றனர்.

காவிரிப்பூம்பட்டினத்தைத் தாயகமாகக் கொண்ட செட்டியார்கள் மன்னனுக்குப் பெண் கொடுக்க மறுத்ததால் ஏற்பட்ட சிக்கல் காரணமாக தம்மினப் பெண்களைக் கொன்றுவிட்டு அங்கிருந்து குடிபெயர்ந்து சென்றதாகவும், இதன் காரணமாக அவர்களுக்குள் மணவுறவுப் பெண்கள் குறைபாடு ஏற்பட்டது என்றும் குடிப்பெயர்ச்சிக் கதைகள் சுட்டிக்காட்டுகின்றன. இந்நிகழ்வை ஒன்றுக்கும் மேற்பட்ட கதைகள் வெவ்வேறு முறைகளில் சித்தரித்துள்ளன. சாதி அகமணமுறையைப் பின்பற்றுவதற்குப் போதுமான பெண்கள் இவர்களிடம் இல்லாததால், வேளாளப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டனர் என இவர்களின் இனவரலாறு வழி அறியமுடிகிறது. இதன் பின்னர் இவர்கள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து குடிபெயர்ந்து அரியூர், சுந்தரப்பட்டினம், இளையாத்தான்குடி ஆகிய ஊர்களில் குடியமர்ந்தனர் என அக்கதைகள் சுட்டுகின்றன. இளையாத்தான் குடி, சுந்தரப்பட்டினம் ஆகிய ஊர்களில் தங்கியவர்களே நாட்டுக்கோட்டைச் செட்டி, நானாதேசிகன், நகரத்தார் என்று அழைக்கப்படுகின்றனர் என இனவரலாற்றுச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. அரியூரில் தங்கியவர்கள் கலகத்தின் காரணமாக மதுரைக்குத் தெற்கே பல இடங்களுக்குக் குடிபெயர்ந்தனர். இக்குடிப்பெயர்ச்சியின் தொடர்ச்சியாகவே குமரிமாவட்டத்தில் காணப்பெறும் செட்டியார்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணியன்களும் காணப்படுகின்றனர் (மி. ஜென்சிஸ்குமார், 2006: 34;).

செட்டியார்களின் குடிப்பெயர்ச்சி பல கட்டங்களாக நிகழ்ந்துள்ளது. குடிப்பெயர்ச்சியின் மூலம் செட்டியார்களிடம் பெண்கள் பற்றாக்குறை அல்லது சுருங்கிய மணஉறவுவட்டம் ஏற்பட்டது என்பதை அவர்களது குடிப்பெயர்ச்சிக் கதைகளின் வழி அறிய முடிகின்றது. இப்பெண்கள் குறைபாடு அரியூலிருந்து குமரிமாவட்டத்திற்குள் குடிபெயர்ந்த செட்டியார்களிடமும் சமன் செய்யப்படாமலேயே காணப்பட்டது. இதனை அவர்கள் தாங்கள் குடியமர்ந்த பகுதிகளில் வாழ்ந்த பல்வேறு சாதிகளோடு மணவுறவு கொண்டதன் மூலம் சமன்செய்து கொண்டனர். இப்புறமணச் சாதியினர் சமூகத் தகுதியில் பல்வேறு நிலைகளில் அடுக்கப்பட்டவர்களாக இருந்தனர். மேற்குறித்தவாறு சாதிப் புறமணமுறை மூலம் பெண்கள் பற்றாக்குறையைச் சமன்செய்து கொண்ட பின்னர் மீண்டும் அகமணக்குழுவாக மாறினர். ஆனால், இவர்களுக்கிடையினலான அகமண முயற்சியில் அகஅடுக்கு முறையாக்கம் தொழிற்படத் துவங்கயது. இந்த அக அடுக்குமுறையாக்கம் அவர்கள் சாதிப் புறமணவுறவின் வழித்தொடர்பு கொண்ட மற்ற சாதிகளின் சமூக மதிப்பின் அடிப்படையில் படிநிலைப்படுத்தப் பெற்றது. அதாவது வெள்ளாளர்களுடன் மணவுறவுகொண்ட கோட்டாறு செட்டியார்கள் சமூகத் தகுதியில் முதல் நிலையிலும், நாயர்களுடன் மணவுறவு ஏற்படுத்திய இரணியல் கீழத்தெரு, திருவிதாங்கோட்டைச் சேர்ந்தவர்கள் இரண்டாம் நிலையிலும், சாணர்களுடன் மணவுறவு கொண்ட பறக்கைச் செட்டியார்கள் மூன்றாம் நிலையிலும், முக்குவர்களுடன் மணவுறவு செய்த இரணியல் மேலத்தெரு, குளச்சலைச் சேர்ந்தவர்கள் நான்காம் நிலையிலும் மதிக்கப்பெற்றனர் என மி. ஜென்சிஸ் (2006:35) குறிப்பிடுகின்றார்

நிபந்தனையை மீறிய குற்றத்திற்காக மன்னனால் வழங்கப்பட்ட தண்டனைகள் ஆசாரிபள்ளம் வாணியன்களிடம் மதமாற்றச் சிந்தனை உருப்பெறுவதற்கு வழிவகை செய்தது. இதற்குத் தேவசகாயம் பிள்ளையின் மதமாற்றமும், முதலியார்களின் அறிவுரைகளும் வழியாக அமைந்தன. கிறித்தவத்திற்கு மாறிய இம்மதமாற்றம் இவர்களை அடிமை நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்குத் துணையாக அமைந்தாலும் மணவுறவுகளை ஏற்படுத்துவதில் மதமாற்றம் பல்வேறு புதிய நெருக்கடிகளைத் தோற்றுவித்தது. அதாவது மதமாற்றத்திற்கு முன்னர்வரை ஆசாரிபள்ளம் வாணியன்கள் ஏனைய வாணியன்களுடன் மணவுறவை ஏற்படுத்திக் கொண்டனர். மதமாற்றத்திற்குப் பின்னர் இவர்களுக்கிடையிலான மணவுறவுகளுக்கு 'மதம்' தடையாக அமைந்தது. அதுபோல் மதமாற்றத்திற்குப் பின்னரும் குமரிமாவட்டச் சமூகச் சூழலுக்கு உட்பட்டு சாதிய உணர்வில் நிலைத்து நின்ற இவர்கள் பிற சாதியைச் சேர்ந்த கிறித்தவர்களுடனும் மணவுறவு கொள்ள முன்வரவில்லை. இவ்வாறு மதம், சாதி என்னும இருவேறான அடையாளங்கள் இவர்களின் மணவுறவுப் பரப்பைச் சுருங்கச் செய்ததைக் காண முடிந்தது. மதமாற்றத்தால் ஏற்பட்ட இம்மணவுறவு நெருக்கடியைத் தொடக்க நிலையில் முறைமணங்களை மேற்கொள்வதன் மூலம் தவிர்த்துக் கொண்டனர். முறைமணத்திற்கான வாய்ப்பு இல்லாதவர்கள் இரத்த உறவுகள் அல்லாத குடும்பத்தினர்களோடு மணவுறவு செய்து கொண்டனர். இது சாதி, மதம் சார்ந்து உருவான சிக்கல்களிலிருந்து இவர்களைப் பாதுகாத்துக் கொண்டதால் இவ்வமைப்பினை நிலைநிறுத்திக்கொள்ள பல கட்டுப்பாடுகளை உருவாக்கிக் கொண்டனர் என்று மி.ஜென்சிஸ் (2006:39) தமது ஆய்வில் குறிப்பிடுகின்றார்

சாதியக் குழுக்களின் குடிபெயர்ச்சி பெரும்பாலும் ஆண்களின் சாதிய இறுக்கத்தின் காரணமாகவே நடந்துள்ளன. பெண்கேட்டல் என்பது பொதுவான நியாயத்திற்கு அல்லது சாதி அமைப்பிற்கு முரண்பட்டதாக இருந்தாலும் பெண்களைக் காப்பாற்றுவது என்பதைவிட சாதியத் தூய்மையைக் காப்பாற்றுவதே முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. இதன் காரணமாகவே பெண்ணைக் கொடுப்பதைவிட அவளைக் கொல்வதே மேலானது என்ற முடிவு எட்டப்படுகின்றது. "இவ்வாறு வெளியேறுவதற்குச் சாதிப்பற்று மற்றும் சாதியத் தூய்மை உணர்வு மட்டும் காரணமல்ல. பத்தோடு பதினொன்று அத்தோடு இதுவும் ஒன்று என மன்னன் அல்லது ஜமீன்தாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்புறத்தில் தம் குலப்பெண் அடைக்கப்படுவதையும் அவனது மறைவிற்குப் பின் அப்பெண்ணும் அவளது பிள்ளைகளும் எவ்வித உரிமையுமின்றி அவலத்திற்கு ஆளாவதையும் விரும்பாத காரணத்தால்தான் பெண்கொடுக்க விருப்பமின்றி இடம் பெயர்ந்துள்ளனர்"(ஆ.சிவசுப்பிரமணியன் 1995:155). மகட் கொடை என்பது மணஉறவு இல்லை. அது மன்னனின் அந்தப்புறத்துக் காமக்கிழத்தி. கொடுக்கப்படும் பெண்ணால் குடும்பத்துக்கோ அல்லது சாதிக்கோ எவ்விதப் பயனும் இல்லை. மாறாக அந்தப் பெண்ணும் அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் எவ்வித உரிமையுமின்றி விடப்படுவர் என்பதை அறிந்தவர்களாதலால் மகட்கொடை மறுக்கப்படுகின்றது. மகட் கொடை மறுப்பின் காரணமாக ஊர் அழிப்பு, போர், குடும்பத்தை அழித்தல் போன்றவையும் நிகழ்வதுண்டு. இக்கொடுமையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் குடிப்பெயர்ச்சி நிகழ்வதுண்டு.

குலப்பெருமையையும் மானத்தையும் காக்கத் தம் பெண்டிரைக் கொன்றுவிட்டு வந்தவர்கள் வேறு வேறு சாதிப் பெண்டிரை மணந்தாலும் பல பிரிவுகளாகிவிட்டாலும் ஒவ்வொரு சாதியைச் சார்ந்தோரும் தத்தம் சாதியைத் தூய்மையானதென்று மனரீதியாகக் கருதிக் கொள்கின்றனர்.சாதிக் கலப்புத் திருமணம் நடந்தாலும் பெண்ணின் சாதியை விடப் பிள்ளைகள் ஆடவனின் சாதியினராகவே கருதப்படுகின்றனர். பெண் கொடுக்க மறுத்து இடம் பெயர்ந்து வந்து வேறு வேறு சாதிப் பெண்டிரை மணந்தாலும் ஆடவனின் சாதியாகவே கருதப்பட்டு நிலைநிறுத்தப்படுகின்றது. கலப்புத் திருமணங்களே சாதியொழிப்புக்கு அடிப்படை என்று ஒரு தீர்வைக் கொண்டு வரும்பொழுது அதுவே சாதிய இறுக்கத்திற்குரிய ஒரு முடிச்சாகிவிடுகின்றது. உண்மையில் இன்று இரத்தக் கலப்பற்ற தூய்மையான எந்தச் சாதியும் இல்லையென்றாலும் தத்தம் பெருமை பாராட்டவும் சாதியைப் பாதுகாத்துக் கொள்ளவுமே இக்கதைகள் சொல்லப்படுகின்றன (தே.லூர்து 2004:135). மகட் கொடை மறுத்தலில் பெண் கேட்பவர் வலிமையான அல்லது அதிகாரம் கொண்ட சமூகத்தைச் சார்ந்தவராக இருப்பின் எதிர்துப் போராட முடியாமல் குடிப்பெயர்ச்சி நிகழ்கின்றது. எந்தப் பெண்ணைக் கேட்டானோ அந்தப் பெண்ணை அல்லது அந்தப் பெண்ணின் பருவத்தை ஒத்த பெண்கள் அனைவரையும் குடிபெயரும் முன் சாகடிப்பது அழிவிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிவகையாகவும் கொள்ள இயலும். சாதித் தூய்மை ஒருபுறமிருக்க பாதுகாப்பின்மை என்பது குடிப்பெயர்ச்சியைத் தூண்டும் மூலக்காரணமாக அமைந்துவிடுகின்றது.

எதிர்பாராத நிகழ்வுளின் காரணமாக நிகழும் குடிப்பெயர்ச்சியில் குடிபெயர்ந்து குடியமரும் இடம் திட்டமிடப்படுவதில்லை. குடியமரும் இடம் தெரிவு செய்யப்படுவதிலும் பல வகையானக் காரணிகள் செயல்படுவதுண்டு. பெரும்பாலும் தங்களது குலெ தய்வம் காட்டமு; அடையாளங்கள், ஒத்த பிற சமூகத்தினரின் ஏற்பு, அல்லது அரசியல் தஞ்சம் போன்றவை இடத் தேர்வில் தொழிற்படும். குடியமர சரியான இடம் அமையாமல் நெடுந் தொலைவுப் பயணிப்பதும் உண்டு. நெடுந் தொலைவிற்குக் குடிபெயரும் போது பெரும்பாலானப் பெண்கள் இறந்துவிடுவதால் அவர்களுக்குள் மணவுறவு வட்டம் சுருங்கிவிடுவது இயல்பு. சிலநேரங்களில் மணஉறவு கொள்ளத்தக்க உறவுவட்டம் இல்லாமல் போவதும் உண்டு. எனவே ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு ஒட்டுமொத்தமாகக் குடிபெயரும் சாதிகள் தொடக்கத்தில் மற்ற சாதிப் பெண்களை மணக்கும் புறமணக்குழுவாக மாறும் வாய்ப்புகள் பெரிதும் உள்ளன. இவ்வாறு சாதிப் புறமணவுறவை ஏற்படுத்திக் கொள்ளும் குழுக்கள் தங்களது சாதிய அமைப்பை மீளக் காப்பாற்றுவதற்காகப் பெரும்பாலும் சாதிப் புறமணத்தில் நிலைத்து நிற்பதில்லை. தங்களுக்குள் மணஉறவு வட்டம் விரிவடைந்ததும் புறமணத்தை விட்டுவிட்டு மீண்டும் அகமணக்குழுவாக மாறிவிடுகின்றனர் என்பது செட்டியார்களின் குடிபெயர்ச்சித் தெளிவுப்படுத்தியுள்ளது. மேலும் இவர்களது சமூகத் தகுதி இவர்கள் பெண்கொண்ட சாதிகளின் சமூகத்தகுதியின் அடிப்படையிலேயே பார்க்கப்பட்டது என்பதும் வெளிப்படையானது. சாதியத் தூய்மையைக் காப்பாற்றுவதற்காக மகட்கொடை மறுப்பைத் தெழில்படுத்திக் குடிபெயர்வு செய்த குழு மணஉறவு வட்டம் இல்லாத போது புறமணக்குழுவாக மாறுவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரசம் செய்து கொள்கின்றது. சாதியக் குழு ஒரு அகமணக் குழுவாக இயங்க தேவையான அனைத்துப் பண்புகளையும் பெற்றிருக்கும் போது சாதித் தூய்மை முதன்மையானதாகக் கொள்ளப்படுகின்றது. அகமணக் குழுவாக இயங்க இயலாத போது நெகிழ்வுத் தன்மையுடையதாக மாறிவிடுகின்றது.

சாதிக்குள் புறமண முறையையும் சாதிக்கு வெளியில் அகமண முறையையும் பின்பற்றும் தனித்தன்மையான அமைப்பே சாதி ஆகும். சாதிக்கு வெளியில் புறமணமுறையைப் பின்பற்றுவதை எல்லா சாதியக் குழுக்களும் விலக்காக் கொண்டுள்ளன. இவ்விலக்கே சாதியத்தைத் தொடர்ந்து காப்பாற்ற துணைசெய்கின்றது. கலப்பு மணம், மதமாற்றம், குடிப்பெயர்ச்சியின் காரணமாக மணஉறவு வட்டத்தில் ஏற்படும் நெகிழ்வு ஆகியவை நீண்ட நெடுங்காலமாக இந்தியச் சாதியக் குழுக்களில் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. அவ்வாறாயின் எந்த ஒரு சாதியும் கலப்பில்லாத தூய்மையானச் சாதி என்று உறுதிப்படுத்துவது கடினம். சில சாதிகளில் காணப்படும் உட்சாதியினர் அல்லது ஒரு பகுதியினர் தங்களுக்கான மணஉறவு வட்டம் சுருங்கியதாக இருப்பின் பிற சாதிகளோடு புறமணஉறவு கொள்ளும் வழக்கம் உள்ளது. இதன்காரணமாகத் தோன்றும் புதிய உறவுக்கூட்டம் காலப்போக்கில் தனிச் சாதிய உட்பிரிவாக மலர்வதும் உண்டு. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாடார்களிடமும் முக்குவர்களிடமும் புளுக்கையர் என்னும் பிரிவு இலைமறைக் காயாய் உள்ளது. புளுக்கையர் என்பது சாதியக் கலப்பால் தோன்றிய உட்பிரிவைக் குறிப்பதாகும். முதன்மைச் சாதியினர் இவர்களோடு மணஉறவு வைத்துக் கொள்வதில்லை. புளுக்கையர்களாகக் கருதப்பட்டவர்கள் பொருளாதார நிலையில் வலுப்பெற்ற பின்னர் இவ்வேறுபாடுகள் நெகிழ்வடைந்து தற்காலத்தில் முதன்மைச் சாதியினரோடு இரண்டறக் கலந்துள்ளனர்.

மரபுரிமை வேறுபாட்டின் காரணமாகத் தோன்றும் உட்சாதிப் பிரிவுகளும் இவ்வாறே நாளடைவில் கரைந்து போயியுள்ளன. குமிரிமாவட்ட நாடார்களில் ஒரு குழுவினர் திருவிதாங்கூர் அரச மரபைப் பின்பற்றி மருமக்கள் தாயமுறையை ஏற்றனர். இதனால் மக்கவழி, மருமக்கவழி என நாடார்கள் இரு பிரிவினராயினர். இவர்களுக்குள் மணஉறவு விலக்கப்பட்டது. மேலும் மருமக்கவழியினர் சமூகத் தகுதியில் தாழ்வானவர்களாகவும் மதிக்கப்பட்டனர். தற்காலத்தில் இவர்கள் மருமக்கள்வழி முறையை விட்டு விட்டு மக்கவழி முறைக்குத் திரும்பி முதன்மைச் சாதியோடு கலந்துவிட்டனர். இவ்வாறாகச் சாதி என்பது ஓர் இறுக்;கமான அமைப்பொழுங்காகக் காட்சியளித்தாலும் அதனுள்ளும் பல்வேறுவிதமான நெகிழ்வுகளும் கொண்டு கொடுத்தல்களும் காலங்காலமாக நிகழ்ந்து வந்துள்ளன. இந்த நெகிழ்வுகளும் புறமண உறவுகளும் தற்காலிகமானவை என்பதையே நாம் கண்ட சான்றுகள் விளக்குகின்றன. போர், இயற்கைப் பேரிடர், குடிப்பெயர்ச்சி போன்ற இயல்புக்கு மாறான சூழல்களினால் ஏற்படும் ஆண், பெண் விகிதக் குறைபாடு சாதிகளுக்கு அகமணமுறையை இறுக்கமாகப் பின்பற்ற முடியாதச் சூழல்களை உருவாக்குவதுண்டு. இத்தகையச் சூழல்களில் சாதி தகவமைப்புக்;காகப் புறமணத்தை அனுமதிக்கின்றது. மணஉறவு வட்டம் சமநிலையை எட்டும் வரையிலும் இந்நெகிழ்வு நீடிக்கும். அதன் பின்னர் சாதி புறமணவுறவுகளைத் துண்டித்துவிட்டு தன்னளவிலான முழுமையைப் பேணத் தொடங்கிவிடும். செட்டியார்களின் குடிப்பெயர்ச்சி இதனை நன்குப் புலப்படுத்துகின்றது.

தென்னிந்திய இனவியல் வரலாற்றை உற்று நோக்கும் போது அந்நியப் படையெடுப்புகளால் (குறிப்பாக முஸ்லிம், ஆங்கிலேயப் படையெடுப்புகள்) பல குடியினர் தங்கள் இன அடையாளங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டு வேற்றுப் பண்பாட்டுப் பரப்பிற்குள் குடியேறித் தங்களின் பூர்வீகத் தொழில்களைக் கூட மாற்றிக் கொண்டுள்ளனர் (பக்தவத்சல பாரதி 2005:345). குடிபெயர்ச்சியின் காரணமாகச் சாதிப் பெயர்களையும், குலத் தொழில்களையும் மாற்றிக் கொண்டது தொடர்பானப் பலத் தகவல்கள் எட்கர் தர்ஸ்டனின் தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் என்னும் நூலிலும் நாகமையாவின் திருவிதாங்கூர் அரசு கையேட்டிலும் பதிவாகியுள்ளன. இலங்கை, பர்மா, மொரிசுஷியஸ் போன்ற நாடுகளுக்குக் குடிபெயர்ந்தத் தமிழர்கள் தங்களது குலத் தொழிலை விட்டு விட்டு எஸ்டேட்டுகளிலும் கட்டுமானப்பணிகளிலும் ஈடுபடுத்தப்பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களது குலத் தொழிலை அவர்கள் செய்யாத போதும் சாதிய அடையாளங்களை விட்டு விலகவில்லை. குலத் தொழில் சாதிய அடையாளத்தையும் சமூக மதிப்பையும் சுட்டும் குறியீடாக தொழிற்பட்டாலும் அது இறுக்கமானச் சாதியப் பண்பாக அமைந்திருக்கவில்லை. மகாராட்டிரத்தில் குந்தால் கிராமத்தில் வாழும் சக்கிலியர்களின் தொன்மக் கதை குலத் தொழிலை மாற்றிச் சாதிய அடையாளத்தை மாற்றிக் கொடதற்குச் சான்றாக அமைகின்றது. (பக்தவத்சலபாரதி 2005: 344). முத்துப்பட்டன் கதையையும் இதற்குச் சான்றாகக் கொள்ளத் தகும். உயர் குலத்தைச் சார்ந்த முத்துப்பட்டனுக்குப் பெண் கொடுக்க மறுக்கும் வாலப்பகடை முத்துப்பட்டன் செறுப்பு தைத்து வந்த போது பெண் கொடுக்கின்றான். குலத் தொழிலை மாற்றிக் கொண்டதற்கு இது அடையாளமாகவும் ஒத்த சமூகத் தகுதியுடையவர்கள் என்பதற்கு அடையாளமாகவும் இது கருதப்பட்டுள்ளது. நாகமையா குறிப்பிடும் கேரளமுதலி என்ற சாதியக் குழுவும் குலத் தொழிலை மாற்றிக் கொண்டதன் மூலம் சாதியை மாற்றிக் கொண்டதற்குச் சான்றாக உள்ளது (1960: 365-373). குலத் தொழிலை மாற்றிக் கொள்வது தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் நிகழ்வதுண்டு.

இந்தியச் சமூக அமைப்பில் சாதி என்பது ஓர் இறுக்கமான அமைப்பாகக்கருதப்படுகின்றது. ஆனால் சாதியின் இனவியல் வரலாறு சாதி என்பது தனது அமைப்பைக் காத்துக் கொள்வதற்காக சூழலுக்கேற்ப பல்வேறு நெகிழ்வுகளை அனுமதித்து வந்துள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது. சாதிய அமைப்பைச் சிதைக்கும் பல்வேறு காரணிகள் (குடிப்பெயர்ச்சி, போர், இயற்கைச் சீற்றங்கள், பேரிடர், சாதிச் சண்டைகள், புறமணம் போன்றவை) காலம் காலமாக நிகழ்ந்து வந்தாலும் தற்காலிக நெகிழ்வுகளை அனுமதித்து சாதிய அமைப்பு காக்கப்படுகின்றது என்பதையே நாம் விவாதித்த சான்றுகள் தெளிவுப்படுத்துகின்றன. இந்;தியச் சமூக அமைப்பில் ஒருவர் எந்வொரு சாதியையும் சாராமல் இருக்க இயலாது. கலப்பு மணம் அல்லது வேறு காரணங்களால் சாதிய அமைப்பிலிருந்து விலகினாலும் எதாவது ஒரு சாதியில் அடக்க நெகிழ்வுகள் தரப்பட்டு சாதிய அமைப்புக்குள் அடக்கவே இந்த அமைப்பு முயலும். புறமணம், குலத் தொழிலை மாற்றிக் கொள்ளுதல், உட்சாதியாகக் கிளைத்தல், மற்றொரு சாதியோடு இணைதல், புதிய சாதிப் பெயரைச் சூட்டிக் கொள்ளல் போன்ற சாதிய நெகிழ்வுகள் வழக்கில் இருந்து வந்துள்ளன. இந் நெகிழ்வுகள் சாதிய அமைப்பை உடைத்தெறியவில்லை என்பதும் உறுதியாகின்றது. சாதி தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எத்தகைய சமரசத்தையும் செய்து கொள்ளும் ஓர் அமைப்பாக உள்ளது. அது சாதியக் கலப்பு உட்பட எத்தகைய நெகிழ்வுகளை வழங்கினாலும் அது எப்போதும் தன்னைத் தூய்மையான அமைப்பாகவே முன்னிறுத்திக் கொண்டிருக்கும்.

**துணைநின்ற நூல்கள்**


1. சிங்காரவேலன், பா., 2006: இடப்பெயர்ச்சிக் கதைகள், சென்னை: காவ்யா.
2. ஜெயசீல ஸ்டீபன், எஸ்., 2018: காலனியத் தொடக்கக் காலம் (கி.பி.1500 -1800), சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ்.
3. ஜென்சிஸ்குமார். மி., 2006: சிற்றூர் அகமணமுறை: குமரிமாவட்டச் செட்டியார்களின் மிகத் தனித்துவமான ஒரு சாதிய அசைவியக்கம், வல்லினம், இதழ் 13, பக்.33-41.
4. ஸ்டிபன் ஞா., 2019: தமிழ்ச் சமூகத்தில் வாய்மொழிக் கதைகள், சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ்.
5. ஸ்டிபன் ஞா., 1997: கொக்கறை: காணிக்காரர்களின் வாழ்வும் பண்பாடும், நாகர்கோவில்: திணை வெளியீடு.
6. Nagam Aiya V., 1960: The Travancore State Manual, Vol.1, Trivandrum: Govt. Press.
7. செல்லபெருமாள்.ஆ., 2004: தமிழகப் பழங்குடிகளின் இடப்பெயர்ச்சி வரலாறு, சனங்களும் வரலாறும்: சொல்மரபின் மடக்குகளில் உறையும் வரலாறு, ச.பிலவேந்திரன் (ப.ஆ.), புதுவை: வல்லினம்.
8. பக்தவத்சல பாரதி, 2005: மானிடவியல் கோட்பாடுகள், புதுவை: வல்லினம்.
9. சிவசுப்பிரமணியன் ஆ. 1995: அடித்தள மக்கள் மீதான பாலியல் வன்முறையும் நாட்டார் வழக்காறுகளும், சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ்.
10. லூர்து தே., 2004: சாதிகளின் இடப்பெயர்ச்சிக் கதைகள், சனங்களும் வரலாறும்: சொல்மரபின் மடக்குகளில் உறையும் வரலாறு, ச.பிலவேந்திரன் (ப.ஆ.), புதுவை: வல்லினம்.


●


கட்டுரையாளர்: முன்னாள் தமிழியல் துறைத் தலைவர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொபொரு கராஷிமாவின் வரலாற்றுப்போக்கில் தென்னகச் சமூகம்

2

*Towards a New Formation: South Indian Society Under Vijayanagar Rule, (OUP, New Delhi, 1992)* என்ற தலைப்பில் பேராசிரியர் நொபொரு கராஷிமா அவர்கள் எழுதிய நூலின் முன்னுரையில் இந்நூல் தம் முதல்நூலின் தொடர்ச்சி என்று குறித்துள்ளார். இந்நூல் இன்னும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. இதன்சாரம் நூலிற்கான அறிமுகமாக இங்கு தரப்படுகிறது. இந்நூலின் மையக்கரு தென்னகத்தின் இடைக்காலத்தில் நிகழ்ந்த நிலமானிய முறையினை பிரிந்துகொள்வது என்றும் அவர் புரிந்துகொண்ட வகையில் நிலமானிய முறையினை விளக்குவதாகவும் சொல்லியுள்ளார். சோழராட்சியின் தமிழ்ச்சமூகம் அடுத்தடுத்துவந்த விஜயநகர் ஆட்சியிலும் தொடர்ந்துவந்த நாயக்கர் ஆட்சியிலும் புதிய புதிய மாறுதலுக்கு ஆட்பட்டது என்பதனை கல்வெட்டுச் சான்றுகள் மூலம் விளக்கியுள்ளார். நிலவுடைமை, நிலவருவாய் பற்றிய கல்வெட்டுக்களின் பகுப்பாய்வு இதனை உறுதிப்படுத்துகிறது. இவ்வாய்விற்கு 1300-1700 காலகட்டங்களின் கல்வெட்டுக்கள் பெரிதும் பயன்பட்டுள்ளன. இதுபோன்ற ஆர்வம் 1958 இல் அவரது முதுகலை பட்டப்படிப்பிற்கான ஆய்வுக்கட்டுரை சோழர் வரலாறுபற்றி அமைந்ததே காரணமாகும் என்கிறார். அப்போதே, தமிழ்மொழிக் கல்வெட்டுக்களில் பரீட்சயம் ஏற்பட்டது என்றும் அதன் நீட்சிதான் அடுத்தகட்டத்து ஆய்வு என்றும் கூறியுள்ளார். அப்போது, ஆசியசமூகம் தேக்கநிலை சமூகம் என்று முன்மொழிந்த மேற்கத்திய அறிஞர்களின் கருத்தினை சந்தேகித்ததே தம் ஆய்வின் தொடரவைத்தது என்கிறார். அதன் விளைவாக இந்தியச் சமூகம் காலந்தோறும் தேங்கி நிற்காமல் மாறி மாறி வந்துள்ளதனை சான்றுகள் விளக்குகின்றன என்கிறார். இடைக்காலத்திய வரலாறு பொறுத்து தென்னிந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டு வரலாற்றில் சோழர் சரிவிற்கு பின்வந்த விஜயநகர் ஆட்சியில் புதிய மாற்றங்கள் நிகழ்ந்தன என்பதனை தக்க சான்றுகள் வழியே விளக்கியுள்ளார். 12 கட்டுரைகளை உள்ளடக்கிய 3 இயல்கள் 3 பின்னிணைப்புகள், 8 நிலப்படங்கள், 15 பக்கங்கள்கொண்ட துணைநூல்பட்டியல் கொண்ட இந்நூல் தேர்ந்த பகுப்பாய்வு முறைக்கு தக்க சான்றாகும். 1302-1642 வரையிலான விஜயநகராட்சியின் காலகட்டத்தினை 7 உள்கட்டங்களாகப் பிரித்து விஜயநகர் ஆட்சிகாலத்தின் வருவாய்வரிச்சொற்களை ஆய்ந்துள்ளார். 480 கல்வெட்டுக்களில் இடம்பெற்ற 635 வரிச்சொற்கள் இடம்பெற்றதனை பகுப்பாய்வு செய்துள்ளார். 7 காலகட்டங்களில் மொத்தம் 40 வரிகள் 20 முறைக்குமேல் இடம்பெற்றுள்ளன. இவற்றில் உபாதி என்றவரி 103 முறையும், ஆயம் 65முறையும், கடமை 72முறையும், காணிக்கை 86முறையும், நன்செய் 69 முறையும், மாவடை 66 முறையும், மரவடை 59 முறையும் இடம்பெற்றுள்ளன. இவ்வரிகளை அறிந்துகொள்வதற்கு வெளியிடப்படாத கல்வெட்டுப்படிகளையும் படித்தறிந்து குறிப்பெடுத்துள்ளார். 1400-1600 காலகட்டத்தினை சார்ந்த வெளியிடப்படாத கல்வெட்டுப்படிகளை படிப்பதற்கு அனுமதியளித்த இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் மைசூரில் அமைந்துள்ள கல்வெட்டுப்பிரிவு அலுவலகத்தின் இயக்குநர்கள் K.V.Ramesh, M.N.Katti போன்றோருக்கு நன்றி நவில்ந்துள்ளார். இந்நூலினை கணினியில் கட்டமைத்தவர்களுக்கும், நிலப்படங்களை உருவாக்கித் தந்தவர்களுக்கும் நன்றியறிதலை தெரிவித்துள்ளார். நூலாக்கத்திற்குமுன் தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோழர்காலத்தில் ஏற்பட்ட பெருமளவிலான மாற்றங்களை தம் முந்தியநூலில் விளக்கியுள்ளார். அதன் தொடர்ச்சியே அடுத்துவந்த விஜயநகர ஆட்சி, நாயக்கர் ஆட்சி. இதனை விளங்கிக்கொள்வதற்காக 1400-1700 வரையிலான காலகட்டத்தின் 2900 கல்வெட்டுக்களில் இருந்து தரவுகளை திரட்டினார். இவற்றுள் 1064 கல்வெட்டுக்கள் திருமலை திருப்பதியில் கிடைத்துள்ளன. ஆனால், இவற்றுள் 600 மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. மீதமுள்ள கல்வெட்டுகள் இன்னும் வெளியிடப்படவில்லை.**

கட்டுரைகளைப் படித்து கருத்துகள் வழங்கிய *Romila Thapar, M.G.S.Narayanan, Parvathy Menon, Cynthiya Talbot* போன்றோருக்கும் நன்றி செலுத்தியுள்ளார். நொபொரு கராஷிமா அவர்கள் இந்திய ல்வெட்டுக்களின் வகைகளை வாசிக்கவும் படியெடுக்கவும் பகுத்தறியவும் நன்கு பயிற்சி பெற்றவர். முன்பே சொன்னபடி, இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப்பிரிவு அலுவலகங்களில் பயின்றவர். தெற்காசிய தென்கிழக்காசிய நாடுகளில் பரவலாக கள ஆய்வுகளை பலமுறை மேற்கொண்டவர். ஆனாலும், அவர் கூட்டுப்படிப்பில் மிகவும் அக்கறைகாட்டினார். பிற நாடுகளின் வரலாற்றறிஞர்களுடன் கள ஆய்வுகளையும் கல்வெட்டுக்களின் பகுப்பாய்களையும் செய்தார். தமிழ்மொழியில் நன்கு பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றிருந்தார். பிறரின் கருத்துகளை கவனமாகப் பரிசோதித்தார். அவருடைய ஒவ்வொரு ஆய்வும் அப்படித்தான் அமைந்தது. அவருடைய ஆய்வுக்களம் தமிழ்நாட்டின் ஒரு சிற்றூரிலிருந்து தென்கிழக்காசிய நாடுகள்வரை பரவியிருந்தது. அந்த வகையில்தான் இங்கு பேசப்படும் நூலும் அமைகிறது. இந்நூலிற்கு ஆய்வுக்களமாக வடாற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, பகுதிகளை தெரிவு செய்துள்ளார். தமிழகத்தின் வடக்கில் ஓடும் வெள்ளாற்றுச் சமவெளிப் பகுதியினையும் இத்துடன் சேர்த்துள்ளார்.

**நாடும் சீர்மையும் :** விஜயநகர் ஆட்சியில் தமிழ்நாட்டில் நாடு என்ற ஆட்சிப்பிடிவு சீர்மை என்று பெயர்மாற்றம் பெற்றது. இச்சொல் சீமா என்ற கன்னடம், தெலுகு மொழிகளின் சொல்லிலிருந்து பெறப்பட்டது (காட்டு: ராயலசீமா). மற்றொருவகையில், இப்பிரிவு ராஜ்ஜியம் என்றும் அழைக்கப்பட்டது; உச்சாவாடி என்றும் பெயர் பெற்றது. இப்படி, தமிழ்நாட்டின் வடக்கில் சந்திரகிரி படைவீடு உச்சாவடி, வழுதிலாம்பட்டு உச்சாவடி என்றும் இடைப்பகுதியில் திருச்சிராப்பள்ளி உச்சாவடி என்றும் ஆட்சிப்பிரிவுகள் இருந்தன. இப்பிரிவுகளின் அலுவல்/ஆட்சி நாயக்கத்தனம் என்று அழைக்கப்பட்டது. இவ்வாட்சித் தலைவர்கள் நாயக்கர்கள் எனப்பட்டனர். இவர்கள், முன்பே நாடு அளவில் செயற்பட்ட நாட்டார்களை வலுவிழக்கச்செய்து தங்களின் முகவர்கள்மூலம் ஆட்சிசெய்தனர். இச்சூழலில், தமிழ்நாட்டில் சமூக, அரசியல், பொருளியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. இது ஒரு புதிய வரலாற்றுப்போக்கினை உருவாக்கியது. இவ்வரலாற்றுப் போக்கினை நிலவருவாய் சொற்களின் அடிப்படையில் நொபொரு கராஷிமா நிருபிக்கிறார். இதனடிப்படையில், நிலவுடைமை சமூகத்திலும், அடிமைச் சமூகத்திலும், வணிகத்திலும் ஏற்பட்ட மாற்றங்களையும் விளக்குகிறார்.

**தமிழ்நாட்டில் சமூகமாற்றம்:** சோழர்காலத்தில் ஏற்பட்ட பெருமளவிலான மாற்றங்களை தம் முந்தியநூலில் விளக்கியுள்ளார். அதன் தொடர்ச்சியே அடுத்துவந்த விஜயநகர ஆட்சி, நாயக்கர் ஆட்சி. இதனை விளங்கிக் கொள்வதற்காக 1400-1700 வரையிலான காலகட்டத்தின் 2900 கல்வெட்டுக்களில் இருந்து தரவுகளை திரட்டினார். இவற்றுள் 1064 கல்வெட்டுக்கள் திருமலை திருப்பதியில் கிடைத்துள்ளன. ஆனால், இவற்றுள் 600 மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. மீதமுள்ள கல்வெட்டுகள்இன்னும்வெளியிடப்படவில்லை. இவற்றுள் பலவற்றின் பிரதிகளை (*texts*) முன்பே சொன்னபடி மைசூரில் படித்து தரவுகளை திரட்டினார். அதற்குமுன்பு, பெரும்பாலான ஆய்வாளர்கள் அயல்நாட்டுப்பயணிகளான *Fernao Nuniz, Domingo* என்பவர்களின் குறிப்புகளின் அடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயநகராட்சியினை ஆய்ந்தனர். அவர்கள் அடிக்கடி பயன்படுத்தும் சொற்கள் நாயக்கர், நாயக்கத்தனம் என்பன. ஆனால், சோழர் வீழ்ச்சிக்குப்பின் 1250-1400 காலகட்டத்தில் தமிழ்நாடு பெரும் அவதிக்குள்ளானது. பாண்டியர், ஹோய்சாளர், காகதீயர், டெல்லி சுல்த்தான்கள் என பலரும் படையெடுத்தனர். தொடர்ந்து விஜயநகரின் ஊடுருவலும் (*invasion*) வந்தது என்பது இவரது கருத்து. அவருடைய கூடுதலான ஆய்வுக் கருத்துகள் இங்கு தரப்படுகின்றன. படைத்துறைபண்பு கொண்ட விஜயநகர் ஆட்சியில் பல வேளாண்குடிகள் வரிக்கொடுமையினால் ஊரைவிட்டே ஓடினர். 15-ஆம் நூற்றாண்டில் ஓரியப்படையெடுப்பும் வந்தது. இவையெல்லாம் அரசியல் மாற்றங்கள். அதனால், சமூகமாற்றமும் நிகழ்ந்தது. 1250-களிலேயே வேளாண்குடிகள் அவர்கள்சார்ந்த சிலகுடிகள் ஒருபுறமும் கைவினைஞர்கள் அவர்கள் சார்ந்த சிலகுடிகள் மறுபுறமும் தங்களை முறையே வலங்கை இடங்கை குழுக்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டனர். இவ்விரு குழுக்களும், நிலக்கிழார்கள், காணியாளர்கள், விஜயநகர் அலுவலர்களான இராஜகரத்தார்களுக்கு எதிராக கலகம் செய்தனர். இக்கலகம், 15-ஆம் நூற்றாண்டின் முதல் கூற்றில் தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் பகுதிகளில் நடந்தது.

**விஜயநகர் ஆட்சியும் நாயக்கர்களும் :** தமிழ்நாட்டில் ஆட்சிசெய்த நாயக்கர்கள் 16-ஆம் நூற்றாண்டில் விஜயநகர மன்னர்களின் முகவர்களாகவே இயங்கினர். அவர்கள் காரியத்துக்குக் கடவரான, காரியத்துக்குக் கர்த்தாவான என்ற தொடரால் அறியப்பட்டனர். இவர்கள் தம் ஆளுகைக்கு ஒரு படையணியினை (*military contingent*) அரசருக்காக வைத்துக்கொள்ளலாம். இவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட நிலப்பரப்பு முன்பே சொன்னபடி சீர்மை எனப்பட்டது. அவர்களின் கீழிருந்த வட்டார ஆளுநர்கள் மகாமண்டலேஸ்வரர், மகாபிரதானிகள் எனப்பட்டனர். படைத்தளபதிகள் தண்டநாயகா எனப்பட்டனர். வரிவசூலிப்பவர் அதிகாரி எனப்பட்டார். நாயக்கர்களின் ஆட்சிப்பரப்பு தெளிவற்ற எல்லைகளை கொண்டிருந்தது. ஆனால், அவர்களின் ஆட்சி நிலமானிய கூறுகளை கொண்டிருந்தது. இந்நிலமானிய முறையின் உயர்தளத்தில் அரசர்களும் அடுத்த தளத்தில் நாயக்கர்களும் இருந்தனர். நாயக்கர்களிடையேயும் உள்படிநிலை நிலவியது. அடித்தளத்தில் ஊர்களின் நிலக்கிழார்கள் இயங்கினர். ஆனால், திருமலை நாயக்கருக்கு உட்பட்ட முருகமங்கலபற்று படைவீடு அல்லது பிரமதேசப்பற்று எனப்பட்டது. இதுவே, இவரது நாயக்கத்தனம். இவர், அரசரின் ஒப்புதலின்றியே இரு ஊர்களுக்கு வரிவிலக்களித்தார். சில நாயக்கர்கள் அரசரின் அறிந்தேற்பினை பெறும்பொருட்டு அரசருக்கு புண்ணியமாகும் பொருட்டு என்ற பொருளில் அவரின் அனுமதியின்றியே நிலக்கொடையளித்தனர்.

**விஜயநகர் ஆட்சியில் பலவகையிலும் புதிய புதிய நிலக்கிழார்கள் தோன்றினர். அவர்கள் : நிலத்தினை வாங்கியோர், நிலத்தினை குத்தகைக்குபெற்றோர், அதிகாரத்தால் நிலத்தினை கைப்பற்றியோர், அப்போது புகுந்த படையணியினர். இம்மாற்றம் 15-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்தது. கவுண்டர்கள், கைகோலர்கள், மன்றாடிகள், ரெட்டிகள் போன்றோர் புதிதாகத் தோன்றிய நிலக்கிழார்கள். முதலியார்பிள்ளை, ரெட்டியார் நிலக்கிழார்கள் தங்களுக்குள் ஒருங்கிணைந்தனர். கம்மாளர்களுக்கு வரிச்சலுகையளித்தனர்.**

இதனால், தங்கள் வட்டாரங்களில் செல்வாக்கும் பெற்றனர். இதனையே நிலமானிய அமைப்புமுறை என்கிறார் நொபொரு கராஷிமா. அதற்கான தம் புரிதலை கீழ்தந்துள்ளவாறு விளக்குகிறார்.

**நொபொரு கராஷிமா சுருக்கிவடித்த நிலமானிய முறையின் கூறுகள்:** (1) அடிப்படையில் நேரடியாக உழைப்பவர்கள் / உற்பத்தியில் ஈடுபடுகிறவர்கள் உண்மையில் அடிமைகள் இல்லை. அவர்கள் வேளாண்குடிகள் (*peasants*) உற்பத்தி வழிகளோடு (*means of production*) உறவுடையவர்கள் (2) அவர்கள் வட்டார அளவிலுள்ள முக்கிய நபர்களின் (*local magnets*) நிலத்தின்மேல் மேலான உரிமையுடையவர்களின் (*superior rights*) நிலத்தில் உழுதனர். இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்குடிகளை தம்கட்டுக்குள் (*subdue*) வைத்தனர். இவர்களின் மேலதிக உற்பத்தியினை நிலவுடைமையாளர்களே எடுத்துக் கொண்டனர். ஒருவகையான பொருளியல் உறவின்மூலம் (*extra-economic coercion*) இதனை சாத்தியப்படுத்தினர். (3)அரசியலதிகாரம் படியமைப்பு கொண்டது (*hierarchical structure*). இது நிலக்கொடையாலும் கருத்தியலாலும் ஆளும்வர்க்கத்தினால் சாத்தியப்பட்டது. (4) வணிகத்திற்கான உற்பத்தி (*commodity production*) என்று தனியே நிகழவில்லை. உபரி உற்பத்தியிலேயே இது பெறப்பட்டது. இக்கருத்தியல்களின் பின்னணியிலேயே நொபொரு கராஷிமா நாயக்கத்தனம் என்ற நிலமானிய முறையினை ஆய்ந்தார்.

**நாயக்கர்களும் கோயிலும்:** நாயக்கர்கள் கோயில்களோடு நெருக்கமான தொடர்புடன் இயங்கினர். அதனால் நன்மையும் பெற்றனர். காட்டாக, அச்சுதப்ப நாயக்கர் 38 ஊர்களின்மேல் ஆளுமை கொண்ட ஸ்ரீமுஷ்ணம் கோயிலின் காப்பாளராக செயற்பட்டார். கல்வெட்டில் இப்பதவி தாளரிக்கம் எனப்பட்டது. அவ்வூர்களில் இருந்து கோயிலுக்குவரும் வருமானத்தில் ஒரு பங்கு இவருக்கு கிடைத்தது. அது, ஸ்தானநிர்வாகம் எனப்பட்டது. இவரே, கோயிலின் கருவூலத்தினை காக்கும் பொறுப்பினையும் மேற்கொண்டார். அப்பதவி, திருமேனிகாவல் எனப்பட்டது. இவ்வணைத்து உரிமைகளும் காணியாட்சி எனப்பட்டது. இவர்கள் கோயில்களோடு தொடர்புடன் இருந்ததால் மேலதிகமான செல்வத்தினை பெற்றனர். மேலும், குத்தகை முறையினை நடைமுறைப்படுத்தி நாயக்கர்கள் தம் தம் வட்டாரத்தில் வலிமை பெற்றனர். கோயில்களுக்கு கொடையளிப்பதன் மூலம் தம் எஜமானர்களுக்கு நன்றியுடையவர்களாகக் காட்டிக் கொண்டனர்.

சோழர் வீழ்ச்சிக்குப்பின் 14-ஆம் நூற்றாண்டிலிருந்து அடுத்து 16-ஆம் நூற்றாண்டுவரை விஜயநகராட்சியில் வணிகம் பெருகியது. பட்டடை, தறி, பேட்டை, கைக்கோலர், செக்குவாணியர், கம்மாளர் போன்ற கல்வெட்டுச்சொற்கள் இதற்கு சான்றாகின்றன. இதில், கைக்கோலர்கள் செல்வாக்கு பெற்றனர். இவ்வணிகர்களும், கைவினை குழுவினர்களும் சில சலுகைகளை பெற்றனர். கம்மாளர்கள் ஒன்றுதிரண்டு சலுகைகளை சாதித்துக்கொண்டனர். கைக்கோலர்கள் கோயில்களின் உள்ளகம் (*precincts*) எனப்படும் திருமடைவளாகத்தில் இயங்கும் உரிமைபெற்றனர். கோயில் வளாகங்களிலேயே தங்கள் தொழிலை செய்தனர். இவ்வாறு, நாயக்கர்கள் வணிகர்கள், கைவினைஞர்கள், கோயில்கள்மூலம் தம் இருப்பினை இறுத்திக் கொண்டனர். இது, சோழர்காலத்திலிருந்து பெற்ற பொருளியல் மாற்றமாகும்.

**புதிய நிலக்கிழார்கள் :** விஜயநகர் ஆட்சியில் பலவகையிலும் புதிய புதிய நிலக்கிழார்கள் தோன்றினர். அவர்கள் : நிலத்தினை வாங்கியோர், நிலத்தினை குத்தகைக்குபெற்றோர், அதிகாரத்தால் நிலத்தினை கைப்பற்றியோர், அப்போது புகுந்த படையணியினர். இம்மாற்றம் 15-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்தது. கவுண்டர்கள், கைகோலர்கள், மன்றாடிகள், ரெட்டிகள் போன்றோர் புதிதாகத் தோன்றிய நிலக்கிழார்கள். முதலியார்பிள்ளை, ரெட்டியார் நிலக்கிழார்கள் தங்களுக்குள் ஒருங்கிணைந்தனர். கம்மாளர்களுக்கு வரிச்சலுகையளித்தனர். இக்காலகட்டத்தில் புதியவேளாண்குடிகள் விரிவாக்கப்பட்டனர். குடியும் ஏற்றி என்ற கல்வெட்டுத்தொடர் இதனை விளக்குகிறது. இப்போக்கு நிலவுடைமைகள் அதிகரிக்க சாதிகள் அதிகரித்ததனையும் விளக்குகிறது. இதுவும் ஒருவகை பொருளியல் மாற்றமாகும்.

சாதி அடிப்படையிலான சிறுநிலக்கிழமை (*petty landlords*) வேளாண்குடிகள் (*cultivators*) என்று நிலமானிய முறையின் இன்னொருகூறாக அமைந்தது. காணியாளர் உரிமைபெற்ற பிராமணர், வெள்ளாளர் நிலவுடைமையாளர் ஒருபுறமும் ரெட்டிகள், செட்டிகள், கைக்கோலர்கள் இன்னொருபுறமும் வேளாண் குடிகளையும் கைவினைஞர்களையும் நசுக்கினர். ஆனால், 15-ஆம் நூற்றாண்டில் வேளாண் குடிகளுக்கும் (*cultivators*) நிலவுடைமையாளர்களுக்கும் முறைப்பாடு (*conflict*) எழவில்லை. 16-ஆம் நூற்றாண்டில் புதியகுடிகள் ஏற்படுத்தப்பட்டதால் புதிய நிலங்கள் விளைச்சலுக்கு கொண்டுவரப்பட்டன.

– தொடரும்

●

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ஆ. தனஞ்செயன்



# பேராசிரியர் தொ. ப. பன்மைத்துவப் புலக் கண்ணோட்ட ஆவணக்களஞ்சியம்

பாளையங்கோட்டைத் தூய சவேரியார் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் துறையில் பணியாற்றச் சென்ற காலம் தொட்டு, அந்த வட்டாரத்தில் நம்மை ஈர்த்த தனித்துமான மனித ஆளுமைகளில் ஒருவராக விளங்கியவர் பேராசிரியர் தொ. பரமசிவன் அவர்கள். சமூக அறிவியல் புலமான நாட்டார் வழக்காற்றியலின் பரந்துபட்ட நூற்புலமை வழியில் வியாபக வீச்சோடு நம்மை வியப்பில் ஆழ்த்திய பேராசிரியர் லூர்து ஒருபுறமென்றால், மறுபுறம் தமிழ் இலக்கியம், வரலாறு, தொல்லியல் எனப் பல்வேறு அறிவுப்புலச் சிந்தனைகளோடு, சமூகம், பண்பாடு தழுவிய ஆழ்ந்த பட்டறிவுத் தோய்வுடன் உரையாடுவதிலும் எழுதுவதிலும்தனித் தன்மையை வெளிப்படுத்தி, நம்மை வியந்து பார்க்க வைத்தவர் பேராசிரியர் தொ.ப. அவர்கள். தமிழ் இலக்கியமோ, வேறு எந்தவொரு புலமோ அது எதுவாயினும், ஒரு குறிப்பிட்ட கல்விப் புலம் சார்ந்து, ஏதேனும் ஒரு பொருள் பற்றிக் கருத்துப் பகிர்வில் ஈடுபடும் போது, அறிஞர்கள் பொதுவாகத் தங்களைப் பாரம்பரியப் புலமை மரபுக்குள் கட்டுப்பெட்டியாக ஒடுக்கிக் கொள்வார்கள். அத்தகைய கிழித்த கோட்டைத் தாண்டாத மனோபாவம் உடைய அறிஞர்களிடையே, புலங்களின் எல்லைகளைக் கடந்தவராக, பன்முகமான அறிவுப்புலச் சிந்தனைகள் விரவிய கருத்துருவப் படிமத்தோடு தொ. ப. தன்னியல்பாகத் தோன்றினார்.

இலக்கியம், சமூகம், பண்பாடு குறித்த அவருடைய எழுத்து அல்லது உரையாடல் ஊடாக வெளிப்பட்ட பொருளில் காணப்பட்ட கலவைப்புல, இழைவுக்கூறுகளின் புதிர்மையின் ஊடாக,அவரை இனங்காண முற்பட்டவர்களில் சிலர், அவரை ஏதேனும் குறிப்பிட்ட புலத்தின் வரம்புக்குள் அடக்க எண்ணி, அவரை மானிடவியலராகவும், வேறு சிலர் பண்பாட்டியல் அறிஞராகவும், மற்றும் சிலர் வரலாற்றியலராகவும் அவருடைய பெயரோடு தாம் விரும்பும் புல அடையாள முன்னொட்டு முத்திரைகள் இட்டு, இணைத்துநோக்கினர். ஆனால், அவரிடம் ஒரு நாட்டார் வழக்காற்றியலர் உடனியைந்தவராக இருந்ததை மட்டும்ஏனோ பலர் கடைசி வரையில் பார்க்கவில்லை. உண்மை என்னவென்றால், இவர்கள் அனைவரும் தொ.ப. என்னும் தமிழறிஞரிடம்தான் ஒன்றித்து நின்றனர்.

### புலங்களின் எல்லைகடந்தவர்

ஒரு தமிழ் இலக்கிய அறிஞர், சமூக அறிவியல் புலங்களின் ஒருங்கு திரண்ட வடிவமாக இயங்க முடியாதா? முடியும் என்னும் யதார்த்தம்தான் அறிஞர் தொ.ப. அவர்கள். இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில், மானிடவியல் புலத்தில் வரலாறு முதலிய ஏனைய கல்விப் புலங்களிடையே சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளும் வகையில் ஆய்வில் ஈரிடைப் பலநோக்கு (*Interdisciplinary perspective*) வலியுறுத்தப்பட்டது. அதனைக் கல்வி உலக வாழ்வின் இன்றியமையாத அடையாள முத்திரையாகப் பார்த்தனர். அத்தகைய ஆய்வுப் போக்கு தமிழ் இலக்கிய ஆய்வுலகிலும்அறிஞர்கள் கைலாசபதி, சிவத்தம்பி, வானமாமலை போன்றோரின் ஆய்வுகளின் ஊடாகஅழுத்தமான தனது தடத்தைப் பதித்தது. ஈரிடைப்புல நோக்கு, பண்பாட்டிடை ஒப்பாய்வு முதலிய ஆய்வுமுறைகள், மானிடவியல் ஏற்படுத்திய தாக்கத்தால் விளைந்தவையாகும். அம்முன்னோடித் தமிழறிஞர்களை அடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்த தலைமுறையினரிடம் அதன் தாக்கம் விரிவடைந்தது. அத்தலைமுறையினரில் குறிப்பிடத்தக்கவர் தொ.ப. அவருடைய நூல்களில் 'அழகர் கோயில்', 'அறியப்படாத தமிழகம்' மற்றும் தொகுப்பு நூல்களில் அடங்கிய பல கட்டுரைகள் போன்றவை ஈரிடைப்புல அணுகுமுறையைக் கொண்டவை.

**தொ.ப.வின் பேச்சுக் கலை**

பேராசிரியரின் பேச்சு அல்லது உரையாடல் என்பது ஒரு தனிவகைப் பாணியாகும். அதுவே பலரை அவரின்பால் ஈர்த்தது.ஆடம்பரமான மேடைப் பேச்சு வகைகள் அவரிடம் இருந்து என்றும் வெளிப்பட்டதில்லை. அரசியல்வாதிகளின் வெற்று அலங்காரப் பேச்சு, தமிழ்ப் பேராசிரியர்கள் பலருடைய விருப்பத்திற்குரிய பட்டிமன்ற, வழக்காடுமன்றப்பேச்சு வடிவங்கள் போன்றவை, பேராசிரியரின் நிழலைக் கூட அண்டுவதற்கு அவர் அனுமதித்ததில்லை. புலமைநடை அதிகம்தலைகாட்டாத பேச்சுவழக்கு மொழிஇயல்பாகக்கலந்த ஒருவகை உரையாடல் பாணியே அவருடைய கருத்துப் புலப்பாட்டுமுறையாக இருந்தது. அவருடைய பேச்சில், இலக்கிய மேற்கோள்கள், பழமொழி, குறுங்கதைகள் போன்றவை பேசும் பொருளின் தேவைக்கு ஏற்ப, அவ்வப்போது இடம்பெறுவதுண்டு. எப்போதும் அவருடைய உரையாடல் பாணி என்பது, அமரிக்கையான கருத்துப் பகிர்வுக்கானதனியொரு வடிவமாக இருந்தது.

அவருடைய 'அறியப்படாத தமிழகம்' தொகுப்பில் அடங்கிய இரண்டொரு பக்கங்களில் அமைந்த கட்டுரைகள் ஒவ்வொன்றும் அவருடைய வழக்கமான உரையாடலில் தெறித்து விழுந்த விவரணை நறுக்குகள் போல் தோன்றுகின்றன. நாட்டார் வழக்காறுகளில் குறுங்கூற்று வழக்காற்று வடிவங்கள் (*anecdotes*) என்பன அனுபவங்களை எடுத்துரைக்கும் விவரணைகள் ஆகும். அவற்றின் இயல்பை ஒருவகையில் பொருத்தி நோக்கத் தூண்டுபவையாக அறியப்படாத தமிழகம் நூற்கட்டுரைகள் உள்ளன. அவற்றை வாசிக்கும் ஒருவருக்கு, பேராசிரியரின் உரையாடல் நிகழ்த்துகையை நிச்சயம்நினைவூட்டும். அவருடைய உரையாடல் நிகழ்த்துகையின் நிலைபனுவல்களாக அக்கட்டுரைகளை ஒருவர் அனுமானிக்க முடியும்.

அறியப்படாத தமிழகம் நூலின் சிற்றுருவக் கட்டுரைகள் யாவும் திட்ப நுட்பம் செறிந்த சூத்திரம் போன்றவை. சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்ற உத்தியைத் தம்மியல்பிலேயே பிரதிபலிப்பவை. ஒரு புல்லின் நுனியில் படிந்திருக்கும் ஒரு சிறிய பனித்துளியானது, வெளியில் இருக்கும் ஒரு பெரிய பனைமரத்தைத் தன்னுள் அடக்கிக் காட்சிப்படுத்துவதைப் போல், அக்கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஆழ்ந்து, விரிந்தபொருட்பரப்பை நோக்கி நம்மை இட்டுச் செல்லக்கூடியவை. எடுத்துக் காட்டாகப் 'பிச்சை' என்ற கட்டுரையைக் குறிப்பிடலாம். தமிழ்நாட்டில் பிச்சை எடுக்கும் வழக்கம் எப்போது, எப்படி, எதனால், எவரால் புகுத்தப்பட்டது..? அவ்வழக்கத்தில் சமயங்களின் இடம் எத்தகையது? என்பன உள்ளிட்ட பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்களை எழுப்பி, விடை சொல்வதோடு, ஒருவரை ஆழமாகச் சிந்திக்கவும் சமூக-பண்பாட்டு நோக்கில் ஆராய்ந்து விவாதிக்கவும் நம்மைத் தூண்டக் கூடியது.

### சமணமும் பிச்சைக் கோட்பாடும்

நமது நாட்டில் பிச்சை எடுத்துப் பசியாற்றிக்கொள்ளும் இரப்போரின் எண்ணிக்கை மிகவும் அதிகம். பேருந்து, ரயில் நிலையங்கள், கோயில், தேவாலய வாயில்கள், சாலைகள், தெருக்கள் என்று எங்கும் வாடிய முகத்தோடு கையேந்தி நிற்கும் பிச்சைக்காரர்களை எதிர்கொள்வோரில் சிலர், இந்தப் பிச்சைக்காரர்கள் தொல்லை தாங்கமுடியலை என்று சலித்துக் கொள்வார்கள். ஓர் அரை நூற்றாண்டுக்கு முன்னரே தமிழ்நாட்டு அரசால் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. வேறு புகலிடமே இல்லை என்று கைவிடப்பட்ட நிலையில்தான் பெருந்திரளானோர் பிச்சை எடுக்கும் வழக்கத்திடம் புகலிடம் தேடினர். ஆனால், பிச்சை எடுக்கும் வழக்கம் தமிழர் மரபில் தொடக்கத்தில் இருந்ததில்லை என்பது தொ.ப.வின் வாதம். சமண, பௌத்த மதங்களிலும், சமணத்தின் தாக்கம் பெற்ற சைவ மதத்திலும் அதனதன் துறவற நெறியில் பிச்சை எடுப்பதுஇன்றியமையாத ஒன்றாக இருந்தது. சமண மதத்தில் சிட்சா தானம், ஔஷ தானம் உள்ளிட்ட ஐவகையான தானங்களில் அன்னதானமும் ஒன்று. பிச்சை என்ற வடமொழிச் சொல்லுக்கு மாற்றாக 'இரத்தல்', 'இரவு' என்பன போன்ற சொற்களைத் திருவள்ளுவர் கையாளுகிறார். "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" (இரவச்சம்) என்று இரத்தல் பற்றிய எதிர்மறைக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தும் திருவள்ளுவர், 'கொடுத்தல் நல்லது என்றாலும், பிறர்கொடுக்கும் பொருளைக் கொள்வது தீயது' என்றும் 'ஈகையின் பயனாக ஒருவருக்கு மேலுலகம் கிடைக்காது என்ற நிலை ஏற்பட்டாலும் பிறர்க்கு ஈவதே நல்லது' என்றும் கூறுகிறார்.

இரத்தல் என்பது திருவள்ளுவரால் நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் நோக்கப்படும் நிலையில், பிச்சை எடுப்பதை நிறுவன ரீதியாக முதன்முலில் சமணம் மட்டுமே அங்கீகரித்தது என்று தொ.ப. கூறுகிறார். பிச்சை எடுப்பதை இழிவானது என்று பழித்தாலும், மதங்கள் சார்ந்தும் சாராமலும் உலகெங்கும் பிச்சைக்காரர்கள் பல்கிக் காணப்படுகின்றனர். இந்தியவில் உள்ள இரவலர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம்.அவர்களுள் தங்களுடைய பூர்வீக நிலம், காடு முதலிய வாழ்வாதாரங்கள் நாட்டின் பல்வறு வளர்ச்சித் திட்டங்களால் பறிபோன நிலையில் மரபான உற்பத்தித் தொழிலைக் கைவிட்டு, நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்து சென்றவர்களில் கணிசமானோர் அலைகுடிகளாகவும் இரவலர்களாகவும் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டனர். இதைப் பற்றி ஜி.என். தேவி, திருடன் என்று அழைக்கப்பட்ட நாடோடி என்ற தமது நூலில் விரிவாகப் பேசுகிறார்.

சாமானிய மக்களின் சமூக வாழ்வில் வயோதிகம், நோய் முதலிய காரணிகளால் உடலுழைப்பில் ஈடுபட முடியாத நிலையில் சுற்றத்தாரால் கைவிடப்பட்டவர்களில் ஏராளமானோர் இரவலர்களாக ஆயினர். அத்தகைய இரவலர்களைப் பல்வேறு சமயங்கள் தத்தம் கருத்துக்களால் தத்தெடுத்து அரவணைத்துக் கொண்டன. இந்தியாவில் சமயப் பிச்சைக்காரர்களாக வாழ்வோர் எண்ணிக்கை மிகவும் பெரிது. அவ்வகைப் பிச்சைக்காரர்களைப் பற்றி சமயப் பிச்சை (*religious begging*)என்னும் பொருளில் சமூகவியல் புலமானது தனியே ஒரு பேசு பொருளாக விவாதிக்கிறது. தமிழ்நாட்டின் சாதிச் சமூகங்கள் சிலவற்றில் இரவலர்களைக் காணமுடியாது. கடலோர மீனவர் சமூகங்களில் இரவலர்களைக் காணமுடியாது. மீன்பாட்டிற்குச் செல்ல இயலாதவர்கள், முதியோர் போன்றவர்களுக்கு வலையில் பட்ட மீன்களில் ஒரு சிறிய அளவில் மீன்களைக் கொடுத்து ஆதரிக்கும் வழக்கம் இருந்தது. ஆனால், சுற்றுலாத் தலங்களாக ஆக்கப்பட்ட கடற்கரை ஊர்களில் அவர்களிலும் சிலர் இரவலர்களாகக் கையேந்துகின்றனர். இயற்கையோடு இயைந்து வாழும் இனக்குழுச் சமூகங்களில் பிச்சை எடுப்போரைக் காணவியலாது.

தமிழகத்தில் அனைத்துச் சமூகங்களும் பிச்சைஎடுப்பதைஒருமானப்பிரச்சினையாகவே கருதுகின்றன எனக் கூறும் தொ.ப. அவர்கள், அதன் பொருட்டே, வெவ்வேறு சூழல்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக்காரர்களாக ஆனவர்கள் உள்ளூரில் பிச்சை எடுப்பதைத் தவிர்ப்பதாகவும் கூறுகிறார். பிறரை இழிவுப்படுத்திப் பேசும் வசைச் சொற்களில் பிச்சைக்காரப்பயல், பரதேசிப்பயல் என்பன பொன்றவை அடிக்கடி இடம்பெறுவன. செல்வந்தர் சமூகங்களில் ஒன்றான நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்திலும் இரவலர்ளைக் காணவியலாது. இரந்துண்ணும் வழக்கத்தை மானப்பிரச்சினையாக நோக்கியவர்கள் அச்சமூகத்தினர். தங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர் என்று அவர்கள் திருவெண்காடர் என்ற பட்டினத்தாரைக் கொண்டாடுவர். அச்சமூகத்தினர் காவரிப் பூம்பட்டினம்- பூம்புகாரில் உள்ள பல்லவனீசுவரன் கோயிலில் ஆண்டு தோறும்கூடி நடத்தும் விழாவில், வாய்மொழி மரபு சார்ந்தபழமரபுக் கதையை அடியொற்றிய பட்டினத்தாரின் வாழ்க்கை வரலாற்றைச் சடங்கியல் நாடகமாகநடத்துவர். பெரும் வணிகரான பட்டினத்தாருக்கு, தத்துப்புத்திரனாக வந்த மருதவாணன் (சிவபெருமான்) பொருளின் நிலையாமையை உணர்த்தி மறைந்து விடுவார். அதுமுதல், "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்று அந்நிலையாமையை உணர்ந்தவராகத் துறவறம் பூண்டு, அரையாடையோடு தெருவில் திரிந்து, வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்துப் பசியாற்றிக் கொள்வார். கையேந்திப் பிச்சை எடுப்பதை ஒரு மானப்பிரச்சினையாகக் கருதிய அவருடைய அக்காள் தெருவில் வழக்கம்போல் பிச்சை எடுக்க வரும் பட்டினத்தாரிடம், விஷம் கலந்த அப்பத்தைக் கொடுக்கவே, அதைக் கையில் வாங்கிய உடனேயே அதில் நஞ்சு தோய்ந்திருப்பதை அறிந்து கொண்டவராக, "தன்வினைத் தன்னைச் சுடும். ஓட்டப்பம் வீட்டைச் சுடும்" என்று சொல்லியவாறு வீட்டுக் கூரையின் மேல் எறிவார். அப்பம் தீக்கங்காக மாறி வீட்டை எரிக்கும். ஊரார் தமக்கை வீட்டுத் தோட்டத்தைக் கொள்ளை அடிப்பார்கள். பிச்சாண்டவரான சிவபெருமன் சிலையோடு பட்டினத்தார் சிலையும் உடனிருக்க, பிச்சை எடுப்பதன் அடையாளமாக ரதத்தில் வீதியுலா சென்று திரும்பிய பின்னரே முன்னிரவில், அக்காள் வீடு கொள்ளை போதல் முதலிய காட்சிகள் அரங்கேறும்.

சமண முனிவர்கள் வீதியில் பிச்சை எடுத்துச் சென்ற வரலாற்றுக் காட்சியைப் பற்றிய தொ.ப.வின் விவரணைகள் பட்டினத்தார் பிச்சை எடுத்தமையை நமக்கு நினைவூட்டுவன. சித்தர்களில் ஒருவராகக் கருதப்படும் பட்டினத்தார், சமண மார்க்கத்தைச் சேர்ந்தராகவும் இருந்திருக்கலாம். ஏனெனில், நாட்டுக்கோட்டை நகரத்தார் முற்காலத்தில் சமண மதத்தைத் தழுவியவர்காளாக இருந்தனர் என்று எங்கோ படித்தது ஞாபகத்திற்கு வருகிறது. பட்டினத்தார் அரையாடையோடு பிச்சை எடுத்தார்; ஆனால், திருநாவுக்கரசரோ சமணத் துறவியாக, அரையில் ஆடையில்லாமல், திகம்பரராகத் தெருவில் பிச்சை எடுத்த வரலாற்றை அவர் பாடிய பாடலடியைக் கொண்டே தொ.ப. விவரிக்கிறார். "காவிசேர் கண்மடவார் கண்டோடிக் கதவடைக்கும் கள்வனானேன்" என்பது திருநாவுக்கரசரின் வாக்குமூலமாகும். அண்மைக் காலத்தில் சமணத் துறவிகள் ஆடையின்றிக் குழுவாகச் சாலையில் சென்றபோது, பகுத்தறிவு இயக்கத்தினர் அதனைக் கண்டித்துத் தடுக்க முனைந்த நிலையில், காவலர் பாதுகாப்போடு அவர்கள் தொடர்ந்து தம் வழியில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆனால், முற்காலத்தில் சமணத் துறவிகள் நிர்வாணிகளாகப் பிச்சை எடுக்க வந்த போது, பெண்கள் கதவைச் சாத்திக்கொண்டு வீட்டில் ஒளிந்து கொண்டனர். இரவலர்கள், சாமியார்கள் (துறவிகள்) அனைவருக்கும் பிச்சையிடுவது பெண்களின் கடமையாகவே இருந்து வந்திருப்பதைச் சுட்டிக் காட்டும்தொ.ப., மணிமேகலையின் அமுதசுரபியில் முதன்முதலில் ஆதிரையே பிச்சையிட்டுத் தொடங்கி வைத்ததை நினைவுகூர்கிறார். அன்னதானம் என்ற பெயரில் ஈதலாகிய பிச்சையிடுவதை ஒரு சமயச் சார்புடைய கோட்பாடாகச் சமணம் தொடங்கி வைத்த நிலையில், பின்னர், பௌத்தம், சைவம், வைணவம் முதலிய மதங்களும் அதனை ஏற்று நடைமுறைப்படுத்தின. தமிழ்நாட்டில் பிச்சை பற்றிய கோட்பாடு தோன்றி வளர்ந்த வரலாற்றைப் பரந்து விரிந்த ஆய்வாக ஒருவர் மேற்கொள்வதற்குத் தொ.ப.வின் 'பிச்சை' கட்டுரையாது ஒரு வீரிய வித்தாகும். இப்படிப் பல்வேறு வீரிய வித்துக்களைத் தம்முடைய நூல்களில் பேராசிரியர் தொ. ப. இட்டுச் சென்றுள்ளார். ●

கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | துருவன்

# உலகைக் கலக்கி வரும் சீனாவின் டீப்சீக்

deepseek

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பது போல, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் அமெரிக்க உலக நாடுகளுக்கு சவால் விட்டு வரும் வேளையில் அமெரிக்காவுக்கு ஆட்டம் காண்பித்துள்ளது சீனாவின் ஒரு நிறுவனம்.

சீன செயற்கை நுண்ணறிவு AI நிறுவனம், அதன் குறைந்த விலை, இலவசமாக தரும் பெரிய மொழி மாதிரிகள் (Large Langauge Model-LLM)மூலம் அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு சவால் விடுக்கிறது.

செயற்கை நுண்ணறிவு உலகில், முன்னணி-பெரிய மொழி மாதிரிகளை (LLM) உருவாக்குவதற்கு குறிப்பிடத்தக்க தொழில்நுட்பம் மற்றும் நிதி ஆதாரங்கள் தேவை என்ற கருத்து நிலவி வருகிறது. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்த 500 பில்லியன் டாலர் ஸ்டார்கேட் திட்டத்தை ஆதரிக்க அமெரிக்க அரசாங்கம் உறுதியளித்ததற்கான முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

ஸ்டார்கேட் திட்டம் என்பது அமெரிக்காவில் செயற்கை நுண்ணறிவு (AI) உள்கட்டமைப்பை உருவாக்க OpenAl, SoftBank, Oracle மற்றும் MGX ஆகிய கணினி தொழில்நுட்பத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் கூட்டு முயற்சியாகும். இந்த திட்டத்தை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஜனவரி 21, 2025 அன்று அறிவித்தார்.

### திட்டத்தின் நோக்கம்:

வேலைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவது.

மறு-தொழில்மயமாக்கலுக்கான முன்னெடுப்பு.

தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை

தரவு பகுப்பாய்வு, கண்காணிப்பு மற்றும் இணையப் பாதுகாப்பை மேம்படுத்தவது.

விநியோகச் சங்கிலி குறுக்கீடுகளைக் களைவது.

### திட்டம் செயல்படுத்தப்படும் விதம்

தரவு மையங்களை உருவாக்குவதுடன் அதனை இயக்குவதற்குத் தேவையான மின்சாரத்தை உருவாக்கவும்.

தரவு மையங்களை உருவாக்க மைக்ரோசாப்ட், என்விடியா மற்றும் ஆர்ம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுவது என்ற அடிப்படையில் ஸ்டார் கேட் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதற்கிடையே, சீன செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி நிறுவனமான டீப்சீக் அமெரிக்க நிறுவனங்களை ஆட்டம் காணச் செய்துள்ளது.

ஜனவரி 20, 2025 அன்று, DeepSeek அதன் R1LLM உருவாக்கத்திற்கு மற்ற விற்பனையாளர்கள் open AI போன்ற நிறுவனங்கள் செய்த செலவில் ஒரு பகுதியே செலவழித்துள்ளது. DeepSeek அதன் R1 (chatgpt 4.0 போன்ற) மாடல்களை இலவசமாக வழங்குகிறது, வெளியான சில நாட்களுக்குள், DeepSeek Al Assistant -- DeepSeek R1 க்கு சாட்பாட் இடைமுகத்தை வழங்கும் மொபைல் செயலி - OpenAl's ChatGPT மொபைல் செயலியை விட ஆப்பிள் ஆப் ஸ்டோர் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தது. பயன்பாடு மற்றும் பிரபலத்தின் அடிப்படையில் DeepSeek இன் பங்கு விலை மிகப் பெரும் உயர்வு கண்டது. இது, ஜனவரி 27, 2025 அன்று பங்குச் சந்தை விற்பனையில் கிடு கிடு உயர்வை கண்டது, ஏனெனில் முதலீட்டாளர்கள் Nvidia உட்பட அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்ட பெரிய Al விற்பனையாளர்களின் மதிப்பு அதிகரித்து காட்டப்படுவதாக கருதி டீப்சீக்குக்கு தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமெரிக்காவின் சாட் ஜிபிடி (ChatGPT) மற்றும் சீனாவின் டீப்சீக் (Deepseek) என இரண்டுமே நாம் அனுப்பும் தரவுகளை மனிதர்களை போல புரிந்து கொண்டு, அதற்கேற்ப பதிலளிக்கும். இவை சாதாரணமாக கட்டுரை எழுதுவது, ஆராய்ச்சி, கோடிங் என பல்வேறு பணிகளை இலகுவாக மேற்கொள்கிறது. சட்ஜிபிடியை போலவே டீப்சீக் AI யை செயலியாக பதிவிறக்கம் செய்தும் நேரடியாக இணையதளத்திலும் பயன்படுத்தலாம்.**

---

மைக்ரோசாப்ட், மெட்டா பிளாட்ஃபார்ம்கள், ஆரக்கிள், பிராட்காம் மற்றும் பிற தொழில்நுட்ப நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் செயற்கை நுண்ணறிவு மதிப்பீடுகளை மறுமதிப்பீடு செய்ததால் சுமார் ஒரு ட்ரில்லியன் டாலர் அளவிற்கு இழப்பீடு ஏற்பட்டது. மேலும், பங்குச் சந்தை மதிப்பு குறிப்பிடத்தக்க சரிவைக் கண்டது.

### DeepSeek என்றால் என்ன?

டீப்சீக் என்பது சீனாவின் ஹாங்சோவை தளமாகக் கொண்ட ஒரு செயற்கை நுண்ணறிவு மேம்பாட்டு நிறுவனம். மே 2023 இல் ஜெஜியாங் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான லியாங் வென்ஃபெங் என்பவரால் இந்த நிறுவனம் நிறுவப்பட்டது. டீப்சீக்கைச் சேர்ந்த சீனாவை தளமாகக் கொண்ட முதலீட்டு நிறுவனம் ஹை-ஃப்ளையரையும் வென்ஃபெங் இணைந்து நிறுவினர். தற்போது, டீப்சீக் ஹை-ஃப்ளையர் என்ற குடையின் கீழ் ஒரு சுயாதீனமான செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி ஆய்வகமாக செயல்படுகிறது. முழு நிதி மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை டீப் சீக் பகிரங்கமாக இதுவரை வெளியிடவில்லை.

அமெரிக்காவின் சாட் ஜிபிடி (ChatGPT) மற்றும் சீனாவின் டீப்சீக் (Deepseek) என இரண்டுமே நாம் அனுப்பும் தரவுகளை மனிதர்களை போல புரிந்து கொண்டு, அதற்கேற்ப பதிலளிக்கும். இவை சாதாரணமாக கட்டுரை எழுதுவது, ஆராய்ச்சி, கோடிங் என பல்வேறு பணிகளை இலகுவாக மேற்கொள்கிறது. சட்ஜிபிடியை போலவே டீப்சீக் AI யை செயலியாக பதிவிறக்கம் செய்தும் நேரடியாக இணையதளத்திலும் பயன்படுத்தலாம்.

தற்போது உலகளவில் அதிகமாக பதிவிறக்கம் செய்யப்படும் AI டூலாக இந்த டீப் சீக் உள்ளது. அது மட்டுமல்லாது டீப்சீக் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு வாரத்திலேயே அமெரிக்காவில் அதிகம் பதிவிறக்கம் செய்யப்பட்ட இலவச செயலியாகவும் மாறியுள்ளது. அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட செயற்கை தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது திடீரென பிரபலம் மற்றும் குறைந்த செலவு ஆகியவற்றால் நியூயார்க் பங்குச் சந்தையை இது ஆட்டம் காண வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. டீப்சீக் செயற்கை தொழில்நுட்பத்தை உருவாக்க 6 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மட்டுமே செலவு செய்யதுள்ளது. ChatGPT மற்றும் டீப்சீக் என இரண்டுமே இலவசமாகக் கிடைத்தாலும், சாட்ஜிபிடியில் நாம் பழைய பதிப்புகளை மட்டுமே இலவசமாக பயன்படுத்த முடியும். புதிய பதிப்புகளை பயன்டுத்த அதற்கு தனியாக கட்டணம் செலுத்த வேண்டும். ஆனால் டீப்சீக்கில் தற்போது அனைத்துமே இலவசமாகப் பயன்படுத்த முடியும் என்பது சிறப்பம்சமாகும்

டீப்சீக் ஓபன் LLM உருவாக்குவதில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. நிறுவனத்தின் முதல் மாதிரி நவம்பர் 2023 இல் வெளியிடப்பட்டது. நிறுவனம் அதன் முக்கிய LLM இல் பலமுறை திரும்பத் திரும்ப பல்வேறு மாறுபாடுகளை உருவாக்கியுள்ளது. இருப்பினும், அதன் R1 பகுத்தறிவு மாடலை வெளியிட்ட பிறகு ஜனவரி 2025 இல் நிறுவனம் உலகளவில் பிரபலமானது. இந்த நிறுவனம் அதன் மாதிரிகளுக்கு இணைய இடைமுகம், கைப்பேசி பயன்பாடு மற்றும் API அணுகல் உட்பட பல சேவைகளை வழங்குகிறது.

### Open AI vs. DeepSeek

2022 இல் ChatGPT இன் அறிமுகத்தின் மூலம் தன்னை ஒரு முன்னனி நிறுவனமாக நிலைநிறுத்திய OpenAI க்கு டீப்ஸீக் சாவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீ**னாவின் Deepseek AI தொழில்நுட்பம் பல மேற்கத்திய மாயைகளை தவிடுபொடியாக்கியுள்ளது. முதலீடு, பராமரிப்பு, செலவுகள் அதிகம் போன்ற கட்டுக்கதைகள் செல்லுபடியாகவில்லை. ஆராய்ச்சி மேம்பாட்டுக்கு (R&D) தோராயமாக வருடத்திற்கு 25 லட்சம் கோடி இந்திய ரூபாய் கணக்கில் சீனா செலவிடுகிறது. இந்தியா வெறும் 1 லட்சம் கோடி இந்திய ரூபாய் மட்டுமே செலவிடுகிறது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இந்தியாவும் போட்டியில் இருப்பதாக காட்டிக் கொண்டுள்ளதே தவிர மற்ற நாடுகளைப் போல இன்னும் முழு மனதாக அதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கவில்லை என்பது பரிதாபத்துக்குரியது. மற்ற நாடுகளிலிருந்து பெறப்படும் செயற்கை நுண்ணறிவு திறன்கள் தான் இந்தியா முழுவதும் தற்போது கோலோச்சி கொண்டிருக்கின்றன மத்தியில் ஆளும் அரசு குறிப்பிடும் சுயசார்பு இந்தியா என்ற திட்டத்தின் கீழ் இதுவரை பெரிய அளவில் எந்த விதமான மாற்றங்களையும் செய்யறிவுத் துறையில் கொண்டு வரவில்லை என்றும், செயற்கை நுண்ணறிவுத் துறைக்கு தேவையானதை செய்யவில்லை என்றும் இந்த துறை சார்ந்த இந்திய நிபுணர்கள் கூறுகின்றனர். தனிப்பட்ட முறையில் இந்தியர்கள் செயற்கை நுண்ணறிவு திறனில் சிறந்து விளங்குகின்றனர். அமெரிக்கா அதிபர் ட்ரம்பும் சென்னை தனியார் நிறுவனத்தில் பயின்ற ஒருவரை தனது செயற்கை நுண்ணறிவு பிரிவிற்கு ஆலோசகராக நியமித்துள்ளார். இந்தியர்களின் திறன் உலக நாட்டினருடன் ஒப்பிடும்போது மிகப்பெரிய அளவில் இருந்தாலும். இந்திய அரசு இன்னும் அதற்கான பணிகளில் இறங்கவில்லை என்பது வேதனைக்குரியது. இந்தியாவில் உள்ளதைப் போலவே சீனாவில் வாரத்திற்கு 40 மணி நேரம் வேலை, இரண்டு நாட்கள் விடுமுறை என்ற நிலை உள்ளது. ஆனால், சீனாவில் பணியாளர்களின் சராசரி மாத வருமானம் இந்திய ரூபாய் மதிப்பில் ஒரு லட்சம். இந்தியாவில் வெறும் ரூ 20, 000. உலகளவில் வெளியாகும் அறிவியல் ஆய்வுக்கட்டுரைகளில் 27 சதவீதம் சீனாவிலிருந்து வெளிவருகிறது.(இந்தியா 6%, அமெரிக்கா 14%). அறிவியல் ஆய்வுக்கான உலகின் முதன்மையான 10 பல்கலைகழகங்களில் ஏழு பல்கலைகழகங்கள் சீனாவில் இருக்கின்றன. மருத்துவம், கணினி, தகவல் தொழில்நுட்பம், ராணுவதொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் சீனாவின் ஆராய்ச்சியும், வளர்ச்சியும் மேற்கத்திய நாடுகளை பின்னால் தள்ளிவிட்டது. இந்தியாவில் சூரிய சக்திக்கான 95 சதவீத உபகரணங்களை வாங்க சீன நிறுவனங்களை சார்ந்திருக்கிறோம். இந்தத் துறையில் எந்த இந்திய நிறுவனமும் ஆய்வுகளுக்கு போதிய அக்கறையை செலுத்தவில்லை. தொழிற்நுட்ப வளர்ச்சி பற்றி எந்த புரிதலும் இல்லை. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் சில துறைகளுக்கு, கலை, இலக்கியம் மற்றும் படைப்பூக்க செயல்களுக்கு தோதுபடாது. ஆனால் மருத்துவம், தகவல் பரிமாற்றம், போக்குவரத்து, விண்வெளி போன்ற துறைகளில் முக்கிய பங்களிக்கப்போகிறது. அறிவியல் தொழிற்நுட்ப வளர்ச்சியில் சீனாவும் பிற நாடுகளும் வெகு தொலைவிற்கு சென்றுவிட்டன. இந்தியா அறிவியலையே கேள்வி கேட்டுக்கொண்டு கோமியம் குடிக்கச் சொல்லி அறிவியல் மற்றும் அறிவு சமூகத்திடமிருந்து விலகி நிற்கிறது. மேலும், பழம்பெருமை பேசி பின்தங்கி வருகிறது.

விடுத்துள்ளது. OpenAI அதன் GPT குடும்ப மாதிரிகள் மற்றும் அதன் 01 வகுப்பு பகுத்தறிவு மாதிரிகள் மூலம் உருவாக்கும் AI துறையை முன்னோக்கி கொண்டு செல்ல உதவுகிறது. இரண்டு நிறுவனங்களும் உருவாக்கும் செயற்கை நுண்ணறிவு மொழி மாதிரிகள் வெவ்வேறு அணுகுமுறைகளைக் கொண்டுள்ளன.

**டீப்சீக் எல்லாமே இலவசம்:**

இதில் 2 பகுதிகள் உள்ளன – முதலாவது செலவின் பாதை. மெட்டா LLaMA ஐ உருவாக்க பணத்தை தண்ணீராக செலவழித்தது, பின்னர் அதை ஓபன் சோர்ஸ் ஆக்கியது. DeepSeek செய்துள்ள முக்கிய விஷயம் என்ன என்றால், அந்த மைய தொழில்நுட்பத்தில் மாற்றங்களை கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் மாடல் பயிற்சி செய்வது மற்றும் inference செய்வது எளிதாகிறது. Inference என்பது நீங்கள் மாடலை பயன்படுத்தும் தருணத்தில் நடக்கும் கணக்கீடுகள் – நீங்கள் கேள்வி கேட்கும்போது அது உங்களுக்கு பதிலளிக்கிறது. Training என்பது மாடலை கட்டமைப்பதற்கான செயல்முறை, அதற்காக இணையத்தில் இருந்து சேகரிக்கும் அனைத்து தரவுகளையும் பயன்படுத்துகிறீர்கள். இதுதான் inference பங்களிப்பாகும்.

டீப்சீக்கைப் பயன்படுத்துவதும் எளிதாக உள்ளது சாட்ஜிபிடி போலவே டீப் சீக்கும் பல விஷயங்களை நமக்கு தேவையான வடிவத்தில் கொண்டு வந்து கொட்டுகிறது. மேலும் டீப்சீக்கினுடைய கோடுகள், அனைவரும் பயன்படுத்தும் விதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை | மு. பிரபு



அம்மா இறந்து கிடக்கிறார்
தலைமாட்டில் இருபுறமும்
மனைவியும்
மகளும்
அழுதுகொண்டிருக்கிறார்கள்

அஞ்சலி செலுத்த
வந்த உறவினர்களை
அழைத்துச் செல்கிறேன்

உறவினர்கள்
அஞ்சலி செலுத்திவிட்டு
எனக்கு ஆறுதல் கூறி
சென்றுகொண்டிருக்கிறார்கள்.

என் மகள் பாட்டியுடனான
உறவின்
நினைவுகளை பகிர்ந்தும்

பகுத்தறிவையும் பக்குவத்தையும்
ஊட்டி வளர்ந்த பாட்டியின்
இழப்பை தாங்காமல்
என் மகள் அழுதுகொண்டிருக்கிறாள்.

அம்மா இழப்பை
தாங்கமுடியாத எனக்கு
அம்மாவின் மறு உருவாய்
மகளிடம்

வாழ்ந்து கொண்டிருக்கும்
அம்மாவின் நினைவுகள்
என்னை ஆற்றுப்படுத்துகிறது.

இலவசமாக தரப்பட்டுள்ளதால், கோடுகளை மாற்றி அமைத்து தங்களுக்கு தேவையான புதிய தரவுகளையும் கூடுதலான விஷயங்களையும் கோடிங் விவரம் தெரிந்தவர்கள் செய்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

டீப் சீக்கின் மிகப்பெரிய பிரச்சினை என்பது இந்தியாவில் பயன்படுத்தினாலும் சரி, பூட்டானில் பயன்படுத்தினாலும் சரி அல்லது நியூசிலாந்தில் பயன்படுத்தினாலும் உங்களுடைய தேடல்கள் மற்றும் அதன் மூலமாக கிடைக்கக்கூடிய தரவுகள், நீங்கள் உள்ளீடு செய்யும் விஷயங்கள் ஆகியவை அனைத்தும் சீனாவில் உள்ள சர்வரில் சேமிக்கப்படும். எனவே ஒரு நாட்டில் என்னென்ன தேவைப்படுகிறது அதை எப்படி பூர்த்தி செய்வது என்ற தரவுகள் எல்லாம் சீனாவிற்கு எளிதாக கிடைத்துவிடும். இது பாதுகாப்பு அம்சத்தையே கேள்விக்குள்ளாக்கும். இதனால் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகள் டீப்சீக்கைப் பயன்படுத்த வேண்டாம் என்று மக்களை கேட்டுக் கொண்டுள்ளன. இந்திய அரசும் டீப் சீக்கு பயன்படுத்துவது குறித்த முன்னெச்சரிக்கை அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. இன்றைய கணினி செய்யறிவு யுகத்தில் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதர்களின் தரவுகள் மற்றும் தனிப்பட்ட விஷயங்கள் அனைத்தும் எங்கோ ஒரு மூலையில் உள்ள சர்வர்களில் பாதுகாக்கப்படுகிறது. அதை வைத்துக்கொண்டு எப்படி வேண்டுமானாலும் நம்மை சிக்கலில் சிக்க வைக்க முடியும். இந்தியாவில் ஏற்கனவே ஆதார் அட்டைகளின் விவரங்கள் அனைத்தும் மூன்றாம் நபரிடம் உள்ளன. அதை வைத்துக்கொண்டு அவர்கள் பல்வேறு ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டு வருவதும் இதன் மூலமாக பல்லாயிரம் கோடி கணக்கான ரூபாய் வருமான இழப்பும் ஏற்படுகிறது. மேலும், தனிநபர் பாதுகாப்பு உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவையும் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. அதே வரிசையில் தற்போது டீப்சீக் தொழில்நுட்பமும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்ற பயம் உள்ளது. இருப்பினும் இன்றைய அவசர யுகத்தில் செயற்கை நுண்ணறிவு சேவைகள் மூலம் வேலை மேலும் எளிதாகி வருவதையும் உணர முடிகிறது.

●

*கட்டுரையாளர்: எழுத்தாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ரூபன் சிவராஜா



## குடியேற்றவாசிகள் மீதான அமெரிக்காவின் ஒடுக்குமுறை!

# டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற கையோடு முடுக்கிவிட்டுள்ள நாடுகடத்தல்

**ட்ரம்பின் குடிவரவுக் கொள்கை எவ்வாறு நிறவாத அணுகுமுறை சார்ந்த – வெள்ளையினத்தவர்களை முன்னிலைப்படுத்தும் நீண்ட அமெரிக்க பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகவும் அவதானிகளாற் சுட்டிக்காட்டப்படுகின்றது. 1790 இல் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்துடன் (Naturalization act 1790) தொடங்கிய, வெள்ளையினம் அல்லாத மக்களை விலக்கி வெண்மையை ஆதரிக்கும் சட்டங்களின் நீண்ட பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகும். அந்தச் சட்டம் நாட்டின் புதிய குடியுரிமை நடைமுறைகளை வடிவமைத்தது. அமெரிக்கக் குடியுரிமையை வெள்ளையினக் குடியேற்றவாசிகளுக்கானதாக மட்டுப்படுத்தியது.**

அமெரிக்க - மெக்சிக்கோ எல்லை ஊடான சட்டவிரோத குடியேற்றங்கள் மற்றும் அனுமதியற்ற உள்நுழைவுகளைக் கட்டுப்படுத்தும் தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான உத்தரவுகளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் வெளியிட்டுள்ளார். சட்டவிரோதக் குடியேற்றத்தினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையைத் தீவிரமாக்கி அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய நாடுகடத்தலை (Deportation) செயற்படுத்தப் பலமுனைகளிலும் அரச நிர்வாகங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் 47வது ரொனால்ட் ட்ரம்ப் ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்றார். இது அவர் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்கும் இரண்டாவது முறையாகும். அவருடைய முதலாவது பதவிக்காலம் 2017 – 2021, பதவியேற்பினை அடுத்து வெள்ளை மாளிகையின் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து அவர் வெளியிட்ட முதலாவது அதிரடி உத்தரவு இதுவாகும்.

'தேசிய அவசர நிலை - National emergency' அறிவிக்கப்பட்டு, மெக்சிக்கோவுடனான அமெரிக்காவின் எல்லைகளுக்கு அமெரிக்கப்படைகளை அனுப்புவதற்கான நடவடிக்கைக்கு அனுமதியளிக்கும் உத்தரவிலும் கையெழுத்திட்டுள்ளார். தென்-எல்லையின் முழுமையான கட்டுப்பாட்டினை மீள்நிறுவுவதற்கு உட்துறை பாதுகாப்பு அமைச்சகத்திற்கு (Department of Homeland Security) உதவுவதற்காக ஆயுதப்படைகள் எல்லா வகையான பொருத்தமான நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென்பது ட்ரம்ப் கைச்சாத்திட்டுள்ள உத்தரவின் உள்ளடக்கமாகும். சட்டவிரோதமாக நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களைப் பாரிய எண்ணிக்கையிற் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளும் பெருமெடுப்பில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

### நாடு முழுவதும் தேடுதல், சோதனை, கைது, நாடுகடத்தல்

அமெரிக்க குடியேற்ற மற்றும் சுங்க அமலாக்க அலகு (Immigration and Customs Enforcement's – ICE) நாடு முழுவதும் 3500இற்கும் மேற்பட்ட அனுமதியற்ற குடியேற்றவாசிகளைக் கைது செய்துள்ளது. நாடுகடத்தல் விமானங்களையும் ட்ரம்ப் நிர்வாகம்; அனுப்பத் தொடங்கியுள்ளது – அமெரிக்க இராணுவ விமானங்கள் குடியேற்றங்கள் மூலம் கைதுசெய்யப்பட்ட குடியேற்றவாசிகள் அவர்களின் சொந்த நாடுகளுக்கு அல்லது மூன்றாவது நாடுகளுக்கு அனுப்பப்படத் தொடங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

341 மில்லியன் மக்கட்தொகையைக் கொண்ட அமெரிக்காவில் 11 மில்லியன் பேர் சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் அல்லது வதிவிட அனுமதியற்ற வெளிநாட்டவர்கள் என்று தரவுகள் தெரிவிக்கின்றன (Pew Research Center). பெருமெடுப்பிலான கைது நடவடிக்கைகள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போஸ்டன், பிலடெல்பியா, டென்வெர், அட்லான்டா, சியாட்டில், மியாம், நியூயோர்க், வோசிங்ரன் டி.சி உட்பட்ட நகரங்களிற் பெரும் தேடுதல்வேட்டைகளும்கைதுநடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ள்ளன. பிடியாணை இல்லாமல் மேற்கொள்ளப்படும் இக்கைதுகளில் அமெரிக்கக் குடியுரிமையுள்ளவர்களும் கைதுசெய்யப்படுவதற்கு எதிர்ப்புகளும் கிளம்பியுள்ளன. நியூ ஜெய்சி (New Jersey) மாநிலத்தின் Newark உட்டபட்ட பல நகரங்கள் செல்லுபடியாகும் வதிவிட அனுமதி இல்லாத வெளிநாட்டவர்கள் அதிகம் வாழும் நகரங்களாகும். இம்மாநிலங்கள் புகலிட

**341 மில்லியன் மக்கட்தொகையைக் கொண்ட அமெரிக்காவில் 11 மில்லியன் பேர் சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் அல்லது வதிவிட அனுமதியற்ற வெளிநாட்டவர்கள் என்று தரவுகள் தெரிவிக்கின்றன (Pew Research Center). பெருமெடுப்பிலான கைதுநடவடிக்கைகள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

அரசியல் சார் நடவடிக்கைகளில் அமெரிக்க மத்திய அரசுடன் ஒத்துழைக்க மறுத்து வருகின்றன.

சட்டவிரோதமாகத் தங்கியுள்ள வெளிநாட்டவர்களை நாடுகடத்தும் புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படும் மாநிலங்களின் பொதுச் சேவை அதிகாரிகள், பணியாளர்கள் மீது விசாரணைகளை நடாத்துமாறு ஜனவரி இறுதியில் ட்ரம்ப் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. அமெரிக்க ஆரசியலமைப்புச் சட்டத்தின்படி, மாநில அரசுகளை ஒத்துழைப்பு வழங்குமாறு மத்திய அரசு கட்டாயப்படுத்த முடியாது என நியூ யோர்க், கலிபோர்னியா, வோசிங்ரன், மாசசூசெட் உட்பட்ட 13 மாநிலங்களைச் சேர்ந்த அரச சட்டவாளர்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் டென்வர் (Denver) நகரின் வீதிகளில் இறங்கி, நாடுகடத்தல் தேடுதல்-சோதனை-கைது நடவடிக்கைகளுக்கு எதிரான கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இப்போராட்டங்களில் மக்கள் ஆவணமற்ற குடியேற்றவாசிகளுக்கான தோழமையினை வெளிப்படுத்தியதோடு, டிரம்ப் நிர்வாகத்தின் குடிவரவுக் கொள்கைக்கு எதிரான கோபத்தையும் வெளிப்படுத்தினர். குடியேற்றவாசிகளுக்கான சட்ட ரீதியான உரிமைகளையும் அவை குறித்த தகவல்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பகிர்ந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

போதைப்பொருட் கடத்தல், விநியோனத்துடன் தொடர்புடைய குழுக்களை வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளான அறிவிக்கும் உத்தரவிலும் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார். மட்டுமல்லாமல், தனது முதலாவது பதவிக்காலத்தில் அதிக நிதிச்செலவிற் கட்டத்தொடங்கிய உயரமான அமெரிக்க - மெக்சிக்கோ எல்லைத் தடுப்புச் சுவர்க் கட்டுமானப் பணியினை மீண்டும் தொடங்குவதற்குரிய உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத் தடுப்புச்சுவர்க் கட்டுமானம் பைடன் நிர்வாகத்தினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

#### புகலிடக் கோரிக்கை நிராகரிப்பு

திருப்பி அனுப்புதல் மட்டுமல்ல, சட்ட ரீதியாகப் புகலிடம் கோருவோரின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யும் நடவடிக்கைகளும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுகின்றது. அகதிகள் மீள்குடியமர்வுத் திட்டங்கள் முதற்கட்டமாக நான்கு மாதங்களுக்கு நிறுத்தி வைக்கப்படவுள்ளதோடு, புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்கள் பரிசீலித்து முடிவுகள் எட்டப்படும்வரை புகலிடக் கோரிக்கையாளர்கள் மெக்சிக்கோவில் காத்திருக்க வேண்டும் எனும் நடைமுறையும் அமுலாக்கம் பெறவுள்ளது.

தனது முதலாவது ஆட்சிக்காலத்திற்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயற்படுத்தத் தொடங்கிய "மெக்சிகோவில் தங்கவைத்தல்" கொள்கையை மீண்டும் அமுல்படுத்துவதாகவும் தனது பதவியேற்பு உரையின் போது தெரிவித்துள்ளார். அதாவது வடக்கு நோக்கி பயணம் செய்யும் பல்லாயிரக்கணக்கான புகலிடக் கோரிக்கையாளர்களின் அமெரிக்க குடியேற்ற நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெறும்போது, மெக்சிகோ எல்லையின் மெக்சிகோ நிலப்பரப்பிற்; காத்திருக்க வேண்டும் என்பதாகும். ஜோ பைடன் இந்தக் கொள்கையை நீக்கி புகலிடக்கோரிக்கையாளர்களை அமெரிக்க நிலத்திற் காத்திருக்க அனுமதித்தார்.

இந்நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகக் கடும்போக்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதான தகவல்களும் வெளியாகியுள்ளன. *425 431* வெளிநாட்டு குற்றவாளிகள் சட்டவிரோத குடியேறிகளின் தரவுத்தொகுப்பில் *(Database)* உள்ளதாக குடியேற்ற மற்றும் சுங்க ஆணையம் *(ICE)* தகவல் வெளியிட்டிருந்தது *(Nytimes, 27.11.2024 27.11.2024)*. இவர்களில் பல்லாயிரக் கணக்கானவர்கள் கொலைக் குற்றங்கள், பாலியற் குற்றங்கள் மற்றும் வன்முறைகளுக்காகக் தண்டிக்கப்பட்டவர்களாவர். குற்றவியற் பின்னணியைக் கொண்டவர்கள் மற்றும் ஏற்கனவே திருப்பியனுப்பும் உத்தரவு பெற்றவர்களை முதற்கட்டமாகத் வெளியேற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இந்நடவடிக்கைக்குச் சில மாநிலங்கள் சவாலாக உள்ளன.

## ஒத்துழைக்க மறுக்கும் மாநிலங்கள்

சட்ட விரோதக் குடியேற்றம் என்பது கடந்த 40 ஆண்டுகளாக அமெரிக்காவில் அனுமதிக்கப்பட்டவர்களைப் பற்றியது. ஆனாலும் பைடன் - ஹாரிஸ் நிர்வாகத்தின்மீது ஒட்டுமொத்தமாகப் பொறுப்புக்கூறிய தீவிர பிரச்சாரத்தை ட்ரம்ப் மேற்கொண்டிருந்தார்.

தற்போது 10 மில்லியனுக்கும் மேற்பட்டவர்களை நாடுகடத்தும் திட்டத்தினை ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ள சூழில், அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது சுலபமல்ல. குறிப்பாக டிரம்ப் நிர்வாகத்துடன் ஒத்துழைக்க பல மாநிலங்கள் மறுத்துள்ள நிலையில் இந்நடவடிக்கை சவால்களைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் அம்மாநிலங்களை வழிக்குக் கொண்டுவரும் நோக்குடன் அவற்றுக்கான நிதி வழங்கலை எவ்வாறு நிறுத்திவைக்கலாம் என்பது குறித்தும் ட்ரம்ப் தனது ஆலோசகர்களுடன் விவாதித்து வருவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன *(Washingtonpos, 26.11.2024)*.

அமெரிக்காவிலிருந்து சட்டவிரோத குடியேற்றவாசிகளைப் பெருந்திரளாகத் திருப்பியனுப்பும் திட்டமும் அதுசார்ந்த நடவடிக்கைகளும் அமெரிக்காவிற்குப் பெரும் சவால்களையும் பொருளாதார இழப்புகளையும் ஏற்படுத்தும். தற்போதைய சூழலில் நிலுவையிலுள்ள 3.7 மில்லியன் புகலிடக்கோரிக்கை வழக்குகளைக் கையாள நான்கு ஆண்டுகள் தேவைப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படுகின்றது. மேலும் டிரம்பின் திருப்பியனுப்பற் திட்டங்கள் வழக்குகளின் செயற்படுத்தற்காலத்தை 16 ஆண்டுகளாக அதிகரிக்கலாம் என்று மதிப்பிடுகின்றது(தரவு: *Axios*).

#### பொருளாதார விளைவுகள்

ஆண்டுக்கு 1 மில்லியன் மக்களை வெளியேற்றுவது கிட்டத்தட்ட 90 பில்லியன் அமெரிக்க டொலர் செலவை ஏற்படுத்துவதோடு பல துறைகளில், குறிப்பாக விவசாயத்தில் தொழிலாளர் பற்றாக்குறையை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகின்றது. 8 மில்லியன் வரையான சட்ட விரோதக் குடியேற்றவாசிகள் அமெரிக்காவில் பணிகளில் ஈடுபடுபவர்கள், அதாவது ஏதோவொரு தொழிலில் ஈடுபடுபவர்களாக உள்ளனர். இது நாட்டின் மொத்த வேலைவாய்ப்பில் 4.8 வீதமாகும். இத்தனை மில்லியன் தொழிலாளர்களைச் சடுமென வெளியேற்றுவதென்பது நாட்டின் பொருளாதாரத்திற் பாரதூரமான விளைவுகளை உண்டுபண்ணும் என்பது பொருளியல் நிபுணர்களின் கணிப்பாக உள்ளது. இது பாரிய தொழிற்சக்திப் பற்றாக்குறையை (தொழிலாளர் ஆளணிப் பற்றாக்குறை) ஏற்படுத்துவதோடு பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கின்றது. ஜனாதிபதி டிரம்பின் வணிகப் போர் மற்றும் குடியேற்றவாசிகளின் நாடுகடத்தல் நடவடிக்கைகள் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் வட்டி விகித ஏற்றத்திற்கு இட்டுச்செல்லும் என அமெரிக்க மத்திய வங்கி கவலை வெளியிட்டுள்ளது.

இதனைச் செயற்படுத்த அமெரிக்க குடியேற்ற மற்றும் சுங்க அமுலாக்கத்துறை முப்பதாயிராம் வரையான புதிய முகவர்களை நியமிக்க வேண்டும், அப்படி நிகழ்ந்தால் அத்துறை அமெரிக்காவில் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவில் மிகப்பெரிய வேலைவாய்ப்புத்தளமாக மாறும்.

ட்ரம்ப் தேசிய அவசரநிலையைப் பயன்படுத்தி இராணுவ வளங்களை இந்நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவார். அதாவது இராணுவம் திருப்பி அனுப்புவதற்காகக் கைதுசெய்யப்படுபவர்களை நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் கொண்டு செல்லும் பொறுப்பினை இராணுவம் ஏற்கக்கூடும். நாட்டின் உள்ளக எல்லைக்குள் காவல்துறையின் செயற்பாடுகளில் இராணுவம் ஈடுடுவது அமெரிக்கச் சட்டத்திற்குப் புறம்பானதாகும் ஆனால் சட்டத்தின் நெகிழ்வுத்தன்மை ஆதரவுத்தொழிற்கபடுகளில் இராணுவத்தினைப் பயன்படுத்த இடமளிக்கின்றது என நிபுணர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களில் 8 மில்லியனுக்கும் மேற்பட்டோர் தற்போது வேலை செய்கின்றனர். இது நாட்டின் மொத்த வேலைவாய்ப்பின் 4.8 சதவீதம். சில திட்டங்கள் சட்டவிரோத குடியேற்றவாசிகள் வேலை செய்வதை

**அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களில் 8 மில்லியனுக்கும் மேற்பட்டோர் தற்போது வேலை செய்கின்றனர். இது நாட்டின் மொத்த வேலைவாய்ப்பின் 4.8 சதவீதம். சில திட்டங்கள் சட்டவிரோத குடியேற்றவாசிகள் வேலை செய்வதை அனுமதிக்கின்றன. ஆனால் பலர் போலி ஆவணங்களைப் பயன்படுத்தியும், மேலும் பலர் தொழில்வழங்குவோர் ஆவணக்கோரலை நடைமுறையாகக் கொள்ளாததாலும் சட்டவிரோதமாக வேலை செய்யும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.**

அனுமதிக்கின்றன. ஆனால் பலர் போலி ஆவணங்களைப் பயன்படுத்தியும், மேலும் பலர் தொழில்வழங்குவோர் ஆவணக்கோரலை நடைமுறையாகக் கொள்ளாததாலும் சட்டவிரோதமாக வேலை செய்யும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இவர்களிற் பெரும்பான்மையினர் மிகவும் அடிமட்ட, ஆபத்தான மற்றும் குறைவான சம்பள வேலைகளையே செய்கின்றனர்.

பெருந்திரளாக குடியேற்றவாசிகள் வெளியேற்றப்பட்டால், பல துறைகளில், குறிப்பாக விவசாயத்தில், தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படும். விவசாயத்துறையில் நான்கில் ஒரு பங்கு தொழிலாளர்கள் விதிவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆவணமற்ற குடியேற்றவாசிகளாக உள்ளனர். மந்தமான பொருளாதார வளர்ச்சி, பணவீக்க அதிகரிப்பு உட்பட்ட பொருளாதார விளைவுகள் குறித்து பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

### நாடுகடத்தல் தொடர்பான பூர்வீக நாடுகளின் பதில்களும் எதிர்வினைகளும்

சட்டவிரோத குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதாக அமெரிக்காவின் முக்கிய கூட்டாளியும் எல்லை நாடுமான மெக்சிக்கோ உறுதியளித்துள்ளது. ட்ரம்பின் உத்தரவுகளுக்கு புகலிடக் கோரிக்கையாளர்களின் பூர்வீக நாடுகள் நாடுகள் பலவும் பதிலளித்துள்ளன. அந்நாடுகளின் பதில்களின் தொகுப்பாக ஒரு கட்டுரையினை அல்-ஜசீரா ஊடகம் '' தலைப்பில் திகதி வெளியிட்டிருந்தது. அதன் சாராம்சத்தினைப் பார்ப்போம். அந்நாடுகளிற் சில ட்ரம்பின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளன, சில நாடுகள் பேச்சுவார்த்தைகள் மூலம் பொருத்தமான உடன்பாட்டிற்கு வருவதற்கு முயற்சிக்கின்றன. இன்னும் சில நாடுகள் அமெரிக்கக் கோரிக்கையை எதிர்த்து சீனாவுடன் வலுவான உறவுகளை நாடுகின்றன. இங்கு பட்டியலிடப்படும் குடியேற்றவாசிகள் குறித்த தரவுகள் 2022ஆம் ஆண்டு பின்வரும் நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்குப் பயணித்தவர்கள் பற்றியதாகும்.

மெக்சிகோ: நான்கு மில்லியனுக்கும் மேற்பட்ட சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் மெக்சிகோவிலிருந்து அமெரிக்காவிற்குச் சென்றுள்ளனர். அமெரிக்காவால் நாடு கடத்தப்படவுள்ள தன் நாட்டைச் சேர்ந்தோரை ஏற்றுக்கொள்வதற்கு மெக்சிக்கோ உடன்பட்டுள்ளது. அத்தோடு தாயகம் திரும்புவோரை 'மெக்சிகோ உங்களை அணைக்கிறது' என்ற பதாகையின் கீழ் வரவேற்கும் ஆதரவுத் திட்டத்தையும் நிறுவியுள்ளது.

எல்-சால்வடார்: 750 000 சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் எல்-சால்வடாரிலிருந்து அமெரிக்காவுக்குப் பயணப்பட்டுள்ளனர். ட்ரம்ப், அந்நாட்டுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, எல்-சால்வடாரிலிருந்து அல்லாத நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் அமெரிக்காவில் அகதித் தஞ்சம் கோர அனுமதிப்பது தொடர்பான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அதன் பொருள் எல்-சார்வடாரினைத் தாயகமாகக் கொண்ட மக்கள் திருப்பியனுப்பப்படுவர் என்பதாகும்.

கொலம்பியா: 190 000 சட்டவிரோதக் குடியேற்றவாசிகள்; கொலம்பியாவிலிருந்து சென்றுள்ளனர். கொலம்பியாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையில் திருப்பியனுப்புதலுக்கான விமானங்கள் தொடர்பான விவகாரத்தில் சிறு முறுகல் நிலவியது. ஆனால் நாடுகடத்தப்படுவோரை ஏற்க கொலம்பியா ஒப்புக்கொண்டுள்ளது.

சீனா: 375 000 சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் சீனாவிலிருந்து சென்றுள்ளனர். உண்மிற் சீன மண்ணைச் சேர்ந்தவர்களை மட்டுமே திரும்ப ஏற்பதெனச் சீன கூறியுள்ளது. அதன் பொருள் சீனாவிலிருந்து சென்றதாகப் பொய் சொல்லி அமெரிக்காவில் குடியேற முற்பட்டவர்களைச் சீனா திரும்ப ஏற்காது என்பதாகும்.

இந்தியா: 725 000 சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்குச் சென்றுள்ளனர். ட்ரம்ப் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இது விவகாரம் குறித்து விவாதித்துள்ளனர். உரிய ஆவணங்களின்றி அமெரிக்காவில் உள்ள இந்தியப் பிரஜைகளை ஏற்றுக்கொள்வதாக இந்தியா உடன்பட்டுள்ளது.

குவாத்தமாலா: 675, 000 சட்டவிரோதக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றவாசிகள் அமெரிக்காவில் உள்ளனர். குவாத்தமாலா 2024 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து பல இராணுவ விமானங்களில் அந்நாட்டுக்கு நாடுநடத்தலை அமெரிக்கா தொடங்கியிருக்கின்றது.

ஹோண்டுராஸ்: 2022 ஆம் ஆண்டின் நிலவரப்படி, ஹோண்டுராஸில் இருந்து 525, 000 அனுமதியற்ற குடியேறிகள் அமெரிக்காவில் உள்ளனர். ஹோண்டுராஸ் டிரம்பின் திட்டமிட்ட நாடுகடத்தல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது மற்றும் அமெரிக்காவுடன் தங்கள் ஒத்துழைப்பு உறவுகளை மாற்ற மிரட்டியுள்ளது34.

பிரேசில்: பிரேசிலில் நாட்டைச் சேர்ந்த 230, 000 குடியேற்றவாசிகள் அமெரிக்காவில் உள்ளனர். புகலிடக் கோரிக்கையாளர்கள் மோசமாக நடாத்தப்படுவது குறித்து அமெரிக்காவிடம் பிரேசில் விளக்கம் கோரியுள்ளது.

பிலிப்பைன்ஸ்: பிலிப்பைன்ஸில் இருந்து 130,000 பேர் அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ளனர். அமெரிக்காவில் உள்ள பிலிப்பைன்ஸ் தூதுவர் சட்டவிரோதமாக அமெரிக்காவில் தங்கியுள்ள பிலிப்பைன்ஸ் நாட்டவர்களைச் சுயவிருப்பினடிப்படையில் நாட்டைவிட்டு வெளியேறுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

### நாடுகடத்தல் அமெரிக்காவிற்குப் புதிதா?

திருப்பி அனுப்புதல் நடவடிக்கைகள் அமெரிக்காவிற்குப் புதிதா எனும் கேள்வியை ஒருமுறை எழுப்புவோமானால் இல்லை என்ற பதிலே கிடைக்கும். ட்ரம்பின் முதலாவது (2017 - 2021) பதவிக்காலத்திலும் பெரும் எண்ணிக்கையானவர்கள் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றனர். அதற்கு முன்னர் பதவியிலிருந்த பராக் ஒபாமா காலத்தில் ட்ரம்ப் காலத்தை விட அதிகமான எண்ணிக்கையில் அனுப்பப்பட்டுள்ளனர். ஜோ பைடன் காலத்தில் 2023இல் மட்டும் 250 000 பேர் சட்டவிரோதமாக உள்நுழைந்துள்ளதாகவும் அது வரலாற்றில் மிகப்பெரிய உள்நுழைவு எனவும் கணிப்பிடப்படுகின்றது.

ஜோ பைடன் நிர்வாகம் எல்லையில் பெரும் அசம்பாவிதங்களையும் இரத்தக்களரியையும் ஏற்படுத்தியதோடு, பல கிரிமினல் குற்றவாளிகளை நாட்டுக்குள் அனுமதித்தது என்ற ட்ரம்பின் பிரச்சாரங்களுக்கு அமெரிக்க மக்கள் வெகுவாகச் செவிமடுத்தனர் எனப்படுகின்றது. அத்தோடு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கமலா ஹாரிஸ் தோல்வியடைந்தமைக்குத் துணைநின்ற காரணிகளில் இந்தப் பிரச்சாரமும் ஒன்று எனப்படுகின்றது.

### குடிவரவுக் கொள்கையின் வரலாறு

இது டிரம்பின் குடிவரவுக் கொள்கை எவ்வாறு நிறவாத அணுகுமுறை சார்ந்த - வெள்ளையினத்தவர்களை முன்னிலைப்படுத்தும் நீண்ட அமெரிக்க பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகவும் அவதானிகளாற் சுட்டிக்காட்டப்படுகின்றது. 1790 இல் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்துடன் (Naturalization act 1790) தொடங்கிய, வெள்ளையினம் அல்லாத மக்களை விலக்கி வெண்மையை ஆதரிக்கும் சட்டங்களின் நீண்ட பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகும். அந்தச் சட்டம் நாட்டின் புதிய குடியுரிமை நடைமுறைகளை வடிவமைத்தது. அமெரிக்கக் குடியுரிமையை வெள்ளையினக் குடியேற்றவாசிகளுக்கானதாக மட்டுப்படுத்தியது. குறைந்தது இரண்டு ஆண்டுகள் அமெரிக்காவில் வசித்த மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவர்களின் 21 வயதிற்குட்பட்ட அவர்களின் குழந்தைகளுக்கு குடியுரிமையை வழங்கிய சட்டம் அதுவாகும்.

உள்துறை பாதுகாப்புச் செயலர் கிறிஸ்டி நோயம் உட்பட்ட அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள், குடியேற்ற மற்றும் சுங்கத்துறையின் வீடுவீடான தேடுதல்கள், சோதனைகள், கைதுகள் மற்றும் குவாண்டனாமோ விரிகுடாவுக்கான நாடுகடத்தல்களின் ஒளிப்படங்களைச் சமூக ஊடகங்களிற் பரப்புகின்றனர். அதன் மூலம் அச்ச உணர்வினைப் பரவ விடுவது அவர்களின் நோக்கமாகும்.

### தீவிர நிறவாத ஒடுக்குமுறை

கருப்பு மற்றும் பழுப்பு நிற மக்கள் வெள்ளையர்களின் அமெரிக்காவிற்கு வரவேற்கப்படவில்லை என்ற தெளிவான -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியை டிரம்பின் குடிவரவுக் கொள்கை வெளிப்படுத்துகின்றது என்று ஹண்டர் கல்லூரி மற்றும் பட்டதாரி மையத்தில் சமூகவியல் இணை பேராசிரியரும் *'Refuge: How the State Shapes Human Potential'* நூலின் ஆசிரியருமான ஹெபா கவாயெட் *(Heba Gowayed)* அண்மையில் தி கார்டியன் பத்திரிகையில் எழுதிய ஒரு கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளார் *(The Guardian, 12.02.2025)*

இன அடிப்படையிலான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்திய சட்டங்களாக 1882இன் சீன விலக்கு சட்டம் *(Chinese Exclusion Act)* மற்றும் 1924இன் ஜோன்சன்-ரீட் *(1924 Johnson-Reed Act)* சட்டம் ஆகியவையாகும். இவை வெள்ளை - வெள்ளை அல்லாதவர்கள் என்ற உலகளாவிய இன அடுக்கினை *(Global racial hierarchy of 'white' and 'non-white')* நிறுவிய சட்டங்களுக்கான உதாரணங்களாகும்.

முதல் இன அடிப்படையிலான கட்டுப்பாடு 1882 சீன விலக்கல் சட்டமானது சீனர்கள் அமெரிக்காவுக்கு குடிபெயர்வதைத் தடை செய்ததோடு, அனுமதி இல்லாமல் நாட்டில் இருந்தவர்களை நாடுகடத்தவும் சட்டபூர்வ அனுமதி அளித்தது. இந்த மக்கள், தங்கம் ரயில்வே மற்றும் சுரங்கங்களில் வேலை செய்தவர்கள். அமெரிக்கர்களின் வேலைகளை அபகரிக்கின்றனர், போதைப்பொருட் கடத்தலில் ஈடுபடுவதாகவும்; ஒழுக்கக் குறைவானவர்கள் எனவும் அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இன அடிப்படையிலான கட்டுப்பாடுகள் 1924 ஜான்சன்-ரீட் சட்டத்தின் மூலம் விரிவாக்கம் கண்டன. 1890 ஆண்டின் மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் மொத்தத் தொகையில் 2 வீதத்தினர் மட்டுமே குடியேற முடியுமென்ற வரையறையோடு இன ரீதியிலான ஒதுக்கீடு இச்சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. ஆசியாவிலிருந்து குடியேற்றத்தைத் தொடர்ந்து தடை செய்ததோடு, அமெரிக்காவில் குடியுரிமை பெறத் தகுதியற்றவர்களென வரையறுக்கப்பட்டவர்களை, அதாவது வெள்ளை அல்லாதவர்களுக்கு அமெரிக்காவுக்கு உள்நுழைய அனுமதி மறுக்கப்பட்டது.

1965 குடியேற்ற மற்றும் தேசிய சட்டம் *(Immigration and Nationality Act)* இன ஒதுக்கீடுகளை நீக்கியது. ஆனால் வெள்ளை அல்லாத குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை எதிர்பாராத விதத்தில் அதிகரித்தது. 1965 இல் மக்கள் தொகையில் 84 வீதமாக இருந்த வெள்ளையினத்தவர் எண்ணிக்கை 2023இல் 58.4 வீதமாகக் குறைந்தது.

குடிவரவு அமலாக்கம் நீண்ட காலமாக கட்டுப்பாடற்ற இன அடையாளமிடலின் வரலாற்றைக் கொண்டுள்ளது, இது செப்ரெம்பர் 11இற்குப் பின்னர் உள்துறைப் பாதுகாப்பு அமைச்சகம், சுங்க மற்றும் எல்லை பாதுகாப்பு போன்றன நிறுவப்பட்டதையடுத்து மேலும் மோசமடைந்தது. டிரம்பின் முஸ்லிம் தடைக்கு முந்தைய காலத்தில், முஸ்லிம்கள் கூடுதல் சோதனை நடவடிக்கைகள் மற்றும் நாடுகடத்தலுக்கு இலக்காக இருந்தனர்.

நாட்டில் அனைத்து நிலைகளிலும் பாகுபாடுகள், நிறரீதியிலான ஒடுக்குமுறைகள் தொடர்கின்றன. பாடசாலைகளுக்கு நிதி கோரியும், காவல்துறையால் வெள்ளையினமல்லாத மக்கள் பாகுபாடாக நடாத்தப்படுதல், மற்றும் வேலைவாய்ப்பில் பாகுபாடு ஆகியவற்றை எதிர்த்து சமூகச் செயற்பாட்டாளர்களும் மனித உரிமைவாதிகளும் போராடி வருகின்றனர் என்பதையும் அக்கட்டுரையிற் குறிப்பிடுகின்றார்.

**உசாத்துணை:**

- *Trump's obsession with immigration is really an obsession with segregation | Heba Gowayed, The Guardian, 12.02.2025*
- *How are Trump's deportation targets reacting to his threats? | Al-Jazeera, 28.01.2025*
- *Trump declares national border emergency in immigration crackdown | The Guardian, Lauren Gambino, Alexandra Villarreal and Martin Pengelly, 21.01.2025*
- *Thousands protest against Trump's war on immigrants after Ice raids: 'Fight for our neighbors' | The Guardian, Josiah Hesse, 09.02.2025*
- *Newark Mayor outraged after immigration raid: "People are being illegally terrorized | NRK, Vilde Skorpen Wikan, 24.01.2025*
- *Trump has promised the largest mass deportation in history. | Aftenposten, Tor Arne Andreassen,* 14.01.2025

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | பா.பாவேந்தன்–இரா.விஜயன்



# எலான் மஸ்க்-டொனால்ட் ட்ரம்ப் இணைவும் மாறுகின்ற உலக அரசியல் பொருளாதார அரங்கமும்

நடந்து முடிந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்டு டிரம்புக்கு 200 மில்லியன் டாலர் கொடையளித்தவர் எலான் ரீவ்ஸ் மஸ்க் என்னும் உலகின் மிகப்பெரிய பணக்காரர். டெஸ்லா என்ற மின்சார வண்டி தயாரிப்பு, ஸ்பேஸ் X என்னும் விண்கலம் ஏவும் நிறுவனம், ஸ்டார்லிங்க் என்ற இணைய சேவை நிறுவனம், நியூராலிங்க் என்ற X AI செயற்கை நுண்ணறிவு நிறுவனம், முன்பு ட்விட்டர் என்றும் இன்று X என்றும் அழைக்கப்படும் சமூக ஊடகம்என்று பல கேந்திரமான துறைகளுக்குச் சொந்தக்காரர். டெஸ்லா மின்வண்டிகளின் மூன்று வடிவமைப்புகளை மூன்று கண்டங்களில் மீப்பெரும் ஆலை என்னும் கிகா பாக்டரியைக் கட்டித் தயாரித்து வருகிறவர். 2030 க்குள் அமெரிக்காவில் விற்கிற கார்களில் பாதி மின்வண்டிகளாக இருக்க வேண்டும் என்று அரசையே கொள்கைத் திட்டமிடவைத்த புத்திசாலி. ஒரே நேரத்தில் தன்னைச் சூழல் பாதுகாவலானாகக் காட்டிக் கொண்டு டெஸ்லாவின் அமெரிக்க ஐரோப்பியச் சந்தையைப் பாதுகாத்துக் கொள்வது என்ற இலட்சியத்தில் வெற்றி பெற்றவர். இன்று உலகசந்தைக்கென சீனத்தில் ஷாங்காயில் ஒரு ஆலை, பெர்லினில் ஐரோப்பிய சந்தைக்கு ஒன்று அமெரிக்க சந்தைக்கு ஐந்து எனக் கொடிகட்டி ஆளும் முதலாளி. அமெரிக்கமக்கள் வரிப் பணத்தில் பல நூறு பில்லியன் டாலர்களை ஆண்டுக் கணக்கில் விழுங்கி உருவான நாசா நிறுவனத்தின் விண்கலங்களை தன்னுடைய ஸ்பேஸ் X மூலமே ஏவ வேண்டுமென ஒப்பந்தங்கள் போடவைத்தவர். இத்தனை பெரிய சாதனையாளரை விமர்சித்து ஒரு கட்டுரை எழுதுவது மனித முயற்சி, அறிவு, வெற்றியனைத்தையும் கேள்விக்குள்ளாக்குவது ஆகாதா என்ற வினா எழுவது இயற்கையே. ஆனாலும் மஸ்கின் செயல் திட்டங்களின் கோரமுகம் அம்பலப் படுத்தப்பட வேண்டியதாக உள்ளது.

டெஸ்லா மின்வண்டிகளைத் தயாரிக்க சீன மூலப் பொருட்கள் வேண்டும். வடிவமைப்பில் முன்னேறியச் சீன மின்வண்டிகள் டெஸ்லாவை விட விலை மலிவானவை. அவற்றை அமெரிக்க முதலாளித்துவத்தின் புகழ் பெற்ற சுதந்திரச் சந்தை தடையற்ற போட்டி என்ற கோட்பாட்டின் கீழ் விற்கவிட்டால் டெஸ்லா போண்டியாகி விடும்.அந்த இருத்தலியல் குழப்பம் தீர்க்க மஸ்க் டிரம்பிற்க்கு இருநூறு மில்லியன் டாலர் படியளந்தார். டிரம்ப் ஒரு நில விற்பனை முதலாளியாக பல பில்லியன் டாலர்களைச் சம்பாதித்தவர். தனது போட்டியாளர்களை நசுக்கி அகற்றுவது ரியல் எஸ்டேட் வணிகத்தில் நீதி என்று பாலபாடம் படித்தவர். போட்டியற்ற சந்தை என்பது உண்மையில் போட்டியில்லா ஏகபோகத்துக்கே இட்டுச்செல்லும் என்ற மார்க்சீய விதியை வழுவின்றி நிரூபிக்கும் பெருமுதலாளிதான் டிரம்ப். அவரது முதல் ஆட்சிக் காலத்தில் சீனப் பொருட்களுக்கு இறக்குமதி வரியைக் கூட்டித் தனக்கு நிதியளித்த தொழில் அதிபர்களுக்கு விசுவாசத்தைக் காட்டியவர்.

உலகின் சகலப் பொருளாதாரச் சிக்கல்களுக்கும் சர்வரோக நிவாரணி என உலகமயமாக்கலையும் உலக வர்த்தகக் கழகத்தையும் காட்டி உலக நாடுகளின் பொருளாதாரத்தை அமெரிக்க ஐரோப்பிய நலன்களுக்கு ஏற்றதாக மாற்றினர்.கடந்த முப்பத்தி ஐந்து ஆண்டுகளாக லாபமீட்டித் தந்த தாராளமயம், தனியார்மயம் உலகமயம் என்ற நிகழ்ச்சிநிரல் முடிவுக்கு வரத்தொடங்கி விட்டது. அமெரிக்கப் பாதுகாப்பு வாதம் என்ற சக்தியின் முன் உலக வர்த்தக நிறுவனமும், பன்னாட்டு நிதி உதவி மையமும் அவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்திறனை இழந்து விட்டன. சீனா தைவான், கொரியா, இந்தியா, பிரேசில், என வளரும் நாடுகள் அதே உலகமயமாக்கலின் மூலமாகவே பண்ட வணிகப்பொருளாதாரத்தின் வழியேத் தங்களை வலுவாக்கிக் கொண்டன. மதிப்பும் வரவும் குறைந்துகொண்டேபோகிற *Law of diminishing returns* விதி செயல்படத் துவங்கியது. சுதந்திரச் சந்தை என்ற கனி அமெரிக்க ஐரோப்பிய நலன்களுக்குப் புளிக்கத் தொடங்கியதும் தங்கள் சந்தைகளின் கதவை பாதுகாப்பு வாதம் *trade protectionism* என்ற பாறாங்கல்லை வைத்து அடைக்க ஆரம்பித்தனர்.அதன் நேரடி சாட்சி எலான் மஸ்க்-டிரம்ப் இணைதான்.

இதற்கு முதலீடு செய்த கனவான் மஸ்க் சிறிது நட்டமும் அடைந்தார். அவரைப் போலவே அவரை விட அதிகமாக கரி எரிபொருள் *fossil fuel* முதலாளிகளும் ட்ரம்ப் மீது பணம் கட்டி இருந்தனர். அவர்களுடைய பங்காகத் தங்கு தடையற்ற எண்ணெய் எடுப்பு உரிமையை ட்ரம்ப் விட்டுக் கொடுக்க வேண்டி வந்தது. வண்டி தயாரிக்கும் நிறுவனங்கள் உள் எரி இயந்திர வடிவமைப்பை மாற்றாது சூழலைக் கெடுக்கிற கரி உமிழ்வு வண்டிகளைத் தொடர்ந்து தயாரிக்க முடியும்.உலகம் வெப்பமயம் ஆவதற்கு முக்கிய ஊற்றுமூலமாக இருக்கிற அமெரிக்கக் கார் உற்பத்தி தொடர்ந்து லாபமீட்ட முடியும். அதற்காக டிரம்ப் பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் *Paris Climate Accord* இருந்து அமெரிக்காவை விலக வைத்தார். மஸ்கின் டெஸ்லா அனுபவித்த அரசுக் கொள்கை ஆதரவு தற்காலிகமாகக் குறைந்தது. ஆனால் அதற்கு ஈடாக அரசின் செயல்திறன் மேம்பாட்டுக் குழுவின் *DOGE* தலைவர் ஆக மஸ்க் ஆக்கப் பட்டார்

மஸ்கின் ஆலோசனைப்படி உலக சுகாதார நிறுவனத்திற்கு *(WHO)* அளித்து வந்த உதவியை அமெரிக்கா விலக்கிக்கொண்டு விட்டது. பின்தங்கிய நாடுகளில் நிலவும் கொடும் நோய்கள், போரால் ஏற்படும் பேரழிவுகளுக்கு நிவாரணமளித்தல் போன்ற துறைகளில் இரண்டாம் உலகப் போரின் பின்வந்த மார்ஷல் திட்ட அடிப்படையில் அமெரிக்க மூலதனத்தின் மென்சக்தி *soft power* ஆகச் செயற்பட்ட *WHO* நிறுவனம் உறுப்புநாடுகள் தருகிற குறைந்த சந்தாப் பணத்தில் இருந்து வீச்சோடு செயல்பட முடியாது. தேவைப் படுகிறநாடுகளுக்குக் கூலிக்குத் தர தன்னிடமுள்ள இராணுவ பலம் மட்டுமே போதும் என்பதே ட்ரம்ப் மஸ்கின் கோட்பாடு. அதன் வெளிப்பாடே உக்ரைன் போருக்களித்த உதவி நிறுத்தம், ஐரோப்பா உக்ரைன் இன்றியே சவூதி அரேபியாவில் ரஷ்யாவிடம் பேச்சு வார்த்தை, காசா பாலஸ்தீனர்களை வெளியேற்றி அங்கே *French Riviera* உருவாக்கம் ட்ரம்பே செய்து அளிப்பார் என்ற சவடால்கள் எல்லாம்

*USAID* என்ற அமெரிக்க உதவி நிறுவனம் நம் பள்ளிகளுக்கு ஒருகாலத்தில் வந்த கோதுமைப் பெட்டிகள் மூலம் நினைவில் இருக்கக் கூடும். இன்றும் பல ஆப்பிரிக்க நாடுகளின் பசியாற்றும் அந்த நிறுவனத்தை மூடுவதாக மஸ்கின் ஆணை வந்துள்ளது. அந்த அமைப்பே கிரிமினல் தன்மையுடைய செத்தொழிய வேண்டிய ஒன்று என்று மஸ்க்அறிவித்தார். அமெரிக்கா உலக மக்களுக்குச் செய்திருக்கும் பாவங்களுக்குக் கழுவாயாக ஆண்டுக்கு பல பில்லியன் டாலர்களைச் செலவிட்ட அந்த நிறுவனம் இனி அரசு உள்துறையின் அங்கமாகச் செயல்படும். மஸ்கின் பார்வையில் *WHO* பாலஸ்தீனர்களுக்கு அளித்த ஐந்து மில்லியன் டாலர் உதவி குற்றச்செயல். இஸ்ரேலுக்காக எண்பது பில்லியன் டாலர் போருக்குக் கொடுத்தது புண்ணியம். *OXFAM Amnesty* இன்டர்நேஷனல் போன்ற சேவை அமைப்புகள் இவ்வாறு ஒரு கூட்டரசின் நிறுவனத்தை காங்கிரஸ் சட்டம் மூலமாகவே முடக்க முடியும் தனிநபர் ஆணைகள் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானவை எனக் கண்டனம் தெரிவித்தும் மஸ்கும் டிரம்பும் அமெரிக்காவை பழையபடி மகிமை மிக்கதாக மாற்றும் *MAGA [Making America Great Again]* திட்டத்தில் இருந்து பின்வாங்குவதாக இல்லை. *[*இதிலே ஒட்டிக்கொண்டு நம்மூர் மோடி *MIGA +MAGA =MEGA* என்று பிளிறியது வேறு கதை.*]* அரசை ஒரு வணிக நிறுவனம் போல் லாப இலக்கோடு மட்டும் நடத்துவது என்ற மஸ்கின் கைகளில் தரப்பட்டு உள்ளது.

இன்றைய உலகில் செய்திகள் உருவாக்கமும் நுகர்வும் சமூக ஊடகம் சார்ந்துதான் உள்ளன. அதற்காகவே ட்விட்டர் நிறுவனத்தை அதன் மதிப்புக்கும் மேலாக 44 பில்லியன் டாலர் காசு கொடுத்து மஸ்க் வாங்கினார். அதன் வழி நமக்குக் கிடைக்கும் செய்திகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிகட்டவும் தணிக்கை செய்யவும் முடியும். மஸ்குடன் போட்டிபோட நாம் காணும் முகநூலின் மெட்டா நிறுவனத்தின் சுகர்பெர்க் முகநூலில் வரும் செய்திகளின் உண்மையைச் சோதிக்கிற பிரிவை ட்ரம்ப்பின் ஆட்சி வந்த உடனேயே இழுத்து மூடி விட்டார். உலகெங்கணும் புற்று போலப் பரவி வருகிற வலதுசாரிகளின் மெய்போலும்மே *post truth* வகைச் செய்திகளை இனி நாம் பரிசீலனைஇன்றி நுகர வேண்டி வரும். அமெரிக்க அதிபர் தேர்தலில் மஸ்கின் *X* நிறுவனம் ட்ரம்ப் ஆதரவுக் கருத்துருவாக்குவதில் பெரும் பங்காற்றியது. சாம் அல்ட்மேனின் செயற்கை நுண்ணறிவு நிறுவனத்தை தானே வாங்கிக் கொள்வதாக மஸ்க் கூவியும் அல்ட்மேன் ஏற்கவில்லை.

மஸ்கின் *Starlink* விண்கோள்கள் உலகின் பலபகுதிகளுக்கு இணைய சேவை அளிக்கின்றன. 2022 அக்டோபரில் மஸ்க் உக்ரைன் போரின் போது மாதம் ஒன்றுக்கு 20 மில்லியன் டாலர் செலவாவதால் அமெரிக்க அரசோ பிறரோ அந்தக் கட்டணத்தைச் செலுத்தினால்தான் தன்னால் உக்ரைன் பகுதிக்கு இணைய சேவை வழங்க முடியும் என மஸ்க் மிரட்டினார். அமெரிக்கா உள்ளிட்டு உலகெங்கணும் எழுந்த கடுமையான கண்டனங்களால் பின்வாங்க நேரிட்டது.

இப்படிப்பட்ட மனிதாபிமானியின் கனவுத் திட்டம் 2050க்குள் விண்வெளியில் உள்ள கோள்களில் மனிதர்களைக் குடியேற்றுவது ஆகும்.ஏற்கனவே நாசாவுடன் இணைந்து நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் *Artemis* ஆர்தெமிஸ் திட்டத்தில் *Space X* செயல்படுகிறது. செவ்வாய் கிரகத்தில் சூழல் மாற்றம் *terraforming* செய்து நீர் உணவு குடியிருப்பு போன்றவைகளை நிறுவுதல் அதற்கேற்ப பலமுறை பயன்படுத்தக்கூடிய உந்திகளை *rocket boosters* வடிவமைப்பது என்று இலக்கு வைத்து உள்ளனர். ஒட்டுமொத்த மனித நாகரிகத்தையும் புவியை விடபெரிதான செவ்வாய்க்கு அழைத்துப் போகமாட்டார். அவரது வரையறைப்படி ஒருமுறைக்கு நூறு பேர் மட்டுமே செல்ல முடியும். உலகைச் சூறையாடிய இந்த முதலாளிகள் இந்தக் கோளை வாழத் தகுதியற்றதாக மாற்றி விட்டனர். அவர்களில் பொறுக்கி எடுத்த பெரும்பணக்காரர்கள் மட்டும் செவ்வாயில் குடியமர்த்தப் படுவர். செயற்கை நுண்ணறிவு, தன்னைத்தானே உற்பத்தி செய்து கொள்ளும் எந்திரங்கள் திட்டமிட்ட உணவு உற்பத்தி ஆகியவற்றின் மூலம் மானுடத்தின் ஒரு சிறு பகுதி மட்டும் மனித நாகரிகத்தின் தொடர்ச்சியை வேறொரு கோளில் உறுதி செய்யும். அதனால் புவிவெப்பமானாலோ வாழத் தகுதியற்றதாக மாறினாலோ அவர்களுக்கு அதில் அக்கறை இல்லை.வேறு கோள்களில் குடியேறத் தகுதி மானுடம் அல்ல, அதற்குப் பயணச் சீட்டு எடுக்கும் பணம் அதிகாரம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதே. பணமில்லாதவர்கள் வாழத் தகுதியற்றவர்கள் என்ற சமூக டார்வினியக் கோட்பாடே அவரை இயக்குகிறது.

பரிணாமத்தை விளக்க "வலிமையுள்ளதே வாழும்" *(Survival of the fittest)* என்ற சொற்றொடரை சார்லஸ் டார்வின் உருவாக்கவில்லை. *1864* இல் ஹெர்பர்ட் ஸ்பென்சர் என்ற ஆங்கில சமூகவியலாளர் தனது உயிரியலின் கோட்பாடுகள்*Principles of Biology* என்ற நூலில் அந்தத் தொடரைப் பயன்படுத்தினார். *1859* இல் டார்வின் வெளியிட்ட உயிரினங்களின் தோற்றம் *The origin of species* என்ற புகழ் வாய்ந்த நூலின் முதல் ஐந்து பதிப்புகளில் இயற்கைத் தேர்வு *Natural Selection* என்ற தொடரையே பயன்படுத்தினார். *1869* இல் இருந்து வெளியான பதிப்புகளில் அதாவது பத்து ஆண்டுகளின் பின்பே ஸ்பென்சரின் தொடரைப் பயன்படுத்தினார். ஹெர்பர்ட் ஸ்பென்சர் பரிணாமக் கொள்கையைச் சமூக அறிவியலில் பயன்படுத்திக் காலனியம், இனங்களில் ஆங்கிலோ சாக்சோனிய உயர்தனி நிலை *Anglo Saxon exceptionalism*, ஆப்பிரிக்க அடிமை உழைப்பு இவற்றை நியாயப்படுத்தினார். சமூக டார்வினிசம் என்றழைக்கப்பட்ட அக் கொள்கையை டார்வின் ஏற்கவில்லை. டார்வின் தனது பரிணாமக் கொள்கை சமூகங்களின் வளர்ச்சியை விளக்கப் பயனற்றது என்றுதான் கூறிவந்தார். வலிமையான, செல்வமிக்க, சுயநலமிக்க மூர்க்கம் நிரம்பிய, மனிதாபிமானம் பாராதத் தனிநபர்கள் மட்டுமே உயிர் வாழத் தகுதி உடையவர்கள் என்ற தவறான சமூக டார்வினியக் கோட்பாட்டையே எலான் மஸ்க்கும் ட்ரம்ப்பும் இன்று முன்வைக்கிறார்கள். இருப்பினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிணாம வளர்ச்சியின் சூழலில், "பொருத்தமானவை" என்பது அவற்றின் சூழலுக்கு மிகவும் நன்றாக பொருந்தக்கூடிய உயிரினங்களைக் குறிக்கிறது. இதில் ஒத்துழைப்பு, நுண்ணறிவு, இனப்பெருக்கத் திறன், சமூகக் கூட்டு உழைப்பு போன்ற பண்புகள் அடங்கும். உடல் வலிமையோ அல்லது பொருளாதார ஆதிக்கத்தையோ பரிணாமத்தின் அடிப்படைப் பண்பு அலகு என்று குறிக்க முடியாது.

முன்னேறிய செயற்கை நுண்ணறிவும், மிகக்குறைந்த மனித உழைப்பு தேவைப் படும் தானியங்கித் தொழில் நுட்ப ஆலைகளின் வளர்ச்சியும் ஆய்வகங்களில் உருவாக்கப் பட்ட இறைச்சி, உணவுப் பொருட்கள், நிலம் தேவையின்றி காற்று நீரால் வளர்க்கப் படும் தாவரங்கள் *hydroponics*, மின்னால் பகுத்த அல்லது காற்றில் இருந்து உற்பத்தி செய்யும் செயற்கைக் குடிநீர் முதலியவையும் அவற்றின் வானளாவிய விலை ஒரு பொருட்டேயில்லாத மஸ்க்-ட்ரம்ப் கும்பல் அமைக்கிற காலனிய உலகிற்குப் போதுமானவை.

சீனாவிலும் பெர்லினிலும் அமெரிக்காவிலும் உள்ள தனது ஆறு கிகா ஆலைகளில் 2023 இல் எண்பத்தி ஒரு பில்லியன் டாலர்களை ஒன்றேகால் மில்லியன் மின்வண்டிகள் தயாரித்து ஈட்டிய டெஸ்லா நிறுவனம்உலக அளவில் மொத்தம் ஐம்பதாயிரம் தொழிலாளர்களையே பணியில் அமர்த்தி உள்ளது. ஒப்பீட்டு அடிப்படையில் 1907 இல் தொடங்கி ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பல ரக வாகன உற்பத்தியில் ஈடுபடுகிற போர்டு மோட்டார் நிறுவனம் 2023 இல் உலக அளவில் ஒன்றே முக்கால் லட்சம் பேரைப் பணியில் ஈடுபடுத்தி பதினெட்டு பில்லியன் டாலர்களை மட்டுமே ஈட்ட முடிந்தது. போர்டு நிறுவனத்தை விட மூன்று மடங்குக்கும் குறைவான தொழிலாளர்களை வைத்துக்கொண்டு மஸ்க் நாலரை மடங்கு டெஸ்லாவில் இருந்து மட்டும் லாபமீட்டுகிறார். சுற்றுச்சூழல் அழிவைக் குறைக்க புவி வெப்பமயமாதலை இரண்டு டிகிரி குறைக்க வேண்டும் என்று பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து விலக ட்ரம்ப் ஆணையிடுவதும் மேலும் மேலும் எண்ணெய் எடுப்போம் என்று சாதிப்பதும் அவர்களுக்கு இந்தப் புவியின் அழிவு ஒரு பொருட்டல்ல என்பதையே காட்டுகிறது. முதலாளித்துவம் இயற்கையைச் சீரழிக்காது உற்பத்தி செய்ய முடியாது என்று மார்க்ஸ் குறிப்பிட்டது இங்கு நினைவிற்கொள்ள வேண்டிய செய்தி. அப்படிப் புவி அழிந்து படுமேயானால் தாங்கள் மட்டும் தப்பித்துக்கொள்ளக் வேறு கோள்களையும் காலனியாக்கக் கனவுத் திட்டம் போடுகிறார்கள். அதற்கு தொழில்நுட்ப ரீதியில் பெற்றுள்ள மாபெரும் வளர்ச்சிகள் துணை நிற்கின்றன. மஸ்க் மட்டுமல்லாது அமேசானின் ஜெப் பிசோசும் தானே விண்கலம் ஏவும் திறன் பெற்றுள்ளார். ட்ரம்ப்பின் பதவி ஏற்பு விழாவில் முன்னணியில் இருந்து கலந்து கொண்டவர்கள் பல அமெரிக்கப் பெருநிறுவனங்களின் உயர் மட்ட அதிகாரிகள்தான். அவர்கள் அனைவருமே செயற்கை நுண்ணறிவு உருவாக்கம், குவாண்டம் கணக்கீடு, நாசாவுடன் தொழில்நுட்ப உறவு என்று ஒரு ஆய்வு நிகழ்ச்சி நிரலோடு இயங்குகிறார்கள்.

இவையெல்லாம் நடக்குமா என்று கேட்டால் அரசு அதிகாரத்தின் துணை, வரம்பில்லாத பொருளாதார பலம், ஆய்வுகளுக்கு என்று உலகின் எல்லா மூலைகளிலும் இருந்து திரட்டப் பட்டுள்ள ஆகச் சிறந்த ஆராய்ச்சி நிபுணர்களின் மூளை, தங்கள் லாபத்துக்கு உலக நாடுகளை மிரட்டிப் பணிய வைத்து சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டங்களை எல்லாம் தூக்கிக் குப்பையில் போடும் மூர்க்கம் நிரம்பிய ஒரு கும்பலின் சாத்தியக்கூறுகள் அனைத்துமே வரம்பின்றி இயங்குகிற அரசியல் பொருளாதாரத்தில் தான் நாமும் இயங்குகின்றோம் என்ற எதார்த்தத்தையும் கணக்கில் கொண்டுதான் ஆக வேண்டி உள்ளது.

ஒருபுறம் இங்கிருந்து அற்பக் கூலிக்குக் குடிபெயர்ந்தோரை விலங்கிட்டுத் திருப்பியனுப்பும் ட்ரம்ப் மஸ்க் இணையை மோடி சென்று முகமன் கூறிய பின் இந்தியா மின்வண்டிகளுக்கு நூறு சதவீதம் என இருந்த இறக்குமதி வரியை பதினைந்து சதமாகக் குறைத்துவிட்டது. மும்பையிலும் டெல்லியிலும் டெஸ்லாவின் விற்பனைக் கூடங்களுக்கு இந்தியாவில் ஆள் எடுக்கிறார்கள். இந்த இரட்டை வேடம்தான் அரசியல் பொருளாதரத்தில் *MEGA* என்று உணர்ந்து செயலாற்றுவோம்.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முடியில்லா பிரச்சனைகளுக்கு தீர்வு

THE ZUSANNLI GROUPS
TZG
Since 1992

# NAYAGARA
## HAIR GRIP OIL

# மூச்சு குழாயின் சுவாசம் இலேசாகும்!
# ஆயுர்வேதம் தந்த அற்புதம்

மூலிகை ஆராய்ச்சியில் 33 வருடங்களாக ஈடுபட்டுள்ள மூலிகை ஆராய்ச்சியாளர் மற்றும் 15 வருடங்களாக ஆயுர்வேதத் துறையில் உள்ள ஆயுர்வேத மருத்துவர் ஆகியோரின் அற்புதமான தயாரிப்பு **ஸ்வாசஃப்ரீ.**

**நாட்பட்ட ஆஸ்துமா, சளி, இருமல், தும்மல் உள்ளிட்ட நுரையீரல் சம்மந்தப்பட்ட அனைத்திற்கும் மிகச்சிறந்தது.**

கொரியர் / தபாலில் அனுப்பி வைக்கப்படும்.






கிடைக்குமிடம் :

## வெற்றி விநாயகர் மெடிக்கல்ஸ்

தி சுசான்லி அக்குபஞ்சர் & ஆயுர்வேதிக் கிளினிக் வளாகம்,
11-A, பாரதிதாசன் தெரு, பிள்ளையார் கோயில் எதிரில்,
மஞ்சக்குப்பம், கடலூர்-1.

**செல் : 93676 22248, போன் : 04142-355418**

மேலும் விபரங்களுக்கு : **96003 09546, 93676 22256**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.எட்வின்

# 65/66

பெரம்பலூர் புத்தகக் கண்காட்சி நிறைவுற்ற இரவு. நான், இந்திய மாணவர் சங்கத்தின் பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் தோழர் ராமகிருஷ்ணன் மற்றும் திருப்பூர் தோழர் தங்கவேல் ஆகியோர் பாரதி புத்தகாலய ஸ்டாலில் அமர்ந்து கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்போது அங்கு இரண்டு நண்பர்கள் வருகிறார்கள். வந்தவர்கள் மிச்சப் புத்தகங்களைக் கணக்கெடுத்து பார்சல் செய்வதில் எங்களுக்கு உதவ ஆரம்பிக்கிறார்கள். வேலையினூடே ஆரம்பித்த உரையாடல் கணக்கெல்லாம் முடித்து பார்சல்களை ரெகுலர் சர்வீசில் ஒப்படைத்துவிட்டு தோழர் தங்கவேலு அவர்களை விடியற்காலம் பேருந்து ஏற்றிவிடும்வரை தொடர்கிறது.

உரையாடலினூடே அந்த இரண்டு நண்பர்களில் ஒருவர் அருட்தந்தை கஸ்பர் அவர்கள் குறித்த ஒரு தகவலைச் சொன்னார். வேறொன்றுமில்லை, ஒரு புத்தகக் கண்காட்சியில் உரையாற்றுவதற்கு பாதர் கஸ்பரைக் கேட்டிருக்கிறார்கள். அவரும் இசைவைத் தந்திருக்கிறார். திட்டமிடல் குறித்தான ஒரு உரையாடலில் பாதர் ஒருவரை அழைத்து வந்தால் சங்கிகள் பிரச்சினை செய்தால் என்ன செய்வது என்ற அச்சம் நிர்வாகிகளுக்கு வந்திருக்கிறது. சங்கிகள் கொஞ்சம் பலமாக இருக்கிற ஊர் அது. அவர்களது கலந்துரையாடலின் ஊடே அவர்களது அச்சமும் வளர்ந்தபடியும் கெட்டிப் பட்டபடியேயும் நகர்ந்திருக்கிறது. நிச்சயமாக சங்கிகள் கலவரத்தில் ஈடுபடுவார்கள் என்ற உறுதியான முடிவிற்கு வந்திருக்கிறார்கள். அதை எதிர்கொள்ளும் பலம் இல்லாதவர்கள் இல்லை அவர்கள். ஆனால் அமைதியாக புத்தகக் கண்காட்சியை நடத்தி முடிக்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறார்கள். என்ன செய்வதென்று யோசித்த நிர்வாகம் அருட்தந்தை கஸ்பரிடம் நிலவரத்தை எடுத்துச் சொல்லி தவிர்த்துவிடலாம் என்று முடிவெடுக்கிறார்கள். ஒரு வழியாக கஸ்பர் இன்றி புத்தகக் கண்காட்சி அமைதியாக நடந்து முடிந்திருக்கிறது. இதைக் கேட்ட தோழர் ராமகிருஷ்ணன் அதிர்ந்து போகிறார். கிறிஸ்தவ பெயராக இருந்தால் கூட்டத்தில்கூட பேசமுடியாதா என்று கேட்டார்.

கொலை செய்யப்படுவதற்கே ஒரு பெயர் போதும் ராமகிருஷ்ணன் என்று நான் சொன்னபோது அவரது முகம் வாடித் தொங்கி விட்டது. இந்த பயத்தில்தானோ என்னவோ எட்வின் தோழர் அவரோட பையனுக்கு 'கிஷோர்' என்றும் பாப்பாவிற்கு 'கீர்த்தனா' என்றும் பெயர் வைத்துவிட்டார் என்று இடையில் வந்த இரண்டு நண்பர்களில் ஒருவர் சொன்னபோது அனைவருமே சிரித்துவிட்டோம். ஆனால் இருவருக்கும் பெயர் வைத்ததற்கு பயமோ அல்லது புத்திசாலித்தனமோ காரணம் அல்ல.

11.07.1990 அன்று "கிஷோரிலால்" என்றொருவர் இறந்துபோனதாக செய்தியை தற்செயலாக செய்தித் தாள்களில் வாசிக்கிறேன். எத்தனையோ மரணச் செய்திகளை வாசிக்கிறோம். ஆனால் கிஷோரிலால் மரணமடைந்தது புதன்கிழமை என்பது உள்ளிட்டு இதுநாள் வரைக்கும் நினைவில் இருப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அன்றுதான் 18 மாதங்களாக இழுத்துக் கொண்டிருந்த என்னுடைய பணிநியமன உத்திரவிற்கு ஒப்புதல் கிடைக்கிறது.

கிஷோரிலால் யாரென்று தெரியாததால் சுவாரசியமற்று இருந்த என்னை அவர் பகத்தின் நண்பர் என்று யாரோ சொன்னது உசுப்பிவிடுகிறது. பகவதி சரண், சந்திரசேகர ஆசாத், ராஜகுரு, சுகதேவ் என்றெல்லாம் ஓரளவு தெரிந்து வைத்திருந்த எனக்கு கிஷோரிலால் யாரென்று தெரியவில்லை. தேட ஆரம்பிக்கிறேன்.

"பகத்தோடவே போயிருக்க வேண்டியவன்பா. 18 வயசாகலங்கறதால தப்பிச்சான்" என்று யாரோ ஒருமுறை சொல்ல உற்சாகம் தொற்றிக்கொள்கிறது. இன்னும் அதிகமாய் தேட ஆரம்பிக்கிறேன். தெரிந்திருக்கக்கூடும் என்று நம்புபவர்களிடம் எல்லாம் விசாரிக்க ஆரம்பிக்கிறேன்.

07.10.1930 அன்று பகத், சுகதேவ், ராஜகுரு ஆகியோரோடு கிஷோரிலாலுக்கும் சேர்த்துதான் தூக்கு வழங்கப்படுகிறது. ஆனால் 18 வயது நிரம்பவில்லை என்பதால் ஆயுளாகக் குறைக்கப்படுகிறது என்ற செய்தி கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் உற்சாகம் தொற்றிக்கொள்கிறது.

எப்போதும் உற்சாகமாகவும் சிரித்தபடியேயும் இருப்பவர் அவர் என்று தெரிய வருகிறது. 18 ஆண்டுகள் சிறையில் இருந்திருக்கிறார். விடுதலைக்குப் பிறகும் காங்கிரஸ் அரசாங்கம் எட்டு ஆண்டுகள் அவரை சிறையில் வைத்திருக்கிறது. ஆக, கிட்டத்தட்ட 26 ஆண்டுகள் சிறையில் இருந்த மனிதன் இரண்டு ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார் என்று கிடைக்கிற செய்திகள் எல்லாம் ஆர்வத்தை அதிகப்படுத்துகின்றன.

1936 இல் சிறையில் இருந்தபடியே அன்றைக்கு ஒன்றுபட்டு இருந்த கம்யூனிஸ்ட் கட்சியில் இணைவதற்காக விண்ணப்பிக்கிறார். 1942 இல் சேர்த்துக்கொள்ளப்படுகிறார். சிறையில் இருந்து 1946 இல் விடுதலையானதும் நேரே கட்சி அலுவலகம் செல்கிறார். கட்சி பிரிந்தபோது CPM வருகிறார். ஒருக்கால் தூக்கு இல்லாமல் ஆயுளாக இருந்திருப்பின் பகத்தும் சுகதேவும் ராஜகுருவும்கூட இங்குதான் வந்திருப்பார்கள். தம்பி பிறந்ததும் அப்பாவிடம் விவரமெல்லாம் சொல்லி தம்பிக்கு கிஷோரிலால் என்று பெயர் வைக்க அனுமதி கேட்கிறேன். அப்பா திமுக. அவருக்கு கிஷோரிலாலைப் பிடித்துப் போகிறது. ஆனால் இந்த 'லால்' உறுத்துகிறது. "லால" எடுத்துடேன் என்கிறார். தம்பி கிஷோரான வரலாறு இதுதான்.

தம்பிக்கு கிஷோர் என்று இருப்பதால் பாப்பாவிற்கு கி அல்லது கீ தொடங்குகிற பெயராக வேண்டும் என்று விக்டோரியா கேட்டபோது சட்டென வந்த பெயர்தான் கீர்த்தனா. கீர்த்தனா என்றால் இசை. கீர்த்தி என்று அழைத்தாலும் இசைதான். இசை எனில் புகழ். இப்படியெல்லாம் யோசித்த எங்களுக்கு அது தெலுங்கு என்பது அப்போது சத்தியமாக நினைவிற்கு வரவில்லை.

பாப்பாவிற்கும் கிஷோரிலால் தோழருக்கும்கூட சம்பந்தம் இருக்கிறது. 1999 ஆம் ஆண்டு அக்டோபர் ஏழில் கீர்த்தனா பிறந்தாள். அதுதான் மூவருக்கும் தூக்கும் கிஷோரிலாலிற்கு ஆயுளும் விதிக்கப்பட்ட நாள். இரண்டு பிள்ளைகளுக்கும் தோழர் கிஷோரிலாலிற்கும் தொடர்பிருப்பதில் மகிழ்ச்சி. இருவரும் மக்கள் சார்ந்து வாழட்டும்.

போக, பெயரே குழந்தைகளைக் கொன்றுபோடுமோ என்ற பயத்தோடே ஒரு தாயோ தகப்பனோ தமது குழந்தைக்கு பெயர் தேடவேண்டிய நிர்ப்பந்தம் வருமானால் அதற்காக அதற்கு காரணமானவர்கள்தான் வெட்கப்பட வேண்டும்.

••

திருப்பூர் தாய்த் தமிழ்ப் பள்ளியின் முப்பதாவது ஆண்டுமலர் வந்திருக்கிறது. அதில் அந்தப் பள்ளியின் ஆசிரியை ப.த.மாலா அவர்கள் எழுதிய "ஆசிரியர் மகுடம் எட்டிப் பார்த்தது" என்றொரு கட்டுரை வந்திருக்கிறது. அதில் ஓரிடத்தில் அவருக்கும் அவரது வகுப்புக் குழந்தை ஒருவனுக்கும் இடையேயான உரையாடல் வரும். திருப்பரங்குன்றம் அவனுக்கில்லை எனக்குத்தான் என்று வரிந்து வரும் ஒவ்வொருவருக்கும் அந்த உரையாடலை சிபாரிசு செய்கிறேன். அந்தக் குழந்தை முதல்நாள் பள்ளிக்கு வரவில்லை. மாலா அந்தக் குழந்தையிடம் கேட்கிறார்,

"ஏண்டா நேத்து பள்ளிக்கு வரல?"

"கோயிலுக்கு போனோங்க அக்கா"

அந்தப் பள்ளியில் ஆசிரியைகளை அக்கா என்றுதான் குழந்தைகள் அழைப்பார்கள். இன்னொருதரம் பிறக்க வேண்டும். அந்தப் பள்ளியில் சேர்ந்து அந்த அக்காக்களிடம் படிக்க வேண்டும். அவர்களின் உரையாடலின் முத்தாய்ப்பான பகுதி தொடர்கிறது.

"எந்தக் கோவிலுக்குடா போனீங்க?"

"அதான், அந்த சாமியெல்லாம் இருக்குமில்ல அந்தக் கோயிலுக்குதாங்க அக்கா"

மாலாவையும் அந்தக் குழந்தையையும் அணைத்துக் கொள்கிறேன்.

கோயில்களில் சாமிகள் இருப்பதாக குழந்தைகள் நம்புகிறார்கள். அப்படியே விட்டுவிடுவோம் நண்பர்களே. கோவில்களில் ஏதோவொரு சாமி வாசம் செய்யட்டும். சண்டை வேண்டாம்.

முடியுமானால் அல்லாவும் முருகனும் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பது மாதிரி ஒரு கோவிலைக் கட்டுவோம். அவர்களது உரையாடலுக்கு இடையூறு செய்யாமல் அவர்களை வணங்கிவிட்டு வருவதற்கு கற்றுக் கொள்வோம்.

●

---

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களைச் சமூகப் பணிக்கு ஈர்க்கும் 99 வயது காந்திய ஊழியர்

பிப்ரவரி 12 சர்வோதய தினம். அன்று தான் கொலையுண்ட காந்தியின் உடலை எரித்த சாம்பல் இந்திய ஆறுகளிலும் கடல் பகுதிகளிலும் கரைக்கப்பட்டது. அதுதான் சர்வோதய தினமாக இந்தியா முழுவதும் காந்திய நிறுவனங்களால் காந்தியர்களால் கொண்டாடப்படுகிறது. 2013ல் அதே நாளில்தான் சர்வோதயப் போராளி ஜெகந்நாதன் மறைந்தார். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு காந்தியால் உருவாக்கப்பட்ட தலைவர்களும் களப் போராளிகளும் ஒரு பக்கத்தில் அரசுச் செயல்பாடுகளிலும் காந்தியக் களச் செயல்பாடுகளிலும் இணைந்து செயல்பட்டனர். ஜெகந்நாதனும் அவரின் இணையர் கிருஷ்ணம்மாளும் களத்துக்கு சர்வோதய ஊழியர்களாக வந்தவர்கள். எனவே ஜெகந்நாதனின் நினைவு தினத்தையும் சர்வோதய தினமாக கொண்டாடுவது என காந்திய நிறுவனங்கள் முடிவு செய்து ஆண்டுதோறும் அந்த நிகழ்வைக் கொண்டாடி வருகின்றனர். அந்த தினத்தை பொருள்படும்படி நடத்த சமுதாயம் சந்திக்கும் பெரும் சவால்களை விவாதித்து அவற்றைத் தீர்ப்பதற்கான களத்திட்டத்தை வகுத்து அதற்கான இளைஞர்களை தயார் செய்வதுதான் அதன் நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. அந்த நிகழ்வில் ஆண்டுதோறும் கலந்து கொள்வது எங்களைப் போன்றவர்களுக்கு ஒரு பொறுப்பு மற்றும் கடமை.

அந்த நிகழ்வு ஆரவாரமின்றி அமைதியாக ஒரு நாள் பல்கலைக்கழக வளாகத்திலும், அரைநாள் காந்திகிராம அறக்கட்டளையிலும், அரை நாள் ஊழியரகத்திலும் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு இத்தாலி, பெல்ஜியம், ஜெர்மெனி, அமெரிக்கா, ஜப்பான், கம்போடியா போன்ற நாடுகளிலிருந்து காந்திய அன்பர்களும், பேராசிரியர்களும் வந்து பங்கு பெறுவார்கள். ஆண்டுதோறும் அது ஒரு சர்வோதய சர்வதேச மாநாடுபோல் நடத்தப்படுவது ஒரு சிறப்பான முன்னெடுப்பாக அனைவராலும் பார்க்கப்படும். பொதுவாக காந்திய நிறுவனங்கள் நடத்தும் நிகழ்வில் அதிகமாக பார்ப்பது நரைத்த முடி கொண்ட முதியவர்களைத்தான். ஆனால் இந்த நிகழ்வுக்கு கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதனால் ஈர்க்கப்பட்டு களச் செயல்பாட்டில் ஈடுபட்டிருக்கும் எண்ணற்ற இளைஞர்களை அதிக அளவில் பார்க்க முடியும். அதுதான் இந்த நிகழ்வுக்குச் சிறப்புச் சேர்ப்பதாக இருக்கும். இந்த நிகழ்வில் இரண்டாம் நாள் களப்பணியில் ஈடுபட்டு காந்தியப் பார்வையில் கடையனுக்கும் கடையேற்றம் செய்யும் மாமனிதர்களுக்கு ஜெகந்நாதன் விருது வழங்குவார்கள். அதேபோல் மிகச் சிறப்பாக பெண்களுக்கும், விளிம்புநிலை மக்களுக்கும், குழந்தைகளுக்கும் பணியாற்றும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் விருது கொடுப்பார்கள். அரசு தரும் விருதுகளை ஒதுக்கித் தள்ளிய மிகப் பெரும் ஆளுமைகள் கூட இந்த விருதை பெருமையாகக் கருதி பெற்றுக்கொள்வது அடுத்த சிறப்பு அம்சம்.

இந்த ஆண்டும் பிப்ரவரி 11 மற்றும் 12ஆம் தேதிகளில் ஒரு சர்வதேசக் கருத்தரங்கு "அமைதியை அடித்தளத்திலிருந்து உலகம்வரை காந்தியப் பார்வையில் உருவாக்கல்" என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வை இந்த ஆண்டு காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகமும், ஊழியரகமும் இணைந்து நடத்தியது. இந்த நிகழ்வில் தலைசிறந்த பொதுக் கருத்தாளரும், வரலாற்று ஆசிரியருமான ராமச்சந்திர குகா முக்கிய உரையாற்றியது இந்த நிகழ்வுக்குச் சிறப்புச் சேர்த்தது. அவரின் உரை காந்தி ஏன் இன்று நமக்குத் தேவைப்படுகிறார் என்பதை மையப்படுத்தி ஒரு நீண்ட ஆழமான உரையை நிகழ்த்தினார். அதற்கான பத்து காரணங்களை முன் வைத்தார். அவையாவன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு காந்தியால் உருவாக்கப்பட்ட தலைவர்களும் களப் போராளிகளும் ஒரு பக்கத்தில் அரசுச் செயல்பாடுகளிலும் காந்தியக் களச் செயல்பாடுகளிலும் இணைந்து செயல்பட்டனர். ஜெகந்நாதனும் அவரின் இணையர் கிருஷ்ணம்மாளும் களத்துக்கு சர்வோதய ஊழியர்களாக வந்தவர்கள். எனவே ஜெகந்நாதனின் நினைவு தினத்தையும் சர்வோதய தினமாக கொண்டாடுவது என காந்திய நிறுவனங்கள் முடிவு செய்து ஆண்டுதோறும் அந்த நிகழ்வைக் கொண்டாடி வருகின்றனர். அந்த தினத்தை பொருள்படும்படி நடத்த சமுதாயம் சந்திக்கும் பெரும் சவால்களை விவாதித்து அவற்றைத் தீர்ப்பதற்கான களத்திட்டத்தை வகுத்து அதற்கான இளைஞர்களை தயார் செய்வதுதான் அதன் நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது.**

---

1. ஆதிக்கத்திலிருந்து மக்கள் விடுபட அவர் பயன்படுத்திய ஆயுதம் அகிம்சைப் போராட்டம். அது ஆன்ம சக்தியை பயன்படுத்தி செய்ய முடியும், விடுதலைக்குத் தேவை ஆயுத சக்தி அல்ல, ஆன்ம சக்தி என்று நிரூபித்து உலகத்துக்கு வழிகாட்டியவர்.

2. தேசத்தின் பக்தியில் தழைத்து வெள்ளையரை எதிர்த்துப் போராடினாலும் அவர் இந்தியர்களுக்கு எதிராகவும் போராடி இந்திய மக்களிடம் இருந்த குறைகளைப் போக்க செயல்பட்டது ஒரு உண்மையான மானுட மேம்பாட்டுக்கான செயல்பாடு.

3. தான் ஒரு அடிப்படை இந்து என்று தன்னைக் கருதிக் கொண்டாலும், இந்தியாவின் பன்முகத் தன்மையை தூக்கி நிறுத்த செயல்பட்டது எவராலும் மறுக்க இயலாத செயல்பாடு.

4. அவர் குஜராத்திய பிராந்திய கலாச்சார மொழிப் பற்றுக் கொண்டவராக இருந்தபோதும் ஒட்டுமொத்த இந்தியாவின் கலாச்சார பண்பாட்டு நாகரிகத் தொன்மங்களை ஊன் வாங்கிக் கொண்டு செயல்பட்டு இந்திய மக்களுக்கு வழிகாட்டியவர்.

5. தான் ஒரு இந்து, ஒரு குஜராத்தி, ஒரு இந்தியன் என்ற பின்புலத்தில் செயல்பட்டாலும் இவைகளையெல்லாம் தாண்டிய உலகப்பார்வை கொண்ட உலகச் செயல்பாட்டாளராக மாற்றிக் கொண்டு சமத்துவத்திற்காகச் செயல்பட்ட மாமனிதர்.

6. 1928லேயே தொழில் புரட்சி மூலமாக உருவாக்கப்பட்ட பொருளாதாரக் கட்டமைப்பை நிராகரித்து மக்கள் செயல்பாட்டின் விளைவாக உருவாகும் பொருளாதாரத்தை உலகுக்கு பிரகடனம் செய்தவர். மக்கள் செயல்பாட்டின் வழி உருவாக்கப்படும் பொருளாதாரம்தான் பசுமைப் பொருளாதாரம். இது சுரண்டல் பொருளாதாரத்திற்கு எதிரானது என்ற பிரகடனப்படுத்தியது மட்டுமல்ல தான் ஒரு சூழலியல்வாதி என்று பிரகடனப்படுத்தியதுதான் மிகச் சிறப்பான ஒரு முன்னெடுப்பு.

7. அவர் தன்னை தகவமைத்துக் கொள்வதில் கவனமாக இருந்து தன்னை பரினாமத்தில் மாற்றிக் கொண்டும், உயர்த்திக் கொண்டும் இருந்ததுதான், அவரின் கண்ணோட்டத்தை உச்சத்துக்குக் கொண்டு சென்றது. உண்மை என்று உணர்ந்தால் அதை ஏற்றுக்கொள்ள தயங்கியதே கிடையாது.

8. அவர் தலைவர்களை உருவாக்கினார். நேரு, பட்டேல், ராஜேந்திர பிரசாத், ராஜாஜி, காமராஜ் என எண்ணற்ற தலைவர்களை உருவாக்கினார். ஆனால் அவருக்குப் பிறகு பெரும் தலைவர்களை உருவாக்க எந்த பெரும் தலைவர்களும் முயற்சிக்கவில்லை.

9. எதிர்தரப்பை எதிர்கொள்ள விவாதத்திற்கு என்றும் தயாராக இருந்தார். உரையாடலுக்கு எப்பொழுதும் தயாராக இருந்தது அவரின் ஜனநாயகப் பண்புகளுக்கு மெருகூட்டுவதாக இருந்தது. இரண்டு மிகப்பெரும் எதிர்துருவ ஆளுமைகளை எதிர்கொள்ள எப்பொழுதும் தயாராக இருந்தது மட்டுமல்ல அம்பேத்கரை அரசமைப்புச் சாசன உருவாக்கத்தில் இணைக்க அவரே காரணமாக இருந்தது நாட்டின் மேல்தான் அவருக்கு அக்கறையே தவிர மற்றதில் இல்லை என்பதை நிருபித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிருஷ்ணம்மாள்

10.அவர் என்றும் பொதுமனிதராக வாழ்ந்து மறைந்தார். அவரை விமர்சனம் செய்ய அனைவருக்கும் உரிமை உண்டு. அதை அவரே தந்துவிட்டார். அவர் தன்னை எப்போதும் திறந்த புத்தகமாகவே வைத்துக் கொண்டிருந்தார்.

இன்று அப்படிப்பட்ட தலைமையை உலகில் நம்மால் எங்கும் தேட இயலாது. நம் நாட்டிலும் நம்மால் பார்க்க இயலாது. அவரின் வழிகாட்டுதல் இன்று நமக்குத் தேவைப்படுகிறது என்று கூறி அவரின் உரையை நிறைவு செய்தார்.

அடுத்து கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவர்களை மாணவர்களுக்கு இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்தும் பணி எனக்குத் தரப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து இவ்வளவு பேர் எதற்காக இந்த விழாவுக்கு தங்கள் செலவில் வந்து, இந்த எளிய குடிலில் தங்கி இருந்து பங்கு பெறுகிறார்கள் என்பது இங்குஇருப்பவர்களுக்கே தெரியவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு உண்டு. ஆகையால் இந்த விழாவே புதுமைக் காந்தியர்களை இளைஞர்கள் மத்தியில் உருவாக்க வேண்டும் என எண்ணும்போது இந்த ஊழியரகம் என்றால் என்ன என்பதும், கிருஷ்ணம்மாள் என்பவர் யார் என்பதும், மருத்துவர் பூமிக்குமார் யார் என்பதும், மருத்துவர் சத்யா யார் என்பதும் தெரியாமலேயே விழாவுக்கு வருவதும் போவதும் ஒரு சடங்கு மட்டுமே என்ற காரணத்தால் இந்த அறிமுகம் தேவை என உணர்ந்து ஊழியரகத்தைப் பற்றி விளக்கினேன். அது ஒன்றுமே தெரியாதவர்களுக்கு ஒரு பழைய ஓட்டுக் கட்டிடம். அதன் வரலாறு தொன்மை தெரிந்தவர்களுக்கு அது ஒரு காந்திய கனவுக்கூடம், ஒரு காந்திய உலைக்களம். சுதந்திரத்திற்குப் போராட்ட வீரர்களை உருவாக்கிய இடம், சுதந்திரத்திற்குப் பிறகு நிர்மாண ஊழியர்களை உருவாக்கிய இடம்தான் அது. அந்த ஓட்டுக் கட்டிடம் என்பதும் யாரால் உருவாக்கப்பட்டது? ஊழியர்களின் உழைப்பால் உருவாக்கப்பட்டது. இன்று தமிழகத்தில் உள்ள சர்வோதய ஊழியர்கள் பெரும்பாலானவர்கள் உருவான இடம்தான் அது. அது காந்தியக் கனவை சுமந்து நிற்கிறது. அதில் இருப்போர் யார், 99 வயதான இளைஞர் வீரமங்கை கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன். காந்தியுடன் பயணித்த, காந்தியிடம் கட்டளை பெற்றவர், வினோபாபாவேயுடன் பயணித்தவர், ஜெயப்பிரகாஷ் நாராயணனும் பயணித்தவர் காந்தியக் கனவுடன் பல போராட்டங்களை நடத்திவிட்டு இன்று புதுமைக் காந்தியர்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் மாபெரும் ஆளுமை.

மக்களுக்கு மக்களுடன் பணி செய்வது காந்தியக் கண்ணோட்டத்துடன் எப்படி என்பதை போதிக்கும் ஆசான்தான் கிருஷ்ணம்மாள். ஒரு தலித் இன பட்டதாரிப் பெண், காந்திகிராமத்தை உருவாக்கிய டி.வி. எஸ் குடும்பத்தைச் சார்ந்த மருத்துவர் சௌந்திரம் அம்மாவால் சமூகத்திற்கு உருவாக்கப்பட்டவர்தான் கிருஷ்ணம்மாள். சர்வோதயப் பணி செய்ய காந்தியப் போராளியான ஜெகந்நாதனை கரம் சேர்த்தவர். இவர்கள் இருவரும் இணைந்தது காதல் திருமணம் செய்து குடும்பத்திற்காக வாழ அல்ல. கோடான கோடி திக்கற்ற மக்களுக்கு இந்தியத் திருநாட்டில் சுதந்திரமாக, சுயமரியாதையுடன் வாழ வழிகாட்ட. இந்த இணையர்களின் போராட்டங்கள் ஒரு புதிய வரலாறு. இவர்களின் நிலத்திற்கான சத்தியாகிரகங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது. விளாம்பட்டி சத்தியாகிரகம், சாதியக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டம், இறால் பண்ணைக்கு எதிரான போராட்டங்கள், பிகாரில் இந்து மடத்திற்கு எதிரான போராட்டங்கள் என நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். குடிசைகளை மரியாதையுடன் வாழும் ஓட்டுக் கட்டிடங்களாக மாற்றியது, 13000 ஏக்கர் நிலத்தை மீட்டு ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்தது என பல்வேறு சாதனைகளுக்குச் சொந்தக்காரர்கள் இந்த இணையர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் செயல்பாடு காந்தியர்களின் செயல்பாடுகளில் வித்தியாசமானது. இவர்கள் காந்திய நிறுவனங்களை உருவாக்கவில்லை. இவர்கள் நிறுவன உருவாக்கத்தின்மேல் கவனமோ ஈர்ப்போ அற்று இவர்களையே நிறுவனமாக ஆக்கிக் கொண்டு செயல்பட்டவர்கள். காந்தியர்களில் இருவகை உண்டு. ஒன்று நிறுவனம் உருவாக்கியவர்கள், இரண்டு தங்களையே நிறுவனமாக்கிக் கொண்டு மக்கள் பிரச்சினைகளைச் சந்திக்கும்போது அங்கு சென்று மக்களை ஒருங்கிணைத்து, போராடி பிரச்சினைகளைத் தீர்க்கச் செயல்படுவது. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் இணையர்கள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள். நிறுவனம் கட்டியவர்கள், அந்த நிறுவனங்களைப் பாதுகாக்கவே தங்களை இன்று கரைத்துக்கொண்டு பணி செய்கின்றனர். கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் இன்று இளைஞர்களுக்கு வழிகாட்டும் ஒரு கலங்கரை விளக்காய் 99 வயதில் செயல்படுவது ஒரு புதிய வரலாறு, அவர் ஒரு சகாப்தம் என்றுதான் கூறவேண்டும். இவர்களின் தியாக வரலாற்றை வெளிநாட்டுக்காரர்கள் படம்பிடித்து புத்தகமாக வடித்து வெளியிட்ட பிறகுதான், நம்மவர்கள் நாம் தவறு செய்துவிட்டோம் என உணர்ந்து இவர்களின் தியாக வரலாற்றை வடித்தார்கள். புதிய சுதந்திர இந்தியாவில் நாலாவது தலைமுறையைப் பார்க்கிறோம். அது சந்தைத் தலைமை முறை. இவர் முதல் தலைமுறையைச் சார்ந்தவர். அது தியாகத் தலைமுறை. இன்றும் அப்படிப்பட்ட தலைமுறையை உருவாக்க செயல்பட்டு வருபவர்தான் கிருஷ்ணம்மாள் என்ற ஒரு வரலாற்றுச் சுருக்கத்தை கூறி முடித்தேன்.

அதன் பிறகு மாணவர்கள் குழுவாக பிரிந்து உள்ளூர் அமைதியிலிருந்து உலக அமைதி என்ற தலைப்பில் விவாதம் செய்தனர்.

இரண்டாவது நாள் இலக்கியவாதியான ஜெயமோகன் ஜெகந்நாதன் அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றினார். அப்போது அங்கு கூடியிருந்த இளைஞர்களுக்கு ஓர் ஆழமான செய்தியை பதிவிட்டார். இந்த நாடு மோசமாகிவிட்டது என்று ஒரு செய்தியை பரப்பிய வண்ணம் பலர் இருக்கின்றனர். அதை நீங்கள் நம்பக்கூடாது. நாடு அறிவியல் பூர்வமாக அலசி ஆராய்ந்தால் சிறப்பாகத்தான் இருக்கிறது. மக்களில் பெரும்பகுதி சுதந்திர இந்தியாவில் நடக்கும் குடியரசு ஆட்சி முறையில் கிடைக்க வேண்டிய நற்பயன்கள் கிடைக்கவில்லை. இந்திய நாட்டில் நடைபெறும் எந்த அரசியல் கட்சியாலும் இன்றைய மக்கள் பிரச்சினையை தீர்க்க இயலாது. காரணம் நம் அரசியல் என்பது பணம் தருவோருக்குச் செயல்படுவதாக மாறிவிட்டது. எனவே இந்த சமுதாயத்தை அடித்தளத்தில் முகத்தை மறைத்து உள்ளத்தை கரைத்து மக்களுடன் மக்களை இணைத்து செயல்படும் எண்ணற்ற களச் செயல்பாட்டாளர்களால் தான் சாத்தியப்படும். அதைத்தான் இன்று நான் களத்தில் பார்க்கிறேன். எனவே மக்களுடன் இணைந்து மக்களை ஒருங்கிணைத்து செயல்பட முயல வேண்டும் என்பதை மையப்படுத்தி தன் உரையை நிறைவு செய்தார். அவருக்கு இந்த ஆண்டுக்கான ஜெகந்நாதன் விருதை கிருஷ்ணம்மாள் வழங்கியது ஒரு சிறப்பான நிகழ்வாக நிறைவுற்றது.

அன்று மாலை நான் எழுதிய "வான் திறந்த வெளிச்சம்" என்ற புத்தகத்தை கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் வெளியிட அதை அக்னி ஸ்டீல்ஸ் தலைவர் திரு.தங்கவேல் அவர்களும், நல்லோர் வட்ட ஒருங்கிணைப்பாளர் பாலசுப்ரமணியன் அவர்களும், சென்னை சில்க்ஸ் குழுமத்தின் திரு.விநாயகம் அவர்களும், இளம் எழுத்தாளர் அனிசா அவர்களும் பெற்றுக் கொண்டனர். பேராசிரியர் என்.மணி புத்தக மதிப்புரையாற்றி அந்த நிகழ்வை நிறைவு செய்தார். அடுத்து மிகச் சிறப்பாக மக்கள் பணியாற்றிய பிரதாமராமபுரம் பஞ்சாயத்துத் தலைவர் திரு. சிவராசு அவர்களுக்கும், கெம்மேரிப்பாளையம் பஞ்சாயத்துத் தலைவர் செல்வி நிர்மலா அவர்களுக்கும் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் விருதினை வழங்கிக் கௌரவித்தார். அதேபோல் ஆனைமலையில் இயங்கி வரும் காந்திய நிறுவனத் தலைவர் திரு.ரெங்கநாதன் அவர்களின் மனைவிக்கு இறப்புக்குப் பின் தரும் விருதினை கிருஷ்ணம்மாள் வழங்கினார். கடைசியாக பல்கலைக்கழக கல்லூரிகள் பள்ளி மாணவர்களுக்கு நடந்த கட்டுரைப் போட்டிகளில் வென்றவர்களுக்குப் பரிசும் கொடுத்து அருட்பெரும் ஜோதி அகவலை கிருஷ்ணம்மாள் பாடி முடித்தனர் அந்த இரண்டு நாள் சர்வோதய விழாவை.

•

---

**கட்டுரையாளர்: பேராசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | குருசாமி மயில்வாகனன்

# சுதேசியப் படையின் தளபதி குருநாத ஐயர்

**தன்னுடைய திட்டங்கள் தோல்வியடைந்ததினால் ஆத்திரமுற்றிருந்த கலெக்டரும் நீதிபதியுமான விஞ்ச் தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு அவர்களை நீதிமன்றத்திற்குத் தினமும் வரவழைத்தபின், 12ஆம் தேதி மூவரையும் விசாரணைக் கைதிகளாகச் சிறையிலடைக்க உத்தரவிடுகிறார்.**

பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா மற்றும் பத்மநாப ஐயங்கார் ஆகிய மூவரையும் 1908ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9-ஆம் தேதி விசாரணைக்காக வரச்சொல்லி மாவட்ட நீதிபதியும் மாவட்ட ஆட்சியருமான எல்.எம்.விஞ்ச் அழைப்பாணை அனுப்பியதையடுத்து மூவரும் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

விபின் சந்திர பால் விடுதலை செய்யப்பட்ட நாளான அன்றைய தினத்தில் தூத்துக்குடியில் ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டமாகக் கொண்டாடுவதற்குத் திட்டமிட்டிருந்த பெரியவர் வ.உ.சி.யை, அந்நிகழ்ச்சியை நடத்தவிடாமல் தடுப்பதற்காகவே, அதேநாளில் திருநெல்வேலி நீதிமன்றத்திற்கு வரச்சொல்லி காலையில் வந்தவர்களை மாலை வரை காக்க வைத்து, மறுநாள் வருமாறு அனுப்பிவைக்கிறார் விஞ்ச். ஆனால் அவர் எதிர்பார்த்ததிற்கு மாறாக, வெளியில் வந்த பெரியவர் வ.உ.சி. உள்ளிட்ட மூவரையும் திருநெல்வேலியில் இருந்த ஆதரவாளர்கள் அழைத்துச் சென்று, யானையின்மீது விபின் சந்திரபால் படத்தை வைத்து, மிகப்பிரம்மாண்டமான ஊர்வலத்தினையும் இரவில் தாமிரபரணி நதிக்கரையிலிருக்கும் தைப்பூச மண்டபத்தில் பொதுக்கூட்டத்தினையும் நடத்தி முடித்தனர். இதுதவிர மறுநாள் 19ஆந் தேதி காலையில் தூத்துக்குடியிலும் ஊர்வலம் நடத்தப்பட்டது.

தன்னுடைய திட்டங்கள் தோல்வியடைந்ததினால் ஆத்திரமுற்றிருந்த கலெக்டரும் நீதிபதியுமான விஞ்ச் தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு அவர்களை நீதிமன்றத்திற்குத் தினமும் வரவழைத்தபின், 12ஆந் தேதி மூவரையும் விசாரணைக் கைதிகளாகச் சிறையிலடைக்க உத்தரவிடுகிறார். மறுநாள், 1908, மார்ச் 13ஆந் தேதி, மூவரையும் கைது செய்ததைக் கண்டித்து இந்திய வரலாற்றிலேயே அதற்கு முன்னும் பின்னும் நடந்திராத வகையில் திருநெல்வேலி தேசபக்தர்கள் மாபெரும் மக்கள் எழுச்சியினை நடத்தினார்கள். இந்திய மற்றும் தமிழக வரலாற்றில் மறைந்தும் மறந்தும் கிடந்த இந்த மக்கள் எழுச்சியானது 1987ஆம் ஆண்டு வெளிக்கொண்டு வரப்பட்டது.

கடந்த 2022ஆம் ஆண்டு இந்த மகத்தான மக்கள் எழுச்சி குறித்து பேராசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதியால் எழுதப்பட்ட "திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908" எனும் நூல் 2022ஆம் ஆண்டிற்காக இந்திய அரசின் சாகித்ய அகாடமி விருதினைப் பெற்றிருக்கிறது.

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் தமிழகத்தில் நடைபெற்ற வரலாற்றுப் பெருமையும் சிறப்புமிக்க இந்தத் திருநெல்வேலி எழுச்சியை ஒரு தளபதியாக நின்று நடத்திக் காட்டியவர் குருநாத ஐயர் ஆவார்.

வரலாற்றில் மறைந்து கிடக்கும் குருநாத ஐயர்தான் பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை என்னும் சுதேசியப் போர்ப் படைத் தலைவனின் தளபதி ஆகத் திகழ்ந்தவர்.

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த வடக்குக் கோனார் பேட்டையைப் பூர்வீகமாகக் கொண்ட . கே.சீதாரமய்யர் என்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1908 மார்ச் 9 முதல் 12ஆம் தேதி வரையிலும் பெரியவர் வ.உ.சி.யுடனேயே தூத்துக்குடிக்கும் திருநெல்வேலிக்கும் சென்று வந்துகொண்டிருந்தார். பெரியவர் வ.உ.சி. கைது செய்யப்பட்ட அன்று திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்திற்கு பெரியவர் வ.உ.சி.யின் மூத்த மகனான ஐந்து வயதுச் சிறுவன் உலகநாதனுடன் வந்திருந்த குருநாதய்யர் அன்று நீதிபதி விஞ்ச்சிற்கும் பெரியவர் வ.உ.சி.க்கும் இடையே நடந்த வாக்குவாதத்தை முழுமையாகக் குறிப்பெடுத்திருக்கிறார்.**

திருநெல்வேலி மாவட்டம் செவல்குளத்தில் வாழ்ந்தபோது அவருக்கு 1875ஆம் ஆண்டில் பிறந்தவர் குருநாத ஐயர். இவருடன் பிறந்தவர்கள் ரங்க ஐயர், மற்றும் சேஷ ஐயர் ஆகிய இருவராவர். இவர் ஒல்லியான உடலமைப்புடன் ஐந்தரை அடி உயரமுடையவராக இருந்தார். கருத்த நிறம் கொண்ட பருக்கள் நிறைந்த முகத்தை உடையவராகவும் இருந்தார்.

1894ஆம் ஆண்டு திருநெல்வேலிப் போலீஸ் ஸ்டேசனில் கான்ஸ்டபிளாகப் பணியில் சேர்ந்தார். பின்னர் ஏட்டு என அழைக்கப்படுகின்ற ஹெட்கான்ஸ்டபிள் பொறுப்பிற்கு பதவி உயர்வு பெற்றார். அசாதாரணமான அறிவுக்கூர்மையும் புலனாய்வு ஆற்றலும் மிக்கவர் என்று அவரது பணித் தன்மை குறித்து பிரிட்டிஷ் போலீஸ் குறிப்பேடுகள் தெரிவிக்கின்றன.

பெரியவர் வ.உ.சி.யின் சுதேசி இயக்கச் செயல்பாடுகளினால் ஈர்க்கப்பட்ட குருநாதய்யர் அவருக்கு உதவியாகப் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டார். இதனால், போலீஸ் துறையால் கண்டிக்கப்பட்டு 1906ஆம் ஆண்டில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டார். அதை எதிர்த்து மேல்முறையீடு செய்ததால் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டார். பின்னர் உடல்நிலை சரியில்லை என மருத்துவச் சான்றிதழைச் சமர்ப்பித்து நீண்ட விடுமுறை எடுத்துக் கொண்டு தஞ்சாவூர் சென்று அங்கு சுதேசி இயக்க வேலைகளில் ஈடுபட்டார். மீண்டும் பணிக்குத் திரும்பிய குருநாதய்யர், திருநெல்வேலிக்கு அருகிலுள்ள நாங்குநேரிக்கு பணிமாற்றம் செய்யப்பட்டார். அங்கும் சுதேசி இயக்க வேலைகளைத் தொடர்ந்து செய்து வந்தார்.

இறுதியில் தூத்துக்குடியில் பெரியவர் வ.உ.சி. உள்ளிட்ட சுதேசிகளின் போராட்டப் பணி தீவிரமான நிலையில் 1908ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனது ஹெட்கான்ஸ்டபிள் பணியை ராஜினாமா செய்துவிட்டு சுதேசிகளுடன் இணைந்தார். பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளையால் தொடங்கப்பட்ட சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியுடைய தூத்துக்குடிக் கடற்கரைப் பண்டகசாலையின் பொறுப்பாளராகப் பணியில் அமர்த்தப்பட்டார். அதுவரை சுதேசி இயக்கத்தின் பகுதிநேரப் பணியாளராகச் செயல்பட்டு வந்த அவர் அன்றிலிருந்து முழுநேரப் பணியாளர் ஆனார். மொத்தத்தில் அவர் பெரியவர் வ.உ.சி.யின் தளபதியாகவே செயல்பட்டு வந்தார்.

1908 மார்ச் 9 முதல் 12ஆம் தேதி வரையிலும் பெரியவர் வ.உ.சி.யுடனேயே தூத்துக்குடிக்கும் திருநெல்வேலிக்கும் சென்று வந்துகொண்டிருந்தார். பெரியவர் வ.உ.சி. கைது செய்யப்பட்ட அன்று திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்திற்கு பெரியவர் வ.உ.சி.யின் மூத்த மகனான ஐந்து வயதுச் சிறுவன் உலகநாதனுடன் வந்திருந்த குருநாதய்யர் அன்று நீதிபதி விஞ்ச்சிற்கும் பெரியவர் வ.உ.சி.க்கும் இடையே நடந்த வாக்குவாதத்தை முழுமையாகக் குறிப்பெடுத்திருக்கிறார்.

அவர்கள் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் இவர் உலகநாதனை அழைத்துக்கொண்டு தூத்துக்குடி திரும்பினார். பெரியவர் வ.உ.சி.யின் மனைவி மீனாட்சியம்மாளிடம் உலகநாதனை ஒப்படைத்தபின் தூத்துக்குடி வணிகர்களைச் சந்தித்து பெரியவர் வ.உ.சி. கைதான விவரத்தினையும் செய்ய வேண்டிய பணிகளையும் பேசியிருக்கிறார். அதன் பின்னர் அன்று இரவே திருநெல்வேலி திரும்பிய குருநாதய்யர் நள்ளிரவில் திருநெல்வேலியில் உள்ள வக்கீல் சாதுகணபதி பந்துலு வீட்டின் பின்பகுதித் தாழ்வாரத்தில் சிலருடன் அமர்ந்து பேசியிருக்கிறார். அக்கூட்டம் முடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படுகையில் சாது கணபதி பந்துலுவைப் பார்த்து, "இன்னும் இரண்டு நாழிகைகளில் பிரமாதமான நிகழ்ச்சிகள் அரங்கேறவிருப்பதாக"க் கூறியிருக்கிறார்.

மறுநாள் காலையில் தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலிக்கு ரயிலில் வந்திறங்கிய வியாபாரிகள் உள்ளிட்ட சிலர் வீரராகவபுரம் பகுதியில் கூடியிருந்த பலருடன் சேர்ந்து கொண்டு ஊர்வலமாகச் சென்றனர். எந்த ஒரு தனி நபரது பொருட்களுக்கும் எதுவும் நேராத நிலையில் அரசுச் சொத்துக்கள் ஏராளமாகச் சேதமடைந்தன. நகரினுள் ஊர்வலமாக வந்து வந்தேமாதரம் என முழங்கிய அக்கூட்டத்தினரில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களும் ஏராளமானோர் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாளையங்கோட்டைச் சிறைச்சாலைக்குள் நுழைந்து பெரியவர் வ.உ.சி.யை மீட்க வேண்டும் எனும் திட்டத்துடன் இருந்த மக்கள் திரளை மருத்துவமனையின் எதிரிலேயே சிறப்பு ஆயுதப்படைப் போலீசு எதிர்கொண்டதால் அத்திட்டத்தை அவர்களால் நிறைவேற்ற இயலவில்லை.

திருநெல்வேலி எழுச்சியைக் கலகம் எனக் குறித்து வைத்துள்ள பிரிட்டிஷ் போலீஸ் குறிப்புகள் குருநாதய்யரை ரிங்லீடர் என்றும் திருநெல்வேலி எழுச்சியின் சூத்ரதாரி என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

திருநெல்வேலி எழுச்சி வழக்கில் முதல் குற்றஞ்சாட்டப்பட்டவர் குருநாதய்யர்தான். மார்ச் 14ஆந் தேதி கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்ட அவரை சுப்பிரமணிய பாரதியார் சிறையில் சந்தித்ததைக் குறித்து வியந்து எழுதியிருக்கிறார். அதுபோல பரலி சு.நெல்லையப்பரும் எழுதியிருக்கிறார். குருநாதய்யருக்கு ஏழாண்டு நாடு கடத்தல் தண்டனை வழங்கப்பட்டது. மேல்முறையீட்டில் அத்தண்டனை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. 1913 ஜனவரியில் விடுதலையான அவர் கடயத்திற்குச் சென்றிருக்கிறார்.

இந்தியச் சுதந்திரப் போராட்டச் செயல்பாடுகளில் தலைவனற்ற மக்கள் திரள் போராட்டத்தின் தளபதியாக விளங்கிய, எதையும் எதிர்பாராது சுதேசியத்திற்காகப் போராடிய, குருநாதய்யரின் செயல்பாடுகளின் காரணமாக அவரது குடும்ப வாழ்க்கை நிலை குலைந்திருந்திருக்கிறது. பிள்ளைப்பேறு இல்லாத நிலையில் அவரது மனைவி மீனாட்சிக்கும் அவருக்கும் முரண்பாடுகள் உண்டானதால் அவர் மனைவியுடன் வசிக்காமல் ஊரைவிட்டு வெளியேறினார். இருவருக்கும் வ.உ.சி.யின் மனைவி மீனாட்சியம்மாள் எழுதிய கடிதங்களிலிருந்து இருவர்மீதும் அவர் கொண்டிருந்த அக்கறையைப் புரிந்துகொள்ளலாம். அதுபோலப் பெரியவர் வ.உ.சி. தனது சுயசரிதையில் இவரைப்பற்றிக் குறிப்பிடும்போது 'என்னுயிர் நண்பன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

1914இல் இவர் மறுமணம் செய்வதற்காகப் பெண்தேடி திருச்செந்தூர் ஆழ்வார் திருநகரிக்கு வந்ததாகத் தெரிகிறது. தொடர்ச்சியாகப் போலீசாரின் கண்காணிப்பிலேயே இருந்த குருநாதய்யர் அதிலிருந்து தப்பித்து 1915ஆம் ஆண்டு ஜப்பானுக்குச் சென்று அங்கிருந்த அவரது சகோதரருடன் தங்கிவிட்டார் என்பதுதான் அவரைப் பற்றி நமக்குத் தெரிய வருகின்ற கடைசிச் செய்தியாகும்.

1908இல் அதற்கு முன்னும் பின்னும் இந்தியா கண்டிராத மகத்தான மக்கள் எழுச்சியின் தளபதியை வரலாறு மறந்திருக்கிறது. குருநாதய்யர் என்கிற பெரியவர் வ.உ.சி.யின், சுதேசியத்தின் தமிழகப் போர்ப்படைத் தளபதியை வரலாற்றில் வாழவைக்க வேண்டியது இந்திய வரலாற்றாய்வார்களது கடமை.

**ஆதாரங்கள்:**


- Tinnelvelly Riots Conspiracy and Ashe Murder, Select Document Series (1900-1947) Part I & II. COMMISSIONER OF ARCHIVES AND HISTORICAL RESEARCH, TAMILNADU ARCHIVES, MADRAS, Government of Tamil Nadu 1982.
- திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908, ஆ. இரா. வேங்கடாசலபதி, காலச்சுவடு வெளியீடு, 2022.
- வ.உ.சி. சுயசரிதை, வ.உ.சிதம்பரம் பிள்ளை. (5ஆம் பதிப்பு) பாரி நிலையம், சென்னை, 1966.


கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 143 ஆண்டுகள்! தோவாளை அரசுப் பள்ளி நூற்றாண்டு விழா



கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டம் நெற்பயிர் செழித்துவளரும் நாஞ்சில்நாட்டின் பெரும்பகுதியை உள்ளடக்கியது. பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீரைச் சுமந்துவரும் தோவாளைக் கால்வாய் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக தோவாளை ஊர்வழியாகப்பாய்ந்து ஊரைக்குளிர்வித்து, பயிரையும் செழிக்கவைக்கிறது. தோவாளை ஊர் திருநெல்வேலி-நாகர்கோயில்நெடுஞ்சாலையில், நாகர்கோயிலுக்குப் பத்து கிலோமீட்டருக்கு முன்பாக அமைந்துள்ளது. நெடுஞ்சாலை, தோவாளை ஊரை நடுவில் ஊடறுத்துச்செல்கிறது. ஓர் இரயில் நிலையமும் உண்டு. ஊரைச்சுற்றிலும் மலைகள், குளங்கள், நெல்வயல்கள், தென்னந்தோப்புகள், பூந்தோட்டங்கள் என்று இயற்கை அழகுடன் விளங்கும் ஊர்.

மலர்வணிகம் காரணமாக பரவலாக அறியப்பட்ட ஊர். மலர்மாலைகள் கட்டுவது பெரும்பாலான குடும்பங்களை வாழவைத்துக் கொண்டிருக்கிறது. வீடுகளில், பெரும்பாலும் பெண்களே மாலைகட்டும் தொழிலில் ஈடுபடுகின்றனர். அதனால் தோவாளையில் உள்ளப் பெண்கள் பொருளாதாரத் தற்சார்பு உடையவர்களாக இருக்கின்றனர்.

மலர்மாலைகளில் பலவகை உண்டு. கோயில் கொடைத்திருவிழாக்களில் பந்தலில் தொங்கவிடப்படும் பெரியபெரிய 'தூக்குமாலைகள்' இன்றும்கூட சிறப்பு வாய்ந்தவை. தெய்வச்சிலைகளின் கழுத்து மாலையான 'மாணிக்கமாலை' மிகவும் நேர்த்தியாகவும், கண்களைக் கவர்ந்துவிடும் அழகிலும் இருக்கும்.

மாணிக்கமாலை கட்டுவதில் சிறப்பான அனுபவமும், நுணுக்கமும், கைவண்ணமும் பெற்றிருந்தத் தோவாளையைச்சேர்ந்த மறைந்த மாடசாமிப்பண்டாரம் என்பவர்க்குக் குடியரசுத்தலைவரின் பாராட்டும், பரிசும் கிடைத்திருக்கிறது.

பேரும் புகழும்பெற்ற வில்லுப்பாட்டுக் கலைஞர் மறைந்த சுந்தரம்பிள்ளையும் (படம் உதவி அவரது மகன் தனம் என்ற சுப்பிரமணியன்), பெருமைக்குரிய நாதசுரக் கலைஞர் மறைந்த குமரேசக்கம்பரும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(இயற்பெயர் அரிகரகம்பர்) தோவாளைக்குப் பெருமைசேர்த்த கலைஞர்கள். குமரேசக்கம்பரைப் பெருமைப்படுத்தும் விதத்தில் அவரது பெயரில் பொதுஅரங்கம் ஒன்றும் தோவாளையில் உள்ளது.

முன்னாள் அமைச்சரும், இந்நாள் கன்னியாகுமரி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தளவாய்சுந்தரம் தோவாளையைச் சேர்ந்தவர்தான். காக்கைச்சிறகினிலே ஆசிரியர் வி.முத்தையா இப்பள்ளியின் முன்னாள் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது இப்பள்ளிபற்றிய உரையாடல்தான் என்னை காக்கைச்சிறகினிலே இதழில் எழுத்தாளனாகக் கொண்டுசேர்த்தது.

இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் தென்திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்குள் இருந்தது. மலையாளதேசத்திற்கு பெரும் அளவிலான அரிசி இம்மாவட்டத்திலிருந்து, குறிப்பாக நாஞ்சில்நாடு என்று அடையாளப்படுத்தப்படும் தோவாளை, அகஸ்தீஸ்வரம் வட்டங்களை உள்ளடக்கிய பகுதியிலிருந்துதான் அனுப்பப்பட்டது. அதனால்தான், கன்னியாகுமரி மாவட்டத்தை இழக்க கேரள மாநிலம் விரும்பவில்லை. எனினும் தெற்கெல்லைப்போராட்டத்தின் காரணமாக 1956 நவம்பர் 1 அன்று கன்னியாகுமரி மாவட்டம்தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம் தென்திருவிதாங்கூரின் கட்டுப்பாட்டில் இருந்தபோது நிறைய வசதிகளைப் பெற்றிருக்கிறது. குறிப்பாக பிள்ளைகள் படிப்பதற்கான அரசுப்பள்ளிக்கூடங்கள் அதிக அளவில் திறக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றாக தோவாளை அரசு ஆரம்பப்பள்ளி விளங்குகிறது. 143 ஆண்டுகளுக்கு முன்பு 1882-ஆம் ஆண்டில் ஒன்று முதல் ஐந்து வகுப்புகள் வரையிலான ஆரம்பப்பள்ளி, இன்று தெக்கூர் என்று அழைக்கப்படும் கிருஷ்ணன்புதூரில், ஊர்ப்பொதுஇடத்தில் அன்றைய திருவிதாங்கூர் மன்னர் 'விசாகம் திருநாள்' ஆட்சிக்காலத்தில் துவக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 132 ஆண்டுகள் வரையிலும் அதே இடத்தில்தான் செயல்பட்டுவந்தது. மலர்வணிகம் பெருகியதால் ஆரம்பப்பள்ளி இப்போது இருக்கும்





மேல்நிலைப்பள்ளி வளாகத்திற்கு 2014-ஆம் ஆண்டில் இடம்மாற்றம் செய்யப்பட்டது.

அரசு ஆரம்பப்பள்ளியில் 105 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 60 மாணவர்கள் சத்துணவு சாப்பிடுகின்றனர். 5 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியையாக திருமதி S.சந்திரா பானுமதி பொறுப்பு வகிக்கிறார். தோவாளை அரசு உயர்நிலைப்பள்ளி 1960-ஆம் ஆண்டு துவக்கப்பட்டிருக்கிறது. 1980-இல் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்று அரசு மேல்நிலைப்பள்ளி இருக்கும் வளாகத்திற்கான பரந்துவிரிந்த இடம் திருவாவடுதுறை மடத்தால் இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறது. என்றாலும் சாலை ஓரம் மூன்று தனிநபர்களுக்குச் சொந்தமான இடமும் இருந்திருக்கிறது. அவற்றில் கடுக்கரையைச் சேர்ந்த நெல்லுக்கடைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணியபிள்ளை தனது இடத்தை இலவசமாகக் கொடுத்திருக்கின்றார். இப்படிப்பட்ட தகவல்களைத் தந்து உதவியவர் இரண்டுமுறை தோவாளை ஊராட்சிமன்றத் தலைவராக இருந்த நல்லசிவம்பிள்ளை. விசுவாசபுரத்தைச்சேர்ந்த S. சுப்பிரமணியன் உயர்நிலைப்பள்ளியின் முதல் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றிருக்கிறார். அவரை அடுத்து மாதாவலாயத்தைச்சேர்ந்த S.M.அப்துல் காதர் தலைமை ஆசிரியர் பொறுப்பிற்கு வந்திருக்கிறார். இவர்கள் இருவரது பணியும் பள்ளியின் ஆரம்பகட்ட வளர்ச்சியில் மிகவும் முதன்மையானது என்று தோவாளை அரசு மேல்நிலைப்பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர் முத்துச்சாமியும், தோவாளையைச் சேர்ந்த மூத்த வழக்குரைஞர் பழனியும் கூறுகின்றனர். இன்று மேல்நிலைப்பள்ளியில் 750 மாணவர்கள் படிக்கின்றனர். 33 ஆசிரியர்கள் கல்விப் பணியாற்றுகின்றனர். திருமதி S.சாந்தி, தலைமை ஆசிரியர் பொறுப்பில் இருக்கிறார்.

இப்பள்ளியின் நூற்றாண்டுவிழா, 27-01-2025 அன்று பள்ளிவளாகத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் அழகுமீனா கலந்துகொண்டு உரை நிகழ்த்தி விழாவுக்குப் பெருமை சேர்த்தார். மாலை நிகழ்வில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் கலந்துகொண்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான சிறந்ததொரு உரைநிகழ்த்தினார். நூற்றாண்டு விழாவை முன்வைத்து அனைத்து மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாதப் பணியாளர்களுக்கும் நண்பகல் உணவு வழங்கப்பட்டது. மாலை நிகழ்வில் ஊர்ப்பொதுமக்கள் பெரிய அளவில்கூடித் தங்கள் பங்களிப்பைச் சிறப்பாக செய்தனர். அதிக அளவில் பெண்கள் கலந்துகொண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது.

தோவாளை அரசுப்பள்ளி முன்னாள் மாணவர் சங்கத்தினர், மாலைநிகழ்வில், இப்பள்ளிக்கு இடம்கொடுத்தவர்களின் வாரிசுகள், ஊராட்சிமன்றத்தலைவர்கள், உறுப்பினர்கள், முன்னாள் தலைமை ஆசிரியர்கள், பல்வேறு பதவிகளில் இருக்கும் முன்னாள் மாணவர்கள் ஆகியோருக்கு நூலாடைகள்போர்த்தி சிறப்புச்செய்தனர். 10, 12 பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும், பல்வேறு பேச்சுப்போட்டிகள், எழுத்துப்போட்டிகள், விளையாட்டுப்போட்டிகளில் சாதனை படைத்த மாணவர்களுக்கும் நூல்கள் பரிசுகளாக வழங்கப்பட்டன.

தோவாளையில் தனியார்ப்பள்ளி தொடங்கப்பட்டு நடைபெற்றுவரும் நிலையிலும், 'சிறப்பானவை' என்று அடையாளப்படுத்தப்படும் தோவாளையைச் சுற்றியுள்ள தனியார் பள்ளிகளின் பள்ளிவாகனங்கள் தோவாளைக்கு வந்து செல்லும் வசதி இருக்கும் சூழலிலும் தோவாளை அரசுப்பள்ளியில் மாணவர் எண்ணிக்கைக் குறைந்திடவில்லை. நான் பார்த்த அளவில், ஒவ்வோர் ஆண்டும், பல்லாயிரக்கணக்கில் கல்விக்கட்டணம் வாங்கும் தனியார் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளைவிட தோவாளை அரசுப்பள்ளியில் கட்டணமின்றிப் படிக்கும் மாணவர்கள் கூடுதல் மதிப்பெண்களைப் பெறுகின்றனர். எனில், தோவாளை அரசுப்பள்ளிஆசிரியர்கள் தங்கள் கல்விப்பணியைச் சிறப்புற ஆற்றுகின்றனர் என்று புரிந்துகொள்ளலாம். அந்த வகையில் தோவாளை அரசுப்பள்ளி ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

**"அன்னச் சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**பின்னருள்ள தருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"**

புரட்சிக்கவி பாரதியின் கூற்றுக்கு இணங்க ஒரு பள்ளியை ஆரம்பித்து, அதனை நடத்தும் அனைவருமே புண்ணியவான்கள்தான். அவற்றுள்ளும் வணிகநோக்கம் இன்றி அனைத்துச் சாதியினரையும், மதத்தினரையும், மதம் அற்றவர்களையும் சமமாகப்பார்க்கும் சமுகநீதியுடனும், சத்துணவு, சீருடை உள்ளிட்ட பலவற்றை இலவசமாக வழங்கியும் தமிழ்நாடுஅரசு நடத்தும் பள்ளிகளே சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்கும், பொருளாதார அடித்தட்டில் இருக்கும் ஏழைமக்களுக்கும் இன்றளவும் விடிவிளக்காக ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன.

●

---

**கட்டுரையாளர்: பேராசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஐரோப்பிய இராணுவம்:

## அமெரிக்க உறவில் முரண்பாடு ?

# போர்ப் பகைமையை வளர்க்கும் உக்ரேன்!

(ஐரோப்பாவிற்கான இராணுவம் அவசியம் என்று உக்ரைன் கோருவது, ஐரோப்பாவில் நீண்ட கால போர்க் பகைமை சூழலையே ஏற்படுத்தும். இதனை உடனடியாக சில ஐரோப்பிய நாடுகள் ஆதரிக்க முற்பட்டாலும் நீண்ட காலத்தில் சாத்தியங்கள் குறைவே. அதேவேளை டிரம்பின் பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத், உக்ரைன் நேட்டோவில் இணையும் யோசனையை நிராகரித்துள்ளார். உக்ரைனின் நேட்டோ நம்பிக்கைகள் மற்றும் 2014க்கு முந்தைய எல்லைகள் யதார்த்தமானவை அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்)

ஐரோப்பாவிற்கான இராணுவம் அவசியம் என உக்ரைன் ஜனாதிபதி விலொடிமிர் ஜெலென்ஸ்கி ஜேர்மனியில் அவசர அவசரமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### ஐரோப்பிய இராணுவம் :

கடந்த வாரம் ஜேர்மனியின் மியுனிச்சில் இடம்பெற்ற பாதுகாப்பு உச்சிமாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான நீண்டகால பழமை வாய்ந்த உறவு முடிவிற்கு வருகின்றது என அமெரிக்க துணை ஜனாதிபதி ஜேடி வன்ஸ் தெரிவித்துள்ளார் என உக்ரைன் ஜனாதிபதி ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். ஆயினும் இதனை அமெரிக்க- ஐரோப்பிய இராஜதந்திரிகள் இதுவரை மறுக்கவில்லை.

விரைவில் அமெரிக்க - ரஷ்ய சமாதான பேச்சுவார்த்தைகள் சவூதி அரேபியாவில் நடைபெற உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை எதிர்க்கும் வண்ணம், எங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாமல் எங்களின் முதுகின் பின்னால் செய்து கொள்ளப்படும் எந்த உடன்படிக்கையையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஐரோப்பாவிற்கு உதவி செய்வதற்கு அமெரிக்கா முன்வராது எனும் தோற்றப்பாட்டில் உக்ரைன் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். உக்ரைனிற்கு போதிய பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்காததால், எங்களை பாதுகாக்காததால் அமெரிக்காவிற்கு உக்ரைனின் கனியவளங்களை வழங்கும் திட்டத்தை தடுத்து நிறுத்தியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். ஐரோப்பாவிற்கு அச்சுறுத்தல் என வரும்போது அமெரிக்கா உதவிக்கு வராது என்பதற்கான சாத்தியக் கூறுகளை நாங்கள் நிராகரிக்க முடியாது என உக்ரைன் ஜனாதிபதி மிகக் காட்டமாக தெரிவித்துள்ளார். தனது சொந்த இராணுவத்தை கொண்ட ஐரோப்பா குறித்து பல தலைவர்கள் விருப்பம் வெளியிட்டுள்ளனர். ஐரோப்பிய இராணுவம் உருவாக்குவது குறித்து அவர்கள் சாதகமான பதில்களை தெரிவித்துள்ளனர் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

### அமெரிக்கா - ரஷ்ய பேச்சுவார்த்தை

விரைவில் நிகழவுள்ள இருதரப்பு அமெரிக்கா - ரஷ்ய அமைதிப் பேச்சுவார்த்தைகளை, ஜெலென்ஸ்கி தனக்குப் பிடித்தபடி- தனது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நிராகரிக்க முடியும். ஆயினும் டிரம்ப் எந்தவொரு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலையீடும் இல்லாமல் புட்டினுடன் ஒரு அமைதி ஒப்பந்தத்தை மேற்கொள்ள விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இங்கிலாந்து பிரதமர் கெயார் ஸ்டார்மர் உக்ரைனுக்கு பிரித்தானிய துருப்புகளை அனுப்பத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார். உக்ரைனின் நேட்டோவில் இணையும் முயற்சியை எப்போதும் இங்கிலாந்து ஆதரிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். நேட்டோவின் எதிர்காலத்தில் உக்ரைன் இணைவதற்கு அவசியமானதாக பார்க்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று டிரம்ப் நிர்வாகம் மிகத் தெளிவாகக் கூறிய போதிலும், இங்கிலாந்து பிரதமர் ஸ்டார்மர் தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கவில்லை. இருப்பினும் மியூனிக் பாதுகாப்பு மாநாட்டிற்கு முன்னதாக ஜெலென்ஸ்கியுடன் பேசிய ஸ்டார்மர், நேட்டோ கூட்டணிக்கு உக்ரைனின் மாற்ற முடியாத இலக்கை அடையும் பாதைக்கு இங்கிலாந்தின் முழு ஆதரவையும் உறுதியளித்தார்.

### நேட்டோவில் உக்ரைனுக்கு இடமில்லை

இதற்கிடையில், டிரம்பின் பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத், உக்ரைன் நேட்டோவில் இணையும் யோசனையை நிராகரித்துள்ளார். உக்ரைனின் நேட்டோ நம்பிக்கைகள் மற்றும் 2014 க்கு முந்தைய எல்லைகள் யதார்த்தமானவை அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார். ஆயினும் டிரம்ப் உண்மையில் ரஷ்யாவுடன் எங்கு நிற்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க ஐரோப்பா போராடி வருகிறது. ரஷ்யாவுடன் எப்போதும் நட்புச் சூழ்நிலையை உருவாக்க டிரம்ப் முயன்று வருகிறார். ஆயினும் ஐரோப்பிய நாடுகள் மத்தியில் ரஷ்யாவை பகைப்பது என்பது பலருக்கும் தெரிந்த விடயம் தான். ஆயுத விற்பனைக்கும் போர்ப்பகைமை சூழலை தங்கள் அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

### உக்ரைனில் பிரித்தானிய துருப்புகள்

அமெரிக்கா தனது நிலைப்பாட்டை மாற்றுவதால், இங்கிலாந்து தனது துருப்புகளை உக்ரைனுக்கு அனுப்ப வாய்ப்புள்ளது என்று பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார். அத்துடன் உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களை விரைவு படுத்துவதில் இங்கிலாந்து முன்னணிப் பங்காற்றத் தயாராக உள்ளது. தேவைப்பட்டால், நமது சொந்தப் படைகளை தரையில் நிறுத்துவதன் மூலம் உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தரவாதங்களுக்கு பங்களிக்கத் தயாராகவும் விருப்பமாகவும் இருப்பதும் இதன் பொருள் என்றும் அவர் தெரிவித்தார். உக்ரைன் நாட்டுக்கு பிரிட்டிஷ் படைகள் அனுப்புவதை நான் எளிதாகச் சொல்லவில்லை. பிரிட்டிஷ் படைவீரர்களையும் பெண்களையும் ஆபத்தில் ஆழ்த்துவதில் வரும் பொறுப்பை நான் மிகவும் ஆழமாக உணர்கிறேன். ஆயினும் உக்ரைனின் பாதுகாப்பை உறுதி செய்வதில் எந்தவொரு பங்கும் நமது கண்டத்தின் பாதுகாப்பையும் பிரித்தானிய நாட்டின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு உதவுவதாகும். இந்தப் போரின் தற்போதைய முடிவு, அது வரும்போது, புட்டின் மீண்டும் தாக்குவதற்கு முன்பு ஒரு தற்காலிக இடைநிறுத்தமாக மாற முடியாது. மீண்டும் ரஷ்யா தனது படையெடுப்பை முழுமையாக நிறுத்த வேண்டும் அகன் பிரித்தானிய பிரதமர் தெரிவித்தார்.

பாரிஸ் உச்சிமாநாட்டிற்கு முன்னதாகப் பேசுகையில், உக்ரைனை பேச்சுவார்த்தைகளில் இருந்து விலக்குவதற்கு எதிராக எச்சரித்தார். அதை அமெரிக்க-தலிபான் பேச்சு வார்த்தைகளுடன் ஒப்பிட்டும் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்தார். உக்ரைன் நாட்டுக்கு குறைந்தளவு 100, 000 பிரித்தானிய துருப்புகள் தேவைப்படலாம் என்று மதிப்பிடுகின்றனர். ஆனால் உண்மையில் யார் தான் ரஷ்யாவை எதிர்த்து போரிட போகின்றார்கள் என பிரித்தானிய அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அத்துடன் பிரிட்டனின் இராணுவம் வளங்களால் நிரம்பி வழிவதில்லை என்பதும் மற்றொரு முக்கிய விடயமாகும். மேலும் இங்கிலாந்து ஜெனரல்கள் அதிக பாதுகாப்பு செலவினங்களைக் தற்போது கோரி வருகின்றமை அரசுக்கு உள்ள பாரிய தலைவலியாகும். இவை எல்லாவற்றையும் விட பிரித்தானிய பொதுமக்கள் தங்கள் குழந்தைகளை இன்னோர் நாட்டில் பலிக்கடாவாக்க சம்மதிக்க மாட்டார்கள். இரண்டாம் உலகப் போரின் பின்னர் பிரித்தானிய படைகள் எந்தவொரு பாரிய படை நகர்த்தல்களையும் நடாத்தவில்லை.

அமெரிக்காவை மீறி பிரித்தானியத் துருப்புக்கள் உக்ரைன் போரில் கலந்து கொள்வது சாத்தியமற்ற ஒரு செயலாகவே கருதப்படுகிறது. பிரித்தானிய துருப்புகள் உக்ரைன் எல்லையில் குவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் தேர்தல் அரசியல் ரீதியான இலாபங்களுக்கான வாய்ச்சவாடல்களாகவே கருதப்படுகின்றன. ●

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலையும் சோலையும்




பத்திரிகையாளர், எழுத்தாளர், நாடக இயக்குநர் என்றெல்லாம் பன்முகம் படைத்த க.சொக்கலிங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள ஆவரங்காலில் 1930 இல் பிறந்தவர். மாணவப் பருவத்திலிருந்தே எழுதத் தொடங்கியுர். 'பாலையும் சோலையும்' என்கிற அவரது தன் வரலாறு நூல் அவரது இறுதி நூலுமாகும். இதை எழுதிய போது அவருக்கு வயது எழுபத்தி இரண்டு. இரண்டு ஆண்டுகள் கழித்து இதன் முன்னுரையை எழுதினார். அதன்பின் சில மாதங்கள் கழித்து 2004 ஆம் ஆண்டு இறுதியில் இறந்தார். இருபது ஆண்டுகளுக்குப் பின் முதன்முறையாக டிசம்பர் 2024 இல் புத்தகம் வெளியாகி உள்ளது. நீண்ட காலம் எழுதுகிற எழுத்தாளர்களும் அரிதாகவே தன் வரலாறை எழுதுகிறார்கள். ஆனால் சொக்கன் தன் தரப்பில் இதற்கான நியாயத்தை முன்வைக்கிறார். "மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாறு அவர் உயர்வுக்கு சாதகமாகவோ பாதகமாகவோ அவர் விரும்பியோ விரும்பாமலோ அமைந்து விடலாம் .அதனை நேரில் காண்பவரோ அவரே எடுத்துரைக்க கேட்பவரோ அது கொண்டு சில படிப்பினைகளை எச்சரிக்கைகளை பெற வாய்ப்பு உண்டாகுமல்லவா?"

உண்மைகளை எடுத்துரைப்பதில் பல சங்கடங்கள் நேரிடலாம் என்பதால் சம்பந்தப்பட்ட சிலரின் பெயர்களை உடன்பாட்டு முகமாக குறிப்பிடாது ஒருவர் என்றோ பெரியார் ஒருவர் என்றோ அறிஞர் கவிஞர் என்றோ சுட்டிக்காட்டும் யுத்தியை கையாள்வதாகவும் கூறுகிறார். ஆனாலும் இது சொக்கனின் தனி மனித வரலாறு அல்ல. அவரது வாழ்க்கை நிகழ்வுகள் அவரது ஆசிரிய, எழுத்துப் பணிகளுடனூடாகாவே அதிகம் வெளிப்படுகின்றன. இந்த நூல் அவரது மாணவப் பருவம் ஆசிரியப் பருவம் என்றாக பகுக்கப்பட்டுள்ளது

மாணவப் பருவத்தில் அவர் தனது தாயை முக்கியமாகக் குறிப்பிடுகிறார். கல்வி அறிவு இல்லாதவராயினும் தனது ஒரே மகன் நன்றாக படித்து உயர வேண்டும் என்பதில் கருத்தாக இருந்தவர் அவர். ஏழ்மையான காலங்களிலும் தனது ஒரே மகனின் கல்வியை மனதில் கொண்டிருந்தவர். பாடசாலைகளில் ஆசிரியர்களால் கடுமையாக பிரம்படிபட்டு திரும்பும் அவருக்கு மருந்திட்டவாறே அடி வாங்குவது மகனது கல்விக்கு பயனளிக்கும் என்று நினைத்தார். சொக்கன் பள்ளியில் தான் எவ்வாறெல்லாம் ஆசிரியர்களிடம் கடுமையான சரீர இம்சைக்கு உள்ளானார் என்பதை விவரிக்கிறார். 'அடியாத மாடு படியாது' என்பது மாட்டுக்கு சொல்லப்பட்டிருந்தாலும் மாணாக்கர்களுக்கும் இதுவே அக்காலத்தில் பொருந்தி வந்தது' என்று கூறுகிறார் . அவரது ஆரம்பக் கல்வியில் ஆசிரியர்களிடம் அடி வாங்குதல் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ஆனாலும் அடிவாங்கிய மாணவர்கள் பின்னாட்களில் தங்களை அடித்து திருத்திய ஆசிரியர்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிற மனப்பாங்கினை சொக்கனிடமும் காண முடிகிறது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ் வித்தியாசாலையில் ஆறாம் வகுப்பு வரை படித்துவிட்டு நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஏழாம் வகுப்பில் சேருகிறார். ஆறுமுக நாவலருக்கும் வள்ளலாருக்குமிடையே 'அருட்பா மருட்பா' விவாதம் மிகத் தீவிரமாக நடைபெற்றிருப்பினும் அங்கு கற்பிக்கப்பட்ட கல்வி அதனால் எவ்வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்பினையும் அடையவில்லை. வள்ளலாரின் 'அம்பலத்தரசே அருமருந்தே 'பாடல் அங்கு படிக்கப்பட்டதை நெகிழ்ச்சியுடன் சொக்கன் நினைவு கூறுகிறார் . பதினான்காம் வயதிலேயே அவர் எழுதிய 'தியாகம்' சிறுகதை 'வீரகேசரி'யில் பிரசுரமானது. தொடர்ந்து எழுதத் தொடங்கினார்.

யாழ் ஸ்டான்லி கல்லூரியில் ஆங்கிலம் கற்றார் ஆங்கிலக் கல்வி தனக்கு அளிக்கப்பட்ட பெரும் வரம் பிரசாதம் என்கிறார். ஆங்கிலக் கல்வியை உயர்வானதாகவும் தமிழ் கல்லூரி தாழ்வானதாகவும் அப்போது கருதப்பட்டது. அவற்றை போதித்த ஆசிரியர்களின் சம்பளத்திலும் அந்த ஏற்றத்தாழ்வுகள் பிரதிபலித்தன ஸ்டான்லியில் மாணவனாக இருந்தபோது நாடகம் எழுதுவது நாடக நெறியாள்கை செய்வது ஆகியவற்றில் அவருக்கு தகுந்த அடித்தளம் கிடைத்தது' ஏழை படும்பாடு' என்கிற பெயரில் யோகி சித்தானந்த பாரதியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட விக்டர் ஹ்யுகோவின் நாவலின் ஒரு பகுதியை நாடகமாக அரங்கேற்றினார். பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். நாடகத்தில் அவருக்கிருந்த ஈடுபாடு மேலும் அங்கு வளரத் தொடங்கியது. சங்கிலியன் தியாக வரலாற்றினை 'தீர்ப்பு' என்கிற பெயரில் நாடகம் ஆக்கினார் .இதுவே சங்கிலியன் பெயரால் வந்த நாடகங்கள் அனைத்திற்கும் ஆன முன்னோடி என்கிறார். சிறுவயதிலேயே காதல் வயப்பட்டது செயல்பட கூறுகிறார் . மகாகவி பாரதியை அதில் தனது முன்னோடியாக அவர் கருதுவது சுவாரஸ்யமாக உள்ளது. தன்னுடன் படித்த சிறுமியின் மீது ஏற்பட்ட காதலைத் தெரிவிக்க அவளுக்கு நேரடியாகக் கடிதம் எழுதாமல் அவளுடைய அக்காவிற்கு கடிதம் எழுதி தங்களை சேர்த்து வைக்குமாறு கேட்டுக்கொள்கிறார். அக்காவிடம் இருந்து வரும் பதில் கடிதம் அவரது காதல் எண்ணங்களுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கிறது . வெ.சாமிநாத சர்மா ராகுல் சங்கிருத்தியான் ஆகியோரைப் படித்ததன் பயனாக இடதுசாரி நோக்கு அவருக்கு உண்டாகிறது. இடதுசாரி மேடைகளில் பேசுகிறார். தனது அறிவு வளர்ச்சிக்கும் கல்வி கற்றலுக்கும் உறுதுணையாக இருந்தவர்கள் அனைவரையும் பெயர்கள் குறிப்பிட்டு நன்றி தெரிவிக்கிறார்.

இலங்கையில் 1961இல் பாடசாலைகள் தேசிய மயமாக்கின்றன அரசு பாடசாலைகளுக்கு மட்டுமின்றி தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் அரசு நிதி ஒதுக்கப்பட்டது. மதச்சார்புடைய பாடசாலைகளில் அந்தந்த மதத்தை சேர்ந்தவர்களுக்கு ஆசிரியர் பதவிகள் கிடைத்தன. போதிய ஆசிரியர்கள் இல்லை என்றால் மட்டுமே தகுதியான பிற மத ஆசிரியர்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். சைவ வித்தியா விருத்தி சங்கம் நடத்திய பாடசாலைகளுக்கு கிறிஸ்தவ பிற மத கல்வி நிறுவனங்களுக்கு இதர வழிகளில் கிடைத்த நிதி உதவிகள் கிடைக்கவில்லை.

சொக்கனுக்கு பதுளை ஊவா கல்லூரியில் படித்து முடித்த ஒரு மாதத்திற்குள்ளாகவே வேலை கிடைத்தது. அந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மலையகத்தில் உள்ள பதுளை செல்வது எத்தனை அயர்வளிக்கிற பயணம் என்பதை விவரிக்கிறார். கல்லூரிகளில் ஆங்கிலம் பொது மொழியாக இருந்தது. மாணவர்கள் அரைகுறையாக ஆங்கிலம் பேசினாலும் அவர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள். சொக்கன் தனது வகுப்பில் வறுமையான குடும்பத்தில் இருந்து வந்த மாணவனுக்கு கல்லூரிக் கட்டணத்திலிருந்து விடுப்பு தரவேண்டி கல்லூரி முதல்வரை சந்திக்கிறார். அவர் மாணவனிடம் *"My dear lad, who is your guardian?"* என்று கேட்கிறார். அதற்கு அந்த மாணவன் சற்றும் தயங்காமல் *"My father in law"* என்று பதிலளிக்கிறான். தனக்கு ஆதரவளிக்கும் சித்தப்பாவையே அவன் அவ்வாறு குறிப்பிடுகிறான் என்பதையறிந்த அவர் மிகுந்த பரிவுடன் "நீ இம்மாதத்திலிருந்து பாடசாலைக்கு கட்டணம் கட்ட வேண்டாம்" என்று தமிழிலேயே கூறுகிறார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் அவர் தமிழ் டிப்ளமோ படித்தார். அவர் இலங்கை வானொலிக்கு 'கவிஞன் பலி' என்கிற நாடகத்தை எழுதியவர் என்பதை அங்கிருந்த முதுநிலை தமிழ் விரிவுரையாளரான செல்வ விநாயகம் ஞாபகத்தில் வைத்திருந்தது வியப்பினைத் தந்தது. பேராசிரியர் கணபதிப் பிள்ளை, கலாநிதி சு. வித்யானந்தர், கலாநிதி அ.சதாசிவம், சி.முருகவேள், மகேஸ்வரி மகாதேவன் ஆகியோர் தமிழ் நூல்களைப் பயிற்றுவித்தனர். கா. கைலாசநாத குருக்கள் சம்ஸ்கிருதத்தையும் விரிவுரையாளர் சார்ல்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. சில்வா சிங்களத்தையும் பேராசிரியர் ராய் இந்திய வரலாற்றையும் பயிற்றுவித்தனர். சிங்களம் தனியாக கற்பிக்கப்பட்டது. எனவே சிங்கள, தமிழ் மொழிகளில் பயிற்சி பெற்றவர்களிடையே நெருக்கம் ஏற்பட்டது. இது பரந்த நோக்கினை உருவாக்கியது என்கிறார் சொக்கன்.

தர்கா நகர் சாஹிரா கல்லூரியில் தமிழ் கற்பிக்கும் வேலை கிடைக்கிறது. முஸ்லிம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டிய நிறுவனம் அது. ஆனால் அவர்களது தமிழில் சிங்கள சாயல் அதிகமாக இருந்தபடியால் தமிழை அவர்களுக்கு சரிவர கற்பிப்பது கடினமாக இருந்தது. அவர்களை அன்பினால் வசப்படுத்தி கல்வி புகட்டினார். தனிச் சிங்கள சட்டம் அவரை கவலையுற வைத்தது. அது பற்றி ஒரு சிறுகதை எழுதினார். வகுப்பறையில் அவர் தனது கற்பனைக் கதையை முஸ்லிம் கதாபாத்திரங்களை வைத்து கூறிய போது அது மாணவர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. கதாநாயகனின் பெயர் முகமது யூசுப். கதாநாயகி சித்தி அமினா. ஆனால் அதே பெயர்களில் வகுப்பறையில் மாணவர்கள் இருந்தது அவருக்கு அப்போது தெரியாது. மாணவர்களின் கரகோஷத்திற்கு காரணம் அதுதான் என்பதை அவர் மறுநாள்தான் உணர்ந்தார். இஸ்லாமிய ஆசிரியரான மௌல்வி அதை அவருக்குத் தெரிவித்தார் .சித்தி அமினா அன்று இரவு தன் பெற்றோரிடம் அது பற்றி முறையிட்டு அழுதிருக்கிறாள் என்பது தெரிய வருகிறது. தெரியாமல் நடந்து விட்ட தற்செயல் நிகழ்வு என்பதால் அவர் மன்னிக்கப்பட்டார்.

அங்கிருந்து ஹட்டன் புனித யோன் பொஸ்கோ கல்லூரிக்கு தமிழ் ஆசிரியராக பணியாற்றச் சென்றார். அக்காலங்களில் பாடசாலைகளில் பணிபுரிபவர்களுக்கு வேலை நியமனம் ஆகும் வரை அரசின் சம்பளம் கிடைக்காது. நியமனம் உறுதியான பிறகே நிலுவையிலிருந்த சம்பளத் தொகை முழுதாக தரப்படும் என்றாலும் இடைப்பட்ட மாதங்களில் சம்பளம் பெற முடியாதவர்கள் சிரமத்திற்கு உள்ளாவார்கள். ஆனால் பொஸ்கோவில் மற்ற ஆசிரியர்களுடன் புதிதாக நியமனமானவர்களுக்கு கல்லூரி நிதியிலிருந்து சம்பளம் தரப்பட்டது சொக்கனுக்கு மிகவும் உதவியாக இருந்தது. பொஸ்கோ கல்லூரி,



**உலகளவில் மக்கள் தொகையில் சரிபாதிக்கும் மேலாக வாழ்ந்துவரும் மகளிர், போரினாலும், காலநிலை மாற்றத்தினாலும், வறுமையினாலும், போதிய கல்வி, சுகாதார வசதியின்மையினாலும், வலதுசாரி அடையாள அரசியலினாலும் பாதிக்கப்படுபவர்களாக இருக்கின்றனர்.**

**மார்ச்-8:**

**சர்வதேச மகளிர் தின வாழ்த்துகள்.**

- ஆசிரியர்

பாதிப்புக்குள்ளாகியிருந்த மலையகத் தமிழ் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதில் முன்னணி வகிக்கிறது என்கிறார்.

அங்கிருந்து புத்தளம் சாஹிரா கல்லூரியில் வேலைக்குச் சேர்ந்து இரண்டாண்டுகள் பணியாற்றினார். அங்குள்ள முஸ்லிம் மாணவர்கள் சிங்களச் சாயல் சற்றும் படியாத தமிழ்ப் பாங்கு கொண்டிருந்தார்கள். முஸ்லிம்களுடன் தாம் கொண்ட நல்லுறவினைக் குறிப்பிடுகிறார். ஆசிரிய வேலைகளுக்கிடையே அவர் தொடர்ந்து எழுதினார். அவரது 'தாலி' சிறுகதை ஏ.ஜே. கனகரத்னாவின் ஆங்கில மொழிபெயர்ப்பில் கைலாசபதி முன்னுரையுடன் 'சண்டே அப்சர்வர்' பத்திரிகையில் வெளியானதை மறக்க முடியாத நிகழ்ச்சி என்கிறார். அடுத்தாற்போல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பணிபுரிகிறார். பத்தாண்டுகளில் நான்கு பாடசாலைகளில் பணி புரிய நேர்ந்ததை வியப்புடன் குறிப்பிடுகிறார்.

1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களம் சட்டம் பிறப்பிக்கப்பட்டவுடன் சிங்கள தேசியவாதம் தலை தூக்கியது. அதை எதிர்கொள்ளும் விதமாக தமிழ்த் தேசிய வாதமும் தனது மேலாண்மையை உருவாக்க முற்பட்டது. தமிழ்த் தேசியவாதிகள் மரபுவாதிகள் இடதுசாரிகள் என இரு பிரிவினராயினர். மரபுவாதிகள் இடதுசாரி முற்போக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்களின் படைப்புகளை 'இழிசினர்' இலக்கியம் என்று விமர்சித்தனர். படைப்பு விமர்சனம் என்பதைத் தாண்டி அது மரபுவாதிகளின் மேல் ஜாதிப் பண்புகளை வெளிக்கொணர்ந்தது. மரபுவாதிகள் முற்போக்கு வாதிகள் இருவருக்கும் கைலாசபதியின் 'தினகரன்' களம் அமைத்து கொடுத்தது. சிவத்தம்பி, செ.தில்லைநாதன் ஆகியோருடன் சொக்கன் மரபுவாதிகளுக்கெதிராக் கட்டுரைகள் எழுதியும் கூட்டங்களில் பேசியும் வந்தார். கவிஞர்கள் முருகையன், சில்லையூர் செல்வராசன் முதலியோர் நையாட்டம், குத்தல் எள்ளல் மிக்க கவிதைகளால் மரபுவாதிகளை சாடினர். மரபுவாதிகள் பக்கம் சோ. நடராசா, பண்டிதர் இளமுருகனார், அ.சதாசிவம், வித்துவான் வேந்தனார் ஆகியோர் நின்றனர். அவர்களது செல்வாக்கினால் முற்போக்கு எழுத்தாளரான கா. இளங்கீரனின் நாவலுக்கு கிடைத்திருக்க வேண்டிய சாகித்திய மண்டல பரிசு மரபுவாதி எழுத்தாளர் ஒருவருக்கு கிடைத்தது. இதற்கு எதிர்ப்பாக மரபுவாதிகள் மீது கூழ்முட்டைகளை கூட்டத்தில் எறிய திட்டமிட்டார்கள். ஆனால் அவர்களது எண்ணமறியாத சொக்கன் அவர்களுடன் இணைந்து இருந்த காரணத்தால் அவப்பெயரினை அடைந்தார். இந்துக் கல்லூரியிலிருந்து அவரை வெளியே அனுப்ப முயற்சி நடந்தது. பின்னர் கல்விப் பணியாளரின் தலையீட்டினால் தொடர்ந்து அங்கு பணிபுரிந்தார். அவரது பணிகள் பல துறைகளிலும் சிறக்க இந்துக் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் ஊக்கமும் உறுதுணையும் வழங்கியதை நன்றியுடன் குறிப்பிடுகிறார். கொத்தாந்தீவு கத்தோலிக்க மகா வித்தியால பிரின்ஸ்பால், கோப்பாய் ஆசிரியர் கலாச்சாலையில் விரிவுரையாளர், இராமகிருஷ்ணா வித்தியாலத்தில் பிரின்ஸ்பால் ஆகிய பதவிகளில் பணியாற்றியதையும் அங்கே கல்வி இலாகாக்களில் நடந்த கசப்பானதும் நெகிழ்வானதுமான நிகழ்வுகள் ஆகியவற்றையும் சில அத்தியாயங்களில் எழுதியுள்ளார். ஆசிரியப் பணி எவ்வளவு சிக்கல்களும் இடர்களும் கொண்டிருந்தாலும் அதே சமயம் அப்பணி நிறைவு தருவதாகவும் அவர் வாழ்வில் இருந்தது என்பதை அவற்றின் மூலம் அறிய முடிகிறது. தான் பெற்ற விருதுகள் பட்டங்கள் ஆகியவற்றுடன் மறக்க முடியாத மாண்பினர் என்று தன் வாழ்க்கையில் முக்கிய இடம்பெற்றவர்களை குறிப்பிடுகிறார். ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் பணியாற்றிய தன் வாழ்க்கையை பின்னோக்கிப் பார்த்து 'நான் யார்' என்கிற கேள்வியை தத்துவ விசார நோக்கில் வினவுகிறார். தனக்கு தாழ்வு மனப்பான்மை உள்ளதாக கூறுகிறார். அதுவே தனது பலவீனம் என்கிறார். தனது பலம் என்று அவர் குறிப்பிடுவது தனது வைராக்கியமான குணத்தை. ஏதாவது ஒன்றினை வேண்டாம் என்று கருதினால் அதை முற்றாக நீக்கி விலகும் தமது குணம் குறித்து பெருமிதம் கொள்கிறார் ஆசிரியர் .

தன் வரலாறு நூல்கள் அருகியுள்ள நமது சமூகத்தில் இத்தகைய எழுத்துகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் எழுத்தாளர் மு. புஷ்பராஜன் பதிப்புரையை எழுதியுள்ளார். தம்மால் மறக்க முடியாத மாண்பாளர்களில் ஒருவராக குறிப்பிடப்படும் அவரது மாணவர் ஆர். பத்மநாப ஐயரை பதிப்பாளராகக் கொண்ட தமிழியலும் காலச்சுவடு பதிப்பகமும் இதை வெளியிட்டுள்ளது. சொக்கனின் புதல்வி வாசுகி நடேசனும் நூலுக்கு ஒரு சிறு குறிப்பினை எழுதியுள்ளார். சொக்கன் நூலை நாட்குறிப்பு நடையில் எழுதியுள்ளார்.

இலங்கை கல்விப் புலம் எவ்வாறு பல தசாப்தங்களாக இயங்கி வந்துள்ளது என்பது பற்றியும் பல துறைகளிலும் தனது முக்கியத்துவத்தை உணர வைத்த ஆசிரியர் சொக்கன் பற்றியும் வாசகர்கள் அறியத்தக்க நூல் 'பாலையும் சோலையும்.'

**பாலையும் சோலையும்**
**ஆசிரியர்: கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்)**
**இணைந்து வெளியிடுவோர்: தமிழியல், லண்டன்; காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் பி லிமிடேட், 669, கே.பி.சாலை, நாகர்கோவில் 629001**
**email: publications@kalachuvadu.com**
**பக்கங்கள்: 292, விலை: ரூ.375**

கட்டுரையாளர்: எழுத்தாளர்

**Owned and Published and Printed by V.Muthiah and Published from 22/32 M.J.B Street, Triplicane, Chennai-600005 and Printed at Sekar Offset Printers, 50/168, Big Street, Chepauk, Chennai-600005. Editor: V.Muthiah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SREE DURGA PRINTERS
22, Mjb Street,Triplicane, Chennai 5

# THE PRINT PARK
4a, Boopathy Nagar, Keelkattalai, Chennai 117.

**8248338118**

We do all types of **POD/OFFSET** books
at high quality and even one book is also
we can print and all the printed books are done with
perfect binding and hard case binding.

POD
OFFSET







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 /43921
Postal Registration No. TN/CH(C)/617/2024-2026
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel, Egmore. between 29th-4th of every month

PEARL SHIPPING AGENCIES

PEARL SHIPPING AND CHARTERING

PEARL LOGISTICS



Steamer Agents - Stevdores - Chartering Brokers - Custom House Agents - MTO - NVOCC - LCL Consolidators & Forwarders

Head Office:
2/3A, Harbour Express Road, Madathur, Tuticorin - 628008
Tel.: +91 461 2340543 / 47 Fax: +91 461 2340471 Web: www.pearltuty.com
Email: shipping@pearltuty.com logistics@pearltuty.com chartering@pearltuty.com

Branches
Cochin - Karaikal - Chennai - Ennore - Kattupalli - Krishnapatnam - Kakinada & Singapore

ISO 9001 BUREAU VERITAS Certification



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org